# எம்.ஏ. (தமிழ்) முதலாமாண்டு

## *DKT13* : இலக்கணம் - தொல்காப்பியம் - எழுத்ததிகாரம்

## உள்ளுறை


| வ.எ. | இயல் | பக்கம் |
|---|---|---|
| 1. | நூன்மரபு | 1-11 |
| 2. | மொழிமரபு | 12-29 |
| 3. | பிறப்பியல் | 30-38 |
| 4. | புணரியல் | 39-55 |
| 5. | தொகைமரபு | 56-71 |
| 6. | உருபியல் | 72-83 |
| 7. | உயிர் மயங்கியல் | 84-115 |
| 8. | புள்ளிமயங்கியல் | 116-148 |
| 9. | குற்றியலுகரப் புணரியல் | 149-176 |
| 10. | தொல்காப்பியம் - நன்னூல் - ஒப்பீடு | 177-192 |

# முன்னுரை

தமிழில் முழுமையாகக் கிடைக்கும் முதல் இலக்கணநூல் தொல்காப்பியம். இது தொல்காப்பியர் இயற்றிய தொன்மைமிக்க நூலாகும். தமிழ் மொழியின் தொன்மையையும், தமிழ் இலக்கியத்தின் பழைமையையும் ஒருங்கே எடுத்துக்காட்டும் சான்றாகத் திகழ்வது இத்தொல்காப்பியமே. தொல்காப்பியர் தம் நூலை நிலந்தருதிருவிற் பாண்டியன் அவையில் அரங்கேற்றினார். எனவே தொல்காப்பியரின் காலம் கி.மு.5-ஆம் நூற்றாண்டு என்பதனை உணரலாம்.

குறையிலா நிறைவு அறிவுசால் செறிவு, நிரம்பு வளம் வரம்புபிறழாமல், வரையறுத்தவடித்த முனை வனப்பு, மொழிவளர்ச்சிக்கென்றும் தளர்ச்சிதரா கட்டமைப்புகளால் ஒப்புயர்வற்ற சிறப்பு வாய்ந்த இலக்கண நூல் தொல்காப்பியர் பெயரால் வழங்குகிறது. தமிழில் மட்டுமன்று; ‘உலகில் நிலவும் பலமொழிகளிலும் உள்ளபிற இலக்கணங்களுக்கு இல்லாத எழிலும் பயனும் வாய்ந்தது தொல்காப்பியம். பழமையும் பெருமையும் அழகும் அருமையும் வாய்ந்தது’ என நாவலர் சோமசுந்தரபாரதியார் தொல்காப்பியத்தைப் பாராட்டுகிறார்.

எள்ளிலிருந்து எண்ணெய் எடுப்பதுபோல, இந்நூல் தோன்றுவதற்கு முன்பே இலக்கியங்கள் பல இருந்திருத்தல் வேண்டும். ஆவை காலப்போக்கில் இறந்துபட்டிருக்கலாம். இத்தகைய நூல்களின் பெயர்களையும், பகுதிகளையும் பிற்கால உரையாசிரியர்கள் மேற்கோளாகக் குறிப்பிடுவது, மேற்கூறிய கருத்தையே வலியுறுத்தும் சான்றாக உளது எனலாம். தொல்காப்பியர் தமது நூலில் ஏறத்தாழ 260 இடங்களில் தமக்கு முன்பு இருந்த அல்லது தம் காலத்தில் வாழ்ந்த இலக்கண ஆசிரியர்கள் பலரைப் பலவாறு குறிப்பிட்டுள்ளார். எனவே பற்பல இலக்கண நூல்கள் இருந்திருக்கவேண்டுமெனத் துணிந்துரைக்கமுடிகிறது.

தொல்காப்பியத்திற்கு முழுமையாக உரைகண்டவர் இளம்பூரணர் ஆவர். இவரைத் தொடர்ந்துகல்லாடர், தெய்வச்சிலையார், சேனாவரையர், நச்சினார்க்கினியர் ஆகியோரும் உரை எழுதியுள்ளனர்.

# தொல்காப்பியக் கட்டமைப்பு

தொல்காப்பியம் இலக்கண நூலேயாயினும் ஒரு பெருங்காப்பியம் போன்ற கட்டமைப்புடையது. தொல்காப்பியம்,

1. எழுத்ததிகாரம்
2. சொல்லகதிகாரம்
3. பொருளதிகாரம்

எனும் மூன்று அதிகாரங்களை உடையது. ஒவ்வோர் அதிகாரமும் ஒன்பது இயல்களைக் கொண்டது.

ஒவ்வோரியலும் தன்னளவில் நிறைவுடையது. இயல்கள் அனைத்தும் காரணகாரிய இயைபுடையன. இயலுக்குள் நூற்பாக்களும் வரிசைமாற்ற இயலாத இயல்புடையன. முதலில் பொதுவிதிகளைக் கூறிப் பின்னர்ச் சிறப்பு இயல்களைப் புறனடைவிதி என வகுத்துக் கூறுவது தொல்காப்பியரின் சிறப்பாகும்.

தொல்காப்பியத்தை முழுமையாக கற்போர்க்கே, அதன் ஓர் இயல் அல்லது ஒரு நூற்பாவின் பொருள் தெளிவாக விளங்கும்.

# 1. நூன்மரபு

நூல் என்ற சொல்லுக்கு அக்காலத்தில் இலக்கணம் என்றே பொருள். சூத்திரம் நூலின் பாவாதலின் ‘நூற்பா’ எனப்பட்டது. எழுத்துக் குறியீடுகள் உயிர், மெய் என்பனவும் அ, க எனவும் தொன்றுதொட்டு வரும் மரபு பற்றி உணரப்படுவன. எழுத்துக்கள், இலக்கணத்தின் அடிப்படை மரபாதலின் முதல் இயல் நூன்மரபு எனப்பட்டது. நூன்மரபு தனிநின்ற எழுத்துக்களுக்கு இலக்கணம் கூறுவதென்பது இளம்பூரணர் கருத்து.

**தமிழ் எழுத்துக்கள் முப்பது**

**எழுத்தெனப் படுப**
**அகரமுதல் னகர இறுவாய்**
**முப்ப.்.து என்ப**
**சார்ந்துவரல் மரபின் மூன்றலங் கடையே. (1)**

தமிழில் ‘எழுத்து’ எனப்படுபவை ‘அ’ முதல் ‘ன்’ஈறாகவுள்ள முப்பதே ஆகும். இசை முதலெழுத்துக்கள் (அடிப்படையானவை) எனப்படும். இவற்றைச் சார்ந்துவரும் தன்மையுடைய மூன்று சார்பெழுத்துக்களும் உள்ளன. மூன்றலங்கடை - மூன்றுமல்லாதவிடத்து. அவற்றைச் சேர்த்தால் முப்பத்துமூன்று என்பதாம்.

**சார்பெழுத்துக்கள் மூன்று**

**அவைதாம்**
**குற்றிய லிகரம் குற்றிய லுகரம்**
**ஆய்தம் என்ற**
**முப்பாற் புள்ளியும் எழுத்தோ ரன்ன. (2)**

அவை குற்றியலிகரம், குற்றியலுகரம், ஆய்தம் என்ற பெயருடையன. ஆய்தம் மூன்று புள்ளி வடிவினது. முன் சொன்னவை போல் இவை முற்ற முடிந்த எழுத்துக்களல்ல வாயினும், முதலெழுத்துக்களை ஒத்த தன்மையுடையன. சார்ந்து வருதல் - முதலெழுத்து, மொழியிடையே சார்ந்து வரும் போது வேறு பொருள் தரின், அதுவும் எழுத்துப் போன்றதாகி விடுகிறது.

**உயிர்க் குற்றெழுத்தெல்லாம் அவை ஒலிக்கும் கால அளபும்**

**அவற்றுள்**
**அ இ உ**
**எ ஒ என்னும் அப்பால் ஐந்தும்**
**ஓரளபு இசைக்கும் குற்றெழுத் தென்ப. (3)**

அ, இ, உ, எ, ஒ ஐந்தும் ஒரு மாத்திரை அளபு ஒலிக்கும் உயிர்க் குற்றெழுத்துக்களாகும். அப்பால் ஐந்தும் - அப்பகுதிப்பட்ட ஐந்து எழுத்துக்களும். ஓர் அளபு – ஒரு மாத்திரை.

**உயிர் நெட்டெழுத்துக்களும் அவை ஒலிக்கும் கால அளபும்**

**ஆ ஈ ஊ**
**ஏ ஐ**
**ஓ ஔ என்னும் அப்பால் ஏழும்**
**ஈரளபு இசைக்கும் நெட்டெழுத் தென்ப. (4)**

ஆ,ஈ, ஊ, ஏ, ஐ, ஓ, ஔ ஏழும் இரண்டு மாத்திரை அளபு ஒலிக்கும் உயிர் நெட்டெழுத்துக்களாகம். ஈர் அளபு - இரண்டு மாத்திரை.

**மூன்று மாத்திரை ஒலிக்கும் ஓர் எழுத்து இல்லை**

**மூவளபு இசைத்தல் ஓரெழுத்து இன்றே (5)**

தமிழல் ஓர் எழுத்து மூன்று மாத்திரை அளபு ஒலித்தல் இல்லை.

**எழுத்துக்கள் அளபெடுக்கும் முறை**

**நீட்டல் வேண்டின் அவ்வள புடைய**
**கூட்டி எழூஉதல் என்மனார் புலவர் (6)**

நீட்டி ஒலிக்க விரும்பினால், எந்த அளபு நீட்டி ஒலிக்கக் கருதுகின்றனரோ அந்த அளபு இயைபுடைய ஒலியைக் கூட்டி ஒலித்துக் கொள்க என்பர் புலவர். எழூஉதல் - ஒலி எழுப்புக. எழுதல் என்பதில் ‘ழு’ ஓரளபு இசைக்கும் குறில். அதை ஈரளபு இசைக்கும் ‘ழூ’ என நெடிலாக்கியும் மேலும் ‘ழூஉ’ என மூவளபு இசைக்கும் அளபெடையாக்கியும், இலக்கணத்திற்குரிய எடுத்துக்காட்டையும் உடன் தந்துள்ள தொல்காப்பியத்திறம் அறிதற்குரியது. அந்தந்த நெடிலுக்குரிய இனமான குறில்களே அடையாளமாக எழுதப்படும். அவ்வாறே ஒலி அளபு கூட்டி ஒலிக்கவும்படும்.

**ஒரு மாத்திரைக்கு அளபு**

**கண்ணிமை நொடிஎன அவ்வே மாத்திரை**
**நுண்ணிதின் உணர்ந்தோர் கண்ட வாறே. (7)**

நுண்ணிதாக ஆராய்ந்துணர்ந்தவர் கண்டவாறு, இயல்பாக எழும் கண்ணிமைப் பொழுதும் கைந்நொடிப் பொழுதும் ஒரு மாத்திரை அளபைக் கணக்கிடுவதற்குரிய கருவிகளாகும்.

இமை - இயல்பாகக் கண்ணிமைத்தல், நொடி – கைவிரல்களால் நொடிப்பது. அவ்வே – அவ்வளபினவே.

**உயிர் பன்னிரண்டு**

**ஔகார இறுவாய்ப்**
**பன்னி ரெழுத்தும் உயிரென மொழிப. (8)**

அகரம் முதல் ஔகாரம் ஈறாகப் பன்னிரெண்டெழுத்தும் ‘உயிர்’ எனப்படும். முன்பு குறில், நெடில் கூறப்பட்டன. இங்கு அவற்றின் பொதுப்பெயர் குறிக்கப்படுகிறது.

**மெய் பதினெட்டு**

**னகார இறுவாய்ப்**
**பதினெண் எழுத்தும் மெய்யென மொழிப. (9)**

ககரம் முதல் னகரம் ஈறாகப் பதினெட்டெழுத்தும் மெய் எனப்படும்.

**உயிர்மெய்யின் ஒலி அளபு**

**மெய்யோடு இயையினும் உயிரியல் திரியா. (10)**

மெய்யெழுத்துடன் உயிர்கூடிப் பிறந்தாலும் அதிலுள்ள உயிர் தன் இயல்பை இழக்காது. உயிரின் மாத்திரையே உயிர்மெய்யின் மாத்திரையாம். அ ஒரு மாத்திரை. க வும் ஒரு மாத்திரையே. க் அ கூடியதால் ஒன்றரை ஆகாது.

**மெய்யெழுத்து ஒலிக்கும் கால அளபு**

**மெய்யின் அளபே அரைஎன மொழிப. (11)**

மெய்யெழுத்து ஒலிக்கும் காலஅளபு அரைமாத்திரையாகும்.

**சார்பெழுத்துக்கள் ஒலிக்கும் கால அளபு**

**அவ்வியல் நிலையும் ஏனை மூன்றே (12)**

முதலெழுத்து முப்பதில் அடங்காத, சார்ந்துவரும் தன்மையுடைய குற்றியலிகரம், குற்றியலுகரம். ஆய்தம் என்ற ஏனைய மூன்றும் மெய் போல அரைமாத்திரையே பெறும். அவ்இயல் - அதே இயல்பு. அதே கால அளபு. எ.கா. காடியாது, காடு, க.ஃ.சு.

**மகரக் குறுக்கம்**

**அரையளபு குறுகல் மகரம் உடைத்தே**
**இசையிடன் அருகும் தெரியுங் காலை. (13)**

மகரமெய் தனக்குரிய அரைமாத்திரையில் குறுகிக் கால் மாத்திரையாகுமிடம் உண்டு. ஆராயின் இது செய்யுளுள் ஓசை கருதிவரும் ஒலி நெருக்கடியின் போது அரிதாக வரும். எ.கா. போன்ம், மருண்ம். இசையிடன் - ஓசை கருதி வரும் இடச்சூழல்.

**மகரக்குறுக்கத்தின் வடிவம்**

**உட்பெறு புள்ளி உருவா கும்மே. (14)**

மேலே புள்ளியுடைய மகரமெய் குறுகும் போது அவ்வடிவினுள்ளேயும் ஒரு புள்ளி அமையும். (முற்கால நிலை)

**மெய்யின் வடிவம்**

**மெய்யின் இயற்கை புள்ளியொடு நிலையல் (15)**

மேலே புள்ளியுடன் அமைவதே மெய்யெழுத்துக்களின் உருவத்தைக் காட்டும் இயல்பாகும். இயற்கை - இயல்பு. அவை க்,ங்,ச்,ஞ்,ட்,ண்,த்,ந்,ப்,ம்,ய்,ர்,ல்,வ்,ழ்,ள்,ற்,ன்.

**எ,ஓ புள்ளிபெறல்**

**எகர ஒகரத்து இயற்கையும் அற்றே. (16)**

உயிர்களுள் எ, ஒ என்ற இரு குறில்கள், அதே இயல்புடன் புள்ளிபெற்றே நிற்கும்.

**உயிர்மெய்கள் ஒலிக்கும் முறையும் வரிவடிவமும்**

**புள்ளி இல்லா எல்லா மெய்யும்**
**உருவுரு வாகி அகரமோடு உயிர்த்தலும்**
**ஏனை உயிரோடு உருவுதிர்ந் துயிர்த்தலும்**
**ஆயீ ரியல உயிர்த்த லாறே. (17)**

புள்ளி நீங்கிய மெய்கள் எல்லாம் அவ்வடிவே வடிவாக (க,ங,ச,ஞ என) அகரமேறிய உயிர்மெய்களாகி ஒலிக்கப்படும். இப்புள்ளியில்லா வடிவமே பிற பதினோர் உயிர்களோடு சேரும்போது வேறுவேறு வடிவங்களைப் பெற்று ஒலிக்கப்படும். இவ்விரு முறையில் உயிர்மெய்களின் வடிவமும் ஒலிக்கும் முறையும் அமையம். உரு உருவாகி – புள்ளி எடுத்த பின்னும் புள்ளியிருந்த அவ்வடிவே வடிவமாய், உயிர்த்தல் - ஒலித்தல். ஆ ஈர் இயல – அகரம் சேர்ந்த புள்ளியில்லா வடிவமும் ஒலிப்பும் ஒன்று. பிற பதினோர் உயிர்கள் சேருங்கால் ஏற்படும் வடிவமாற்றங்களும் ஒலிப்பும் பிறிதொன்று ஆக அந்த இரண்டு இயல்புகளை உடையன என்பதாம். க, கா, கி, கீ என இவ்வாறு.

**மெய் + உயிர் - உயிர்மெய்**

**மெய்யின் வழியது உயிர்தோன்று நிலையே (18)**

உயிர்மெய்யில் மெய்யொலி முன்னும் உயிரொலி பின்னருமாக ஒலிக்கும். மெய்யின் வழியது – மெய்யொலியின் பின்வருவது. உயிர் - உயிரொலி. க் + அ = க. பாலும் நீரும் போல் ஒன்றாயின என்பர் இளம்பூரணர்.

**வல்லினமெய்**

**வல்லெழுத்தென்ப க ச ட த ப ற (19)**

க் ச் ட் த் ப் ற் ஆறும் வல்லெழுத்து.

**மெல்லின மெய்**

**மெல்லெழுத்தென்ப ங ஞ ண ந ம ன (20)**

ங் ஞ் ண் ந் ம் ன் ஆறும் மெல்லெழுத்து.

**இடையின மெய்**

**இடையெழுத் தென்ப ய ர ல வ ழ ள (21)**

ய் ர் ல் வ் ழ் ள் ஆறும் இடையெழுத்து

**மெய்ம்மயக்கம்**

**வேறுநிலை மெய்ம்மயக்கம், உடனிலை மெய்ம்மயக்கம்**
**அம்மூ வாறும் வழங்கியல் மருங்கின்**
**மெய்ம்மயங் குடனிலை தெரியுங் காலை. (22)**

முற்கூறிய பதினெட்டு மெய்களும் மொழிப்படுத்தி வழங்கும்போது, ஓரொற்றுடனிலையாகத் தம்முள் மயங்கிவரும். முன்னம் - சொல்லினிடையே ன் மெய்யின்பின் ன வந்துள்ளது. இது ன்+அ என மெய்யொலி முன்னதாதலின் தன்னெழுத்தின் முன் தானே வந்தது. முன்னதாக மெய்யும் தொடர்ந்து உயிர்மெய்யுமாக வந்து இணைவதால் இவை **ஓர்ஒற்று உடனிலை** எனப்படும். இதனை உடனிலை மெய்ம்மயக்கம் என்பர். முன்பு ன்+ப்+உ. இதில் ன், ப் என வேறுபட்ட மெய்கள் தம்முள் மயங்கி இணைந்து நின்றன. இதை வேற்றுநிலை மெய்ம்மயக்கம் என்பர். வழங்கியல் மருங்கின் - மொழிப்படுத்தி வழங்கும் மக்கள் வழக்கில், மெய்மயங்கு – மெய்கள் மயங்குதல், உடனிலை எழுத்துத் தொடர்ந்து நின்று மயங்குதல். இன்ன மெய்க்குப்பின் இன்னின்ன மெய் வருமென்ற இவ்விலக்கணம் தமிழ்ச் சொற்களை இனங்காட்டும்.

**வேற்றுநிலை மெய்ம்மயக்கம்**

**ட் ற் ல் ள் +க் ச் ப்**

**ட ற ல ள என்னும் புள்ளி முன்னர்க்**
**க ச ப என்னும் மூவெழுத் துரிய. (23)**

ட், ற், ல், ள் நான்கையும் அடுத்து க், ச், ப் மெய்கள் உடன் கலந்து நிற்றற்குரியன. கொட்க, கட்சி (கூடு), கொள்ப என இவ்வாறு வரும். முன்னர் - அடுத்து.

**ல் ள் + ய் வ்**

**அவற்றுள்**
**ல ளஃகான் முன்னர் ய வ வும் தோன்றும் (24)**

அவற்றுள் ல், ள் இரண்டையடுத்து ய், வ்வும் இடம்பெறும். கொல்யானை, வெள்வளை இவ்வாறு வரும். மெய்ம்மயக்கம் தனிச்சொல்லிலும் இங்ஙனம் ஒரு சொன்னீர்மைத்தாய் இணைந்து நிற்கும் தொடர்களிலும் அமையும்.

**ங் ஞ் ண் ந் ம் ன் + க் ச் ட் த் ப் ற்**

**ங ஞ ண ந ம ன எனும்புள்ளி முன்னர்த்**
**தத்தம் மிசைகள் ஒத்தன நிலையே. (25)**

ங், ஞ், ண், ந், ம், ன் என்ற மெல்லின எழுத்துக்களுக்கு முன்னதாக நெடுங்கணக்கில் நிற்கும் க், ச், ட், த், ப், ற் என்ற வல்லின எழுத்துக்கள் பொருந்தி நிற்கும். மிசைகள் - மேலே முன்னதாக நிற்பன. ஒத்தன நிலையே என்பதால் ங்க, ஞ்ச, ண்ட என ஓசைப் பொருத்தமுண்மையும் சுட்டப்படுகிறது. தெங்கு, பஞ்சு, உண்டு, பந்து, கம்பு, கன்று என வரும்.

**ண் ன் க் ச் ஞ் ப் ம் ய் வ்**

**அவற்றுள்**
**ண னஃகான் முன்னர்க்**
**க ச ஞ ப ம ய வ வ் ஏழும் உரிய. (26)**

அவற்றுள் ண், ன் அடுத்து க், ச், ஞ், ப், ம், ய், வ் ஏழு மெய்களும் பொருந்துதற்குரியன. வெண்கலம், புன்கண், பொன்ஞாண், வெண் மாலை.

**ஞ ந ம வ + ய்**

**ஞ ந ம வ என்னும் புள்ளி முன்னர்**
**யஃகான் நிற்றல் மெய்பெற் றன்றே. (27)**

ஞ், ந், ம், வ் என்னும் மெய்களுக்குப் பின்னர் ய் நிற்பதும் வழக்கில் காணப்படுவதேயாகும். இவ்வகைக்குரிய தனிச் சொற்கள் அரிதாக வழங்கியிருக்க வேண்டும். அதனால் உரிஞ்யாது (உரிஞ்சுதல் யாது), தெவ்யாது (பகையாது) எனத் தொடர்ச் சொற்களையே எடுத்துக்காட்டியுள்ளார். மெய்பெறல் - வழக்கில் காணப்படுதல்.

**ம் + வ்**

**ம.்.கான் புள்ளிமுன் வவ்வும் தோன்றும் (28)**

ம் மெய்முன் வ் மெய்யும் இடம்பெறும். நலம் வளர்க.

**ய்ர்ழ் மொழி முதல் எழுத்து 9, ங.**

**யரழ என்னும் புள்ளி முன்னர்**
**முதலாகு எழுத்தும் ஙகரமொடு தோன்றும் (29)**

ய், ர், ழ் மெய்களின் பின்னர் மொழி முதலாகுமென்ற ஒன்பது க ச த ப ஞ ந ம வ உயிர்மெய் எழுத்துக்களும் ங் என்ற மெய்யும் கலந்து வரும். முன்னர் என முன்னர்க் கூறியதை இன்று நாம் பின்னர், பிறகு, அடுத்து என்றே கூறுகிறோம். முதலாகும் எழுத்து மொழிமரபில் அடுத்துக் கூறப்படுவன. செய்கை, செய்தி, ஆய்ஞர், தெய்வம், வாய்மை, ஆர்வம் எனவும் தொடர்மொழிகளிலும் காணப்படும். வேய்ங்ஙனம், வேர்ங்ஙனம் என முன்பு வழங்கின போலும் என்பார் நச்சினார்க்கினியர்.

**உடனிலை ர, ழ – தம்முன் தாம்வரா மெய்ம்மயக்கம்**

**மெய்ந்நிலை சுட்டின் எல்லா எழுத்தும்**
**தம்முன் தாம்வரூஉம் ரழஅலங் கடையே (30)**

உலகில் மொழிப்படுத்திப் பேசும் வழக்கு நிலையைச் சுட்டிக் கூறினால், எல்லா மெய்களுமே தம்முன்தாம் இணைந்துவரும். ர, ழ இரண்டும் தவிர்த்து. எனவே ர்,ழ் இரண்டும் தம்முன்தம் வரா என்பதும் தம்முன் பிறமெய்களே வந்து மயங்குமென்பதும் பெற்றாம். ஆர்வம், வாழ்க்கை, மெய்ந்நிலை – வழக்கு நிலை.

க,ச,த,ப நான்கும் தம்முன் தாம் மட்டுமே வரும். ர, ழ இரண்டும் தம்முன் பிறவே வரும். எஞ்சிய பன்னிரண்டும் - ங், ஞ், ட், ண், ந், ம், ய், ல், வ், ள், ற், ன் - தம்முன் தாமும் தம்முன் பிறவும் என இருவகையாகவும் வரும்.

**அ இ உ சுட்டெழுத்து**

**அ இ உ அம் மூன்றும் சுட்டு (31)**

அ, இ, உ மூன்று உயிர்க்குறில்களும் சுட்டிக் கூறுதற்கும் பயன்படும். அம்மூன்றும் எனத் தொல்காப்பியரே சுட்டிக்கூறி விளக்குதல் காண்க.

**ஆ ஏ ஓ – வினாவெழுத்து**

**ஆ ஏ ஓ அம் மூன்றும் வினா (82)**

ஆ, ஏ, ஓ மூன்றும் வினாப் பொருளையும் தரும். பார்த்தாயா? (ஆ) சொன்னது நீதானே? (ஏ), படித்தானோ இல்லையோ? (ஓ) என வரும்.

**எழுத்தொலிகள் நீளுதல் இசைப்பாடலில் வரும்**

**அளபிறந்து உயிர்த்தலும் ஒற்றிசை நீடலும்**
**உளவென மொழிப இசையொடு சிவணிய**
**நரம்பின் மறைய என்பனார் புலவர் (33)**

உயிர், மெய் எழுத்துக்களுக்க மாத்திரை அளபு கூறப்பட்டன. மூன்று மாத்திரை ஒலிக்கும் அளபெடைகளும் குறிப்பிடப்பட்டன. இந்த அளபுகளைவிட மிக நீட்டித்தும் இவை இசைத்தமிழில் ஒலிக்கும் என்ற புறநடையே இதில் கூறப்படுகிறது.

உயிர் எழுத்துத் தன் மாத்திரை அளபைக் கடந்து ஒலித்தலும் ஒற்றெழுத்து இசையுடன் நீட்டித்தொலித்தலும், பண்ணிசைத்துப் பாடுதற்குப் பொருந்திய இசைத்தமிழ்நூல் இலக்கணப்படி அமைவன உள என்பர் அறிஞர். அளவு இறந்து – மாத்திரை எல்லை கடந்து, உயிர்த்தல் - உயிரெழுத்துக்கள் ஒலித்தல். இசைநீடல் - (பண்ணிசையாம் ஆளத்தி செய்யும் போது) ஒற்றெழுத்துக்கள் தம் மாத்திரையை விட நீண்டு ஒலித்தல். பாடல்களைப் பண்வழி பாடும் இசையுடன் பொருந்திய இசைக்கலை நூல்களை இசையுடன் சிவணிய நரம்பின் மறை என்றார். முன்பு யாழே இசையின் அடிப்படையாயிருந்தது. தமிழ்க்கே உரிய, அரிய பொருள் பொதிந்த நூல்கள் மறைகள் எனப்பட்டன. வடமொழி வேதவழிப்பட்ட பெயரன்று இது. தமிழ்க்கு உரிய மறைகள் பல இருந்தன.

# நூன்மரபு கருத்துக்களின் தொகுப்பு

**தமிழ் எழுத்துக்கள்**

தமிழில் ‘எழுத்து’ என்று சொல்லப்படுவன அகரம் முதல் னகரம் ஈறான முப்பதுமாகும். இவற்றைச் சார்ந்து வரும் எழுத்துக்கள், குற்றியலுகரம், குற்றியலிகரம், ஆய்தம் என்பனவாம்.

**எழுத்தும் ஒலிக்கும் கால அளவும்**

அ இ உ எ ஒ எனும் அவை ஐந்தும் ஒரு மாத்திரையளபு ஒலிக்கும் குற்றெழுத்துக்களாகும்.

ஆ ஈ ஊ ஏ ஐ ஓ ஔ எனும் ஏழும் இரண்டு மாத்திரையளபு ஒலிக்கும் நெட்டெழுத்துக்களாகும்.

ஓரெழுத்து மூன்று மாத்திரையளபு ஒலித்தல் தமிழில் இல்லை.

**அளபெடை**

எழுத்துக்களை அளபு நீட்டித்தொலிக்க விரும்பினால், அவ்வளபுடைய ஒலியைக் கூட்டி ஒலித்திடுதல் வேண்டும்.

நுண்ணியதாக ஆராய்ந்தறிந்தவர் கண்டவாறு, கண்ணிமைப் பொழுதும் கைந்நொடிப் பொழுதுமே ஒரு மாத்திரைக்கு அளபு கருவியாகும்.

**முதலெழுத்து வகை**

அகரம் முதலாக ஔகாரம் ஈறாகப் பன்னிரெண்டெழுத்தும் உயிரெழுத்தாம்.

ககரம் முதலாக னகரம் ஈறாகப் பதினெட்டெழுத்தும் மெய்யெழுத்தாகும்.

**உயிர்மெய், மெய், சார்பு: மாத்திரை அளபு**

மெய்யுடன் சேர்ந்தாலும் உயிரெழுத்தின் இயல்பு மாறாது. உயிரின் மாத்திரையளபே உயிர் மெய்க்கும் அளபாகும்.

மெய்யெழுத்தின் மாத்திரை அரையாகும்.

முதலெழுத்திலடங்காத குற்றியலிகரம் குற்றியலுகரம் ஆய்தம் எனப்பட்ட ஏனைய மூன்றும் மெய்போல, அவ்அரை மாத்திரையே பெறும்.

**மகரக் குறுக்கமும், எழுத்து வடிவமும்**

செய்யுளள் ஓசை கருதிவரும் சூழலில், மகர மெய் தன்அரை மாத்திரயேனும் குறைந்து ஒலிக்கும்.

அவ்வாறு குறைந்தொலிக்குமிடத்து அம்மகரக் குறுக்கத்திற்கு, மகர மெய்க்குரிய வடிவத்துடனே, உள்ளேயும் ஒரு புள்ளி பெறும்.

மேலே புள்ளியுடன் அமைவதே மெய்யின் வடிவத்தைக் காட்டும் இயல்பாகும்.

எகர ஒகரங்களும் மேலே புள்ளிபெறும் அவ்வியல்பை உடையன. (இவை முற்கால எழுத்து வடிவம்)

**உயிர் மெய்கள்**

புள்ளி பெறாத எல்லா மெய்களும், அதுவே தன் வடிவமாக, அகரம் ஏறிய உயிர்மெய்களாக ஒலிக்கப்படும். ஏனைய உயிர்கள் சேரும்போது, அவ்வுருவமும் சிறிதுசிறிது மாற்றி எழுதப்பட்டு, உச்சரிக்கப்படும். உயிர்மெய்கள் வடிவம் பெற்று, ஒலிக்குமாறு அவ்விருதிறத்தனவாகும்.

உயிர் மெய்யை ஒலிக்கும்போது மெய்யொலி முன்னும், உயிர் ஒலி பின்னுமாக அமையும்.

**மெய்கள்**

க் ச் ட் த் ப் ற் ஆறும் வல்லெழுத்து

ங் ஞ் ண் ந் ம் ன் ஆறும் மெல்லெழுத்து

ய் ர் ல் வ் ழ் ள் ஆறும் இடையெழுத்து

**மெய்ம்மயக்கம்**

ஆராயுமிடத்து அவை பதினெட்டாம் வழக்கின் கண்ணே ஓர் ஒற்று உடனிலை மெய்ம்மயக்கமாய் இடம்பெறும்.

ட ற ல ள மெய்க்குப்பின் க ச ப மூன்று மெய்யும் உயிர் மெய்யாய் வந்து மயங்கும்.

அவற்றுள் ல, ள வுக்குப் பிறகு ய வ வும் வரும்.

ங ஞ ண ந ம ன எனும் மெல்லின மெய்க்குப் பின்னர், அவ்வம் மெய்களின் முன்னுள்ள வல்லின எழுத்துக்கள் (க,ச,ட,த,ப,ற) பொருந்திவரும்.

அவற்றுள் ண ன மெய்க்குப் பின்னர் க ச ஞ ப ம ய வ என்ற ஏழு உயிர்மெய்களும் வந்து கலந்தற்குரியன.

ஞ ந ம வ என்னும் மெய்க்குப் பிறகு யகரம் வந்து பொருந்துதல் வழக்காகும்.

மகர மெய்க்குப் பிறகு வகரமும் இடம்பெறும்.

ய ர ழ மெய்களுக்கடுத்து மொழிக்கு முதலாகுமென்ற க ச த ப ஞ ந ம ய வ ஆகிய உயிர்மெய்களும் ஙகர ஒற்றும் பொருந்தும்.

வழக்காற்றுப்படி பார்த்தால் ர, ழ மெய் தவிர்த்த அனைத்து மெய்களும் தம்முன்தாம் - மெய்யும் அடுத்து அதே உயிர்மெய்யுமாய் வந்து மயங்கும். ர, ழ இரண்டும் தம்முன் பிற உயிர் மெய்களுடனேனே மயங்கும் என்பதாகும்.

**சுட்டும் வினாவும்**

அ இ உ என்ற அவை மூன்றும் சுட்டெழுத்துக்கள்.

ஆ ஏ ஓ என்ற அவை மூன்றும் உயிரெழுத்துக்களிலுள்ள வினாவெழுத்துக்கள்.

**இசையும் எழுத்தொலியும்**

பண்ணிசையோடு பாடப்படும் இயல்பு பொருந்திய இசைக்கலையில், உயிர்கள் தமக்குரிய மாத்திரையின் எல்லை கடந்து ஒலித்தலும், ஒற்றெழுத்துக்கள் ஓசை நீண்டு ஒலித்தலும் உளவென்பர்.

## வினாக்கள்

**பத்திவினா**

1. நூன்மரபின் பெயர்க்காரணம் குறித்து ஆராய்க.
2. எழுத்துக்களின் வகைகளாகத் தொல்காப்பியர் கூறுவன யாவை?
3. எழுத்துக்களின் கால அளவு, மாத்திரை குறித்து எழுதுக.
4. சுட்டெழுத்து, வினாவெழுத்து விளக்குக.
5. சார்ந்துவரல் மரபின் மூன்றாவன யாவை?
6. ‘முப்பாற்புள்ளியும் எழுத்தோரன்ன’ என்பதில் எழுத்தோரன்ன என்று கூறியதேன்?
7. எழுத்துக்களின் பிற மரபுகளாகத் தொல்காப்பியர் கூறுவன யாவை?

**கட்டுரை வினா**

1. முதலெழுத்துக்கள், சார்பெழுத்துக்கள் குறித்து தொல்காப்பியர் கருத்துக்களைத் தொகுத்துரைக்க.
2. எழுத்துக்களின் வடிவம் குறித்து தொல்காப்பியர் கூறுவன யாவை?
3. தொல்காப்பியர் கூறும் மெய்ம்மயக்கம் பற்றி ஒரு கட்டுரை வரைக. (அ) மெய்ம்மயங்குதல் என்றால் என்ன? அதன் வகைகளை விளக்குக.
4. தனி மெய்களுக்குத் தொல்காப்பியர் தரும் வேறு குறியீடுகள் யாவை? (அ) தனி மெய்களின் மூவகைகளை விளக்குக.

# 2. மொழிமரபு

மொழியிடைநின்ற எழுத்திற்கு இலக்கணம் கூறுவது மொழிமரபு. க எனத் தனிநின்ற எழுத்துக்கும் ‘கடவுளில்’ உள்ள க வுக்கும் தமிழில் வேறுபாடு இல்லை. ஒரே எழுத்து இடம்நோக்கி ஒலிமாற்றம், ஒலித்திரிவு பெறுதல் வேற்றுமொழிகளில் மிகுதி. தமிழில் அவ்வாறு மொழியிடைப்படுத்துங்கால், வேறுபடுவன சில எழுத்துக்களே. சார்பெழுத்து என்னும்போது, தத்தம் முதலெழுத்தைச் சார்ந்து நிற்பன எனக் கூறினாலும் மொழியிடைச் சார்ந்துநிற்கும் முறைமையால் அங்ஙனம் தனி இயல்புடையவாயின என்பதே அடிப்படை உண்மையாகும். எழுத்துக்கள் மொழி ஆதலும் அவற்றின் முதல் இடை இறுதிநிலை அமைப்பும் எழுத்துக்களைக் கூட்டி மொழிபடுத்ததல் பற்றியனவாம். நூன்மரபு எழுத்துப் பற்றிய அடிப்படை இலக்கணம் என்றால், மொழிமரபு அவ்வெழுத்தாலாம் சொல் பற்றிய அடிப்படை இலக்கணம் எனலாம்.

### சார்பெழுத்துக்கள்

### ஒரு மொழிக் குற்றியலிகரம்

**குற்றிய லிகரம் நிற்றல் வேண்டும்**
**யாவென் சினைமிசை உரையசைக் கிளவிக்கு**
**ஆவயின் வரூஉம் மகரம் ஊர்ந்தே. (34)**

பேச்சிடையே ஒருவரை அழைத்துச் செல்லும்போது கேண்மியா, சென்மியா என ‘மியா’ என்ற அசைச்சொல் முன்பு பயன்பட்டது. இந்த உரையைச் சொல்லில், யா எழுத்துக்கு முன் மகர ஒற்றிலுள்ள இ குறுகிய ஓசை பெறும். இவ்வாறு இடைப்பட்டு நிற்கும் என்பதாம். சினை – சொல்லின் உறுப்பாகிய எழுத்து. மகரம் ஊர்ந்து – மகர மெய்யுடன் சேர்ந்து.

### புணர் மொழிக் குற்றியலிகம்

**புணரியல் நிலையிடைக் குறுகலும் உரித்தே**
**உணரக் கூறின் முன்னர்த் தோன்றும் (35)**

முன்னர்க் கூறியவாறு தனிமொழியில் மட்டுமின்றி, இருசொற்புணர்ச்சிக்கண்ணும் இகரம் குறுகுதலுண்டு. அது பின்னே வரும் குற்றியலுகரப் புணரியலில் விளங்ககக் கூறப்படும் (410). முன்னர் என்பதை இன்று பின்னதகா என்போம். நாடு+யாது=நாடியாது. காட்டு+யானை=காட்டியானை நாடி வேறு: நாடு – திரிந்த. நாடி (யாது) வேறு. புணர்ச்சி வேறுபாட்டால், பொருள் வேறுபடல் காண்க.

## ஒருமொழிக் குற்றியலுகரம்

**நெட்டெழுத் திம்பரும் தொடர்மொழி ஈற்றும்**
**குற்றிய லுகரம் வல்லா றூர்ந்தே (36)**

தனி நெட்டெழுத்துக்குப் பின்பும் ஒன்றுக்கு மேற்பட்ட பல எழுத்துக்கள் தொடர்ந்த மொழிகளிலும் வல்லெழுத்துக்கள் ஆறினையும் சார்ந்து குற்றியலுகரம் வரும். இம்பர் - பின்பு. தொடர்மொழி - இரண்டெழுத்துக்களுக்கு மேற்பட்ட எழுத்துக்களான மொழி. வல்லாறு – வல்லினம் ஆறு. க்,ச்,ட்,த்,ப்,ற். வல்லாறு ஊர்ந்து வரும் என முடித்துக் கொள்ள வேண்டும். ஆறு, பாக்கு, மூச்சு, பாட்டு, காது, காப்பு, காற்று.

## புணர்ச்சிமொழிக் குற்றியலுகரம்

**இடைப்படிற் குறுகும் இடனுமா ருண்டே**
**கடப்பா டறிந்த புணரிய லான. (37)**

முன்னர்க் கூறியவாறு தனிமொழிகளின் இறுதியில் மட்டுமன்றி, இருசொற் புணரும் புணர்மொழிகளின் இடையிலும் உகரம் குறுகும். அது முறைப்படி புணரியலில் கூறப்படும் (409). கடப்பாடு அறிந்த – முறையாகச் சொல்ல வேண்டிய கடப்பாடுள்ள. புணரியலான – புணரியலில் கூறப்படும் என முடித்துக்கொள்க. பாடு+பொருள் =பாட்டுப்பொருள். சுக்குச்சாறு.

## ஒருமொழி ஆய்தம்

**குறியதன் முன்னர் ஆய்தப் புள்ளி**
**உயிரொடு புணர்ந்தவல் லாறன் மிசைத்தே. (38)**

ஆய்தப்புள்ளி குற்றெழுத்தின் பின்னும் உயிர்மெய் வல்லெழுத்து ஆறனுக்கு முன்னுமாக வரும். எஃது, அஃது, கஃசு, மிசைத்து – முன்னதாக.

## புணர்மொழி ஆய்தம்

**ஈறியல் மருங்கினம் இசைமை தோன்றும் (39)**

முன் சொல்லியவாறு ஒருமொழிக் கண்ணேயன்றி, சொல்லின் ஈறு புணரும் புணர்ச்சி நடக்குமிடத்தும் ஆய்தமாக இசைக்கும் ஒலிப்புத் தோன்றும். இயல் - இயங்குதல். புணர்தல். இசைமை – எழுத்துப் புணருங்கால் ஆய்த ஓசை தோன்றுதல். அல்+திணை=அஃறிணை. பல்+துளி=பஃறுளி.

### குறிப்புமொழி ஆய்தம்

**உருவினும் இசையினும் அருகித் தோன்றும்**
**மொழிக்குறிப் பெல்லாம் எழுத்தின் இயலா**
**ஆய்தம் அஃகாக் காலை யான (40)**

'கன்னங்கரேலென்று' என்பது போல் நிறத்தையும் ஓசையையும் ஆய்த எழுத்துச் சொற்களால் குறிப்பதுண்டு. கஃறென்னும் கல்லதர் அத்தம் - கருநிறமான கற்கள் கிடக்கும் பெருவழி. கஃறென்னும் தண்தோட்டுப் பெண்ணை – கல்லென்னும் ஓசை பொருந்திய மடல்களையுடைய பனைமரம். இன்று தாளிக்கும்போது கஃறென ஓசை எழும்: அதில் போட்ட கடுகு, கறிவேப்பிலை எல்லாம் 'கஃறென' கருக்கும். இங்கு 'கஃறென' ஆய்தத்தை அழுத்தி, அளபெடை போல நீட்டி ஒலிப்பர். இவை உரு (நிறம்), இசை (ஓசை) யைக் குறிக்கும் ஒலிக்குறிப்புச் சொற்கள். இவை அளபெடை போல், குறுகாமல் நீட்டி ஒலிக்கும் தன்மையவாயினும், அதனை எழுத்தால் எழுதிக் காட்டுவதில்லை. அருகி வழங்குவன இவை. மொழிக்குறிப்பு – ஒலிக்குறிப்பால் பொருள் தரும் மொழி. எழுத்தின் இயலா – எழுத்தால் எழுதிக்காட்ட இயலாது. ஆய்தம் அஃகாக் காலை – ஆய்தம் சுருங்காமல் நீட்டி ஒலிக்குமிடங்கள் இவை. அங்குதல் - சுருங்குதல்.

### இசைநிறைவிக்கும் உயிரளபெடை

**குன்றிசை மொழிவயின் நின்றிசை நிறைக்கும்**
**நெட்டெழுத் திம்பர் ஒத்தகுற் றெழுத்தே. (41)**

ஓசை குறையும் சொற்களில், நெட்டெழுத்துக்குப் பின்னே அதற்கு இனமொத்த குற்றெழுத்துக்கள் நின்று இசையை நிறைவிக்கும். 'தொழாஅர் எனின்','போஒம்','ஆடூஉ'. குன்றிசை மொழி – ஓசை குறையும் சொற்கள். ஒத்த - இனம் ஒத்த. நெடிலுக்கு அதன் இனமான குறில். வாஅஅ என அழைக்கத்தான் வேண்டும். இங்கு இனமொத்த எழுத்துவந்து, ஓசை நீள்கிறது. இன்றேல் வா மட்டும் நிற்க, நீட்டி ஒலிப்பது இயலாது. ஆகையால் அது 'குன்றிசைமொழி' எனப்பட்டது.

### ஐ,ஔ அளபெடையாதல்

**ஐ ஔ என்னும் ஆயீ ரெழுத்திற்கு**
**இகர உகரம் இசைநிறை வாகும். (42)**

ஐ, ஔ இரண்டு நெடில்களும் ஒத்த இனமான குறில்கள் இல்லையாதலால், ஐக்கு 'இ'யும் ஔவுக்கு 'உ'வும் தொடர்ந்து நின்று இசையை நிறைவிக்கும்: கனைஇ, வௌ உவு. ஐஇ, ஔஉ.

**மொழியாக்கம்**

**நெட்டெழுத்தேழும் ஓரெழுத் தொருமொழியாகும்**

**நெட்டெழுத் தேழே ஓரெழுத் தொருமொழி (43)**

நெட்டெழுத்துக்கள் ஏழும், பிறிதொரு பொருளைத் தந்து தனிஎழுத்தே சொற்களாகவும் வழங்கும். ஆ-பசு,ஈ-கொடு, ஔ-மட்டும் கௌ, வௌ என உயிர்மெய்யாய் வரும்.

**குறில் ஐந்தும் அவ்வா வாரா**

**குற்றெழுத் தைந்தும் மொழிநிறை பிலவே. (44)**

குற்றெழுத்துக்கள் ஐந்தும் ஓரெழுத்தொரு மொழிகளாக நிறைவுபெற வருவதில்லை. (சில வரும்) நொ-நொந்துபோ. து-உண், (துப்பு – உணவு குறள்,12)

**மொழி வகை**

**ஓரெழுத் தொருமொழி ஈரெழுத் தொருமொழி**
**இரண்டிறந்து இசைக்கும் தொடர்மொழி உளப்பட**
**மூன்றே மொழிநிலை தோன்றிய நெறியே. (45)**

தமிழில் சொற்கள் மூவகைப்படும். 1. ஓரெழுத்து மொழி 2. ஈரெழுத்தொரு மொழி 3. தொடர்மொழி. இரண்டுக்கும் மேற்பட்ட எழுத்துக்களைக் கொண்டன தொடர்மொழி எனப்படும். கா, காசு, கடுகு, கலப்பை, கலங்கல், கலங்கினான்.

**தனிமெய்யை ஒலிக்கும் முறை**

**மெய்யின் இயக்கம் அகரமொடு சிவணும் (46)**

மெய்களை 'அகர' உயிரொடு சேர்த்தே ஒலிக்கக்கூடும். சிவணும்-பொருந்தும். க,ங,ச,ஞ என்று மெய்களை ஒலித்துக் கூறுதல் இயல்பு. ககர மெய் என்பதுண்டு.

**மெய்ம்மயக்கப் புறனடை**

**தம்மியல் கிளப்பின் எல்லா எழுத்தும்**
**மெய்ந்நிலை மயக்கம் மானம் இல்லை. (47)**

தனி எழுத்தாகிய தனது நிலையைக் கூறவரும் போது, மெய்ம்மயக்க நிலையில் மாறி வருதல் குற்றமில்லை. (டகாரம், ம.ஃ.கான்).

**ஈரொற்றுடனிலை**

**ய ர ழ என்னும் மூன்றுமுன் ஒற்றக்**
**க ச த ப ங ஞ ந ம ஈரொற் றாகும் (48)**

கட்டு, வெட்குதல் என்பன மொழியிடையே ஓரொற்றுடனிலை எனப்படும். ஏன்? 'ட்' என்ற ஒரு மெய்க்கு அடுத்து டு (ட்+உ), கு (க்+உ) உயிர்மெய்யாய் மெய்யெழுத்தே இணைந்து வருதலின், அவ்வாறு கூறுவர். வாய்க்கால், காழ்ப்பு - இவற்றில் இரண்டு ஒற்றுக்கள் அடுத்தடுத்து நிற்பதால் இவை ஈரொற்றுடனிலை எனப்படும். ய ர ழ மூன்றும் முதலில் ஒற்றாக நிற்க. அவற்றை யடுத்து க ச த ப ங ஞ ந ம என்னும் எட்டும் ஈர் ஒற்றாய் வரும். காய்க்கும், பாய்ச்சு, வாய்த்தது, வாய்ப்பு, ஆர்ப்பு, தாழ்ப்பாள், காய்ங்கனி, தேய்ஞ்சது, காய்ந்தது, காய்ம்புறம். இவை சில முன்பு வழங்கியவை என இவ்வாறு வருவன காண்க.

**தனிக் குறிற்கீழ் ர, ழ ஒற்றுக்களாக வரா**

**அவற்றுள்**
**ரகார ழகாரம் குற்றொழ் றாகா. (49)**

ர, ழ மெய்கள் தனிக்குறிலுக்குப்பின் ஒற்றாக வரும் சொல் தமிழில் இல்லை. ஓர் என வராது: ஓர் என வரும். எழ் - என வராது. ஏழ் அனைவரும் அல்லது எழு என உகரம் பெற்று உயிர்மெய்யாய் வரும். இதனால் பிறமொழிச் சொற்களை எளிதி இனம் காணலாம். தர்மம், வர்க்கம், தமிழல்ல, தருமம், வருக்கம் என்பனவே தமிழ் வடிவமாகும்.

**முதலில் இருகுறில் வரின் நெடில் போலாகும்**

**தொடர்மொழி இயல்பு**

**குறுமையும் நெடுமையும் அளவிற் கோடலின்**
**தொடர்மொழி எல்லாம் நெட்டெழுத் தியல, (50)**

உயிர்குறில், நெடில் என்பன ஒரு மாத்திரை. இரண்டு மாத்திரை என அளபு பற்றியன. 'புகழ்' என்பதில் முதலில் இரண்டு குறில் வருதலால் இரண்டு மாத்திரை பெறும். அவற்றை நெடில்போலக் கொள்ள வேண்டும். நகர், தமிழ் எனக் குறலிணைக் கீழ் ரகர, ழகரம்-வரும்.

**செய்யுளுள் வரும் 'போன்ம்'**

**செய்யுள் இறுதிப் போலி மொழிவயின்**
**னகார மகாரம் ஈரொற் றாகும். (51)**

செய்யுளின் இறுதியில் 'போலும்' என்ற சொல் 'போன்ம்' என்று வந்து ஈரொற்றாவதுண்டு. 'போலி' மொழி – போலும் என்ற சொல். (மருளும் என்பது மருண்ம் எனச் செய்யுளில் வருவதையும் பிற்காலத்தார் சேர்த்துக்கொள்வர்.)

**அதில் மகரங்குறுகுதல்**

**னகாரை முன்னர் மகாரம் குறுகும் (52)**

'போன்ம்' என்பதில் உள்ள 'ன்'– னகாரமெய்முன் வரும் 'ம்' ஒற்றுத்தன் அரை மாத்திரையிற் குறுகிக் கால் மாத்திரையாகும். இதனை மகரக் குறுக்கம் என்பர்.

**தனியாகவும் மொழியிடையேயும் தமிழ் எழுத்தின் இயல்புநிலை**

**மொழிப்படுத் திசைப்பினும் தெரிந்துவே றிசைப்பினும்**
**எழுத்தியல் திரியா என்மனார் புலவர் (53)**

தமிழ் எழுத்துக்களை ஒரு சொல்லினுள் வைத்து ஒலித்தாலும் (கடவுள், பறவை), பெயர் தெரியுமாறு அவ்வெழுத்துக்களைத் தனியே எடுத்து ஒலித்தாலும் (க,ட,வு,ள்) அந்தந்த எழுத்துக்கள் தத்தம் தன்மையில் திரிவதில்லை. ஆங்கிலத்தில் A என்ற ஓரெழுத்தே, சொற்களில் அமையும் போது வெவ்வேறு ஒலிப்பு பெறும். 'at, Cat, Table' என்பனவற்றில் ஒரே 'A' வெவ்வேறாக ஒலிப்பதுபோல் தமிழில் மாறுவதில்லையல்லவா?

**மொழிஇடையே – ஐ – ஒலிமயக்கம் போது இயல்புநிலை மாறுமிடங்கள்**

**அகர இகரம் ஐகார மாகும் (54)**

அ இ இரண்டடையும் சேர்த்தால், ஐ ஒத்திசைக்கும் என்பதாம். வயிரம்-வைரம், கயிலை-கைலை மொழிபடுத் தொலிக்கும்போது எழுத்தியல்பு திரியாதென்றார். இங்கு திரியக்கூடிய சிலவற்றை விதந்து கூறுகிறார். வயி(ரம்) என்ற அ இ ஐ ஆகிய ஒத்திசைப்பது காண்க.

**சொல்லிடையே ஔ ஒலி மயக்கம்**

**அகர உகரம் ஔகார மாகும் (55)**

அதுபோல் சொல்லிடையே அ உ சேர்த்தொலித்தால் ஔ போல் ஒத்திசைக்கும். கவுதமன் - கௌதமன், கவுந்தியடிகள் - கௌந்தியடிகள், கவு-கௌ என உயிர் மெய்யிலுள்ள உயிர்களே இங்ஙனம் ஒத்திசைக்கின்றன.

**சொல்லில் அய் எனவும் மயங்கிவருதல்**

**அகரத் திம்பர் யகரப் புள்ளியும்**
**ஐ என் நெடுஞ்சினை மெய்பெறத் தோன்றும் (56)**

சொல்லிடையே 'அய்' என்று ஒலித்தாலும் 'ஐ' யை ஒத்திசைக்கும்.

ஐயர் - அய்யர். (ஔவை – அவ்வை என வருவதும் இது போன்றதேயாகும்.) இம்பர் - பின்னால், யகரப் புள்ளி –ய், நெடுஞ்சினை – நெட்டெழுத்து. மெய் பெறத் தோன்றும் - வடிவ ஒற்றுமை உண்டாகும். மெய் - வடிவம். இச்சூத்திரங்கள் மூன்றும் ஒலி வடிவ மயக்கம் பற்றியன. 'எழுத்தியல் திரியா' என்பதன் தொடர்ச்சியே இது. சொல்லிடையே திரிவனவும் சிலவுள என்பதே கருத்து.

**சொல்லிடை ஐ, ஔ வரும்போது ஒலிப்பளவு குறுகுதலுமுண்டு**

**ஓரள பாகும் இடனுமா ருண்டே**
**தேருங் காலை மொழிவயி னான (57)**

ஐ, ஔ இரண்டும் நெடிலாய் இரண்டு மாத்திரை அளபு பெறுவனவேயாயினும் இங்ஙனம் ஒலி மயக்கமாய், ஒத்திசைப்பதால் சொற்களிடையே வரும்போது, ஒரு மாத்திரை மட்டுமே பெறுமிடங்களுள்ளன. பழைமை – பழமை போல ஒலிப்பது இதனாலேயாம். செய்யுளில் ஐ, ஔ இரண்டையும் ஒரு மாத்திரையாகக் கொண்டு கணக்கிடுவதுமுண்டு, ஓரளவு – ஒருமாத்திரை. மொழி வயினான – சொற்களிடையே வரும்போது, தேருங்காலை – ஆராயுமிடத்து.

**சொல்லின் இறுதியில் வரும் ஒலி மயக்கம்**

**இகர யகரம் இறுதி விரவும் (58)**

இதுவும் ஒலி மயங்கிவரும் இலக்கணம் பற்றியது. நாய்-நாயி, பாய்-பாயி, ஆய்-ஆயி, என வருவன காண்க. இதுவும் உயிர்மெய் பற்றி வரும் விதியேயாம். 'நாய்,நாஇ' எனக் காட்டுவர். 'முன்பு அகர இகரம் ஐகாரமாகும் எனவும் யகரப்புள்ளி வந்து அய் யாகுமெனவும் கூறியவற்றின் புறநடையாய், சில இடத்து அகர இகரமாயும்

சில இடத்து அகர யகரமாயும் சொல்லுக்கேற்ப மாறி இடம் பெறும்'. வைதான் வய்தான் என எழுதலாம். அது வயிதான் என ஆகாது. மைந்தன் மயிந்தன் என்றே வரும். அது மய்ந்தன் என ஆகாது. இடத்திற்கேற்ப இவ்வடிவு மாற்றங்கள் மாற்றி எழுதப்படும் ஒலிக்கும் என்பதாம்.

### மொழி முதல் எழுத்துக்கள் - உயிர்கள் மொழிமுதலில் வருதல்

**பன்னீ ருயிரும் மொழிமுத லாகும் (59)**

உயிரெழுத்துப் பன்னிரண்டும் மொழிக்கு முதலில் வரும். (அம்மா,ஆடு,இலை…)

### தனிமெய் தமிழில் மொழிமுதலில் வராது

**உயிர்மெய் அல்லன மொழிமுத லாகா. (60)**

உயிரோடு கூடிய மெய்கள் அல்லாதனவாகிய தனிமெய்கள் தமிழில் மொழிக்கு முதலாவதில்லை. ப்ரியா, க்ரியா தமிழல்ல. பிரியை, கிரியை எனத் தமிழில் வர வேண்டும். கடல்-'க' முதல் எழுத்து, இவ்வுயிர்மெய்யில் க்+அ என மெய்தான் முதலில் உள்ளது. கடல் என்பதன் முதல் எழுத்து க் என்ற மெய்தான். எனினும் தமிழில் உயிரோடு கூடிய மெய்தான் மொழி முதலில் வரும். தனிமெய் வராது.

### மெய்களில் பன்னிரண்டுயிருடனும் மொழிமுதலில் வருபவை

**கதந பமஎனும் ஆவைத் தெழுத்தும்**
**எல்லா உயிரொடும் செல்லுமார் முதலே. (61)**

க த ந ப ம என்ற ஐந்து மெய்யெழுத்துக்களும் பன்னிரண்டு உயிர்களோடும் மொழி முதலாதற்குப் பொருந்தும். ஆ-அந்த. செல்லுமார் முதலே – முதலாதற்குப் பொருந்தும். கடல், காடு, கிளை, கீரி எனச் சொல்லிப் பார்க்க.

### சகர மெய் ஒன்பதுயிருடன் மொழிமுதலாதல்

**சகரக் கிளவும் அவற்றோ ரற்றே**
**அ ஐ ஒள எனும் மூன்றலங் கடையே (62)**

சகரமெய் அ, ஐ, ஒள தவிர்த்த ஒன்பது உயிர்களோடும் மொழி முதலில் வரும். மூன்று அலங்கடை- மூன்றும் அல்லாதவிடத்து. ச, சை, செள மூன்றும் வாரா. சங்க காலத்தும் பிறகும் இவையும் முதலாயின. சகடு, சட்டி, சமர் எனக் காட்டுவர். சையம், செளரியம் பிறமொழிச் சொற்கள்.

**வகரமெய் எட்டுயிருடன் மொழிமுதலாதல்**

**உ ஊ ஒ ஓ என்னும் நான்குயிர்**
**வ என் எழுத்தொடு வருதல் இல்லை (63)**

வகர மெய்யுடன் உ, ஊ, ஒ, ஓ நான்குயிரும் வாரா. வு, வூ, வொ, வோ முதலில் வரும் சொற்கள் தமிழில் இல்லை.

**ஞகரமெய் மூன்றுயிருடன் மொழிமுதலாதல்**

**ஆ எ ஒ**
**என்னும் மூவுயிர் ஞகாரத் துரிய (64)**

ஞகர மெய்யுடன் ஆ, எ, ஒ மூவுயிருமே மொழி முதலாகும். ஞாலம், ஞெமிழி (தீக்கடைகோல்), ஞொள்கல் (சுருங்குதல்).

**யகர மெய் ‘ஆ’வுடன் மட்டும் மொழிமுதலாதல்**

**ஆவோ டல்லது யகரம் முதலாது (65)**

யகரம் ‘ஆ’வுடன் சேர்ந்து மட்டும் மொழிமுதலாகும். முதலாது-முதலாக வராது. யானை, யாமம், யவனர், யூகம் போல்வன பின்பு வந்தவை.

**தத்தம் பெயர்சொல்ல, எல்லாமெய்யும் மொழி முதலாதல்**

**முதலா ஏன தம்பெயர் முதலும் (66)**

முதலாகா எனக் கூறப்பட்ட பிற மெய்கள் எல்லாம் தம் பெயர் கூறும்போது முதலாகும். முதலா – முதலாகா. ஏன-பிற. முதலும் - முதலாக வரும். டப்பெரிது, ஙப்போல் வளை, றன்னகரமா டண்ணகரமா? என வருதல் காண்க.

**மொழிமுதல் குற்றியலுகரம்**

**குற்றிய லுகரம் முறைப்பெயர் மருங்கின்**
**ஒற்றிய நகரமிசை நகரமொடு முதலும் (67)**

நுந்தை என்னும் முறைப்பெயரிடத்துப் பொருந்திய ‘ந்’ எனும் ஒற்றின்மேல் நிற்கும் (மொழி முதலிலுள்ள நகரத்துடன் கூடிய) உகரம் குறுகும். முறைப்பெயர் - நுந்தை (உன் தந்தை). ஒற்றிய – ஒற்றாய்ப் பொருந்திய, நகர மிசை – நகரத்தின் மேலே. நுந்தை மொழி முதற் குற்றியலுகரம்.

**அதன் இயல்பு**

**முற்றியல லுகரமொடு பொருள்வேறு படாஅது**
**அப்பெயர் மருங்கின் நிலையிய லான. (68)**

குற்றியலுகரச் சொற்கள் முற்றியலுகரச் சொற்களுடன் பொருள் வேறுபடும். கட்டு, ஓடு என ஏவும்போது முற்றுகரமாய் ஒரு பொருளும் எத்தனை கட்டு உள, ஓடு இல்லை எனப் பெயராய்க் குற்றுகரமாகும் பொழுது ஒரு பொருளும் பெறுதல் உண்டு. நுந்தை எனும் முறைப் பெயரிடத்து நிலையாக வருதலால் இங்கு முற்றியலுகரத்தொடு பொருள் வேறுபடுவதில்லை. நுந்தை – யை இதழ்குவித்துக் கூறிய வழி குறுகாது: குவியாது கூறியவழி குறுகும். எனினும் இரண்டிடத்தும் பொருள் வேறுபடாது.

**மொழியிறுதி எழுத்துக்கள்**

**ஔ தவிர்த்த உயிர்கள் மொழியீறாதல் (69)**

**உயிர் ஔ எஞ்சிய இறுதிய யாகும் (69)**

ஔ தவிர்த்த 11 உயிர்களும் மொழியிறுதியில் வரும். எஞ்சிய-தவிர்த்த, ஆ,ஈ, ஐ என ஓரெழுத்தொரு மொழி போல்வனவற்றில் உயிரே ஈறாம். மெய்களோடு சேரும்பொழுது இவை ஈறாதலும் பெறப்படும். நட-அகர ஈறு (ட்+அ), கடா-ஆகார ஈறு, நடி-இகர ஈறு இங்ஙனம் வரும். ஔ மொழி முதலாவதன்றி ஈற்றில் வருவதில்லை.

**ஔ ஈறாகுமிடங்கள்**

**க்வ்+ஔ**

**கவவோ டியையின் ஔவு மாகும் (70)**

க்,வ் இரண்டோடும் பொருந்தின் ‘ஔ’வும் மொழி ஈறாகும். கௌ, வௌ (கௌவு, வௌவு என ஏவுதல்). இயையின் - பொருந்திவரின்.

**எ மெய்யுடன் ஈறாதல் இல்லை**

**எ என வருமுயிர் மெய்யீ றாகாது (71)**

‘எ’ உயிர், மெய்யுடன் கூடி ஈறாகாது. ஏஎ, பேஎ என அளபெடையில் மட்டும் இறுதியில் தனித்து நிற்கும்.

**'ஒ'– நவ்வுடன் மட்டும் ஈறாகுதல்**

**ஒவ்வும் அற்றே நவ்வலங் கடையே (72)**

ஒ,'ந' மெய் தவிர்த்து எதிலும் ஈறாகாது. 'நொ' (நொந்து போ) என ஓரிடத்தில் மட்டும் ஈறாகும். (ந்+ஒ). நவ்வலங்கடை – நகர மெய் தவிர்த்து.

**ஏ ஓ என்னும் உயிர் ஞகாரத்தில்லை**

**ஞகாரத்துடன் கூடி ஏ. ஓ உயிர்கள்**
**ஈறாவதில்லை. உரிஞ, உரிஞஇ எனக்**
**காட்டுவன வழக்கிறந்தன. (73)**

**உ ஊ காரம் நவவொடு நவிலா (74)**

உகரம் 'ந்' மெய்யுடனும் ஊகாரம் 'வ்' மெய்யுடனும் ஈறாகும் சொற்கள் இல. எனவே நு, வூ என்ற ஈற்றுச் சொற்கள் இல்லை என்பதாம். நவிலா-பயின்று வருதல் இல்லை என்பர். சொல்லப்படுதல் இல்லை எனவும் பொருந்தும். பொருநு என்பத அருகிய வழக்கு என விடப்பட்டது போலும். இச்சூத்திரம் மேலும் ஆராயத்தக்க தென்பர்.

**'சு' இருமொழியில் மட்டும் ஈறாதல்**

**உச்ச காரம் இருமொழிக்கு உரித்தே (75)**

'சு' இறுதி, இரண்டு சொற்களுக்கு மட்டும் உரியது. உச்ச காரம் - சு,உசு,முசு என்பர். உசு-உளு, முசு-குரங்கு, பசு-பிற் காலத்தது. இந்நூற்பாவைக் குறில் தொடர்ந்த ஈரெழுத்தொருமொழி பற்றியதாகவே கொள்ள வேண்டும்.

**'பு' ஒரு மொழியில் மட்டும் ஈறாதல்**

**உப்ப காரம் ஒன்றென மொழிப**
**இருவயின் நிலையும் பொருட்டா கும்மே (76)**

'பு' எழுத்து,ஈரெழுத்து மொழியில் ஒரே இடத்தில் மட்டுமே வரும். 'தபு' என்பது அது. தன்வினை, பிறவினை என்ற இரண்டு நிலைகளில் பொருள்தரும். தன்னை அழி என்றும் பிறரை அழியச்செய் என்றும் இருபொருள்தரும் அரிய சொல் இது.

**புறனடை**

**எஞ்சிய வெல்லாம் எஞ்சுதல் இலவே (77)**

எஞ்சிய பிற உயிர்மெய்கள் எல்லாம் ஈறாகாது ஒழிதல் இல்லை. அ∴தாவது விதந்து சொல்லப்படாதன வெல்லாம் ஈறாக வரும் என்பதாம்.

**மெய்கள் மொழியீறாகும் முறை**

**ஞணநமன யரல வழள என்னும்**
**அப்பதி னொன்றே புள்ளி இறுதி (78)**

ஞ,ண,ந,ம,ன,ய,ர,ல,வ,ழ,ள என்ற பதினொரு மெய்யும் மொழி இறுதியில் வரும். உரிஞ், மண், பொருந், மரம் என இவ்வாறு வரும்.

**'ந' மெய் இருமொழியில் ஈறாதல்**

**உச்ச காரமொடு நகாரம் சிவணும் (79)**

சு இறுதி இரண்டே சொற்களில் ஈறானபோல், ந் இறுதியும் இரண்டு சொற்களில் மட்டும் ஈறாகும். பொருந் (பொருந்து), வெரிந் (முதுகு) என்ப.

**'ஞ' மெய் ஒரு மொழியில் மட்டும் ஈறாதல்**

**உப்ப காரமொடு ஞகாரையும் அற்றே**
**அப்பொருள் இரட்டாது இவணை யான (80)**

ஞகர இறுதி 'பு' இறுதி போல ஒரே சொல்லில் ஈறாகும். ஆயின் அதுபோல் பொருள் இரட்டித்து இங்கு வராது. உரிஞ்-உரிஞ்சுதல், இவணையான-இவ்விடத்தின்ககண்.

**'வ'மெய் நான்கு மொழிகளில் ஈறாதல்**

**வகரக் கிளவி நான்மொழி ஈற்றது (81)**

வகரம் நான்கு சொற்களில் மட்டும் ஈறாகும். அவ், இவ், உவ் (இவை சுட்டு), தெவ் (பகை).

**அறன், அறம் என்பது போல**

**ஒலி மயங்காத னகரத் தொடர்மொழிகள் ஒன்பது**

**மகரத் தொடர்மொழி மயங்குதல் வரைந்த**
**னகரத் தொடர்மொழி ஒன்ப.்.து என்ப**

**புகரறக் கிளந்த அ.்.றிணை மேன. (82)**

ம், ன் என்பன போலியாக மாறிவரும். அறம்-அறன், மறம்-மறன் எனக் கூறலுண்டு. மகர ஈறாக மாற்றிக் கூறப்படாத னரக ஈற்றுமொழிகள் தமிழில் ஒன்பது உள. அவை குற்றமறச் சொல்லப்பட்ட அ.்.றிணை இடத்தன. புகர் அற – குற்றமின்றி. கிளந்த - கூறப்பட்ட. எகின்-அன்னம், பயின்-பிசின், அழன்-பிணம், குயின்-மேகம், இவற்றுடன் பொருள் தெரியாத செகின், விழன், புழன், வயான், கடான் என்பனவும் காட்டுவர்.

# மொழிமரபு கருத்துக்களின் தொகுப்பு

**சார்பெழுத்துக்கள்**

**குற்றியலிகரம்**

மியா என்னும் உரையசைச் சொல்லில், யா எழுத்துக்கு முன்னுள்ள மகர ஒற்றிற் காணப்படும் இகரம் குறுகி ஒலிக்கும்.

இங்ஙனம் தனிமொழியில் மட்டுமின்றி, இருசொற் புணர்ச்சியிலும் இகரம் குறுகுதலுண்டு. அதன் பின்னர் புணரியலில் விளங்கக் கூறப்படும். (நாடு+யாது=நாடியாது.)

**குற்றியலுகரம்**

தனி நெட்டெழுத்துக்குப் பின்பும் பல எழுத்துக்கள் தொடர்ந்த தொடர் மொழிகளின் ஈற்றிலும், வல்லினம் ஆறினையும் சார்ந்து குற்றியலுகரம் வரும்.

இங்ஙனம் தனிமொழிகளில் மட்டுமின்றி, இரு சொற் புணரும் புணர்மொழிகளிடையேயும் உரகம் குறுகும். அது முறைப்படி புணரியலில் பின்பு கூறப்படும். (தேக்குக்கதவு)

**ஆய்தம்**

ஆய்தப்புள்ளி குற்றெழுத்தின் பின்னும் உயிர்மெய் வல்லெழுத்து ஆறனுக்கு முன்னுமாக வரும். (க∴சு)

இங்ஙனம் ஒருமொழிக் கண்ணேயன்றி, சொற்களின் ஈறு புணருமிடங்களிலும் ஆய்தமாக இசைக்கும் ஒலிப்புத் தோன்றும். (கல்+தீது=க∴றீது)

ஒலிக்குறிப்பாக வரும் ஆய்தம் நிறத்தையும் ஓசையையும் குறிக்க அருகித் தோன்றும். அப்போது அவ்வாய்த ஒலி சுருங்காமல் அளபெடைபோல நீண்டொலித்தாலும், அதனை எழுத்தால் எழுதிக் காட்டுவதில்லை.

**அளபெடைகள்**

ஓசை குறையும் சொற்களில், நெட்டெழுத்துக்குப் பின்னே அதற்கு இனமொத்த குற்றெழுத்துக்கள் நின்று ஓசையை நிறைவிக்கும்.

ஐ, ஔ இரண்டனுக்கும் இனமொத்த குற்றெழுத்து இன்மையால், முறையே இகரமும் உகரமும் இசையை நிறைவிக்க வரும்.

**தமிழ்ச்சொல் அடிப்படைவகை**

நெட்டெழுத்துக்கள் ஏழும் (பிறிதொரு பொருள் தரும்போது) ஓரெழுத்தொரு மொழிகள் ஆகும்.

குற்றெழுத்துக்கள் ஐந்தும் அங்ஙனம் ஓரெழுத்தொரு மொழிகளாக, நிறைவுபெற வருவதில்லை. சிற்சில வருமென்பதாம்.

தமிழில் சொற்கள் அமையும் விதம் ஓரெழுத்தொரு மொழியும் ஈரெழுத்தொரு மொழியும் இரண்டுக்கு மேற்பட்ட பலவெழுத்தத் தொடர்ந்த தொடர்மொழியும் என மூன்றாகும்.

**மெய்கள் ஒலிப்பு முறை**

மெய்கள் அகர உயிரோடு சேர்த்தே உச்சரிக்கப்படும். (க,ங)

அவற்றை ஞகாரம், டகாரமெனத் தனியெழுத்தாகிய நிலையைக் கூறும்பொழுது, எல்லா எழுத்தும் மெய்ம் மயக்க நிலைகளில் மாறிவரும். அதில் குற்றமில்லை.

**மெய்ம் மயக்கம் - ஈரொற்றுடனிலை**

ய ர ழ எனும் மூன்று ஒற்றுக்களின் பின் க ச த ப ங ஞ ந ம என்ற எட்டு மெய்களும் வந்து ஈரொற்றுடனிலை யாகும்.

அவற்றுள் ர, ழ இரண்டும் குறிற்கீழ் ஒற்றாக வாரா.

குறில், நெடில் என்ற வேறுபாடு. மாத்திரை அளவாற் கொள்ளப்படுதலின், இரண்டுக்கு மேற்பட்ட எழுத்துக்கள் தொடரும் தொடர்மொழிகள் எல்லாம் நெட்டெழுத்துப் போலும் இயல்புடையனவாம். குறிற்கீழ் வாரா எனப்பட்ட ரகர, ழகரம் குறிலினை முதலியவற்றின் பின் வருமென்பதாம். (பர் என வராது, பகர் என வரும். புழ் என வராதது புகழ் என்பதில் வரும்.)

**ஈரொற்றாய் நின்று மகரம் குறுகுதல்**

செய்யுளின் இறுதியில் நிற்கும் ‘போலும்’ எனும் சொல் ஓசைச்சூழல் கருதி போன்ம் எனத் திரிந்து,ஈரொற்றுடனிலையாய் நிற்கும்.

இந்தச் சூழலில் னகரத்தின் பின்னே நிற்கும் மகர ஒற்றுக் குறுகும்.

**சொல்லிடைப்படும் எழுத்தொலி மாற்றங்கள்**

சொல்லிடைப் படுத்த ஒலித்தாலும் தனி எழுத்தாய்ப் பிரித்து ஒலித்தாலும் எழுத்தின் இயல்பு மாறுவதில்லை. (சிற்சில மாறும் என்பது மட்டும் பின்னே கூறப்படுகின்றன.)

சொல்லிடைவரும் அகர இகரம் ஐ போல ஒலிக்கும்.(வயிரம்-வைரம்)

சொல்லிடைவரும் அகர உகரம் ஔ போல ஒலிக்கும். (கவுதமன்-கௌதமன்)

சொல்லிடையெ அகரத்தின் பின் யகர ஒற்றை எழுதினாலும் ஐ எனும் நெட்டெழுத்துப்போல ஒலி ஒற்றுமை உண்டாகும். (ஐயர் - அய்யர்)

ஐ, ஔ இரண்டும் ஆராயுங்கால் மொழியிடையே ஒரு மாத்திரை மட்டுமே பெறுமிடமும் உண்டு.

முன்பு எழுத்து மயக்கமாய் வருமெனப்பட்ட இகரமும், யகரமும் சொல் இறுதியில் மயங்கி வரக்கூடும். சில சொல்லில் இ ஆகவும் சில சொல்லில் 'ய்' ஆகவும் விரவிவரும் எனக் காட்டுவர். ஆய் - ஆயி. பாய்-பாயி.

**மொழி முதலெழுத்துக்கள்**

பன்னிரண்டு உயிர்களும் மொழி முதலாக வரும்.

உயிருடன் கூடிய மெய்யல்லாதன (தனி மெய்கள்) தமிழில் மொழிமுதலாகா.

க த ந ப ம என்னும் ஐந்து மெய்களும் எல்லா உயிருடனும் கூடி மொழிமுதலாகும்.

'ச'கர மெய் அ ஐ ஔ மூன்று உயிர் தவிர்த்த பிற ஒன்பதுயிர்களோடும் மொழிமுதலாகும்.

'வ'கர மெய் உ ஊ ஒ ஓ எனும் நான்குயிர் தவிர்த்த பிற எட்டுயிர்களுடன் மட்டும் மொழிமுதலாகும்.

'ஞ'கர மெய் 'ஆ', எ, ஒ என்ற மூன்றுயிர்களோடு மட்டும் மொழி முதலாகும்.

'ய'கர மெய ஆவுடன் மட்டுமே மொழிமுதலாகும்.

மொழிமுதலாகா எனக் கூறப்பட்ட பிற மெய்கள் எல்லாம், தம்பெயர் கூறுங்கால் மொழிமுதலாகும்.

நுந்தை என்ற முறைப்பெயரிலுள்ள 'ந'கரத்தின் மேல் பொருந்திய நகர மெய்யிலுள்ள உகரம் குறுகும். இது மொழிமுதல் குற்றியலுகரம் ஆகும்.

அப்பெயரை இதழ்குவித்துக் கூறினால் முற்றியலுகரம், குவியாது கூறினால் குற்றியலுகரம். எப்படிக் கூறினும் இக்குற்றியலுகரம் முற்றியலுகரத்துடன் பொருள் வேறுபடுவதில்லை

**மொழியிறுதி எழுத்துக்கள்**

உயிரெழுத்துக்களில் ஔ தவிர்த்தவை மொழியிறுதியில் வரும்.

க, வ மெய்களுடன் இணைந்து ஔவும் மொழியீறாகும்.

‘எ’ எனும் உயிர்மெய்யுடன் கூடி ஈறாகாது. அளபெடைகளில் தனித்துநின்று ஈறாகும்.

ஒ எனும் உயிரும் ‘ந’ மெய் தவிர்த்து, எம் மெய்யுடன் ஈறாகாது.

ஞ மெய்யுடன் இணைந்து, ஏ, ஓ இரண்டுயிரும் ஈறாகா.

நகர மெய்யுடன் ‘உ’கரமும் வகர மெய்யுடன் ஊகாரமும் இறுதியாகும் சொற்கள் இல.

‘சு’ இறுதி இருமொழிகளில் மட்டும் வரும். (உசு, முசு)

‘பு’ இறுதி ஒரே சொல்லில் மட்டும் ஈறாகும் (தபு). அது இரு வகையான பொருள் தரும் (தன்வினையும் பிறவினையும்).

எஞ்சிய உயிர்மெய்கள் எல்லாம் ஈறாகும்.

ஞ ண ந ம ன ய ர ல வ ழ ள என்னும் பதினொன்றும் புள்ளியீறாய் வரும்.

‘சு’ இறுதிபோல நகர மெய்யிறுதியும் இரண்டே சொற்களில் வரும். (பொருந், வெரிந்)

‘பு’கரம் போல ஞகர மெய்யிறுதியும் ஒரே சொல்லில் வரும். ஆயினும் அங்குபோல இங்கு பொருள் இரட்டாது. (உரிஞ்)

**மகர ஈறாக மாறாத னகர ஈற்றுமொழிகள்**

மகர ஈறாக மாற்றிக் கூறப்படாத, னகர ஈற்றுமொழிகள் தமிழில் ஒன்பது உள. அவை திட்டவட்டமாகக் கூறப்பட்ட அஃறிணைச் சொற்களேயாகும். (அழன், புழன் முதலியன)

## வினாக்கள்

**பத்திவினா**

1. மொழிமரபு பெயர்க்காரணம் கூறுக.
2. குற்றியலுகரத்தின் வகைப்பாடு குறித்து எழுதுக.
3. குற்றியலிகரத்திற்கு இடனும் பற்றுக்கோடும் யாவை?
4. ஆய்தம் மொழியில் பெறும் இடம் குறித்து எழுதுக.
5. மொழி எத்தனை வகைப்படும்? விளக்குக.
6. சார்பெழுத்தின் நிலைகளாகத் தொல்காப்பியர் மொழிமரபில் கூறுவன யாவை?
7. அளபெடையாமாற்றை விளக்குக. (அ) ‘நீட்டம் வேண்டும் எழுத்துக்களின் வரிவடிவ நிலை யாது?
8. ஈரொற்றுடனிலையாக வருவன யாவை?
9. ‘மெய்யின் இயக்கம் அகரமொடு சிவணும்’ இந்நூற்பாவின் பொருளை விளக்குக.
10. போலி எழுத்துக்களாகத் தொல்காப்பியர் கூறுவன யாவை?

**கட்டுரை வினா**

1. மொழிமுதல் எழுத்துக்கள் பற்றித் தொல்காப்பயிர் கருத்துக்களைக் கூறுக.
2. மொழி இறுதி எழுத்துக்கள் பற்றித் தொல்காப்பியர் உரைப்பன யாவை?
3. எழுத்துக்களின் இயக்கம் குறித்துத் தொல்காப்பியர் கூறுவனவற்றைத் தொகுக்க.

# 3. பிறப்பியல்

தனி எழுத்து, சொல்லிடை வரும் எழுத்து - இவற்றுக்கு இலக்கணம் கூறியபின் அத்தமிழ் எழுத்துக்களின் பிறப்பிடம் பற்றிக் கூறுகிறார். தமிழில் ஒலிப்பு முறையே மிக அழுத்தமாகக் கற்க வேண்டியது. இப்பிறப்பியல் செய்திகள் பெரிதும் இன்றைய அறிவியலுக்கு ஒத்து வருதலை எடுத்துக்காட்டி மொழியியலார் போற்றுவர். எழுத்துக்கள் பிறக்குமிடத்தை ஒட்டிய வரிசையாகவோ அல்லது அவ்வரிசையை இணையிணையாகவோ தமிழ் நெடுங்கணக்கு அமைக்கப்பட்டுள்ளது.

### எழுத்துக்களின் பொதுப்பிறப்பு

### ஒலிக்கும் முறைகள்

**உந்தி முதலா முந்துவளி தோன்றித்**
**தலையினும் மிடற்றினும் நெஞ்சினும் நிலைஇப்**
**பல்லும் இதழும் நாவும் மூக்கும்**
**அன்னமும் உளப்பட என்முறை நிலையான்**
**உறுப்புற்று அமைய நெறிப்பட நாடி**
**எல்லா எழுத்தும் சொல்லுங் காலைப்**
**பிறப்பின் ஆக்கம் வேறுவேறு இயல**
**திறப்படத் தெரியும காட்சி யான. (88)**

கொப்பூழ் அடியிலிருந்து மேலே கிளர்ந்து எழுகின்ற உதானன் என்னும் ஒசைக்காற்று, தலை மிடறு நெஞ்சு ஆகிய இடங்களில் தங்கி, பல் இதழ் நா மூக்கு அண்ணம் ஆகியனவுட்பட்ட எட்டு வகை நிலைக்களன்களின்வழி முறையாக அவ்வுறுப்புக்களில் பொருந்தியமைய, தமிழ் எழுத்துக்கள் எல்லாவற்றையும் ஒருவன் முறைப்படி ஆராய்ந்து சொல்லும்போது, அவை வெவ்வேறு தன்மையுடையனவாய்ப் பிறந்து ஒலிக்கும். இது கூறுபட ஆராயும் அறிவுக்குத் தெளிவுபடத் தோன்றும் செய்தியாகும். முந்துவளி – வெளிப்படும் ஓசைக்காற்று. அதை உதானன் என்பர். நிலைஇ-தங்கி, உறுப்புற்று அமைய – உறுப்புக்களில் ஓசைக்காற்று பொருந்தியமைய, பிறப்பின் ஆக்கம் - பிறப்பினது செயற்பாடு, வெளிப்பட்டு ஒலித்தல், காட்சி – அறிவு.

### உயிரெழுத்துக்களை ஒலிக்கும் முறை

**அவ்வழிப்**
**பன்னி ருயிரும் தந்நிலை திரியா**
**யிடற்றுப் பிறந்த வளியின் இசைக்கும் (84)**

அவ்வாறு பிறக்குமிடத்து, பன்னிரண்டு உயிரும் தத்தம் நிலையில் திரியாவாய், மிடற்றின்கண் பிறந்த ஓசைக்காற்றில் ஒலிக்கும். அவை தத்தம் மாத்திரையளவு திரியா என்பதாம். இ, உ மட்டும் சார்பெழுத்தாகும்போது தந்திலை திரியும். குற்றியலிகரமும் குற்றியலுகரமும் ஆகும். தம்நிலை-தந்நிலை.

**அ ஆ பிறத்தல்**

**அவற்றுள்**
**அ ஆ ஆயிரண் டங்காந்து இயலும் (85)**

அவ்வுயிர்களுள் (அ, ஆ இரண்டும் வாயை அங்காத்தலால் பிறக்கும். அங்காத்து – வாயை ஆவெனத் திறந்து.

**இ முதலியன பிறத்தல்**

**இ ஈ எ ஏ ஐ என இசைக்கும்**
**அப்பால் ஐந்தும் அவற்றோ ரன்ன:**
**அவைதாம்**
**அண்பல் முதல்நா விளிம்புறல் உடைய (86)**

இ ஈ எ ஏ ஐ என ஒலிக்கும் அப்பகுதிப்பட்ட ஐந்தும், முற்கூறிய அ ஆ போல வாய் அங்காத்தலால் தோன்றும். மேலும் அவை மேற்பல்லின் அடியை, நாவினது அடிவிளிம்பு சென்று பொருந்தப் பிறக்கும். பால்-பகுதி. அவற்றோர் அன்ன –அ ஆப் போல வாயை ஆவெனத் திறத்தலால் பிறக்கும். அண்பல் முதல் - மேற்பல்லின் அடியை. நாவிளிம்பு – அடி நா ஓரம்.

**உ முதலியன பிறத்தல்**

**உ ஊ ஒ ஓ ஔ என இசைக்கும்**
**அப்பால் ஐந்தும் இதழ்குவிந்து இயலும் (87)**

உ ஊ ஒ ஓ ஔ என ஒலிக்கும் அப்பகுதிப்பட்ட ஐந்தும், இதழ்குவித்துச் சொல்லப் பிறக்கும்.

தொகுத்துக்கூறினும் ஒலிப்பதில் இவை சிறுசிறு வேறுபாடுடையன.

**தத்தம் திரிபே சிறிய என்ப (88)**

அவை இங்ஙனம் தொகுத்துச் சொல்லப்பட்டாலும், அவற்றுள் ஒவ்வொன்றனுக்கும் சிறு சிறு ஒலிப்பு வேறுபாடுண்டு என்பர் நூலோர்.

## மெய்யெழுத்துக்களின் பிறப்பு

**ககார ஙகாரம் முதல் நா அண்ணம் (89)**

முதல்நா – அடிநா. முதல் அண்ணம் - அடியண்ணம். மேல்வாயின் அடிப்பகுதி. மேல்வாய் அடியை நாவினது அடிபொருந்த க, ங இரண்டும் பிறக்கும்.

**ச், ஞ்**

**சகார ஞகாரம் இடைநா அண்ணம் (90)**

அண்ணத்தினது இடைப்பகுதியை நாவினது இடைப்பகுதி பொருந்த ச, ஞ இரண்டும் பிறக்கும். இடைநா இடை அண்ணம் எனச் சேர்த்துக்கொள்க.

**ட், ண்**

**டகார ணகாரம் நுனிநா அண்ணம் (91)**

அண்ணத்தினது நுனிப்பகுதியை (மேல்வாய் முன்பகுதியை) நாவினது நுனிப்பகுதி பொருந்த ட,ண இரண்டும் பிறக்கும். உயிர் மெய்யாகக் கூறியிருப்பினும் மெய்யாக உச்சரித்துப் பார்க்க வேண்டும்.

**ஐயம் தீர்த்தல்**

**அவ்வா றெழுத்தும் மூவகைப் பிறப்பின (92)**

மேலே கூறிய அவ்ஆறு எழுத்துக்களும் ககாரம் முதல்நா, ஙகாரம் அண்ணம் என்பதுபோல் அறுவகைப் பிறப்பின அல்ல: இதனை இணையாக மூவகைப் பிறப்பின. இது குழப்பம் தவிர்த்தல்.

அடிநா, அடி அண்ணம் - க், ங்

இடைநா, இடை அண்ணம் - ச், ஞ்

நுனிநா, நுனி அண்ணம் - ட், ண்

**த், ந்**

**அண்ணம் நுண்ணிய பல்முதல் மருங்கின்**
**நாநுனி பரந்து மெய்யுற ஒற்றத்**
**தாம்இனிது பிறக்கும் தகார நகாரம் (93)**

அண்ணத்திற்கு அருகிலுள்ள மேற்பல்லின் அடிப்பக்கத்தில் நாவினது நுனிபரந்து, நன்கு அழுந்தப் பொருந்த த, ந இரண்டும் இனிதே பிறக்கும். மெய் உற ஒற்ற – வடிவு அழுந்தப் பொருந்த. இனிது பிறக்கும் - எல்லா எழுத்தும் நா பிற

உறுப்புக்களில் அழுந்தப் பொருந்துவதால்தான் இனிதாகப் பிறக்கும் என்பதாம். பல்முதல் மருங்கு – மேற்பல்லின் அடிப்பக்கம். இதுவரை நெடுங்கணக்கு வரிசைப்படியும் நாவினது முயற்சி வரிசைப்படியும் பிறப்புக் கூறப்பட்டது.

**ற், ன்**

**அணரி நுனிநா அண்ணம் ஒற்ற**
**ற.ஃகான் ன.ஃகான் ஆயிரண்டும் பிறக்கும் (94)**

இனி நெடுங்கணக்குப்படி ப்,ம் எனக் கூறிச் சொல்ல வேண்டும். அங்ஙனம் கூறாமல் இதிலிருந்து நா, இதழ், பல் என்று பிறப்பிட வரிசை நோக்கிப் பிறப்புக் கூறப்படுகிறது. நுனிநா அண்ணாந்து அண்ணத்தைச் சென்று ஒற்ற ற ன ஆகிய இரண்டும் பிறக்கும. அணரி-அணர்ந்து, அண்ணாந்து, மேனோக்கிச் சென்று. ஒற்ற-பொருந்த.

**ர்,ழ்**

**நுனிநா அணரி அண்ணம் வருட**
**ரகாரம் ழகாரம் ஆயிரண்டும் பிறக்கும் (95)**

நுனிநா அண்ணாந்து அண்ணத்தைத் தடவ ர, ழ இரண்டும் பிறக்கும். வருட-தடவ.

ஒற்றப் பிறப்பது (அழுத்தும்) - ற, ன

வருடப் பிறப்பது - ர, ழ

**ல், ள்**

**நாவிளிம்பு வீங்கி அண்பல் முதலுற**
**ஆவயின் அண்ணம் ஒற்றவும் வருடவும்**
**லகாரம் ளகாரம் ஆயிரண்டும் பிறக்கும் (96)**

நாவினது விளிம்பு தடித்து மேற்பல்லின் அடியைப் பொருந்துங்கால், அவ்விடத்தே அண்ணத்தை ஒற்ற லவும், வருட ள வும் பிறக்கும். விளிம்பு-நுனியிலும் முன்பகுதி. அண்பல் - மேற்பல். முதல்உற – அடியைப் பொருந்த. ஒற்றுதல் வருடுதல் வேறுபாடறிக.

அண்ணத்தை ஒற்றப் பிறப்பது - ல

அண்ணத்தை வருடப் பிறப்பது - ள

**ப், ம்**

**இதழியைந்து பிறக்கும் பகார மகாரம் (97)**

ப, ம இரண்டும் இதழிரண்டும் சேரப் பிறக்கும். மேல் இதழும் கீழ் இதழும் பொருந்துதலை ‘இதழ் இயைந்து’ என்றார்.

**வ்**

**பல்லிதழ் இயைய வகாரம் பிறக்கும் (98)**

மேற்பல்லும் கீழ் இதழும் இயைய ‘வ’ பிறக்கும்

**ய்**

**அண்ணம் சேர்ந்த மிடற்றெழு வளியிசை**
**கண்ணுற் றடைய யகாரம் பிறக்கும் (99)**

அண்ணத்தைச் சேர்ந்து. மிடற்றுள்ளிருந்துவந்த ஓசைக்காற்று அம்மேல்வாயை நன்கு அணைந்து பொருந்த ‘ய’ பிறக்கும். மிடறு – குரல்வளை.

**மெல்லினம் மூக்குவளியிற் பிறத்தல்**

**மெல்லெழுத்து ஆறும் பிறப்பின் ஆக்கம்**
**சொல்லிய பள்ளி நிலையின வாயினும்**
**மூக்கின் வளியிசை யாப்புறத் தோன்றும் (100)**

மெல்லெழுத்து ஆறும், முன் சொல்லிய இடங்களில் பொருந்திப் பிறக்குமாயினும், மூக்கின்வழி வெளிப்படும் வளியது இசையால் பொருத்தமுறப் பிறக்கும். பள்ளி - இடம். யாப்புற – பொருத்தமுற. இதனால் இடையெழுத்திற்கு மிடற்றுவளியும், வல்லெழுத்திற்குத் தலைவளியும் கொள்ளப்படும் என்பர்.

**சார்பெழுத்துக்களின் பிறப்பு**

**சார்ந்துவரின் அல்லது தமக்கியல் பிலவெனத்**
**தேர்ந்துவெளிப் படுத்த ஏனை மூன்றும்**
**தத்தம் சார்பில் பிறப்பொடு சிவணி**
**ஒத்த காட்சியில் தம்மியல்பு இயலும் (101)**

சொல்லைச் சார்ந்துவரின் அல்லாமல் தமக்கென்று தனி இயல்பு உடையனவல்ல என, ஆராய்ந்து வெளிப்படுத்திய பிற மூன்றெழுத்துக்களும் (குற்றியலிகரம், குற்றியலுகரம், ஆய்தம்) தத்தமக்குச் சார்பாகிய முதல் எழுத்துக்களது பிறப்பிடமே தமக்கும் பிறப்பிடமாகப் பொருந்தி, ஒப்பிட்டுப் பார்க்கும்

நிலையில் தமக்குரிய தனியியல்புடனும் நடக்கும். குறிய இகரம் இகரத்தைப் போலவும் குறிய உகரம் உகரத்தைப் போலவும் பிறக்கும். ஆய்தம் உயிரொடுகூடிய வல்லெழுத்தைச் சார்ந்து பிறத்தலால் (க.ஃ.சு, அ.ஃ.து), அவ்வல்லெழுத்துப் போலப் பிறக்கும். இவைபோல் உயிர்மெய், அளபெடை குறுக்கம் போலும் சார்பெழுத்தாகப் பிறகு விரிந்தன எல்லாம், தத்தம் முதலெழுத்தைப் போலவே பிறக்குமென உரையாசிரியர்கள் விளக்கியுள்ளனர். ஒத்த காட்சி – ஒப்பீட்டுப் பார்வை.

### எழுத்துப்பிறப்பும் மாத்திரைக் கணக்கும்

### வடமொழி மரபும் தமிழ் மரபும்

**எல்லா எழுத்தும் வெளிப்படக் கிளந்து**
**சொல்லிய பள்ளி எழுதரு வளியின்**
**பிறப்பொடு விடுவழி உறழ்ச்சி வாரத்து**
**அகத்தெழு வளியிசை அரில்தப நாடி**
**அளபிற் கோடல் அந்தணர் மறைத்தே:**
**அ.ஃ.துஇவன் நுவலாது எழுந்துபுறத் திசைக்கும்**
**மெய்தெரி வளியிசை அளபுநுவன் றிசினே (102)**

எல்லா எழுத்துக்களும், முன் சொல்லிய பிறப்பிடங்களிலிருந்து, மேலெழும் ஓசைக்காற்றினால், வெளிப்படக் கேட்குமாறு சொல்லும்போது, அவை பிறப்பெடுத்து வெளிவிடப்படும். அங்ஙனம் ஒலிக்குங்கால், உள்ளே உறுப்புக்களில் தங்கிச்சுழன்று எழும் வளியிசைக்கும், குற்றமற நாடி மாத்திரை அளபு கூறுதல், அந்தணர்தம் இலக்கண நூல்களில் காணப்படும் செய்தியாகும். யான் அதனை இங்குக் கூறாமல், எழுத்து ஓசை, வாயிலிருந்து வெளிப்பட்டுப் புறத்தே கேட்குமாறு அமையும் வடிவு தெரிந்த வளியிசைக்கே மாத்திரை அளபு கூறப்பட்டுள்ளது. பள்ளி-இடம். வளி-ஒலிக்காற்று. பிறப்பொடு விடுவழி-எழுத்தைப் பிறப்பித்து வெளிவிடுகையில், உறழ்ச்சி வாரத்து அகத்து எழு வளி இசை – உள்ளுறுப்புக்களில் சுழன்று உள்ளிருந்தெழும் ஓசைக்காற்று. அரில்தபநாடி – குற்றமற ஆராய்ந்து. அந்தணர் மறைத்து – அந்தணர்களின் இலக்கண நூல்களிடத்து. நுவலாது – சொல்லாது. மெய்தெரி வளியிசை – எழுத்து வடிவம் புலப்படும் ஓசைக்காற்று. அளபு – மாத்திரை.

# பிறப்பியல் கருத்துக்களின் தொகுப்பு

**பொதுப்பிறப்பு முறை**

உந்தி எனப்படும் கொப்பூழ் அடியிலிருந்து மேலெழும் காற்று தலை, மிடறு, நெஞ்சு ஆகிய இடங்களில் தங்கி, அவற்றுடன் பல், இதழ், நா, மூக்கு, அண்ணம் உட்பட எட்டுவகை நிலைக்களன்களின் வழி, அவ்வுறுப்புக்களில் முறைப்படி பொருந்தி, ஒருவன் முறைப்பட ஆராய்ந்து எல்லா எழுத்துக்களையும் சொல்லி ஒலிக்கும்போது எழுத்துக்கள் வேறுவேறாகத் தோன்றும். இது தெளிவாக அறியப்படும் பிறப்பியல்பாகும்.

**உயிர் எழுத்துக்களின் பிறப்பு முறை**

அவ்வாறு பிறக்குமிடத்துப் பன்னிரண்டு உயிரெழுத்துக்களும் தம் நிலை திரியாமல், மிடற்றில் பிறந்த ஓசைக் காற்றால் ஒலிக்கும்.

அவற்றுள் அ, ஆ இரண்டும் வாயை அங்காத்தலால் பிறக்கும்.

இ ஈ எ ஏ ஐ என ஒலிக்கும் ஐந்தும் முற்கூறியவை போல, வாயை அங்காத்தலால் தோன்றி, மேற்பல்லின் அடியை, நாவினது அடிவிளம்பு பொருந்தப் பிறக்கும்.

உ ஊ ஒ ஓ ஒள என ஒலிக்கும் ஐந்தும் இதழ்குவித்துச் சொல்லப் பிறக்கும்.

இங்ஙனம் தொகுத்துச் சொல்லப்பட்டாலும் இவை ஒவ்வொன்றும் சிறுசிறு ஒலி வேறுபாடுடையனவாகும்.

**மெய்யெழுத்துக்களின் பிறப்பு முறை**

அண்ணம் என்னும் மேல்வாயின் அடியை நாவினது அடிபொருந்த க, ங இரண்டும் பிறக்கும்.

அண்ணத்தினது இடைப்பகுதியை நாவினது இடைப்பகுதி பொருந்த ச, ஞ இரண்டும் பிறக்கும்.

அண்ணத்தினது நுனிப்பகுதியை நாவினது நுனிப்பகுதி பொருந்த ட, ண இரண்டும் பிறக்கும்.

முற்கூறிய ஆறெழுத்தும் இணைஇணையாக மூவகைப் பிறப்பிடங்களையுடையன. (ககாரம் முதல் நா, ஙகாரம் அண்ணம் என்பதுபோல் தனித்தனிப் பிறப்புடையன எனக் கருதி விடுதல் கூடாது என்பதாம்)

அண்ணத்திற்கு அருகேயுள்ள மேற்பல்லின் அடிப்பக்கத்தில், நாநுனி பரந்து, நன்கு அழுந்தப் பொருந்த த, ந இரண்டும் இனிதே பிறக்கும்.

நுனிநா அண்ணாந்து அண்ணத்தைச் சென்று ஒற்ற ற, ன ஆகிய இரண்டும் பிறக்கும்.

நுனிநா அண்ணாந்து அண்ணத்தை வருட ர, ழ இரண்டும் பிறக்கும்.

நாவினது விளிம்பு தடித்து, மேற்பல்லின் அடியைப் பொருந்துங்கால், அவ்விடத்தே அண்ணத்தை ஒற்ற ‘ல’வும், வருட ‘ள’வும் பிறக்கும்.

இதழிரண்டும் பொருந்த ப, ம இரண்டும் பிறக்கும்.

மேற்பல்லும் கீழுதடும் பொருந்த ‘வ’கரம் பிறக்கும்.

மிடற்றிலிருந்து எழும் ஓசைக்காற்று, அண்ணத்தைச் சேர்ந்து அழுந்தப் பொருந்த ‘ய’கரம் பிறக்கும்.

மெல்லெழுத்தாறும் முன் சொல்லிய இடங்களில் பொருந்திப் பிறக்குமாயினும், மூக்கின்வழி வெளிப்படும் வளியது ஓசையால் பொருத்தமுறப் பிறக்கும்.

**சார்பெழுத்துக்களின் பிறப்பு முறை**

சொல்லைச் சார்ந்துவரினல்லாமல், தமக்கென்று தனி இயல்புடையவை அல்ல என ஆராய்ந்து வெளிப்படுத்திய பிற மூன்றெழுத்துக்களும் தத்தமக்குச் சார்பான முதலெழுத்துக்களின் பிறப்பிடமே தமக்குப் பிறப்பிடமாய்த் தோன்றும். ஒப்பிட்டுப் பார்க்கும் நிலையில் தமக்குரிய தனியியல்புடனும் நடக்கும்.

**எழுத்துக்களுக்கு மாத்திரை அளபிடும் முறை**

எல்லா எழுத்துக்களையும் முன்சொல்லிய பிறப்பிடங்களிலிருந்து மேலெழும் ஓசைக்காற்றினால், வெளிப்படச் சொல்லும்போது, அவை பிறப்பெடுத்து வெளிவிடப்படும். அங்ஙனம் எழுத்துக்களைப் பிறப்பித்து, வெளியிடும்போது, உள்ளுறுப்பக்களில் தங்கிச்சுழன்று எழும் ஓசைக்காற்றும், குற்றமற ஆராய்ந்து மாத்திரை அளபு கொள்ளுதல் அந்தணர்தம் இலக்கண நூல்களில் கண்டதாகும். யான் அதனை இங்குக்கூறாது, வாயிலிருந்து புறத்தே வெளிப்பட்டொலிக்கும் வடிவு தெரிந்த வளியிசைக்கே மாத்திரையளவு கூறப்பட்டுள்ளது.

## வினாக்கள்

**பத்திவினா**

1. எழுத்துப்பிறப்பின் பொது இலக்கணம் யாது?
2. நுனிநா அண்ணம் ஒற்றப் பிறக்கும் எழுத்துக்கள் யாவை?
3. உயிரெழுத்துக்கள் பிறக்குமாற்றை விளக்குக.
4. சார்பெழுத்துக்கள் எவ்வாறு பிறக்கும்?
5. எழுத்துக்களின் பிறப்புக்குப் புறனடையாக தொல்காப்பியர் உரைப்பன யாவை?
6. 'தத்தம் திரிபே சிறிய என்ப'– விளக்குக.
7. 'அவ் ஆறு எழுத்தும் மூவகைப் பிறப்பின'– விளக்குக.

**கட்டுரை வினா**

1. மெய்யெழுத்துக்களின் பிறப்புப் பற்றி விவரிக்க.
2. ஒலி உறுப்புகளை விளக்கி, உயிரெழுத்துக்களுக்கும், மெய்யெழுத்துக்களுக்கும் உள்ள வேறுபாட்டை உணர்த்துக.

# 4. புணரியல்

முதல் மூன்று இயல்கள் எழுத்துப் பற்றியன. இனி புணரியல் தொடங்கி ஆறு இயல்களும் புணர்ச்சி இலக்கணம் கூறுகின்றன. சொற்கள் தொடர்ந்து நின்று பொருள் தரும். சொல்லும் சொல்லும் சந்திக்கும்போது, தமிழில் எழுத்து மாற்றங்கள் விளைகின்றன. மரம் வேர் என்று யாரும் சொல்வதில்லை. மரவேர் என்றே மொழிகின்றனர். மரக்கடை என்று சேர்த்துச் சொல்வதும் தரங்கெட்டவன் என்று ம், ங் ஆவதும் படகோட்டி என இணைத்துப் பேசுவதும் கூலி ஆள் என்று பிரிக்காமல் கூலியாள் என கூறுவது தமிழின் இயல்பாகும். தமிழில் புணர்ச்சி விதிகள் இன்றியமையாதன ஆகின்றன. புணரியல் புணர்ச்சியாகிய செய்கைக்கு அடிப்படையாய் உதவும் கருவிகளை முன் ஆயத்தமாக விரித்துக் கூறுகிறது.

### சொற்களில் உயிர் முதலும் ஈறும் மெய் முதலும் ஈறும் கூடுதல்

**மூன்றுதலை யிட்ட முப்பதிற்று எழுத்தின்**
**இரண்டுதலை யிட்ட முதலாகு இருப·.து**
**அறுநான்கு ஈற்றொடு நெறிநின்று இயலும்**
**எல்லா மொழிக்கும் இறுதியும் முதலும்**
**மெய்யே உயிரென்று ஆயீ ரியல. (103)**

மூன்று தலையிட்ட முப்பது -33. இரண்டு தலையிட்ட இருபது – 22, அறுநான்கு-24, தமிழ் எழுத்துக்கள் முப்பத்து மூன்றில், சொல்லின் முதலாக வரும் இருபத்து இரண்டு எழுத்துக்கள், சொல்லின் ஈறாக வரும் இருபத்து நான்கு எழுத்துக்களுடன் இருவகை வழக்கிலும் பொருந்தி நடக்கும். மொழியிறுதி எழுத்து 24 + மொழி முதல் எழுத்து 22. இவை புணர்வதே, புணர்ச்சி இலக்கணம். எல்லாச்சொற்களுக்கும் மெய்யிறுதி உயிர் இறுதி, மெய் முதல் உயிர் முதல் என்று அவ்விரண்டு இயல்புகளே உள. நெறிநின்று இயலும் - உலக வழக்கு, செய்யுள் வழக்கு இரண்டிலும் பொருந்தி நடக்கும்.

### மெய் ஈறு அடையாளம்

**அவற்றுள்**
**மெய்யீ றெல்லாம் புள்ளியொடு நிலையல் (104)**

மெய்யீறு, உயிரீறு என்றவற்றுள் மெய்யீறு என்பன எல்லாம் புள்ளி பெற்று நிற்கும். புள்ளியின்றேல் உயிரீறாகி விடும். (மெய் முதலாய எல்லாம் புள்ளி இன்றி நிற்கும்.) நிலையல் - நிற்க வேண்டும்.

**குற்றியலுகரமும் மெய்யீறு ஒத்தல்**

**குற்றிய லுகரமும் அற்றென மொழிப. (105)**

மொழியிறுதிக் குற்றியலுகரமும் மெய்யின் தன்மையை உடையதாகும். அதாவது புள்ளி பெற்று நிற்கும். அதனால் வருமொழி முதலிலுள்ள உயிரேற இடங்கொடுக்குமென்பதும் பெற்றாம். நாகு+அரிது=நாகரிது.

**உயிர்மெய் ஈறு என்பது உயிர்ஈறுகள்**

**உயிர்மெய் ஈறும் உயிரீற்று இயற்றே (106)**

உயிர்மெய் ஈறும் உயிரீற்றின் தன்மையுடையதாகும். இடையில் வரும் உயிர்மெய்யும் உயிரின் இயல்பையுடையதாகும். பல-அகர ஈறாகக் கருதப்படும். படகு-உயிர்த்தொடர்க்குற்றகரமாகும். உயிர்மெய் எனத் தனி எழுத்துப் போலக் கூறினாலும் மொழியிறுதியில் அது உயிராகவும் மொழி முதலில் மெய்யாகவும் மொழியிடையில் மெய்யாகவும் உயிராகவும் கருதப்படும் என்பதாம். சுக்கு-உடனிலை மெய்ம் மயக்கமாதல், கு விலுள்ள மெய்யைக் கருதியேயாம்.

**சொற்கள் சேரும்போது எழுத்துக்கள் தம்முள் புணருமாறு**

**உயிரிறு சொல்முன் உயிர்வரு வழியும்**
**உயிரிறு சொல்முன் மெய்வரு வழியும்**
**மெய்யிறு சொல்முன் உயிர்வரு வழியும்**
**மெய்யிறு சொல்முன் மெய்வரு வழியுமென்று**
**இவ்வென அறியக் கிளக்குங் காலை**
**நிறுத்த சொல்லே குறித்தவரு கிளவியென்று**
**ஆயீ ரியல புணர்நிலைச் சுட்டே. (107)**

சொற்கள் தம்முள் புணருங்காலத்து, உயிரில் முடியும் சொல்லுடன் உயிர்முதலில் வரும் மொழியும், உயிரில் முடியும் சொல்லுடன் மெய்முதலில் வரும் மொழியும், மெய்யில் முடியும் சொல்லுடன் உயிர் முதலில் வரும் மொழியும் மெய்யில் முடியும் சொல்லுடன் மெய்முதலில் வரும் மொழியும் எனப் புணரும். புணர்நிலைச்சுட்டு – புணர்ச்சி பெறும் சொற்களைச் சுட்டுஞ்சொல். நிறுத்த சொல் - ஒன்றைக் குறிக்கக் கருதி முன்னே நிறுத்திய சொல். குறித்து வரு கிளவி – கருதிய பொருளை முடிக்கக் கருதி வந்து சேரும் சொல். இவ் என அறிய - இவை எனத் தெளிவுபட கிளக்குங்காலை – சொல்லுமிடத்து.

(எ.கா.) ஆ+ உண்டு = ஆவுண்டு

ஆ+ நிறை = ஆநிறை

ஆல்+ இலை = ஆலிலை

நெல்+ விதை = நெல்விதை

**சொற்கள் தம்முன் புணரும் நெறிமுறைகள்**

**அவற்றுள்**
**நிறுத்த சொல்லின் நான்கு எழுத்தொடு**
**குறித்தவரு கிளவி முதலெழுத்து இயையப்**
**பெயரொடு பெயரைப் புணர்க்குங் காலும்**
**பெயரொடு தொழிலைப் புணர்க்குங் காலும்**
**தொழிலொடு பெயரைப் புணர்க்குங் காலும்**
**தொழிலொடு தொழிலைப் புணர்க்குங் காலும்**
**மூன்றே திரிவுஇடன் ஒன்றே இயல்பென**
**ஆங்கந் நான்கே மொழிபுணர் இயல்பே. (108)**

அவற்றுள் நிறுத்த சொல்லின் ஈறாக வரும் எழுத்துடன் குறித்துவரு கிளவியின் முதலெழுத்து இயைவதே புணர்ச்சியாம்.

முன்னைய சூத்திரத்தில் புணர்ச்சி எழுத்துவகையால் நான்குவகை என்றார். இங்கு சொல்வகையிலும் நான்காகும் என்று கூறுகிறார். பெயர்ச்சொல்லோடு பெயர்ச்சொல்லும் பெயர்ச்சொல்லோடு வினைச்சொல்லும் வினைச்சொல்லோடு பெயர்ச்சொல்லும் வினைச்சொல்லோடு வினைச்சொல்லுமென இவை புணர்க்கப்படும்.

அங்ஙனம் புணர்க்குங்கால் எழுத்துக்களில் ஏற்படும் திரிபு மூன்று. இயல்பு ஒன்று, அவை நான்குமே சொற்கள் புணரும் தன்மைகளாகும்.

இயைய – பொருந்த, புணர, தொழில் - வினைச்சொல். புணர் இயல்பு – புணர்ச்சி வேறுபாடுகள்.

| | |
|---|---|
| பெயர் + பெயர் | (கொற்றன் + நிலம்) |
| பெயர் + வினை | (நெல் + விற்றான்) |
| வினை + பெயர் | (வாங்கிய + சாத்தன்) |
| வினை + வினை | (வாங்கி + விற்றான்) |

திரிபு: தோன்றல், திரிதல், கெடுதல்.

### மூவகைத் திரிபுகள்

**அவைதாம்**
**மெய்பிறி தாதல்மிகுதல் குன்றலென்று**
**இவ்வென மொழிப திரியு மாறே (109)**

அங்ஙனம் கூறிய புணர்ச்சி வேறுபாடுகள்: மெய் பிறிதாதல் - மெய் வேறாகத் திரிதல்: கடல்+கரை=கடற்கரை. மிகுதல்-புதிய எழுத்துத் தோன்றுதல்: எழுத்து+பதிவு=எழுத்துப்பதிவு. குன்றல்-முன்னிருந்த எழுத்துக் கெடுதல்: மரம்+வேர்=மரவேர்: திரியுமாறு – வேறுபடும் விதம். இவ் என - இவை என. இவை ஒன்றற்கு மேற்பட்டும் வரும். மரம்+கிளை=மரக்கிளை. ம்-கெட்டது, க்-மிகுந்தது. தாமரை மலர் என்பது இயல்பு.

### நிறுத்த சொல்லும் குறித்துவரு கிளவியும்

**நிறுத்த சொல்லும் குறித்துவரு கிளவியும்**
**அடையொடு தோன்றினும் புணர்நிலைக் குரிய. (110)**

நிறுத்த சொல், குறித்துவரு கிளவிகள் அடைமொழியுடன் வரினும் இருமொழித் தன்மையவாய்ப் புணர்ச்சிக்குரியனவாம். பனைமரம்+கிளை=பனைமரக்கிளை. பதினாயிரத்தொருப.்.து. பதினாயிரத்து+ஒருப.்.து. அடையுடன் சேரினும் ஒரு சொன்னீர்மைத்தாய் நின்று புணரும். வினைத்தொகை (கொல் களிறு) பண்புத்தொகை (செந்தமிழ்) என வருவன பலவும் அடைபெற்றிருப்பினும் ஒரு சொல் நீர்மையின என்பர்.

### மரூஉ மொழிகளின் புணர்ச்சி

**மருவின் தொகுதி மயங்கியல் மொழியும்**
**உரியவை உளவே புணர்நிலைச் சுட்டே (111)**

உலகின்கண் மரூஉ மொழிகளாய்த் திரிந்து வழங்கும் சொற்கள பலவுள. அங்ஙனம் தலைதடுமாறிக் கிடக்கும் சொற்களுள்ளும் இங்குக் கூறிய நிறுத்த சொல், குறித்துவரு கிளவியென்ற புணர்ச்சியமைப்பிற்கு உரியன உள. ஆந்தை எனும் மரூஉ மொழி, ஆதன்+தந்தை எனப் பிரித்துப் புணர்ச்சி சுட்டுதற்குரியதாதல் காண்க. என்+தந்தை=எந்தை.உன்+தந்தை=நுந்தை.

**பொருளடிப்படையில் புணருமாறு வேற்றுமை அல்வழிப் புணர்ச்சிகள்**

**வேற்றுமை குறித்த புணர்மொழி நிலையும்**
**வேற்றுமை அல்வழிப் புணர்மொழி நிலையும்**
**எழுத்தே சாரியை ஆயிரு பண்பின்**
**ஒழுக்கல் வலிய புணருங் காலை. (112)**

பொருளடிப்படையில் புணர்ச்சி கருதிய மொழிநிலைகள் வேற்றுமை கருதித் தொடர்ந்து நிற்பனவும் வேற்றுமை அல்லாதவழியில் தொடர்ந்து நிற்பனவுமென இருதிறப்படும். இவை புணருமிடத்து, எழுத்து மிகுதலும் சாரியை மிகுதலும் என அவ்விரண்டு தன்மையினால் நடத்தலைத் தமக்கு வலிமையாக உடைய. புணர்மொழிநிலை – புணர்ந்து நிற்கும் தொடர்மொழி நிலை. ஒழுக்கல் வலிய – பொருந்தி நடத்தலைத் தமக்கு வலிமையாகவுடைய. பலா+பழம்=பலாப்பழம், பலாவின் பழம். (ப்-எழுத்து, இன் சாரியை). மயிலினைப் பார் - இன் சாரியை ப் -எழுத்துமிகுதல். சாரைப்பாம்பு (ப்-மிக்கது) - இது அல்வழி.

**புணர்ச்சியில் இடம்பெறும் வேற்றுமை உருபுகள்**

**ஐ ஒடுகு இன் அது கண் என்னும்**
**அவ்வா றென்ப வேற்றுமை உருபே. (113)**

புணர்ச்சியில் வேற்றுமையுருபுகளே முக்கியமாதலின் அவற்றை முற்கூறுகிறார். ஐ ஒடு கு இன் அது கண் என்பன முறையே இரண்டு முதல் ஏழு வரையிலான ஆறு வேற்றுமையுருபுகள். முதல் எழுவாய் வேற்றுமையும் எட்டாம் விளி வேற்றுமையும் உருபு பெறாமையால் அல்வழியில் சேரும்.

**கு, கண் வல்லுருபுப் புணர்ச்சி**

**வல்லெழுத்து முதலிய வேற்றுமை உருபிற்கு**
**ஒல்வழி ஒற்றிடை மிகுதல் வேண்டும் (114)**

வல்லெழுத்தை முதலாகவுடைய வேற்றுமை உருபுகட்கு (கு, கண்). பொருந்துமிடங்களில் இடையே ஒற்றுமிகும். மணி+கு=மணிக்கு, மணி+கண்=மணிக்கண்.

**‘அது’ உருபின் அகரங்கெடல்**

**ஆறன் உருபின் அகரக் கிளவி**
**ஈறாகு அகரமுனைக் கெடுதல் வேண்டும் (115)**

ஆறாம் வேற்றுமையுருபு ‘அது’. அதிலுள்ள ‘அ’ எதிரே ஈறாக நிற்கும் அகரத்தின் முன் கெடும். அகரமுனை – அகரத்தின் முன்.

### பெயருக்குப் பின் வேற்றுமையுருபு வருதல்

வேற்றுமை உருபுகள் பெயருடன் கூடுங்காலத்து, அப்பெயருக்குப் பின் வருவனவாம். வேற்றுமை பெயர் வழிய எனக் கூட்டுக. வழிய-பின்வருவன. முருகன்+ஐ=முருகனை.

### உருபு பெறும் பெயர் வகைகள்

**உயர்திணைப் பெயர அஃறிணைப் பெயரென்று**
**ஆயிரண் டென்ப பெயர்நிலைச் சுட்டே. (117)**

அங்ஙனம் உருபுசேரும் பெயர்கள் உயர்திணைப்பெயர், அஃறிணைப் பெயரென்று இருவகைப்படும். பெயர் நிலைச் சுட்டு – பெயர்களென்று சுட்டப்படுவன.

### சாரியைகள் வருமிடம்

**அவற்றுவழி மருங்கின் சாரியை வருமே (118)**

அப்பெயர்கள் வேற்றுமை உருபோடு பொருந்துங்கால் பெயர்க்கும் வேற்றுமை உருபிற்குமிடையே சாரியை வரும். வழிமருங்கு – பின்னிடத்தில். வண்டினது – வண்டு+இன்+அது. இன் -சாரியை இடையே வந்தது. குடத்தை=குடம்+அத்து+ஐ. அத்துச் சாரியை இடையே வந்தது.

### சாரியைகளின் பெயரும் தொகையும்

**அவைதாம்**
**இன்னே வற்றே அத்தே அம்மே**
**ஒன்னே ஆனே அக்கே இக்கே**
**அன்னென் கிளவி உளப்படப் பிறவும்**
**அன்ன என்ப சாரியை மொழியே. (119)**

அச்சாரியைகளாவன: இன், வற்று, அத்து, அம், ஒன், ஆன், அக்கு, இக்கு, அன் இவை ஒன்பதும் இவை போல்வன பிறவும் சாரியைச் சொற்களாகும். சாரியைகள் இடைச் சொற்கள். அவற்றுக்குத் தனிப் பொருளில்லை. அவை பெயர்களைச் சார்ந்து வருதல் இங்குக் கூறப்படுகிறது. தம், நம், நும், கெழு, ஏ, ஐ எனப் பலவுள.

**சாரியைப் புணர்ச்சிகள்**

**‘இன்’னில் ‘இ’ கெடுதல்**

**அவற்றுள்**
**இன்னின் இகரம் ஆவின் இறுதி**
**முன்னர்க் கெடுதல் உரித்து மாகும். (120)**

இன் சாரியையது இகரம் ஆ எனும் சொல்லின் முன் கெடுதலும் உரித்து: கெடாது நிற்றலும் உரித்து: ஆனை, ஆவினை.

**இன், இற் ஆதல்**

**அளவாகு மொழிமுதல் நிலைஇய உயிர்மிசை**
**ன∴கான் ற∴கான் ஆகிய நிலைத்தே (121)**

அளவைக் குறிக்கும் உழக்கு முதலிய சொல்லின் முன்னுள்ள உயிர் எழுத்துக்குள மேலே நிற்கும் ‘இன்’ சாரியையிலுள்ள னகரம், றகரமாதலுண்டு, (பத்து+இன்+உழக்கு=பதிற்றுழக்கு. இன்- இற் ஆனது. பத்து+பத்து=பதிற்றுப்பத்து)

**வற்று, அற்று ஆதல்**

**வ∴கான் மெய்கெடச் சுட்டுமுதல் ஐம்முன்**
**அ∴கான் நிற்றல் ஆகிய பண்பே. (122)**

சுட்டு முதலாகிய ‘ஐ’ முன்னர் (அவை),‘வற்று’ முதல் மெய் கெட்டு அற்று ஆதல் அதன் இயல்பாகும். அவையற்றை, இன்று அவற்றை என்போம்.

**இன் இற் ஆதல்**

**ன∴கான் ற∴கான் நான்கன் உருபிற்கு (123)**

நான்கன் உருபு ‘கு’ வருமிடத்து, னகார ஈற்றுச் சாரியை றகாரமாகும். மரத்திற்கு (இன் இற் ஆனது). அதற்கு, அது+அன், அற்+கு இச்சூத்திரத்தில் உருபு+இன்+கு என்பதில் உருபிற்கு என வந்திருப்பது. இவ்விதி பற்றியதேயாம். தொல்காப்பியர் இலக்கணத்தை எளிமைப்படுத்தும் முயற்சிகளில்,‘உடம்பொடு புணர்த்தலாகிய’ இதுவும் ஒன்று.

**ஆன் ஆற் ஆதல்**

**ஆனின் னகரமும் அதனோ ரற்றே**
**நாள்முன் வருஉம் வன்முதல் தொழிற்கே. (124)**

பரணி என்ற நாள் (நட்சத்திரம்) முன் வரும். வல்லெழுத்தை முதலாகவுடைய வினைச்சொல்லுக்கு இடையே வரும் ஆன் சாரியையது னகரமும் இன் சாரியையது னகரம் போல் றகரமாதற்குரியது. பரணியாற் கொண்டான். காலத்தாற் செய்தான், பிறந்த நாளாற் பெற்றனன் எனக் காட்டலாம்.

**அத்து த்து ஆதல்**

**அத்தின் அகரம் அகரமுனை இல்லை (125)**

அத்துச் சாரியையது அகரம் அகரவீற்றுச் சொல்முன் இல்லையாம். மகம்+அத்து+கை=மகத்துக்கை. அகரமுனை – அகரஈறு.

**இக்கு க்கு ஆதல்**

**இக்கின் இகரம் இகரமுனை அற்றே (126)**

இக்குச் சாரியையது இகரமும் இகர ஈற்றுச் சொல்முன் இல்லையாம். ஆடி+இக்கு+கொண்டான்=ஆடிக்குக்கொண்டான்.

**ஐ முன்னரும் ‘க்கு’ என ஆதல்**

**ஐயின் முன்னரும் அவ்வியல் நிலையும் (127)**

ஐகார ஈற்றுச் சொல்முன்னரும் இக்கு, க்கு ஆகும்: சித்திரக்குக் கொண்டான், மணி பத்தரைக்குத் தந்தான்.

**‘அக்கு’வில் ‘அ’ மட்டும் நிற்றல்**

**எப்பெயர் முன்னரும் வல்லெழுத்து வருவழி**
**அக்கின் இறுதிமெய் மிசையொடுங் கெடுமே**
**குற்றிய லுகரம் முற்றத் தோன்றாது (126)**

எவ்வகையான பெயர் முன்னரும் வல்லெழுத்து வருமிடத்து ‘அக்கு’ என்ற சாரியையானது குற்றியலுகரம் முழுமையாக மறைந்துவிடும். அது முன்னுள்ள மெய்யோடும் கெடும். ‘அக்கு’வில் அ மட்டும் நிற்கும். ‘க்கு’ போய்விடும். குன்று+அக்கு+குடி=குன்றக்குடி. மிசை-மேலுள்ள எழுத்து. முற்றத்தோன்றாது – முழவதும் கெடும். மன்றக் கூட்டம். தமிழக்கூத்து.

**அம் சாரியை திரிதல்**

**அம்மின் இறுதி க ச தக் காலைத்**
**தன்மெய் திரிந்து ங ஞ ந ஆகும் (129)**

'அம்' என்ற சாரியையது இறுதிமெய், வருமொழி முதலில் க, ச, த என வருமிடத்தில், தன் வடிவு திரிந்து ங, ஞ, ந ஆகும். புளி+அம்+கிளை=புளியங்கிளை, புளியஞ்சோறு, வேப்பந்தழை.

**அம் சாரியை ஈறு கெடுதல்**

**மென்மையும் இடைமையும் வரூஉங் காலை**
**இன்மை வேண்டும் என்மனார் புலவர் (130)**

'அம்' என்ற அச்சாரியையது இறுதி 'ம்', மெல்லெழுத்தும் இடையெழுத்தும் வருமொழிமுதலாய் வரும்போது, கெட்டுப்போய் விடும் என்று புலவர் சொல்லுவர். புளி+அம்+நுனி=புளியநுனி.

**இன்உருபு முன் இன் சாரியை தேவையன்று**

**இன்னன வரூஉம் வேற்றுமை உருபிற்கு**
**இன்னென் சாரியை இன்மை வேண்டும் (131)**

'இன்' என்ற ஐந்தாம் வேற்றுமை உருபுக்கு 'இன்' என்னும ் சாரியை வேண்டியதில்லை. வீட்டின் தென்புறம். 'பாம்பினிற் கடிது தேள்' (பாம்பு+இன்+இன்) எனச் சிறுபான்மை இன் உருபுக்கு இன் சாரியை வருவதும் உண்டெனக் காட்டுவர் இளம்பூரணர்.

**சொற்களை ஒருங்கிணைக்க வரும் சாரியை இயல்பு**

**பெயரும் தொழிலும் பிரிந்து ஒருங்கிசைப்ப**
**வேற்றுமை உருபு நிலைபெறு வழியும்**
**தோற்றம் வேண்டாத் தொகுதிக் கண்ணும்**
**ஒட்டுதற்கு ஒழுகிய வழக்கொடு சிவணிச்**
**சொற்சிதர் மருங்கின் வழிவந்து விளங்காது**
**இடைநின்று இயலும் சாரியை இயற்கை**
**உடைமையும் இன்மையும் ஒடுவயின் ஒக்கும் (132)**

பெயர்ச்சொல்லும் வினைச்சொல்லும் பிரிந்து நின்றும் பிறகு தம்முள் இணைந்து நின்றும், ஒருங்கிணைத்துச் சொல்லப்படுமிடத்து, வேற்றுமை உருபு வெளிப்பட்டு நிற்பதும் உண்டு. வெளிப்படத் தோன்றாது மறைந்து நிற்பதும் உண்டு. அச்சொற்கள் ஒன்றுடன் ஒன்று ஒட்டுதற்கு ஏற்ப, உலகிடைக் கூறப்படும் விதத்தில் பொருந்திச் சாரியைகள் இடையில் வரும். சொற்களைப் பிரித்துக் காணுமிடத்து, அவற்றின் வழித்தோன்றிப் பொருளெதுவும் தராது அவற்றினிடையே நடப்பதுதான் சாரியையது

இயல்பாகும். ‘ஒடு’ உருபின்வழி சாரியை வருதலையும் வாராமையையும் அறியலாம். பிறவற்றுக்கும் இஃது ஒக்கும். தொழில்-வினைச்சொல், தோற்றம் வேண்டாத் தொகுதி-வேற்றுமைத்தொகை. சொற்சிதர் மருங்கின் - சாரியைவரும் சொற்களைப் பிரித்துப் பார்க்குமிடத்து, விளங்காது – சாரியை தனக்கெனப் பொருள்தரா, (பாட்டினொடு பொருந்திய இசை: பாட்டொடு பொருந்திய இசை.) இன் சொல்லாக்கத்திற்குப் பயன்பட்டது: பொருள் தரவில்லை. மலரினொடு சேர்ந்த மணம்: மலரொடு சேர்ந்த மணம்.

**அத்து, வற்றுச் சாரியைப் புணர்ச்சி**

**அத்தே வற்றே ஆயிரு மொழிமேல்**
**ஒற்றுமெய் கெடுதல் தெற்றென் றற்றே**
**அவற்றுமுன் வரூஉம் வல்லெழுத்து மிகுமே (133)**

அத்து, வற்றுச் சாரியை மொழிகள் வருமிடத்து, அவற்றுக்கு முன்னுள்ள மொழிகளிலுள்ள ஒற்றுத்தன் வடிவம் கெடுதல் உறுதி. அவ்விரு சாரியை முன்னர் வரும் வல்லெழுத்து மிகும். தெற்றென்றற்றே-உறுதி. மடம்+அத்து+கேணி =மடத்துக்கேணி. வெயிலத்துப்போனான், பனியத்துச் சென்றான் என, ஒற்றுக்கெடாதும் வரும். இன்றும் ‘மலையாளத்தில்’ இவ்வழக்குண்டு என்பர்.

**எழுத்துச் சாரியைகள்**

**காரமும் கரமும் கானொடு சிவணி**
**நேரத் தோன்றும் எழுத்தின் சாரியை (134)**

எழுத்துக்குச் சாரியை சேர்த்துக் கூறுவது ஒரு தமிழ் மரபு. அகரம், பகாரம், அஃான், என வரும். காரம், கரம், கான் என்பன எழுத்தொடு பொருந்திச் சாரியைகளாக இசைந்தொலிக்கும்.

**நெட்டெழுத்துச் சாரியை**

**அவற்றுள்**
**கரமும் கானும் நெட்டெழுத்து இலவே (135)**

அவற்றுள் கரம், கான் இரண்டும் நெட்டெழுத்தோடு இசைந்து வாரா. காரம் மட்டுமே நெடிலுக்கு உண்டு: ஈகாரம், ஊகாரம்.

**குற்றெழுத்துச் சாரியை (135)**

**வரன்முறை மூன்றும் குற்றெழுத்து உடைய (136)**

வரன்முறைப் படுத்தப்பட்ட காரம், கரம், கான் மூன்றும் குற்றெழுத்துக்கட்குப் பொருந்திவரும். அகாரம், அகரம், அஃகான்,'நேரத்தோன்றும்','வரன்முறை மூன்றும்' என்றெல்லாம் கூறுவதனால், வரன் முறைப்படுத்தப்படாமல் பல எழுத்துச் சாரியைகள் வழங்கி வந்துள்ளன என அறியலாம். ஆனா, ஆவன்னா போல்வன பல பேச்சு வழக்கின.

**ஐ, ஔ சாரியை பெறும் முறை**

**(ஐகார ஔகாரம் கானொடும் தோன்றும் (137)**

ஐ, ஔ இரண்டும் 'கான்' சாரியையும் பெறும். ஐகான், ஔகான், ஐகாரம் எனக் காரம் பெறுதல் சூத்திரத்திலேயே உளது.

**புள்ளி ஈற்றின்முன் உயிர்வரும் புணர்ச்சி**

**புள்ளி ஈற்றுமுன் உயிர்தனித் தியலாது**
**மெய்யொடும் சிவணும் அவ்வியல் கெடுத்தே (138)**

புள்ளி ஈற்றுச் சொல்முன் உயிர் முதன்மொழி வந்தால், உயிர் அங்ஙனம் தனித்துப் பிரிந்து நில்லாது, முன்னள்ள மெய்யொடுங்கூடி நடக்கும். கடல்+அலை=கடலலை. ஆல்+இலை=ஆலிலை.

**உயிர் பிரிந்த மெய்யின் நிலை வடிவம்**

**மெய்உயிர் நீங்கின் தன்னுரு வாகும் (139)**

மேலே காட்டிய புணர்ச்சியில், சொற்களைப் பிரிக்கும்போது, உயிரெழுத்து நீங்கியதும் மெய் தனக்குரிய புள்ளி வடிவைப்பெறும். ஆலிலை=ஆல்+இலை. வாளெறிதல்=வாள்+எறிதல். தாலாட்டு=தால்+ஆட்டு.

**உயிரீற்றுமுன் உயிர்வரும் புணர்ச்சி உடம்படுமெய் வருமிடம்**

**எல்லா மொழிக்கும் உயிர்வரு வழியே**
**உடம்படு மெய்யின் உருவுகொளல் வரையார் (140)**

எல்லாச் சொற்களுக்கும் உயிரீறுமுன் உயிர்முதன்மொழி வருமிடத்து, இடையே அவற்றை உடம்படுத்தும் மெய்யாக, மெய்யெழுத்து வடிவொன்று தோன்றுதலைக் கற்றறிந்தோர் நீக்க மாட்டார்கள். பெரிதும் வரும் என்பதாம். ய, வ என்பன உடம்படு மெய்கள். கூலியாள் (கூலி+ய்+ஆள்.) மாவிலை (மா+வ்+இலை). கோவில், கோயில்

என மாறி வருவனவும் உள. விலை என்ன, அழகிய ஆட்டம் என உடம்படுமெய் பெறாதும் வரும்.

**ஒலிப்பு வேற்றுமையால் தொடர்கள் பொருள் வேறுபடுதல்**

**எழுத்தோ ரன்ன பொருள்தெரி புணர்ச்சி**
**இசையில் திரிதல் நிலைஇய பண்பே (141)**

எழுத்துக்களால் ஒருதன்மைப்பட்ட பொருள் விளங்கி நிற்கும் புணர்மொழிகள், சொல்லுவானது சொல்லும் ஓசை வேற்றுமையால் பொருள் வேறுபடுதல் நிலையான பண்பாகும். ஓரன்ன – ஒருதன்மைப்பட்ட. இசையில் - அழுத்தந்தரும் ஓசையால். திரிதல் - பொருள் வேறுபடுதல். அப்பா – அப் பா. எடுத்தல், படுத்தல் அனைய ஓசை வேறுபட்டால், புணர்ச்சி வேறுபடலும் பொருள் வேறுபடலும் காணலாம். எழுந்திருந்தான் வேறு: எழுந்து இருந்தான் வேறு என ஓசையழுத்தத்தை வைத்து உணர்கிறோமல்லவா?

**எழுத்தாலன்றிக் குறிப்பால் பொருளுணர்தல்**

**அவைதாம்**
**முன்னப் பொருள புணர்ச்சி வாயின்**
**இன்ன என்னும் எழுத்துக்கடன் இலவே (142)**

அப்புணர்மொழிகள், புணர்ச்சியிடத்து இன்ன தன்மையவாயின் என எண்ணும் எழுத்து முறைமையையுடையனவல்ல: குறிப்பினால் உணரவேண்டிய பொருண்மையுடையன. முன்னம்-குறிப்பு. புணர்சிவாயின்-புணர்ச்சியிடத்து.

வீட்டில் ‘அப்பாவைப்பார்’ என்பதும் பாட்டில் ‘அப் பாவைப் பார்’ என்பதும், இடம்நோக்கிக் குறிப்பால் உணரவேண்டியன: எழுத்து வேறுபாடில்லை. அப்பாவை பார் என்று புணர்ச்சி வேறுபட்டுவிட்டால் வெளிப்படையாகவே பொருள் விளங்கிவிடும்.

# புணரியல் கருத்துக்களின் தொகுப்பு

## எழுத்துக்கள் இணையும் புணர்ச்சி

தமிழ் எழுத்து முப்பத்துமூன்றில் மொழி முதலாக வரும் இருபத்து இரண்டு எழுத்துக்களும் ஈறாக வரும் இருபத்து நான்கு எழுத்துக்களுடனும், வழக்கின்கண் சொற்கள் சேருங்கால் ஒன்றுபொருந்தி நடக்கும். இப்புணர்ச்சியில், சொற்களனைத்திற்கும் மொழியிறுதி, மொழி முதலென்ப மெய் அல்லது உயிர் என அவ்விரண்டாகவே அமையும். அவற்றுள் மெய்யீறு என்பன எல்லாம் மொழியிறுதியில் புள்ளியுடன் நிலைபெற்றிருக்கும்.

குற்றியலுகரமும் அவ்வியல்புப்படி மொழியிறுதியில் புள்ளி பெற்று நிற்கும்.

உயிர்மெய் இறுதியில் நிற்பின் அதுவும் உயிர் ஈற்றின் இயல்பை உடையதாகும்.

## எழுத்துக்கள் நின்று இணைதல்

சொற்கள் தம்முள் புணருமிடத்து உயிரில் முடியும் சொல்லுடன் உயிரை முதலாகவுடைய மொழியும் உயிரில் முடியும் சொல்லுடன் மெய்யை முதலாகவுடைய மொழியும் மெய்யில் முடியும் சொல்லுடன் உயிரை முதலாகவுடைய மொழியும் மெய்யில் முடியும் சொல்லுடன் மெய்யை முதலாகவுடைய மொழியும் என இவ்வாறு புணரும். இவற்றைத் தெளிவுபடக் கூறுமிடத்து நிறுத்த சொல், குறித்துவரு கிளவி என அவ்விருவகையில் வரும்.

## சொற்கள் நின்று இணைதல்

அவற்றுள் நிறுத்த சொல்லின் ஈற்றெழுத்துடன் குறித்து வருகிளவியின் முதலெழுத்துப் பொருந்துவதே புணர்ச்சியாகும். இது பெயர்ச்சொல்லுடன் பெயரையும் பெயர்ச்சொல்லுடன் வினையையும் வினைச்சொல்லுடன் பெயரையும் வினைச்சொல்லுடன் வினையயும் புணர்க்குமிடத்து நடப்பதாகும். அப்போது மொழிகள் புணரும்நிலை திரிவு மூன்றும் இயல்பு ஒன்றுமாக, நான்கு வகையாய் அமையும்.

## மூவகைத் திரிபுகள்

மெய் வேறாகத் திரிதல், புதிய எழுத்துத் தோன்றுதல், முன்னிருந்த எழுத்துக்கெடுதல் (மெய் பிறிதாதல், மிகுதல், கெடுதல்) என்பன மூன்றும் திரிபுகளாகும்.

**அடைமொழி சார்ந்தவை புணர்தல்**

நிறுத்த சொல்லும் குறித்து வருகிளவியும் தனித்து மட்டுமல்லாமல், அடைமொழிகளுடன் வரினும் இருமொழித் தன்மையவாய் முற்கூறிய புணர்ச்சி நிலைகட்கு உரியனவாகும்.

**மருஉச்சொல் புணர்ச்சி**

மருஉ மொழிகளாய் மயங்கிக்கிடக்கும் சொற்களேயாயினும், நிறுத்தசொல் குறித்து வருகிளவியென நிறுத்திப் புணர்தற்குரிய சொற்களும் உள்ளன.

**பொருளடிப்படைப் புணர்ச்சி**

வேற்றுமைப் பொருள் குறித்த புணர்மொழிகளும் வேற்றுமையல்லாத அல்வழிப் பொருள் குறித்த புணர்மொழிகளுமெனப் பொருள்வழிப் புணர்ச்சிகள் இரண்டு வகைப்படும். அப்பொருளுணர்ச்சிக்காக, எழுத்து மிகுதலும் சாரியை தோன்றுதலுமாகிய அவ்விரு பண்பினடிப்படையில் புணர்ச்சி நடக்குமிடத்துச் செறிவாக இணைத்துச் சொல்லப்படும்.

**வேற்றுமைப்புணர்ச்சி நெறிமுறைகள்**

வேற்றுமைப் புணர்ச்சியில் இடம்பெறும் வேற்றுமை யுருபுகள் ஐ ஒடு கு இன் அது கண் என்னும் இவை ஆறுமாகும்.

கு, கண் என்ற வல்லெழுத்தை முதலாகவுடைய வேற்றுமை உருபிற்குப் பொருந்துமிடங்களில், இடையே ஒற்று மிகுதல் வேண்டும்.

மொழியிறுதியில் அகரம் நிற்குமிடத்து, அதற்கு எதிரே வரும் 'அது' எனும் ஆறாம் வேற்றுமையுருபிலுள்ள 'அகர' எழுத்து கெடும்.

வேற்றுமை உருபுகள் பெயருடன் கூடுங்காலத்து, அப்பெயர்களின் பின்னர் வரும்.

அங்ஙனம் உருபேற்கும் பெயர்கள் உயர்திணைப் பெயர், அஃறிணைப் பெயரென்று இருவகையினவாகும்.

**வேற்றுமைப் புணர்ச்சியில் சாரியைகள் இடம்பெறுதல்**

அப்பெயர்களும் வேற்றுமை உருபுகளும் சேருங்கால் அவற்றினிடையே சாரியை வரும்.

இன், வற்று, அத்து, அம், ஒன், ஆன், அக்கு, இக்கு, அன் என்னும் சொல்லுடன் இடைச்சொற்களுட்பட இவை போல்வன பிறவும் அங்ஙனம் வரும் சாரியை மொழிகளாம்.

இன் சாரியையிலுள்ள முதல் 'இ','ஆ' என்னும் சொல்லுடன் சேரும்போது, கெட்டுப்போதலுமுண்டு கெடாது நிற்றலுமுண்டு.

அளவைக் குறிக்கும் உழக்கு முதலிய சொற்களின் முதலில் நிற்கும் உயிரெழுத்துக்கு முன்னதாக வரும் 'இன்' சாரியையது னகரம் றகரமாய்த் திரியும்.

'அவை' என்னும் சுட்டு முதலாகிய ஐ முன்னர், வற்று முதல் மெய்யாகிய 'வ' கெட்டு அற்று ஆகி நிற்றல் அதனியல்பாகும்.

நான்கன் உருபாகிய 'கு'வருமிடத்து, இன்னிலுள்ள னகாரம் றகாரமாகும்.

பரணி என்ற நாள் முன்வரும் வல்லெழுத்தை முதலாகக் கொண்ட வினைச் சொல்லுக்கு, இடையே வரும் 'ஆன்' சாரியையது னகரமும் 'இ'ன்னினது னகரம்போல, றகரமாதற்குரித்து.

'அத்து'ச் சாரியையிலுள்ள முதல் 'அகரம்', அகர ஈற்றுச்சொல் முன் மறைந்துவிடும்.

'இ'க்குச் சாரியையிலுள்ள முதல் 'இகரமும்', இகர ஈற்றுச் சொல்முன் அதுபோல் மறைந்துவிடும்.

ஐகார ஈற்றுச் சொல் முன்னரும் 'இக்கு'வில், இ மறைந்து மேற்சொன்ன அவ்வியல்பால் நிலைபெறும்.

எவ்வகைப்பட்ட பெயர் முன்னரும் வல்லெழுத்து முதல் மொழி வருமிடத்து,'அக்கு'ச் சாரியையிலுள்ள இறுதி மெய்யும் அதன் முன்னுள்ள மெய்யும் இறுதி மெய்யூர்ந்த குற்றுகரமும் மறைந்து 'அக்கு','அ' ஆகிவிடும்.

'அம்' சாரியையது இறுதி மெய், வருமொழி முதலில் கசத வருமிடத்துத் தன் வடிவம் திரிந்து முறையே ங ஞ ந என ஆகும்.

முற்கூறிய 'அம்' சாரியையது இறுதி மெய், மெல்லினமும் இடையினமும் வருமொழி முதலில் வரும்போது, கெட்டுப் போய்விடும்.

'இன்' எனும் ஐந்தாம் வேற்றுமை உருபிற்கு, இன் எனும் சாரியை வராது.

**சாரியையின் இயல்பு**

பெயர்ச்சொல்லாகவும் வினைச்சொல்லாகவும் தனித்து நிற்பன, தம்முள் இணைந்து, ஒருங்கிணைத்துச் சொல்லப்படுங்காலத்து வேற்றுமை உருபு வெளிப்பட்டுத் தோன்றி நிற்குமிடத்தும் வெளிப்படாது மறைந்து நிற்குமிடத்தும் அச்சொற்கள்

ஒன்றுடன் ஒன்று இணைவதற்குக் காரணமான வழக்கினிடத்து அவை செறிவுறப் பொருந்த இடையே வந்து அமைவதே சாரியையது இயற்கையாகும். சொற்களைப் பிரித்துக் காணுமிடத்து அவை தமக்கெனப் பொருள் எதுவும் தருவதில்லை. இவ்வாறு சாரியை பெறுதலாலும் பெறாமையாலும் பொருள் வேறுபடாமையை ஒடு உருபின் வழி அறியலாம். பிற உருபுகட்கும் இது பொருந்தும்.

அத்து, வற்றுச் சாரியைகள் வரும்போது, அவற்றுக்கு முன்னுள்ள மொழிகளின் இறுதியிலுள்ள ஒற்றுக்கெடுதல் உறுதி. சாரியைகட்குப் பின்வரும் வல்லெழுத்து மிகும்.

**எழுத்துச் சாரியைகள்**

எழுத்துக்களின் சாரியைகளாக காரம், கரம், கான் எனும் மூன்றும் பொருத்தமுறத் தோன்றும்.

அவற்றுள் கரம், கான் இரண்டும் நெட்டெழுத்துடன் இணைந்து வாரா. காரம் மட்டுமே வரும் என்பதாம்.

வரன்முறைப்படுத்தப்பட்ட காரம் கரம் ‘கான்’ மூன்றும் குற்றெழுத்துக்களுக்குச் சாரியைகளாக வரும்.

ஐகார ஔகாரம் இரண்டும் கான் சாரியையொடும் பொருந்தும்.

**புள்ளியீறும் உயிர் முதலும் பொதுப்புணர்ச்சி**

புள்ளி ஈற்றுச் சொல்முன் உயிர் முதன்மொழி வந்தால், உயிர் அங்கு தனித்துநில்லாது, மெய்யுடன் கூடி நிற்கும்.

அங்ஙனம் உயிர்மெய்யாய்க் கூடிநிற்கும் சொற்களைப் பிரிக்கும்போது மெய்யையவிட்டு உயிர் நீங்கினால், அது மீண்டும் தன் பழைய மெய் வடிவத்தைப் பெறும்.

**உயிரீறும் உயிர்முதலும் பொதுப்புணர்ச்சி**

எல்லாச் சொற்களுக்கும் உயிரீற்றுமுன் உயிர் முதன்மொழி வந்தால், அவ்வாறு வருமிடத்து உடம்படு மெய்யாக ஒரு வடிவு கொள்ளுதலை நீக்கமாட்டார்கள். சிலபோது உடம்படுத்தும் மெய் வாராமையும் உண்டு.

**ஓசை அழுத்தத்தால் தொடர்கள் பொருள் வேறுபடுதல்**

எழுத்துக்களெல்லாம் ஒரு தன்மையவாய், பொருள் விளங்கிநிற்கும் தொடர்மொழிகள், சொல்லுவானது சொல்லும் ஓசை வேற்றுமையால் பொருள் வேறுபடுதல் நிலைபெற்ற மொழிப்பண்பாகும்.

அவை புணர்ச்சி வழியாக இன்ன தன்மையவாயின என்று சொல்லும்படியான எழுத்து வேற்றுமையுடையனவல்ல: சொல்லானது குறிப்பினால் பொருளை யுணர வேண்டியனவாகும்.

## வினாக்கள்

**பத்திவினா**

1. புணரியல் பெயர்க்காரணம் கூறுக.
2. 'குற்றியலுகரமும் அற்று என மொழிப'– விளக்குக.
3. 'உயிர்மெய் ஈறும் உயிர் ஈற்று இயற்றே'– விளக்குக.
4. இருமொழிப்புணர்ச்சி, எழுத்து வகையால் நான்காதல் எவ்வாறு? (அ) 'ஆயீர் இயல – புணர்நிலைச் சுட்டே'– விளக்குக. (அ) புணர்ச்சியில் நிலைமொழி வருமொழிகள் எவ்வாறு வரும்?
5. புணர்ச்சியின் மூவகைத் திரிபுகள் யாவை?
6. 'எழுத்துச்சாரியை' விளக்கம் தருக.
7. சாரியையின் இயல்பு குறித்து விளக்குக.
8. எழுத்துப்புணர்ச்சி, சாரியைப் புணர்ச்சி – விளக்குக.
9. 'அடையொடு தோன்றினும், புணர்நிலைக்கு உரிய'– விளக்குக.
10. மொழிபுணர் இயல்பு எத்தனை வகைப்படும்? விளக்குக.
11. 'ஒல்வழி ஒற்றுஇடை மிகுதல் வேண்டும்'– விளக்குக.
12. உயிரெழுத்தின் புணர்ச்சி இயல்புகளைக் கூறுக.
13. புணர்ச்சியில் பொருள் வேறுபடும் இடத்தை ஆராய்க. (அ) 'எழுத்தோரன்ன பொருள் தெரிபுணர்ச்சி' என்றால் என்ன?

**கட்டுரை வினா**

1. புணர்ச்சியின் இயல்பு குறித்துத் தொல்காப்பியர் கூறியனவற்றைத் தொகுக்க.
2. வேற்றுமைப் புணர்ச்சியில் சாரியைகள் பற்றி தொல்காப்பியர் கருத்துக்களை கூறுக.
3. உருபு புணர்ச்சி குறித்து புணரியலில் கூறியவற்றைத் தொகுக்க.
4. சாரியைகள் மொழியில் இடம்பெறும் பாங்கினைப் புலப்படுத்துக.

# 5. தொகைமரபு

எழுத்துப் புணர்ச்சி தமிழில் ஓர் இன்றியமையாப் பண்பு. ஆங்கிலத்தில் சொற்கள் தனித்தனியே தொடர்ந்து நிற்கின்றன. மா பழம் என்பதைத் தமிழில் மாம்பழம் எனல் வேண்டும். Mango Fruit என ஆங்கிலத்தில் அது தனித்தனியே நிற்கும். கற்சிலை என்னாமல் கல்சிலை என்பதோ, மரவேர் என்னாமல் மரம்வேர் என்பதோ தமிழில் இயல்பாகவுமில்லை: பொருள்வேறுபடுவதும் உண்டு. ஆங்கிலமொழி செல்வாக்காலும் கால மாறுதலாலும் சொற்களைப் புணர்ச்சிப்படுத்தாது. தனித்தனியே சொல்ல பழகுகிறோம். என்றாலும் தமிழின் இவ்வியல்பு அடிப்படைப் பொருந்தியது. தமிழின் உள்ளார்ந்த பண்பு இது. படகு ஓட்டி, வேலை ஆள், கடல்கரை என்றா பேசுகிறோம்? நம்மையறியாமல் படகோட்டி, வேலையாள், கடற்கரை என்றுதானே சொல்கிறோம். இப்புணர்ச்சிகளில் வரையறையுட்படாது, பொதுவாகவே கூறித் தீரவேண்டிய பல விதிகளைத் தொகுத்துக் கூறுதலால் இது தொகைமரபு எனப்பட்டது.

**கசதப முன் அவற்றின் இனமான ஙஞநம தோன்றுதல்**

**க ச த ப முதலிய மொழிமேல் தோன்றும்**
**மெல்லெழுத் தியற்கை சொல்லிய முறையான்**
**ங ஞ ந ம என்னும் ஒற்றா கும்மே**
**அன்ன மரபின் மொழிவயி னான. (143)**

உயிரீறு மெய்யீறாக வரும் சொற்களுக்கு எதிராக க, ச, த, ப வல்லெழுத்து முதன்மொழிகள் வருமிடத்து அவற்றுக்கு முன் முறையே ங, ஞ, ந, ம என்னும் மெல்லெழுத்துக்கள் நிரல் நிறையே மிகும். அவ்வாறு வருவன இனஎழுத்துக்கள் ஆகும். முதலிய மொழி-முதலாகவுடைய சொற்கள். மெல்லெழுத்து இயற்கை – வல்லினக் க ச த ப வுக்கு இனமான மெல்லின ங ஞ ந ம. அத்தன்மையல்லாத சொற்களில் வல்லெழுத்தே மிகுந்து வரும். தட+தோள்=தடந்தோள், கடு(மை)+சூல்=கடுஞ்சூழ், பழகுந்தமிழ், விளாம்பழம், நலம்+குறை=நலக்குறை.

**24 எழுத்தீறுகள் முன் உயிரெழுத்து, ஞ ந ம ய வ முதன்மொழிவரின் இயல்பாகும்.**

**ஞ ந ம ய வவெனும் முதலாகு மொழியும்**
**உயிர்முத லாகிய மொழியும் உளப்பட**
**அன்றி அனைத்தும் எல்லா வழியும்**
**நின்ற சொல்முன் இயல்பா கும்மே (144)**

இருபத்து நான்கு இறுதி எழுத்துக்களையும் உடைய நின்ற சொல்முன், வருமொழியாக உயிர் எழுத்து முதன்மொழிகளும் ஞ ந ம ய வ என்ற மெய் முதல்மொழிகளும் வேற்றுமை அல்வழி இரண்டிடத்தும் இயல்பாக வரும். முருகன் வந்தான், நலம் நிறைந்தது, வயல் விளைந்தது, மனைமாட்சி, களம் புகல்.

**அவற்றுள் ஞ ந ம முதன்மொழிகள் உறழ்ந்துவரல்**

**அவற்றுள்**
**மெல்லெழுத் தியற்கை உறழினும் வரையார்**
**சொல்லிய தொடர்மொழி இறுதி யான (145)**

ஞ ந ம எனும் மெல்லெழுத்து முதன்மொழிகள் இயல்பாதலேயன்றி, உறழ்ந்து முடியினும் நீக்கமாட்டார். உறழினும் - இயல்பாயும் மிகுந்தும். கத்தி நுனி, தாய்மொழி, மெய்ஞானம், மெய்ஞ்ஞானம், கலைஞானம் - கலைஞ்ஞானம்.

**ண், ன் முன் யா, ஞா (போலியாக வருதல்)**

**ண ன வென் புள்ளிமுன் யாவும் ஞாவும்**
**வினையோ ரனைய என்மனார் புலவர் (146)**

ண, ன புள்ளி ஈறாக முடியும் சொற்களில் (மண், பொன்), வருமொழியாக வரும் யா, ஞா முதன்மொழிச் சொற்கள் (யாத்த, ஞாத்த) வினைச் சொல்லாக நிற்குமிடத்து இயல்பாக ஒருதன்மையனவாம். மண் யாத்த, மண் ஞாத்த, பொன் யாத்த, பொன் ஞாத்த.

**அல்வழியில் ண், ன் இரண்டும் வருமொழிமுன் இயல்பாக நிற்கும்**

**மொழிமுத லாகும் எல்லா எழுத்தும்**
**வருவழி நின்ற ஆயிரு புள்ளியும்**
**வேற்றுமை அல்வழித் திரிபுடன் இலவே (147)**

தமிழில் மொழிமுதலாக வருமென்ற இருபத்து இரண்டு எழுத்துக்களை முதலாகக் கொண்ட சொற்கள் வருமொழியாக நிற்க, நிலைமொழி இறுதியில் நிற்கும் முற்கூறிய அவ்இரு மெய்களும் (ண்,ன்) வேற்றுமையல்லாத அல்வழி இடத்துத் திரியாமல் இயல்பாக நிற்கும். மண் கடிது, மண் வலிது, பொன் சிறிது, பொன் வலிது.

**ண், ன் ஈற்றுச்சொல் - வேற்றுமையில் வரும் விதம்**

**வேற்றுமைக் கண்ணும் வல்லெழுத்து அல்வழி**
**மேற்கூ றியற்கை ஆவயி னான (148)**

முற்கூறிய ண், ன் இரண்டும் வேற்றுமையிலும் வருமொழி முதல் வல்லெழுத்தல்லாத இடத்து மேற்கூறியவாறு இயல்பாக வரும். வல்லெழுத்துவரின் திரியும். மண் ஞாலம், பொன் விலை, (மண் குடம்) மட்குடமாகிவிடும், வேற்றுமையில் வல்லினம் வரின்)

**ல, ன முன்வரும் த, ந –ற ன ஆகும்**

**ல ன என வரூஉம் புள்ளி முன்னர்த்**
**த ந எனவரின் ற ன வா கும்மே (149)**

ல, ன முன் த, ந வரின் அவை ற, ன ஆகிவிடும். கல்+தரை=கற்றரை, முன்+நிலை=முன்னிலை, பொன்+தாலி=பொற்றாலி, தன்+நலம்=தன்னலம்.

**ண, ன முன்வரும் த, ந-ட, ண ஆகும்.**

**ண ளவென் புள்ளிமுன் ட ணவெனத் தோன்றும் (150)**

ண, ள புள்ளியீற்றுக்குமுன், த, ந வரின் முன்னின்ற ண, ள இரண்டும் முறையே ட, ண ஆகிவிடும். மண்+தீது=மண்டீது, மண்+நன்று=மண்ணன்று, கள்+தீது=கட்டீது, உள்+நினைவு=உண்ணினைவு.

**முன்னிலை வினைச்சொல் புணர்ச்சி**

**உயிரீ றாகிய முன்னிலைக் கிளவியும்**
**புள்ளி இறுதி முன்னிலைக் கிளவியும்**
**இயல்பா குநவும் உறழா குநவுமென்று**
**ஆயீ ரியல வல்லெழுத்து வரினே (151)**

உயிர் ஈறாகிய முன்னிலை வினைச்சொற்களும் மெய் ஈறாகிய முன்னிலை வினைச்சொற்களும் (நட, வா, செல்வாய், வருதி) வல்லெழுத்து முதல் மொழிவரின் பெரும்பாலும் இயல்பாக வரும். சிறுபான்மை உறழ்ந்து வரும். இவ்விரண்டியல்புமுடையன அவை. நட பையா, செல்வாய் கண்ணே. து+கொற்றா=துக்கொற்றா என ஓரெழுத்தொரு மொழிகளில் மிகுதலும் உண்டென்பர். (து-உண்)

**அதற்குச் சிறப்பு விதி**

**ஔவென வரூஉம் உயிரிறு சொல்லும்**
**ஞ ந ம வ என்னும் புள்ளி யிறுதியும்**
**குற்றிய லுகரத்து இறுதியும் உளப்பட**
**முற்றத் தோன்றா முன்னிலை மொழித்தே (152)**

ஒள உயிர்ஈற்று முன்னிலை வினைச்சொல்லும் (கௌ), ஞ ந ம வ மெய் ஈற்று முன்னிலை வினைச்சொல்லும் குற்றியலுகர ஈற்று முன்னிலை வினைச்சொல்லும் முற்கூறிய இயல்பு முழுமைபெறத் தோன்றா: மாறியும் வரும். வல்லெழுத்து மிகுதலும் உண்டு என்பதாம். கௌவு, உரிஞுஉ, பொருது என உகரம் பெற்று, கௌவுக்குமரா, கௌவுக்குமரா என உறழ்ந்து வரும். தாவு தம்பி, கூட்டு பெண்ணே என் இயல்பாய் வருதலே மிகுதி.

**உயர்திணைப் பெயர்கள் பற்றியவை இயல்புப்புணர்ச்சியாதல்**

**உயிரீ றாகிய உயர்திணைப் பெயரும்**
**புள்ளி இறுதி உயர்திணைப் பெயரும்**
**எல்லா வழியும் இயல்பென மொழிப (153)**

உயிர் ஈறாகிய உயர்திணைப் பெயர்களும் புள்ளி ஈறாகிய உயர்திணைப் பெயர்களும் நான்கு கணமும் (உயிர், வலி, மெலி, இடை எழுத்துக்கள்) வரின், அல்வழியும் வேற்றுமையுமாகிய எல்லா இடத்தும் இயல்பாம் என்று கூறுவர். பாரி, ஆய் என நிறுத்தி குட்டையானவன், நெடியவன், பேசினான், சிரித்தான், கை, தலை என்பன ஒவ்வொன்றையும் அவற்றொடு புணர்த்திச் சொல்லிப் பாருங்கள்.

**அதற்குச் சிறப்புவிதி**

**அவற்றுள்**
**இகர இறுபெயர் திரிபிடன் உடைத்தே (154)**

மேற்கூறிய உயர்திணைப் பொருள் ‘இ’கர ஈற்றுப்பெயர்கள் இயல்பாகாமல் திரிந்து முடியும் இடங்களும் உண்டு. கண்ணகி கோயில் - கண்ணகிக் கோயில், செட்டிகுளம் - செட்டிக்குளம்.

**விரவுப்பெயரில் இயல்பாதல்**

**அஃறிணை விரவுப்பெயர் இயல்புமா ருளவே (155)**

உயர்திணையோடு அஃறிணை விரவும் ‘விரவுப்பெயர்கள்’ இயல்பாய் முடிவனவும் உள. பாண்டி பெரியன் (மனிதன்), பாண்டி பெரிது (பேருந்து). விரவுப்பெயர்-பொதுப்பெயர். உயர்திணைக்கும் அஃறிணைக்கும் பொது.

**மூன்றாம் வேற்றுமைப் புணர்ச்சி**

**புள்ளி இறுதியும் உயிர்இறு கிளவியும்**
**வல்லெழுத்து மிகுதி சொல்லிய முறையால்**
**தம்மி னாகிய தொழிற்சொல் முன்வரின்**

**மெய்ம்மை யாகலும் உறழத் தோன்றலும்**
**அம்முறை இரண்டும் உரியவை உளவே**
**வேற்றுமை மருங்கில் போற்றல் வேண்டும் (156)**

புள்ளியிறுதிச் சொல்லும் உயிரிறுதிச் சொல்லும் வேற்றுமைப் புணர்ச்சியில் வல்லெழுத்து மிகும் எனச் சொல்லப்படும். எனினும் மூன்றாம் வேற்றுமைப் பொருளாகிய வினைமுதற் பொருளுடைய வினைச்சொற்கள் அச்சொற்களுக்கு முன்வரின் இயல்பாகலும் உறழத்தோன்றலும் ஆகிய அம்முறை இரண்டும் உரியனவாகும். சிறை கொளப்பட்டான் - சிறைக்கொளப்பட்டான். தம்மினாகிய தொழிற்சொல் - வினைமுதற் பொருள்தரும் வினைச்சொல். மெய்ம்மை ஆகல் - இயல்பாக வருதல். போற்றல் வேண்டும் - கருத்தோடு அறிதல் வேண்டும்.

நாய்கோட்பட்டான், புலிகோட்பட்டான் எனக் காட்டுவர். நாய்க்கோட்பட்டான் எனலுமாம்.

### இரண்டாம் வேற்றுமைப் புணர்ச்சி

**மெல்லெழுத்து மிகுவழி வலிப்பொடு தோன்றலும்**
**வல்லெழுத்து மிகுவழி மெலிப்பொடு தோன்றலும்**
**இயற்கை மருங்கின் மிகற்கை தோன்றலும்**
**உயிர்மிக வருவழி உயிர்கெட வருதலும்**
**சாரியை உள்வழிச் சாரியை கெடுதலும்**
**சாரியை உள்வழித் தன்னுருபு நிலையலும்**
**உயர்திணை மருங்கின் ஒழியாது வருதலும்**
**அ∴றிணை விரவுப்பெயர்க்கு அவ்வியல் நிலையலும்**
**மெய்பிறி தாகிடத்து இயற்கை யாதலும்**
**அன்ன பிறவும் தன்னியல் மருங்கின்**
**மெய்பெறக் கிளந்து பொருள்விரைந்து இசைக்கும்**
**ஐகார வேற்றுமைத் திரிபென மொழிப (157)**

இரண்டாம் வேற்றுமைப் புணர்ச்சிகள், பிற புணர்ச்சி விதிகள் பெரும்பான்மையானவற்றுக்கு வேறுபட வரும்.'ஐ'கார வேற்றுமைத் திரிபுகள், தனது இயல்பான தன்மையை எடுத்து விளக்கும் வேற்றுமைப் பொருட்புணர்ச்சிக்கு வேறுபட்டு அமையும். அ∴தாவது மெல்லெழுத்து மிக வேண்டிய இடத்து வல்லெழுத்துத் தோன்றும். வல்லெழுத்து மிக வேண்டிய இடத்து மெல்லெழுத்துத் தோன்றும். இயல்பாக வேண்டிய இடத்து எழுத்து மிகும். உயிர் தோன்ற வேண்டிய இடத்துக் கெடும். சாரியை உளதாக வேண்டிய இடத்து அது கெடும். சாரியை உள்ள இடத்தில்

அதனொடு உருபு தோன்றும். சாரியை பெறாதவிடத்து வருமொழி வல்லினம் உறழத் தோன்றுதலும் உயர்திணைப் பெயரிடத்துத் தன்னுருபு விரிந்தே வருதலும் அ.்.றிணை விரவுப் பெயர்க்கும் அதே இயல்பு பொருந்தி வருதலும் மெய் திரிய வேண்டிய இடத்து இயல்பாதலும் அத்தன்மைய பிறவும் அமையும். வலிப்பு-வல்லெழுத்து, மெலிப்பு-மெல்லெழுத்து, மிகற்கை-எழுத்து மிகுதல், தன் உருபு – ஐ என்பது, மரக்குறை-மரத்தினது குறை. மரங்குறைத்தான் - மரத்தைக் குறைத்தான். முன்பு க் வந்தது: இரண்டாம் வேற்றுமையில் அது ங் என மெல்லினமாகிறது. வண்டைப்பார், வண்டினைப்பார், திரியாத நிற்றலே மிகுதி.

**இ, ஐ ஈற்றுப்பெயர்களின் அல்வழிப் புணர்ச்சி**

**வேற்றுமை யல்வழி இ ஐ என்னும்**
**ஈற்றுப்பெயர்க் கிளவி மூவகை நிலைய:**
**அவைதாம்**
**இயல்பா குநவும் வல்லெழுத்து மிகுநவும்**
**உறழா குநவும் என்மனார் புலவர் (158)**

அல்வழியில் இ, ஐ ஈற்றையுடைய பெயர்ச்சொற்கள் இயல்பு, வல்லெழுத்து மிகுதல், உறழ்ச்சியாய் முடிவன என மூன்று வகைப் புணர்நிலைகளை உடைய, பருத்தி சிறிது, பருத்திச்செடி, மதுரை கிளர்ந்தது, தலை குனிந்தனன். வேற்றுமை அல்வழி – அல்வழி (வேற்றுமை அல்லாத பொருள்தான் ‘அல்வழி’ எனப் பெயர் பெற்றது)

**இ, ஐ ஈற்று ஏழாம் வேற்றுமைச் சொற்களின் புணர்ச்சி**

**சுட்டுமுத லாகிய இகர இறுதியும்**
**எகரமுதல் வினாவின் இகர இறுதியும்**
**சுட்டுச்சினை நீடிய ஐஎன் இறுதியும்**
**யாஎன் வினாவின் ஐஎன் இறுதியும்**
**வல்லெழுத்து மிகுநவும் உறழா குநவும்**
**சொல்லியல் மருங்கின் உளவென மொழிப (159)**

அ இ உ என்னும் சுட்டெழுத்து முதலாகிய இகர இறுதி இடைச்சொற்களும் (அதோளி, இதோளி), எகரவினா முதலாகிய இகர இறுதியுள்ள இடைச்சொல்லும் (எதோளி), சுட்டெழுத்து நீண்டு ஐ என் இறுதி பெற்ற சொல்லும் (ஆண்டை,ஈண்டை), யா என்ற வினா ஐகார இறுதி பெற்ற சொல்லும் (பாண்டை) முற்கூறிய இகர ஐகார ஈற்றுப்புணர்ச்சிப்படி வல்லெழுத்து மிக்கும் உறழ்ந்தும் முடியுமிடங்கள் உள.

அதோளிக் கொண்டான், யாண்டைக் கண்டான் எனக் காட்டுவர். இவை ஏழாம் வேற்றுமை இடப்பொருள் உணர்த்திய பழஞ்சொற்கள்.

**நெடில்முன் ஒற்றும் குறில்முன் ஒற்றும்**

**நெடியதன் முன்னர் ஒற்றுமெய் கெடுதலும்**
**குறியதன் முன்னர்த் தன்னுரு இரட்டலும்**
**அறியத் தோன்றிய நெறியில் என்ப (160)**

நெட்டெழுத்தின் முன்வரும் ஒற்றுத் தன்வடிவு கெடுதலும் குற்றெழுத்தின் முன் நின்ற மெய் இரட்டித்தலும் நன்கு அறியும்படி தோன்றிய மொழியது இயற்கை என்பர். உரு-மெய்யாகிய வடிவம். நெறி இயல்-மொழியது நெறிப்பட்ட இயல்பு. ஆல்+இலை=ஆலிலை. பால்+குடம்=பாற்குடம். ஒற்று உயிர்மெய்யாகியோ, திரிந்தோ மாறுவதையோ ஒற்று மெய் கெடல் என்றார். உரையாசிரியர் கோறீது, கோனன்று எனக் காட்டுவனவும் திரிபுகளே. மண்+அகல்=மண்ணகல். இந்நூற்பாவில் தன்+உரு=தன்னுரு என இலக்கணத்திற்குள்ளேயே இலக்கியம் அமைந்திருத்தல் காண்க.

**குறில்முன் ஒற்று இரட்டாத இடம்**

**ஆறன் உருபினும் நான்கன் உருபினும்**
**கூறிய குற்றொற்று இரட்டல் இல்லை**
**ஈறாகு புள்ளி அகரமொடு நிலையும்**
**நெடுமுதல் குறுகும் மொழிமுன் னான (161)**

நெட்டெழுத்துக் குறுகி நிற்கும் சொற்களின் இறுதியிலுள்ள மெய், அகரம் பெற்று நிற்கும். (தாம்-தம, நாம்-நம, யான்-என) இவற்றொடு இணையும் ஆறாம் வேற்றுமை உருபிற்கும் நான்காம் வேற்றுமை உருபிற்கும் முன்னே, முற்கூறிய குறில் ஒற்று இரட்டுவதில்லை. முன்+ஆன்+அ. ஆன், அ அசை நிலைகள். தாம்-தம்+அது=தமது. தாம்-தம்+கு=தமக்கு. இரட்டித்திருந்தால் தம்மது. தம்மக்கு என்றாகியிருக்கும்.

**‘நும்’ முக்கும் அவ்விதியே**

**நும்என் இறுதியும் அந்நிலை திரியாது (162)**

நும் என்ற மகரவிறுதியும் முற்கூறிய அகரம் பெறுதல், குற்றொற்றிரட்டாமை என்ற நிலைகளை விட்டு மாறாது. நும்+அது=நுமது, நும்+கு=நுமக்கு.

**உரிஞ, உரிஞஉ புணர்ச்சி**

**உகரமொடு புணரும் புள்ளி இறுதி**
**யகரமும் உயிரும் வருவழி இயற்கை (163)**

சில புள்ளியீறுகள் உகரம் பெறும். உரிஞ்-உரிஞஉ (இன்று உரிஞ்சு), (பொருந்-பொருநு) அப்புள்ளி யீறுகள் யகரமும் உயிரெழுத்துக்களம் வருமொழி முதலில் வரும்போது உகரம் பெறாது இயல்பாகும். உரிஞ் யாது, உரிஞ் அன்பே. இயற்கை-இயல்பாகும்.

**முகத்தலவை நிறுத்தலளவை எண்ணலளவைப் பெயர்கள்**
**தமக்குள் புணர்தல்**

**உயிரும் புள்ளியும் இறுதி யாகி**
**அளவுகம் நிறையும் எண்ணும் சுட்டி**
**உளவெனப் பட்ட எல்லாச் சொல்லும்**
**தத்தங் கிளவி தம்மகப் பட்ட**
**முத்தை வரூஉம் காலம் தோன்றின்**
**ஒத்த தென்ப ஏஎன் சாரியை (164)**

அளவுப் பெயர்கள், நிறைப்பெயர், எண்ணுப்பெயர் பலவுள தமிழில். இவை ஒன்றும் அரையும் காலும் என இவ்வாறு தம்முன் புணருமாறு கூறுகிறது. இந்நூற்பா,'உயிரும் மெய்யும் ஈறாகி அமையும் முகத்தல், நிறுத்தல், எண்ணல் அளவைச்சுட்டும் எல்லாச் சொற்களும் தமக்கு இனமாகிய சொற்களாய்த் தம்மையே உணர்த்துமாறு தம்முன் தாம் வரும் சூழல் தோன்றுமானால்,'ஏ' என் சாரியை சேர்த்துச் சொல்வதே பொருத்தமாகும். தத்தம் கிளவி – தமது அளவுப்பெயரே. தம் அகப்பட்ட-தமக்குட்பட்ட, ஒன்றோடு முக்காலும் அரையும் எனத் தமக்குக் கீழ்ப்பட்ட அளவுப் பெயர்கள் இணைதல். முத்தை-முன்னே. ஒன்றேகல் படி, இரண்டே முக்கால்மீட்டர். இரண்டு கால் கிலோ கொடு என்பதற்கும் இரண்டேகால் கிலோ கொடு என்பதற்கும் வேறுபாடிருப்பதை எண்ணிப்பார்க்க. இலக்கணம் வேண்டாமா?

**அவை, அரை என்பதனோடு புணர்தல்**

**அரைஎன வரூஉம் பால்வரை கிளவிக்குப்**
**புரைவ தன்றாற் சாரியை இயற்கை (165)**

'அரை' என்று சொல்லவரும், பாதியைக் குறிக்கும் சொல்லுக்கு ஏ என் சாரியை பொருந்துவதன்று. ஒன்றரை, ஏழரைப்படி. பால்-பகுதி, பாதி. புரைவதன்று-பொருந்துவதன்று.

**அவை ‘குறை’ என்பதனோடு புணர்தல்**

**குறைஎன் கிளவி முன்வரு காலை**
**நிறையத் தோன்றும் வேற்றுமை இயற்கை (166)**

‘குறை’ என்பதும் ஓர் அளவுப்பெயர். அச்சொல் வருமொழியாய் வருங்காலத்தில், வேற்றுமைப் புணர்ச்சிக்குக் கூறிய இலக்கணத்தை முற்றுப்பெற்றுவரும் (ஒற்று மிகுந்து வரும்). உரிக்குறை, காணிக்குறை, உரி அளவிற்குக் கொஞ்சம் குறையக் கொடுப்பது உரிக்குறை.

**அவற்றுள், குற்றியலுகர மொழிக்குப் பின் ‘இன்’ சாரியை வருதல்**

**குற்றிய லுகரக் கின்னே சாரியை (167)**

குற்றியலுகர ஈற்று அளவுப்பெயர்களுடன் குறைச்சொல் சேரும்போது, இடையே ‘இன்’ சாரியை வரும். உழக்கின் குறை, ஒன்றின் குறை, குற்றியலுகரக்கு-குற்றியலுகரத்திற்கு.

**‘கலம்’ அத்துச்சாரியை பெறுதல்**

**அத்திடை வரூஉம் கலமென் அளவே (168)**

கலம் எனும் முகத்தல் அளவுப்பெயர். ‘குறை’யொடு புணருமிடத்தில் இடையே ‘அத்து’ச் சாரியை வரும். கலத்துக்குறை.

**‘பனை’யும் ‘கா’வும் ‘இன்’ சாரியை பெறுதல்**

**பனைஎன் அளவும் காஎன் நிறையும்**
**நினையுங் காலை இன்னொடு சிவணும் (169)**

‘பனை’ என்னும் முகத்தில் அளவுப்பெயரும் ‘கா’ என்னும் நிறுத்தல் அளவுப்பெயரும் ‘குறை’ச் சொல்லொடு புணருமிடத்து, ஆராயுங்கால் ‘இன்’ சாரியையுடன் சேர்ந்து வரும். பனையின் குறை, காவின் குறை.

**தமிழில் முகத்தலளவை, நிறுத்தலளவைப் பெயர்களின்**
**மொழிமுதல் எழுத்துக்கள்**

**அளவிற்கும் நிறையிற்கும் மொழிமுத லாகி**
**உளவெனப் பட்ட ஒன்பதிற்று எழுத்தே:**
**அவைதாம்**

**க ச த ப என்றா ந ம வ என்றா**
**அகர உகரமோடு அவைஎன மொழிப (170)**

முகத்தலளவை நிறுத்தலவைப் பெயர்கட்கு, மொழி முதலாக வரும் எழுத்துக்கள் ஒன்பது. அவை க ச த ப ந ம வ அ உ. கலம், சாடி, தூதை, பானை, நாழி, மண்டை, வட்டில், அகல், உழக்கு – முகத்தல் அளவைப் பெயர்கள், கழஞ்சி, சீரகம், தொடி, பலம், நிறை, மா, வரை, அந்தை, இம்மி, ஒரெடை என்பன நிறுத்தலளவைப் பெயர்கள். பிறவும் காட்டுவர். அளவுக்கும் நிறைக்கும் என்பது செய்யுள் ஓசையினிமை கருதி இன் சாரியையுடன் கூறப்பட்டுள்ளது.

**புறனடை**

**இதுகாறும் சொல்லியபடி, உலக வழக்கைப் பார்த்துப் புணர்ச்சி இலக்கணம் கொள்ளுக**

**ஈறியல் மருங்கின் இசைஇவற் றியல்பெனக்**
**கூறிய கிளவிப் பல்லா றெல்லாம்**
**மெய்த்தலைப் பட்ட வழக்கொடு சிவணி**
**ஒத்தவை உரிய புணர்மொழி நிலையே (171)**

இங்குக் கூறப்படாதனவற்றுக்கும் வழக்கின்கண் காணப்படுவன கொண்டு இலக்கணம் வகுத்துக்கொள்க என்பது தொல்காப்பிய நெறி. உயிர், மெய் ஈறுகள் வருமொழியொடு புணரும்போது, அவ்வவ்விடங்களில் இவ்விவ்வாறு நடப்பது அவ்வவற்றின் இயல்பு என்று, இதுவரை பற்பல நெறிமுறைகள் சொல்லப்பட்டன. அந்நெறிமுறைகளைக் கொண்டு, உலகில் இயல்பாகப் பொருந்தி நடக்கும் வழக்குகளோடு சார்த்தி, எவையென எவ்வெவ்வெற்றிற்கு ஒத்துவருமோ, அவையவை புணர்ச்சிபெறும் மொழிநிலைகட்கு ஏற்பப் பொருத்திக் கொள்ளற்குரியனவாம். ஈறு இயல் மருங்கு - ஈறும் முதலும் புணருமிடம். கூறிய கிளவிப் பல்ஆறு-கூறப்பட்ட பலவகை நெறிமுறைகள். மெய்த்தலைப்பட்ட வழக்கு-இயல்பாகப் பொருந்தி நடக்கும் உலக வழங்கும் செயற்கையானவற்றையும் சிதைந்தவற்றையும் கொள்ளுதல் கூடாது. நிலை-மொழி புணர்நிலை, புணர்ச்சி நிலை.

**யார், யாவது என்னும் மரூஉச் சொற்களுக்கு இலக்கணம்**

**பலரறி சொல்முன் யாவர் என்னும்**
**பெயரிடை வகரம் கெடுதலும் ஏனை**
**ஒன்றறி சொல்முன் யாதென் வினாவிடை**
**ஒன்றிய வகரம் வருதலும் இரண்டும்**
**மருவின் பாத்தியின் திரியுமன் பயின்றே (172)**

உயர்திணையில், பலரை வினவி அறியும் சொல் முன்னர் வரும் ‘யாவர்’ என்னும் பெயரிடையெ வருகின்ற ‘வ’ கெடும். அ∴றிணையில், ஒன்றனை வினவி அறியும் சொல் முன்னர் வரும் ‘யாது’ என்னும் வினாப் பெயரினிடையே வழக்காற்றில் இவ்வாறு திரிந்து பயின்று வழங்கும். அவர் யார், அந்தணர் யார், அது யாவது, பெயர்-வினாப்பெயர், பலரறிசொல்-உயர்திணைப் பலர்பாற்சொல். ஒன்றறிசொல்-அ∴றிணை ஒன்றன்பாற் சொல். மருவின் பாத்தி – உலகில் மருவி வழங்கும் வழக்காறுகள். தொல்காப்பியர் காலத்தில் மருவின் பாத்தி மிகமிகக் குறைவு. அவற்றிலும் ஏற்புடையனவற்றை மட்டும் தொல்காப்பியர் ஏற்றுக்கொண்டமையை இச்சூத்திரம் விளக்கும். இன்று ‘மரூஉ வழக்குகள்’ எல்லையற்றன. இந்நெறிமுறை இன்று இலக்கணமெழுதுவார்க்கு வழிகாட்டும். இயலுக்கான புறனடைக்கும் பிறகுதான் மரூஉ மொழிகளுக்கான இலக்கணம் சொல்லப்பட்டுள்ளது என்பதும் கருத்திற் கொள்ளப்பட வேண்டும்.

# தொகை மரபு கருத்துக்களின் தொகுப்பு

**உயிரீறு, மெய்யீற்றுப் பொதுப் புணர்ச்சிகள்**

உயிரீறு, மெய்யீறாக நிற்கும் சொற்களுக்கு எதிரே க ச த ப எனும் வல்லெழுத்து முதன்மொழிகள் வருமிடத்து, அவற்றுக்கு முன்முறையே ங ஞ ந ம எனும் மெல்லெழுத்துக்கள் மிகும். இவ்வியல்புடைய சொற்களிலெல்லாம் இவ்வாறு திகழும்.

இருபத்து நான்கு இறுதி எழுத்துக்களையுமுடைய நின்ற சொல்முன், வருமொழியாக உயிரெழுத்து முதன்மொழிகளும் ஞ ந ம ய வ எனும் மெய் முதன்மொழிகளும் வருமாயின் அவையாவும் வேற்றுமை, அல்வழி இரண்டிடத்தும் இயல்பாக வரும்.

மேற்கூறியவற்றுள் ஞ ந ம எனும் மெல்லெழுத்து முதன்மொழிகள் இயல்பாதலேயன்றி, உறழ்ந்து முடிதலுமுண்டு.

**ண ன ஈற்றுப் புணர்ச்சிகள்**

ண, ன எனப் புள்ளி ஈறாக முடியும் சொற்களுடன் இணையும் யா, ஞா முதலாக வரும் வினைச்சொற்கள் ஒரு தன்மையுடையனவாகும். அவை ஒன்றற்கொன்று போலியாக வருமென்பதாம்.

தமிழில் இருபத்து இரண்டு எழுத்துக்கள் முதலாகவரும் எனச் சொல்லப்பட்ட அனைத்துச் சொற்களும் வருமொழியாக நிற்க, நிலைமொழியீறாக நின்ற அவ்விரு மெய்களும் (ண், ன்) வேற்றுமையல்லாத அவ்வழியிடத்துத் திரியாமல் இயல்பாக நிற்கும்.

முற்கூறிய ண், ன் இரண்டும் வேற்றுமையிலும் வருமொழி முதல் வல்லெழுத்தல்லாதவிடத்து, மேற்சொல்லியபடி இயல்பாக வரும். வல்லெழுத்து வரின் திரியுமென்பதாம்.

**ல ன, ண ள ஈற்றுப் புணர்ச்சிகள்**

ல புள்ளி முன் த, ந வரின் அவை முறையே ற, ன ஆகும். ன புள்ளி முன் த, ந வரின் அவையும் முறையே ற, ன வாகும்.

ண புள்ளி முன் த, ந வரின் அவை முறையே ட, ண வாகும். ள புள்ளிமுன் த, ந வரின் அவையும் முறையே ட, ண வாகும்.

**முன்னிலை வினைச் சொற் புணர்ச்சிகள்**

உயிர் ஈறாகிய முன்னிலை வினைச்சொற்களும் மெய்யீறாகிய முன்னிலை வினைச்சொற்களும் வல்லெழுத்து முதன்மொழிவரின் இயல்பாகவும் உறழ்ந்தும் வரும்.

ஒள என முடியும் உயிரீற்று முன்னிலை வினைச்சொல்லும், ஞ ந ம வ என்னும் புள்ளி ஈற்று முன்னிலை வினைச்சொற்களும் குற்றியலுகர ஈற்று முன்னிலை வினைச்சொல்லும் முற்கூறிய இயல்பை முழுமையாகப் பெறாமல், வல்லெழுத்து மிக்கு முடியும்.

**இருதிணைப் பெயர்கள் நின்று புணருமாறு**

உயிர் ஈறாக வரும் உயர்திணைப் பெயர்களும் மெய் ஈறாக வரும் உயர்திணைப் பெயர்களும் நிற்க, வருமொழியாய் உயிர் வலி மெலி இடை என நான்கு கணமும் வரும்போது, அல்வழி வேற்றுமை இரண்டிடத்தும் இயல்பாய் முடியும்.

அவற்றுள் இகர ஈற்று உயர்திணைப் பெயர்கள் மட்டும் இயல்பாகாமல் திரிந்து முடியும் இடங்களுமுண்டு.

அஃறிணையாகவும் வரும் விரவுப்பெயர்கள் இயல்பாக முடிவனவுமுள.

**மெய்யீறு, உயிரீறுகளின் வேற்றுமைப் புணர்ச்சி**

புள்ளியிறுதிச் சொல்லும் உயிரிறுதிச் சொல்லும் வேற்றுமைப் புணர்ச்சியில் வல்லெழுத்து மிகும். எனினும் அவற்றின் முன் மூன்றாம் வேற்றுமைப் பொருளாகிய வினைமுதற் பொருளுடைய வினைச்சொற்கள் வருமாயின் இயல்பாதலும் உறழ்தலுமென இரண்டு முறைகளும் உளவாகும்.

**இரண்டாம் வேற்றுமைப் புணர்ச்சியின் தனித்தன்மைகள்**

ஐகார வேற்றுமையில் மெல்லெழுத்து மிகுமென்றவிடத்து வல்லெழுத்துத் தோன்றும். வல்லெழுத்து மிகுமென்ற விடத்து மெல்லெழுத்துத் தோன்றும். இயல்பாகு மென்றவிடத்து எழுத்துமிகும். உயிர் மிகுமென்றவிடத்:து அது கெடும். சாரியை வருமென்றவிடத்து அது கெடும். சாரியை உளதாகுமிடத்து அதனுடன் வேற்றுமை உருபும் வரும். சாரியை பெறாதவிடத்து வருமொழி வல்லினம் உறழ்ந்து வரும். உயர்திணைப் பெயரிடத்து உருபு விரிந்தே வரும். அஃறிணை விரவுப்பெயர்க்கும் அதே இயல்பு பொருந்தி வரும். மெய் திரிய வேண்டிய இடத்து இயல்பாக வரும். அத்தன்மையன பிறவும், தனக்குரிய இயல்பின்கண் அமைந்து வேற்றுமைப் பொருளை வேறுபடுத்திக் கூறும் தொடர்களின் கண்ணே, ஐ வேற்றுமைக்குப் பொருந்திய புணர்ச்சி வேறுபாடுகளாகும்.

**அல்வழியில் சில பெயர்ச்சொற்கள் புணருமாறு**

அல்வழியில் இ, ஐ ஈற்றையுடைய பெயர்ச்சொற்கள் இயல்பு. வல்லெழுத்து மிகுதல், உறழ்தல் என மூவகைப் புணர்ச்சிகளையுடையனவாம்.

**பழங்காலச் சுட்டு, வினாச்சொற் புணர்ச்சிகள்**

அ, இ, உ எனும் சுட்டெழுத்தை முதலாகவுடைய இகர இறுதி இடைச்சொற்களும் (அதோளி, இதோளி), எகர வினாவை முதலாகவுடைய இகர இறுதி இடைச்சொல்லும் (எதோளி), சுட்டெழுத்து நீண்டு ஐ இறுதி பெற்ற சொல்லும் (ஆண்டை,ஈண்டை) முற்கூறிய புணர்ச்சி விதிப்படி வல்லெழுத்து மிக்கும் உறழ்ந்தும் முடியுமிடங்கள் என்பர்.

**சில ஈரெழுத்து மொழிகளின் புணர்ச்சிகள்**

ஈரெழுத்துச் சொற்களில் நெட்டெழுத்தின் முன் வரும் ஒற்று திரியும். குற்றெழுத்தின் முன் வரும் ஒற்று இரட்டிக்கும்.

நெட்டெழுத்துக் குறுகி, இறுதியில் அகரம் பெற்று நிற்கும் (தம, நம) சொற்களின் முன்னே அது எனும் ஆறாம் வேற்றுமை உருபும் கு எனும் நான்காம் வேற்றுமை உருபும் வருமிடத்து, முற்கூறிய குறிலொற்று இரட்டிப்பதில்லை.

நும் எனும் மகர இறுதியும் முற்கூறியவாறு அகரம் பெறுதல், குற்றொற்று இரட்டாமை எனும் அத்தன்மைகளினின்றும் மாறாது.

உகரமொடு சேர்ந்து உரிஞுஉ, பொருநு என வரும் புள்ளி இறுதிச்சொற்கள் (உரிஞ், பொருந்) வருமொழி முதலில் யகரமும் உயிரும் வருமிடத்து, அவ்வுகரம் பெறாது இயல்பாகும்.

**அளவைப் பெயர்கள் தம்முன்தாம் புணர்தல்**

முகத்தலளவையையும் நிறுத்தலளவையையும் எண்ணலளவையையும் குறித்து, உயிரும் மெய்யும் ஈறாகவரும் சொற்கள் எத்தனையுண்டோ, அத்தனையும் தத்தமக்குக் கீழ்ப்பட்ட அளவைப் பெயர்கள். தம்முன்தாம் வரும் காலம் தோன்றுமானால் ஏ என் சாரியை இடையே வருவது பொருத்தமாகும். (ஒன்றேகால்)

'அரை' என வரும் பாதியைக் குறிக்கும், சொல்லுக்கு ஏ எனும் அச்சாரியை தோன்றுமியல்பு பொருந்துவதன்று. (ஒன்றரை)

'குறை' எனும் அளவுப்பெயர் வருமொழியாய் முன்னேவரின், அளவைப் பெயர்களினிறுதியில், வேற்றுமைப் புணர்ச்சிக்குக் கூறிய இயல்பு முழுவதும் பொருந்தி வரும். அதாவது ஒற்று மிகும் என்பதாம்.

குற்றியலுகர ஈற்று அளவுப்பெயர்களுடன்,‘குறை’ச் சொல் வந்து புணரும்போது, இடையே இன் சாரியை இடம்பெறும்.

கலம் எனும் முகத்தலவைப் பெயர் ‘குறை’யொடு புணருமிடத்தில், இடையே ‘அத்துச்’ சாரியை வரும்.

‘பனை’ என்னும் முகத்தலளவைப் பெயரும் கா என்னும் நிறுத்தலளவைப் பெயரும் ‘குறை’ச் சொல்லோடு புணருமிடத்து, ஆராயுங்கால் ‘இன்’ சாரியை பொருந்தி வரும்.

முகத்தலளவை, நிறுத்தலளவை பெயர்கட்கு,மொழி முதலாக வரும் எழுத்துக்கள் எனப்படுவன ஒன்பது. அவை க ச த ப என்றும் ந ம வ என்றும் அகர உகர மெனவும் குறிக்கப்படுவனவாகும்.

**புறனடை**

ஈறும் முதலுமாய்ப் புணர்ந்து இயலுமிடங்கள், இவை எனவும் இவற்றியல்பு இதுவெனவும் இதுகாறும் கூறிய பல்வேறு நெறிமுறைகளனைத்தையும், உலகிடை இயல்பாகப் பொருந்தி நடக்கும் வழக்குகளோடு பொருத்திப் பார்த்து, இனியும் நடப்பனவற்றுக்கு ஒத்தனவற்றைக் கொள்ளுதல் வேண்டும்.

**சில மரூஉ மொழிப் புணர்ச்சிகள்**

உயர்திணையில் பலரை வினவியறியும் சொல்முன் வரும் ‘யாவர்’ என்பதன் இடை வகர் கெடுதலும்: அஃறிணையில் ஒன்றனை வினவியறியும் சொல்முன் வரும் யாது என்பதனிடையே உயிர் மெய் வகரம் வருதலும் உலகில் மருவி வழங்கும் வழக்காற்றில் பயின்று வருவனவாம். (அவர் யார், அது யாவது)

## வினாக்கள்

**பத்திவினா**

1. தொகைமரபு-பெயர்க்காரணம் கூறுக.
2. இரண்டாம் வேற்றுமைப் புணர்ச்சியின் தனித்தன்மைகள் யாவை?
3. இகர ஐகார ஈறுகள் அல்வழியில் எவ்வாறு முடியும்?
4. மூன்றாம் வேற்றுமைத் திரிபினைப் புலப்படுத்துக.
5. மரூஉச்சொல் குறித்து எழுதுக.
6. விரவுப்பெயர் எவ்வாறு முடியும்?
7. தொகைமரபில் நிலைமொழிக்கருவி, நிலைமொழிச் செய்கைகளாகக் கூறப்படுவனவற்றை எழுதுக.

**கட்டுரை வினா**

1. முன்னிலை வினைச்சொற்குரிய சிறப்புப் புணர்ச்சி விதிகளைக் கூறுக.
2. அளவைப் பெயர்கள் தம்முன் தாம் புணர்தல் - விளக்குக.
3. உயிரீறு மெய்யீறுகளின் பொதுப்புணர்ச்சியை விவரி.
4. உயர்திணைப் பெயர்கள் நாற்கணத்திலும் எவ்வாறு புணரும்?
5. புணர்ச்சியில் ஐகார வேற்றுமை திரியும் இடங்களைக் கூறுக. (அ) 'ஐகார வேற்றுமை திரிபென மொழிப'– விளக்குக.

# 6. உருபியல்

வேற்றுமை உருபுகள் பெயர்களோடு பொருந்துதல் பற்றிய முறைமையை உணர்த்துவதால் இது உருபியல் எனப்பட்டது. பெயருக்கும் வேற்றுமையுருபிற்குமிடையே வரும் சாரியைகள் பற்றியும் வேற்றுமையுருபினை ஏற்கும்போது பெயர்கள் பெறும் மாற்றங்கள் பற்றியும் உருபியல் விளக்குகிறது.

**அ முதலிய ஈறுகட்குப்பின் இன் சாரியை வருதல்**

**அஆ உஊ ஏஔ என்னும்**
**அப்பால் ஆறன் நிலைமொழி முன்னர்**
**வேற்றுமை உருபிற்கு இன்னே சாரியை (173)**

அ ஆ உ ஊ ஏ ஔ என்னும் ஆறனையும் ஈறாகவுடைய நிலைமொழி முன்னர் வரும் வேற்றுமை உருபுகட்கு ‘இன்’ சாரியை இடைவந்து அமையும். பலாவினை, கதவினுக்கு சூத்திரத்தில் ‘உருபிற்கு’ என்பதில் இன் சாரியை வந்துள்ளது.

**வற்றுச்சாரியை – உண்பவற்றை, கண்டவற்ற**

**பல்லவை நுதலிய அகர இறுபெயர்**
**வற்றொடு சிவணல் எச்ச மின்றே (174)**

பல்ல, சில்ல எனப் பன்மைப் பொருளினைக் கருதிய பெயர்களின் இறுதி அகரம், வற்றுச் சாரியையோடு பொருந்துதல் தவறாது. பலவற்றை, உண்பற்றை, கண்டவற்றை, சிவணல் - பொருந்துதல். எச்சம் இன்று – தவறுவது இல்லை.

**யா, யாவற்றை ஆதல்**

**யாஎன் வினாவும் ஆயியல் திரியாது (175)**

யா என்னும் ஓரெழுத்தொருமொழியாகிய, ஆகார ஈற்று வினாப் பெயரும் மேற்கூறிய ‘வற்று’ச் சாரியை பெறும் அவ்வியல்பில் திரியாது, யாவற்றை.

**அது, இது – அதனை, இதனை (அன் சாரியை) என ஆதல்**

**சுட்டுமுதல் உகரம் அன்னொடு சிவணி**
**ஒட்டிய மெய்மொழித்து உகரம் கெடுமே (176)**

சுட்டெழுத்தினை முதலாகவுடைய உகர ஈற்றுச்சொல் (அது) ‘அன்’ சாரியை யொடுபொருந்தி தான் பொருந்தி மெய்யை விடுத்து உகரம் கெடும்.

அது+அன்+ஐ=அதனை. மெய் ஒழித்து –மெய்யை விடுத்து அதாவது மெய் கெடாது நிற்கவிட்டு.

**அவற்றை, இவற்றை (வற்று)**

**சுட்டுமுத லாகிய ஐஎன் இறுதி**
**வற்றொடு சிவணி நிற்றலும் உரித்தே (177)**

சுட்டெழுத்தை முதலாகவுடைய ஐகார ஈற்றுச் சொல் (அவை), (உருபு சேருங்கால்), வற்றுச் சாரியையொடு பொருந்தி, அவ்விறுதி ஐகாரம் நிற்றலும் உரித்து: நில்லாமையும் உரித்து. ஐகாரம் நின்றவழி அவை+வற்று+ஐ=அவையற்றை (வற்றின் வகரம் கெடுமென்பது புணரியனுள் கூறப்பட்டுள்ளது-122) ஐகாரம் கெட்ட வழி, அவற்றை, இவற்றை என ஆகும்.

**யாவை யாவற்றை ஆதல்**

**யாவென் வினாவின் ஐஎன் இறுதியும்**
**ஆயியல் திரியாது என்மனார் புலவர்**
**ஆவயின் வகரம் ஐயொடுங் கெடுமே (178)**

யா என்னும் வினாவை முதலாகவுடைய யாவை என்பதன் ஐகார இறுதியும் மேற்கூறிய இயல்பில் திரியாது என்பர் நூற்புலவர். அஃதாவது ‘வற்று’ச் சாரியை பெறும். அப்போது வகரம் ஐகாரத்தோடும் கெடும். யா+வற்று+ஐ=யாவற்றை. கரியவை+வற்று+ஐ=கரியவற்றை.

**நீ-நின் ஆகி உருபுபெறல்**

**நீஎன் ஒருபெயர் நெடுமுதல் குறுகும்**
**ஆவயின் னகரம் ஒற்றா கும்மே (179)**

நீ என்னும் ஓரெழுத்துப் பெயரில், அந்நெடில் குறுகும். அவ்விடத்தில் னகர ஒற்று இடம்பெறும். நீ-நின்னை, நினக்கு என ஆகும். இங்கு ன் என்பது எழுத்துப்பேறு எனப்படும். நெடுமுதல் - முதலிலுள்ள நெட்டெழுத்து, னகரம் ஒற்றாகும் - ஒற்று னகரம் வரும்.

**கோ-கோஒன் ஆதல்**

**ஓகார இறுதிக்கு ஒன்னே சாரியை (180)**

ஓகார இறுதி பெற்ற மொழிகளுக்கு ஒன் சாரியை வரும். கோஒனை, கோஒனொடு.

**அ, ஆ ஈற்று மரப்பெயர்க்கு 'அத்து'ச் சாரியை**

**அ ஆ என்னும் மரப்பெயர்க் கிளவிக்கு**
**அத்தொடும் சிவணும் ஏழன் உருபே (181)**

அ ஆ என்னும் ஈற்றையுடைய மரப்பெயர்ச் சொற்களுக்கு (விள, பலா) ஏழாம் உருபு சேரும்போது, முற்கூறிய இன் னோடு மட்டுமல்லாமல் (173) அத்தும் பொருந்தும். விளவத்துக்கண், பலாவத்துக்கண்.

**ஞ, ந ஈற்றுக்கு 'இன்' சாரியை**

**ஞ ந என் புள்ளிக்கு இன்னே சாரியை (182)**

ஞ ந என்னும் புள்ளி ஈறுகட்கு இன் சாரியை வரும். உரிஞுஇனை, பொருநினொடு.

**'அவ்'-வற்றுச் சாரியை பெறுதல்**

**சுட்டுமுதல் வகரம், ஐயும் மெய்யும்**
**கெட்ட இறுதி இயல்திரி பின்றே (183)**

சுட்டெழுத்தை முதலாகவுடைய வகர ஈற்றுச் சொல் (அவ், இவ்) மெய் கெட்டு, வற்றுப்பெற்று முடியும். அவ்வாறு முடிந்தபின் யாவை என்னும் சொல்லுக்கு ஓதிய இலக்கணத்தில் திரிபின்றி வரும் என்பதாம். முன்பு 'வகரம் ஐயொடும் கெடும்' என 'யாவை' என்ற வினாவுக்கு ஓதிய இலக்கணத்தை (178) 'ஐயும் மெய்யும் கெட்ட இறுதியின் இயல்' என்று குறிப்பாக மாட்டேற்றிக் கூறியுள்ளார். தமது நூலை மிக்க கருத்தாகப் படிக்க வேண்டுமென்று தொல்காப்பியர் கருதுகிறார். அவற்றை, அவற்றொடு என வரும்.

**'தெவ்' இன் சாரியை பெறுதல்**

**ஏனை வகரம் இன்னொடு சிவணும் (184)**

ஏனைய வகர ஈறு (தெவ்) இன் சாரியை பொருந்தும். தெவ்வினை, தெவ்வினொடு.

**மகர ஈறு அத்துச்சாரியை பெறுதல்**

**ம.்.கான் புள்ளிமுன் அத்தே சாரியை (185)**

மகரமாகிய புற்றி ஈற்றுச் சொல்முன் 'அத்து'ச் சாரியை வரும். மரத்தை.

### சில மகர ஈறு இன் சாரியை பெறுதல்

**இன்னிடை வரூஉம் மொழியுமார் உளவே (186)**

மகர ஈற்றில் அத்துச்சாரியை தவிர, இன் சாரியை பெறும் சொற்களும் உள. உருமினை-(உருமு-இடி), மரத்தினை என இரண்டு சாரியை பெறுதலுமுண்டு.

### நும் - சாரியை பெறாமை

**நும்என் இறுதி இயற்கை ஆகும் (187)**

‘நும்’மில் உள்ள மகர ஈறு மேற்கூறிய அத்தும் இன்னும் பெறாது. இயல்பாய் முடியும். நும்மை, நும்மொடு.

### தாம் நாம் யாம் உருபுடன் புணர்தல்

**தாம் நாம் என்னும் மகர இறுதியும்**
**யாம் என் இறுதியும் அதனோ ரன்ன:**
**ஆஎ ஆகும் யாம்என் இறுதி**
**ஆவயின் யகரமெய் கெடுதல் வேண்டும்**
**ஏனை இரண்டும் நெடுமுதல் குறுகும் (188)**

தாம், நாம் என்னும் மகர ஈறும் யாம் என்னும் மகர இறுதியும் முற்கூறிய மகர ஈறுபோல அத்தும் இன்னும் பெறாது முடியும். ‘யாம்’ என்னும் மொழியில் ஆகாரம் எகரமாகும். அதில் யகர மெய் கெட்டும் எம் என நிற்கும். ஏனைய இரண்டும் நெடில் முதல் இறுகித் தம், நம் என ஆகும். தம்மை, நம்மை, எம்மை.

### எல்லாம் என்ற மகரஈறு வற்றும் உம்மும் பெறுதல்

**எல்லாம் என்னும் இறுதி முன்னர்**
**வற்றென் சாரியை முற்றத் தோன்றும்**
**உம்மை நிலையும் இறுதி யான (189)**

எல்லாம் என்னும் மகரவீற்றுச் சொல்லின் முன்பு, வற்று என்னும் சாரியை முடியத் தோன்றும். இறுதியில் உம் சாரியை நிலைபெறும். எல்லாவற்றையும்.

### ‘எல்லாம்’ உயிர்திணையில் ‘நம்’சாரியை பெறுதல்

**உயர்திணை யாயின் நம்மிடை வருமே (190)**

எல்லாம் என்னும் விரவுப்பெயர், உயர்திணையைக் குறிக்குமிடத்து, நம் என்னும் சாரியை இடைவந்து சேரும். எல்லாநம்மையும்.

**எல்லாரும் எல்லீரும் உருபும் சாரியையும் பெறுதல்**

**எல்லாரும் என்னும் படர்க்கை இறுதியும்**
**எல்லீரும் என்னும் முன்னிலை இறுதியும்**
**ஒற்றும் உகரமும் கெடுமென மொழிப**
**நிற்றல் வேண்டும் ரகரப் புள்ளி**
**உம்மை நிலையும் இறுதி யான**
**தம்இடை வரூஉம் படர்க்கை மேன**
**நும்இடை வரூஉம் முன்னிலை மொழிக்கே (191)**

உருபு சேரும்போது எல்லாரும் என்னும் படர்க்கையிடத்து மகர இறுதியும், எல்லீரும் என்னும் முன்னிலையிடத்து மகர இறுதியும் தம் முன்னுள்ள உகரத்தோடும் கெடும். அதனால் ஊரப்பட்ட ரகரப்புள்ளி கெடாது நிற்கும். அவ்விரண்டு மொழிக்கும், உம் சாரியை இறுதியில் நிலைபெறும். படர்க்கையிடத்தும் தம் சாரியை இடையில் வரும். முன்னிலை மொழிக்கு நும்முச் சாரியை இடையில் வரும். எல்லார் தம்மையும், எல்லீர் நும்மையும்.

**தான், யான் -தன், என் ஆதல்**

**தான்யான் என்னும் ஆயீ ரிறுதியும்**
**மேல்முப் பெயரொடும் வேறுபா டிலவே (192)**

தான், யான் என்னும் அவ்விரண்டு ‘னகர’ஈறும் மேல் மகரவீற்றுட் சொல்லப்பட்ட மூன்று பெயரோடும் வேறுபாடின்றித் தான் என்பது தன் என நெடுமுதல் குறுகியும் யான் என்பதில் ஆகாரம் எகரமாய் யகரங் கெட்டும் முடியும். தன்னை, என்னை, மேல்முப் பெயரொடும் - மேலே கூறப்பட்ட தாம் நாம் யாம் என்பன.

**அழன், புழன் - அத்தும் இன்னும் பெறுதல்**

**அழனே புழனே ஆயிரு மொழிக்கும்**
**அத்தும் இன்னும் உறழத் தோன்றல்**
**ஒத்த தென்ப உணரு மோரே (193)**

அழன், புழன் ஆகிய இருமொழிக்கும் அத்துச் சாரியையும் இன் சாரியையும் உறழ்ந்து தோன்றும். அதுவே பொருத்தமுடையதென, உணர்வுடையோர் கூறுவர். அழத்தை, அழனினை உறழத்தோன்றல் - மாறிவருதல்.

**'ஏழு'க்கு அன் சாரியை**

**அன்என் சாரியை ஏழன் இறுதி**
**முன்னர்த் தோன்றும் இயற்கைத்து என்ப (194)**

அன் என்னும் சாரியை 'ஏழு' என்னும் சொல்லின் இறுதி முற்றுகரத்திலன் முன்னர் தோன்றும் இயல்பினையுடையது. ஏழனை, இச்சூத்திரத்திலேயே 'ஏழன் இறுதி' என் அன்சாரியை வரக் காணலாம். (ஏழு+அன்+ஐ=ஏழனை)

**குற்றுகரத்திற்கு இன் சாரியை**

**குற்றிய லுகரத்து இறுதி முன்னர்**
**முற்றத் தோன்றும் இன்னென் சாரியை (195)**

குற்றியலுகத்து இறதிக்கு முன்னர் இன் சாரியை முடியத் தோன்றும். படகினை, கழுகினொடு.

**குறு-குற்றுகர ஈறுகள் இரட்டிக்குமிடங்கள்**

**நெட்டெழுத் திம்பர் ஒற்றுமிகத் தோன்றும்**
**அப்பால் மொழிகள் அல்வழி யான (196)**

டு, று ஈற்று நெடில் தொடர்க் குற்றுகரங்கள் ஒற்று இரட்டித்து வேற்றுமை உருபேற்கும். அவ்வகைப்பட்ட மொழிகள் அல்லாதவை கு சு து பு. ஈற்றுக் குற்றுகரங்கள். அவை உருபேற்குங்கால் இரட்டிப்பதில்லை. எனவே அவையல்லாத டு, று,ஈற்றுக் குற்றுகரங்களே, உருபேற்குங்கால் இரட்டிப்பனவாம். யாட்டை, ஆற்றொடு.

**அவ்வாறு இரட்டிப்பன சாரியை பெறாமை**

**அவைதாம்**
**இயற்கைய வாகும் செயற்கைய என்ப (197)**

அவை சாரியை பெறாது இயல்பாக முடியும் செய்கையை உடைய. யாட்டை எனச் சாரியை பெறவில்லை. பாட்டினை எனச் சிறுபான்மை வருதலுண்டு. இயற்கையவாகும் - இயல்பாகும். செயற்கைய – புணர்ச்சியாம் செய்கையையுடைய.

**குற்றுகர எண்ணுப்பெயர்க்கு அன் சாரியை**

**ஒன்று, இரண்டு, நான்கு முதலிய வரும்**

**எண்ணின் இறுதி அன்னொடு சிவணும் (198)**

எண்ணுப் பெயர்களது குற்றுகர ஈறு அன்சாரியையொடு பொருந்தும். ஒன்றனை, இரண்டனை, (ஒன்றினை, இரண்டினை எனலுமாம்).

### ஒரு+பஃது ஒரு+பத்து முதலிய எண்ணுப் பெயரீறுகள் ஆன் சாரியையும் பெறுதல்

**ஒன்றுமுத லாகப் பத்தூர்ந்து வரூஉம்**
**எல்லா எண்ணும் சொல்லுங் காலை**
**ஆன் இடை வரினும் மானம் இல்லை**
**அஃதுஎன் கிளவி ஆவயின் கெடுமே**
**உய்தல் வேண்டும் பஃகான் மெய்யே (199)**

ஒன்று முதலாக எட்டு வரையுள்ள எண்ணுப்பெயர்களை, பத்து என்னும் சொல் தொடர்ந்து வரும்போது (ஒரு+பஃது), உருபு சேருங்கால் 'ஆன்' சாரியை வரினும் குற்றமில்லை. அப்போது பஃது என்பதில் உள்ள அஃது என்னும் சொல் கெட்டு, பகரமெய் தப்பித்து நிற்கும். ஒரு பஃதினை, ஒரு பானை என்பது முன்னைய வழக்கு. இன்று ஒரு பத்து, இரு பத்து, முப்பத்து என்பன இருபது முப்பது என அமைகின்றன. ஒன்றொடுபத்துச் சேரும் இவ்வாறான எல்லா எண்ணும் என்பது முதல் இரண்டிகளின் பொருள். மானம் இல்லை – குற்றமில்லை. பஃகான் மெய்-ப், உய்தல் வேண்டும் கெடாது நிற்க வேண்டும்.

### யாது, அஃது – குற்றுகர ஈறுகள் அன் சாரியை பெறுதல்

**யாதென் இறுதியும் சுட்டுமுத லாகிய**
**ஆய்த இறுதியும் அன்னொடு சிவணும்**
**ஆய்தங் கெடுதல் ஆவயி னான (200)**

யாது என்னும் குற்றுகர ஈறும், சுட்டெழுத்தினை முதலாகவுடைய ஆய்தத்தொடர்க் குற்றுகர இறுதியும் (அஃது என்பது) அன் சாரியையொடு பொருந்தும். அவ்வாறு வருமிடத்து ஆய்தம் கெடும். யாது+அன்+ஐ=யாதனை, அஃது+அன்+ஐ=அதனை.

### குற்றுகரத் திசைப்பெயர்கள் ஏழனுருபிற்குச் சாரியை பெற்றும் பெறாமலும் வருதல்

**ஏழன் உருபிற்குத் திசைப்பெயர் முன்னர்ச்**
**சாரியைக் கிளவி இயற்கையு மாகும்**
**ஆவயின் இறுதி மெய்யொடுங் கெடுமே (201)**

ஏழாம் வேற்றுமை உருபிற்கு, திசைப்பெயர்களின் முன்னர், இவ்வீற்றுக்கு முற்கூறிய ‘இன்’ சாரியையின்றி இயல்பாயும் நிற்கும். இயல்பாய வழி, திசைப்பெயர் இறுதிக் குற்றுகரம் மெய்யொடும் கெடும். வடக்கு+இன்+கண்=வடக்கின்கண். வடக்கு+கண்=வடக்கண். தெற்கு+கண்=தெற்கண்.

**புறனடை**

**புள்ளி இறுதியும் உயிரிறு கிளவியும்**
**சொல்லிய அல்ல ஏனைய எல்லாம்**
**தேருங் காலை உருபொடு சிவணிச்**
**சாரியை நிலையும் கடப்பா டிலவே (202)**

புள்ளி ஈறு, உயிர்ஈறு பெற்ற சொற்களுள்,முன்பு வடிவு சொல்லியவை அல்லாத ஏனைய எல்லாம், ஆராயுங்காலத்து, வேற்றுமை உருபுகளுடன் பொருந்தி வரும்போது, சாரியை பெற்றே வரவேண்டுமென்ற கடப்பாடுடையனவல்ல. பெற்றுவரும்; பெறாதும் வரும்.

கூறாத புள்ளி ஈறுகள் ஐந்து: ண, ய, ர, ல, ள்; உயிரீறு ஒன்று இ. மண்ணை, மண்ணினை என இவையும் சாரியை பெறாதும் பெற்றும் வரும்.

## உருபியல் கருத்துக்களின் தொகுப்பு

**உயிரீற்றுச் சொற்கள் வேற்றுமை உருபேற்கும் போது சாரியை பெறுதல்**

அ ஆ உ ஊ ஏ ஒள என்னும் ஆறனையும் ஈறாகவுடைய சொற்களுக்கு முன்வரும் வேற்றுமையுருபுகளுக்கிடையே ‘இன்’ சாரியை வரும்.

பல்ல, சில்ல எனப் பன்மை உணர்த்தும் அகர ஈற்றுப்பெயர்கள் வற்றுச் சாரியையோடு பொருந்துதல் தவறாது.

யா எனும் வினாவும் அவ்வியல் திரியாது. ‘வற்று’ச் சாரியை பெறுமென்பதாம்.

சுட்டெழுத்தினை முதலாகவுடைய உகர ஈற்றுச்சொல்,‘அன்’ சாரியையொடு பொருந்தி, தான் ஏறிய மெய் நிற்க உகரம் கெடும். (அதனை)

சுட்டெழுத்தினை முதலாகவுடைய ஐ கார ஈற்றுச்சொல் வற்றுச்சாரியை பெற்று, அவ்விறுதி ஐகாரம் கெடாமல் நிற்றலும் உரித்து. கெட்டுப்போதலும் உண்டு. (அவையற்றை, அவற்றை)

யா என்னும் வினாவெழுத்தை முதலாகவுடைய ஐகார ஈற்றுச்சொல்லும் மேற்கூறிய இயல்பில் திரியாது. வற்றுச்சாரியை பெறுமென்பதாம். இங்கும் நிலைமொழி வகரம் ஐகாரத்தோடும் கெடும். (யாவற்றை)

நீ எனும் ஓரெழுத்து, முன்னிலைப் பெயரின், நெடில் குறுகும். அவ்விடத்தே னகர ஒற்று இடம் பெறும். (நின்னை)

ஓகார இறுதி பெற்ற பெயர்கள் ஒன் சாரியை பெறும்.

அ ஆ என்னும் ஈற்றையுடைய மரப்பெயர்ச் சொற்களுக்கு ஏழாம் உருபு சேரும்போது அத்துச் சாரியையும் வரும். முற்கூறிய ‘இன்’னும் வரும்.

**மெய்யீறுகள் உருபேற்கும்போது சாரியை பெறுதல்**

ஞ, ந என்னும் மெய்யீறுகட்கு ‘இன்’ சாரியையே வரும்.

**வ மெய்யீறுகள்**

சுட்டெழுத்தை முதலாகவுடைய வகர ஈற்றுச் சொல் (அவ், இவ்),‘யாவை’ என்பதன் இறுதி ஐயும் அ∴தேறிய மெய்யும் கெட்ட இயல்பில் திரியாது. அதுபோற் கெட்டு வற்றுப்பெற்று முடியும்.

ஏனைய வகர ஈற்றுச்சொல் (தெவ்) இன் சாரியையொடு பொருந்தும். (தெவ்வினை)

**ம் மெய்யீறுகள்**

மகரமாகிய புள்ளி ஈற்றுச் சொல்முன் அத்துச்சாரியை வரும். (மரத்தை)

அவற்றுள் ‘இன்’ சாரியை பெறும் சொற்களும் உள. (உருமினை)

‘நும்’ மிலுள்ள மகர ஈறு அத்தும் இன்னும் பெறாது இயல்பாய் முடியும். (நும்மை)

தாம் நாம் என்னும் மகர ஈறும் யாம் எனும் மகர இறுதியும் முற்கூறியது போல் அத்தும் இன்னும் பெறாது முடியும். யாம் என்ற மகர ஈற்றுச் சொல்லில், முதலிலுள்ள ஆ எ ஆகும். அதிலுள்ள யகரமெய்யும் கெடும். ஏனைய தாம் நாம் இரண்டும் முன்னுள்ள நெட்டெழுத்துக் குறுகித் தம் நம் என ஆகும். (தம்மை, நம்மை, எம்மை)

எல்லாம் என்னும் மகர ஈற்றுச்சொல் முன்னர், வற்றுச்சாரியை முடியத் தோன்றும். இறுதியில் உம் பொருந்தி நிற்கும். (எல்லாவற்றையும்)

எல்லாம் என்னும் விரவுப்பெயர் உயர்திணையைக் குறிக்குமிடத்து,‘நம்’ சாரியை, இடையில் வரும் (எல்லா நம்மையும்)

எல்லாரும் எனப் படர்க்கையைக் குறிக்கும் மகர இறுதியும் வல்லீரும் என முன்னிலையைக் குறிக்கும் மகர இறுதியும், உருபு சேரும்போது,‘தம்’ முன்னுள்ள உகரத்தோடும் கெடும். ரகரப்புள்ளி கெடாது நிற்கும். இறுதியில் உம் வந்து சேரும். படர்க்கையிடத்துத் தம் சாரியையும் முன்னிலைக்கு ‘நும்’ சாரியையும் இடையில் வந்தமையும், (எல்லார் தம்மையும், எல்லீர் நும்மையும்)

**ன் மெய்யீறுகள்**

தான் யான் எனும் அவ்விரண்டு னகர ஈற்றுச் சொற்களும் மேலே மகரவீற்றுச் சொல்லப்பட்ட மூன்று பெயர்களோடும் (தாம், நாம், யாம்-188) வேறுபாடின்றி அமையும், தான் என்பது நெடுமுதல் குறுகும். யான் என்பதில் ஆகாரம் எகரமாகி, முன்னுள்ள யகர மெய் கெட்டு முடியும். (தன்னை, என்னை)

அழன், புழன் இரண்டனுக்கு அத்துச்சாரியையும் இன் சாரியையும் உறழ்ந்து வரும்.

**முற்றுகர ஈறு சாரியை பெறுதல்**

ஏழு என்னும் முற்றுகர ஈற்றுச் சொல்லுக்கு அன் சாரியை வந்து சேரும்.

**குற்றுகர ஈறு சாரியை பெறுதல்**

குற்றியலுகர ஈற்றுச் சொற்களுக்கு முன்பாக இன் சாரியை முடியத் தோன்றும். (படகினை)

நெட்டெழுத்துக் குற்றகரங்களில் உருபேற்குங்கால் ஒற்று இரட்டிக்கும் சொற்கள் உள. அவை டு, று ஈறுகள். (அவ்வகைப்பட்ட மொழிகளல்லாதவை கு, சு, து, பு ஈறுகள்) எனவே டு, று ஈறுகள் ஒற்று இரட்டித்தே உருபேற்கு மென்பதாம். ஆடு+ஐ=ஆட்டை. சோறு+கு=சோற்றுக்கு.

அவ்விரண்டு ஈறுகளும் இன் பெறாமல் இயற்கையாக நிற்கும் புணர்ச்சியையுடையன. பிற குற்றுகர ஈறுகள் இன் சாரியை பெறுமென்பதாம். காசினை, பாம்பினை. (இன்-வந்தது)

**குற்றுகர எண்ணுப்பெயர்கள்**

எண்ணுப் பெயர்களது குற்றுகர ஈறு அன் சாரியையோடு பொருந்தும். (ஒன்றினை, எட்டினை).

ஒன்று முதலாக எட்டு வரையுள்ள எண்ணுப்பெயர்களின் முன்னே, பத்து எனும் சொல் வரும்போது, உருபு வருங்கால் ‘ஆன்’ சாரியை இடையே வருவதில் தவறில்லை. ப∴து என்பதில் அ∴து கெட்டு பகரமெய் மட்டும் பிழைத்து நிற்கும்.

**குற்றுகர வினா, சுட்டுப் பெயர்கள்**

யாது என்னும் குற்றுகர ஈறும் சுட்டெழுத்தினை முதலாகவுடைய ஆய்தத்தொடர்க் குற்றுகர ஈறும் (அ∴து), அன் சாரியையொடு பொருந்தும். அவ்விடத்து ஆய்தம் கெடும். (யாதனை, அ∴து+அன்+ஐ=அதனை)

**குற்றுகரத் திசைப்பெயர்கள்**

ஏழாம் வேற்றுமையுருபு குற்றுகரத் திசைப்பெயர்களின் பின்னர் வரும்போது, இடையே முற்கூறிய ‘இன்’ சாரியை இன்றியும் வரும். அப்போது அத்திசைப்பெயர் இறுதிக் குற்றுகரம் மெய்யோடும் கெடும். (வடக்கண்)

**புறனடை**

புள்ளி ஈறு, உயிரீறு பெற்ற சொற்களுள், முன்பு விதி வகுத்தவை அல்லாத ஏனையவெல்லாம், ஆராயுங்காலத்து வேற்றுமை உருபுடன் பொருந்தும்போது சாரியை பெற்றே வரவேண்டுமெனும் என்றல்ல. பெறாமலும் வரும் என்பதாம்.

## வினாக்கள்

**பத்திவினா**

1. உருபியல் பெயர்க்காரணம் தருக.
2. உருபு புணர்ச்சியில் பயன்படும் சாரியை யாவை?
3. சாரியைகளை வகுப்பதில் தொல்காப்பியர் கருத்து யாது?
4. உருபியலின் புறநடைச் செய்திகளை விவரிக்க.

**கட்டுரை வினா**

1. உருபு புணர்ச்சிக்காகத் தொல்காப்பியர் புணரியல், உருபியல் என இரு இயல்கள் அமைத்தன் நோக்கம் என்ன? விளக்குக.
2. உயிரீற்றுச் சொற்கள் உருபுகளோடு புணரும்போது பெறும் சாரியைகள் குறித்து எழுதுக.
3. மெய்யீறுகள் உருபகளோடு புணரும்போது பெறும் சாரியைகள் குறித்து எழுதுக.
4. மகரவீற்றுச் சொற்கள் உருபகளோடு புணரும் போது பெறும் சாரியைகளைக் கூறி விளக்குக.
5. முற்றுகர குற்றுகர ஈறுகள் உருபுகளோடு புணரும்போது பெறும் சாரியைகள் குறித்து எழுதுக.

# 7. புள்ளி மயங்கியல்

உயிரீறு எதிரே வரும் வன்கணத்தோடும் சிறுபான்மை ஏனைக்கணங்களோடும் புணரும் முறையை புள்ளி மயங்கியல் விளக்குகிறது. மயங்குலாவது கலத்தல், இவ்வியலில் அகரஈறு தொடங்கி ஔகார ஈறுவரை நெடுங்கணக்கு வரிசையில் வைத்துப் புணர்ச்சி இலக்கணம் கூறப்படுகிறது. அல்வழி, வேற்றுமைப் பொருட்புணர்ச்சிகளில் பெயர், வினை என வரும் சொற்கள் தொடர்ந்து நிற்குங்கால் ஏற்படும் எழுத்தொலி மாற்றங்கள் வரிசை வரன்முறைப்படி விளக்கப்படுகின்றன. (உயிர்க்கணம், மெய்யெழுத்துக்களில் வன்கணம், மென்கணம், இடைக்கணம் என்பது ஒரு வழக்காறு)

### அகர ஈறு

### அல்வழியில் அகர ஈற்றுப் பெயர்ப் புணர்ச்சி

**அகர இறுதிப் பெயர்நிலை முன்னர்**
**வேற்றுமை யல்வழிக் க ச த ப த் தோன்றின்**
**தத்தம் ஒத்த ஒற்றிடை மிகுமே (203)**

அகரத்தை இறுதியாகவுடைய பெயர்கள் நிலைமொழியாய் நிற்க. அவற்றின் முன்னர், அல்வழிப் புணர்ச்சியில், க ச த ப முதலெழுத்துச் சொற்கள் வருமொழியாய்த் தோன்றின், தத்தமக்குப் பொருந்தின் அக் க ச த ப க்களாகிய ஒற்று இடையில் மிகும். ‘தத்தமக்கு ஒத்த ஒற்று’ என்றதனால் பொருந்துமிடங்களில் மெல்லினம் மிகுதலும் உண்டு. விளக்குறிது, தடஞ்செவி. (விள-ஒருமரம், தட-அகன்ற)

### அகர ஈற்று வினைச்சொல்லும் இடைச்சொல்லும்

**வினையெஞ்சு கிளவியும் உவமக் கிளவியும்**
**எனவென் எச்சமும் சுட்டின் இறுதியும்**
**ஆங்க என்னும் உரையசைக் கிளவியும்**
**ஞாங்கர்க் கிளந்த வல்லெழுத்து மிகுமே (204)**

அகரவீற்றுச் சொற்களாகிய வினையெச்சச் சொல்லும் உவமச்சொல்லும் ‘என’ என்று சொல்லும் எச்சச்சொல்லும் சுட்டாகிய அகர ஈறும் உரையசைக் கிளவியாகிய ஆங்க என்பதும் ஆகிய இடங்களில் முற்கூறிய வல்லெழுத்து மிகும். படுக்கப்போனான், பூப்போசைச் சிரித்தாள், அமுதெனப் பேசினாள், அத்திரை. வினை எஞ்சு கிளவி – வினையைக் கொண்டு முடியும் அதாவது வினை எஞ்சிநிற்கிற சொல், உரையசை- உரையாடலின் இடையே தனிப்பொருள் எதுவுமின்றி, அசைநிலையாகப் பயன்படுத்தும் சொல். ஞாங்கர்-முன்பு, முன்னைய நூற்பாவில்.

**அகரச்சுட்டின் முன் ஞ ந ம மெய்**

**சுட்டின் முன்னர் ஞ ந ம த் தோன்றின்**
**ஒட்டிய ஒற்றிடை மிகுதல் வேண்டும் (205)**

சுட்டெழுத்தாகிய அகரத்தின் முன்னர் ஞ ந ம வருமொழி முதலாக வந்தால், அவ்வற்றிற்குப் பொருந்திய ஒற்று இடையே மிகுதல் வேண்டும். அஞ்ஞூல், அம்மடம்.

**அகரச்சுட்டின் முன் ய வ மெய்**

**யவமுன் வரினே வகரம் ஒற்றும் (206)**

அகரச்சுட்டு நிற்க, வருமொழி முதலில் ய வ வரின் இடையே வகர ஒற்று மிகும். ஒற்றும்-ஒற்றாக வரும். அவ்யாழ், அவ்வளை.

**அகரச்சுட்டின் முன் உயிர்**

**உயிர்முன் வரினும் ஆயியல் திரியாது (207)**

அகரச்சுட்டின் முன் ய, வ மட்டுமின்றி உயிரெழுத்து வருமொழி முதல் வந்தாலும் முற்கூறிய வகர ஒற்று மிகுதலாகிய இலக்கணத்தில் மாறாது. ஆ இயல்-முற்கூறிய அவ்விலக்கணம். அ+அணி=அவ்வணி.

**அகரச்சுட்டு செய்யுளுள் நீளுதல்**

**நீட வருதல் செய்யுளுள் உரித்தே (208)**

அகரச்சுட்டு (எதிரே வன்கணம் ஒழிந்த எழுத்துக்கள் முதலாக வருமிடத்து) ‘ஆ’ என நீளும். இது செய்யுளள் மட்டுமே வரும். ஆயிடை, ஆவயின்.

**சாவ என்னும் அகர ஈற்றுச் சொல்**

**சாவ என்னும் செயவென் எச்சத்து**
**இறுதி வகரம் கெடுதலும் உரித்தே (209)**

‘சாவ’ என்னும் செய வாய்பாட்டு வினை எச்சத்தின் இறுதியில் உள்ள வகரம் கெட்டுப்போதலும் உண்டு. சாக்குத்தினான், சாவக் குத்தினான் (இன்று சாக அடித்தான் - சாகடித்தான் என வழங்கப்படுகிறது)

**இயல்பாக முடியும் அகர ஈற்றுச் சொற்கள்**

**அன்ன என்னும் உவமக் கிளவியும்**
**அண்மை சுட்டிய விளிநிலைக் கிளவியும்**
**செய்ம்மன என்னுந் தொழிலிறு சொல்லும்**

**ஏவல் கண்ணிய விளங்கோட் கிளவியும்**
**செய்த என்னும் பெயரெஞ்சு கிளவியும்**
**செய்யிய என்னும் வினையெஞ்சு கிளவியும்**
**அம்ம என்னும் உரைப் பொருட்கிளவியும்**
**பலவற் றிறுதிப் பெயர்க்கொடை உளப்பட**
**அன்றி அனைத்தும் இயல்பென மொழிப (210)**

அன்ன என்னும் உவமச்சொல்லும், அணிமையில் உள்ளாரைக் கூப்பிடும் பெயர்ச்சொல்லும் செய்ம்மன எனும் வாய்ப்பாடு வினைமுற்றுச் சொல்லும் ஏவலைக் கருதிய வியங்கோட் சொல்லும் செய்த எனும் வாய்ப்பாட்டான் வரும் பெயரெச்சச் சொல்லும் செய்யிய என்னும் வாய்ப்பாட்டான் வரும் வினையெச்சச்சொல்லும் ‘அம்ம’ என உரையாடலில் ஒருவரை அழைத்துப் பேசும் பொருண்மையையுடைய இடைச்சொல்லும் பலவற்றை உணர்த்தும் அகர ஈற்றுப் பல என்னும் பெயர்ச்சொல்லும் ஆகியவை உளப்பட இவை போல்வன அனைத்தும், எதிரே க ச த ப க்கள் வரின் இயல்பாகப் புணரும். விளிநிலைக் கிளவி- விளிச்சொல். தொழில் இறு சொல்- வினைமுற்றுச்சொல். கண்ணிய – கருதிய. பெயரெஞ்சு கிளவி, வினையெஞ்சு கிளவி முறையே பெயரெச்சம் வினையெச்சத்தைக் குறிக்கும். உரைப்பொருட் கிளவி ‘இதைக்கேளப்பா’ என்ற ஒரு பையனிடம் ஒரு தகவலைச் சொல்லத் தொடங்குகிறோமல்லவா? இதிலுள்ள அப்பா போன்றதே, அம்ம என, உரையாடலில் ஒருவரைத் தன் முகமாக அழைக்கும் சொல்லும். இதற்குத் தனிப்பொருள் இன்மையின் உரையசைக் கிளவி எனக்கூறுவர். கயலன்ன கண், நண்ப பார், செல்க தேர், அம்ம கேளிதை.

### வாழிய என்னும் அகர ஈறு

**வாழிய என்னும் செயஎன் கிளவி**
**இறுதி யகரம் கெடுதலும் உரித்தே (211)**

செய என்னும் வாய்பாட்டு வாழிய என்னும் வியங்கோள் வினைமுற்று. இறுதி யகரம் கெட்டு முதலும் உண்டு,(கெடாது முடிதலும் உண்டு) வாழி தமிழ், வாழிய தமிழ்.

### அம்ம என்னும் சொல்லுக்கு மேலும் ஒரு விதி

**உரைப்பொருட் கிளவி நீட்டமும் வரையார் (212)**

உரையசைப் பொருளுடைய ‘அம்ம’ எனும் சொல்,‘அம்மா’ என ஆகாரமாய் நீளுதலையும் நீக்கமாட்டார்கள். ‘அம்ம கேள்’ என்பதன்றி,‘அம்மா கேளாய்’ என நீட்டி உரைப்பதும் பேச்சிலுண்டு.

**பல என்னும் சொற்புணர்ச்சி**

**பவவற் றிறுதி நீடுமொழி உளவே**
**செய்யுள் கண்ணிய தொடர்மொழி யான (213)**

‘பல’ என்னும் சொற்களினிறுதி, செய்யுளள் வரும் ஓசை கருதிய தொடர்மொழிகளுள், நீண்டு நிற்றலும் உண்டு. பலாஅம், சிலாஅம் எனக் காட்டுவர்.

**பல சில என்னும் சொற்கள்**

**தொடரல் இறுதி தம்முன் தாம்வரின்**
**லகரம் றகரவொற் றாகலும் உரித்தே (214)**

தொடர்மொழி அல்லாத ஈரெழுத்தொரு மொழியாகிய பல சில என்னும் அகர ஈற்றுச் சொற்கள் தம்முன்னே தாம் வரின், லகரம் றகரவொற்றாதலும் உரித்து. பல+பல=பற்பல. சில+சில=சிற்சில.

**அச்சொற்களுக்கு மேலும் ஒரு முடிபு**

**வல்லெழுத் தியற்கை உறழத் தோன்றும் (215)**

அகர ஈற்றுப் பொதுவிதியில், வருமொழி வல்லெழுத்து மிகுமென்பது கூறப்பட்டது. மேற்கூறிய பல, சில என்னும் இரண்டிற்கும் அவ்வாறு வல்லெழுத்து மிகுமென்ற இயல்பு, மிகுதலும் மிகாமையும் என உறழ்ச்சியாகத் தோன்றும். பலப்பல, பலபல, இயற்கை-இயல்பு.

**அகர ஈற்றின் வேற்றுமைப் புணர்ச்சி**

**வேற்றுமைக் கண்ணும் அதனோ ரற்றே (216)**

முன்பு அல்வழிப் புணர்ச்சியில் அகரவீற்றுச் சொற்கள், எதிரே க ச த ப வரின் ஒற்றுமிகும் எனக் கூறப்பட்டது. இங்கு வேற்றுமையிலும் அவ்வாறே ஒற்றுமிகும் என்பது கூறப்படுகிறது. அதனோரற்று – அவ்வியல்பையே உடையதாகும்.

**அகர ஈற்று மரப்பெயர்க்கு வேறொரு விதி**

**மரப்பெயர்க் கிளவி மெல்லெழுத்து மிகுமே (217)**

அகர ஈற்று மரப்பெயர்ச் சொல்லுக்கு மெல்லெழுத்து மிகும். விளங்கொடு.

**மக என்னும் பெயர் 'இன்' பெறுதல்**

மகப்பெயர்க் கிளவிக்கு இன்னே சாரியை (218)

அகர ஈற்று மக என்னும் பெயர்ச்சொல்லுக்கு வேற்றுமைப் பொருட்புணர்ச்சிக்கண் இன் சாரியை வரும். மகவின் கை.

**அது 'அத்து'ப் பெறுதல்**

**அத்துஅவன் வரினும் வரைநிலை இன்றே (219)**

அம் மக என்னும் சொல்லினிடத்து, மேற்கூறிய இன்னேயன்றி, அத்து வரினும் நீக்கும் நிலைமை இன்று. மக+அத்து+கை=மகத்துக்கை.

**பல உணர்த்தும் சொல் வற்றுப்பெறுதல்**

**பலவற் றிறுதி உருபியல் நிலையும் (220)**

பல என்னும் அகர ஈற்றுச்சொல் க ச த ப க்களோடு சேரும்போது உருபொடு புணரும் முறைப்படி இடையே வற்றுப் பெற்றுப் புணரும். பலவற்றுக்கோடு.

**ஆகார ஈறு**

**அல்வழியில் ஆகார ஈற்றுப் புணர்ச்சி**

**ஆகார இறுதி அகர இயற்றே (221)**

ஆகார ஈற்றுப் பெயர்கள், அகர ஈற்றுக்குக் கூறிய புணர்ச்சி இலக்கணப்படி புணரும். அதாவது அல்வழிக்கண் க ச த ப வரின் வல்லெழுத்துப் பெற்று முடியும். தாராக்கடிது.

**செய்யா என்னும் ஆகார ஈற்று வினையெச்சம்**

**செய்யா என்னும் வினையெஞ்சு கிளவியும்**
**அவ்வியல் திரியாது என்மனார் புலவர் (222)**

பெயரேயன்றி செய்யா என்னும் வாய்ப்பாட்டு, ஆகார ஈற்று வினை எச்சச் சொல்லும், வல்லெழுத்து மிக்கு முடியும் அவ்வியல்பில் மாறாது, அதாவது க ச த ப க்கள் வரின் மிக்கு முடியும். உண்ணாக் கொண்டான்.

**ஆகார ஈற்று உம்மைத் தொகைப்புணர்ச்சி**

**உம்மை எஞ்சிய இருபெயர்த் தொகைமொழி**
**மெய்ம்மை யாக அகரம் மிகுமே (223)**

உம்மை தொக்கு, இருபெயர் தொடர்ந்த தொகைச் சொற்களில், பொருண்மையுடையதாக ஓர் அகரம் நிலைமொழி ஈற்றில் மிக்கு முடியும். மெய்ம்மையாக-பொருளுணர்ச்சி தருமாறு. இராஅப் பகல். இராப்பகல் எனில் இல்லாத பகலெனவும் பொருள்பட்டு விடும். ஆதலால் இந்நீட்சி ஏற்பட்டது.

**இயல்பாக முடியும் ஆகார ஈற்றுச் சொற்கள்**

**ஆவும் மாவும் விளிப்பெயர்க் கிளவியும்**
**யாவென் வினாவும் பலவற் றிறுதியும்**
**ஏவல் குறித்த உரையசை மியாவும்**
**தன்தொழில் உரைக்கும் வினாவின் கிளவியொடு**
**அன்றி அனைத்தும் இயல்பென மொழிப (224)**

ஆ, மா என்னும் பெயர்களும் விளித்தலையுடைய உயர்திணைப் பெயரும் யா என்னும் வினாப்பெயரும் அ∴றிணைப் பன்மைப் பொருளை உணர்த்தும் ஆகார ஈற்று வினைமுற்றும் ஏவலைக் குறிக்கும் உரையசையாகிய மியா என்ற ஆகார ஈற்று இடைச்சொல்லும் தனது செயலைக் குறிக்கும் ஆகார ஈற்று வினாவினையுடைய வினைச்சொல்லும் ஆகிய அவை அனைத்தும் இயல்பாய் முடியும். பலவற்று இறுதி – எதிர்மறை வினைமுற்றுக்கள் அ∴றிணைப் பன்மையில் ஆகார ஈற்றுடன் வரும். அவையே இங்கு பலவற்று ஆகார இறுதி எனப்பட்டன. (உண்ணா குதிரைகள்-குதிரைகள் உண்ணா – உண்ண மாட்டா) தன் தொழில் உரைக்கும் வினாவின் கிளவி – முன்பு உண்கா கண்ணா என்றால்,'கண்ணா யான் உண்ணட்டுமா' என வினவுவதாகும். தன்மை இடத்து வினையைக் குறிக்கும் வினாவடிவச் சொல் இது.

**ஆகார ஈற்றின் வேற்றுமைப்புணர்ச்சி**

**வேற்றுமைக் கண்ணும் அதனோ ரற்றே (225)**

ஆகார ஈற்றுப் பெயர்கள், அல்வழியில் மட்டுமல்லாமல், வேற்றுமையிலும் வல்லெழுத்துக்கள் வந்தவழி, அகர ஈற்று அல்வழிபோல ஒருதன்மைத்தாய் வல்லெழுத்து மிக்கு முடியும். தாராக்கால் (தாராவின் கால்). இங்ஙனம் மாட்டேற்றிக் கூறுவது. தொல்காப்பியருக்கு மிகவும் விருப்பமான நெறியாகும். மேலைச் சூத்திரத்தை மட்டுமன்றி, மிக முற்பட்டவற்றையும் தொல்காப்பியர் மாட்டேற்றி நினைவுகூரச் செய்வார். இங்ஙனம் அவர் மாட்டேற்றும் நெறிகள் பலவாகும். தொல்காப்பியம் முழுமையும் தனியொருவர் படைப்பென்பதற்கு இ∴தொரு சான்றாகும். தொல்காப்பியர் தமது நூல் முழுமையும் ஒருவர்க்கு நினைவிலிருக்க வேண்டும். அவ்வாறு பயில வேண்டுமென இதன்வழி வற்புறுத்துகிறார் எனலாம்.

**குறிற்கீழ் ஆகாரமும் தனி ஆகாரமும்**

**குறியதன் முன்வரும் ஓரெழுத்து மொழிக்கும்**
**அறியத் தோன்றும் அகரக் கிளவி (226)**

குற்றெழுத்தின் முன்னிற்கும் ஆகார ஈற்றுச் சொல்லுக்கும் ஓரெழுத்து ஒருமொழியாய் நிற்கும் ஆகார ஈற்றுச்சொல்லுக்கும் அவற்றை நன்கறியுமாறு இடையே அகர எழுத்துத் தோன்றும். பலஅக்கோடு, காஅக்குறை (கா-காவடி)

**இரா என்னும் ஆகார ஈறு**

**இராவென் கிளவிக்கு அகர மில்லை (227)**

இரா என்னும் ஆகார ஈற்றுச் சொல்லுக்கு, முற்கூறிய அகரப்பேறு இல்லை. இராக்கொண்டான் (இரவில் கொண்டான்)

**நிலா என்னும் ஆகார ஈறு**

**நிலாவென் கிளவி அத்தொடு சிவணும் (228)**

நிலா என்னும் சொல் அத்துச் சாரியையொடு பொருந்தும். நிலாத்துக் கொண்டான்.

**ஆகார ஈற்று மரப்பெயர்கள்**

**யாமரக் கிளவியும் பிடாவுந் தளாவும்**
**ஆமுப் பெரும் மெல்லெழுத்து மிகுமே (229)**

யா, பிடா, தளா ஆகிய ஆகார ஈற்று மூன்று மரப்பெயர்களும் மெல்லெழுத்துமிக்கு முடியும். யாஅங்கோடு (மரக்கிளை)

**அவற்றுக்கு மேலும் ஒரு முடிபு**

**வல்லெழுத்து மிகினும் மான மில்லை (230)**

மேற்சுட்டிய மூன்று மரப்பெயர்களிலும் மெல்லெழுத்தேயன்றி, வல்லெழுத்து மிக்கு முடியினும் குற்றமில்லை. யாஅக்கோடு. மானம் இல்லை – குற்றமில்லை.

**மா என்னும் மரப்பெயரும் ஆ, மா என்னும் விலங்கின் பெயர்களும்**

**மாமரக் கிளவியும் ஆவும் மாவும்**
**ஆமுப் பெயரும் அவற்றோ ரன்ன**
**அகரம் வல்லெழுத்து அவைஅவண் நிலையா**
**னகரம் ஒற்றும் ஆவும் மாவும் (231)**

மா எனும் மரப்பெயர்ச் சொல்லும் ஆ, மா என்னும் விலங்கையுணர்த்தும் பெயர்களும் ஆகிய மூன்றும் முற்கூறிய ஓரெழுத்து மொழி யா மரச்சொல் முதலியவற்றோடு ஒத்த தன்மையுடையனவாகும். ஆ, மா என்பன இரண்டும் அகரமும் மெல்லெழுத்துமாகிய அவை அவ்விடத்து நிலைபெறாவாய் னகர ஒற்றுப் பெற்று நிற்கும். ஒற்றும்-ஒற்றாகப் பொருந்தும். மாஅங்கிளை, ஆன்கொம்பு-வல்லெழுத்து இடம்பெறாது.

**ஆப்பெயர்ப்புப் புணர்ச்சி மேலும் ஒருவிதி**

**ஆன்ஒற்று அகரமொடு நிலையிடன் உடைத்தே (232)**

ஆ என்னும் சொல் பெற்று நின்ற னகர ஒற்றாகிய சாரியையுடன், ஓர் அகரம் சேர்ந்து நிற்கும் இடமும் உண்டு. ஆன் என்பது ‘ஆன’ ஆகி ‘ஆன நெய்’ எனப்படும். ஆன்நெய் என்பதே மிகுதி.

**அதனுடன் பகர ஈகாரம் புணர்தல்**

**ஆன்முன் வருஉம் ஈகார பகரம்**
**தான்மிகத் தோன்றிக் குறுகலும் உரித்தே (233)**

‘ஆன்’ என்ற னகரச் சாரியை பெற்ற சொல்முன் வரும் பகர ஈகாரமாகிய இடக்கர்ச்சொல், தான் தன் ஒற்று மிகுந்து, அதிலுள்ள ஈகாரம் இகரமாதலுமுண்டு (குறுகாது நிற்றலுமுண்டு). ஆப்பி, ஆப்பீ.

**ஆகார ஈறு சிலவற்றுக்கு உகரப்பேறு**

**குறியதன் இறுதிச் சினைகெட உகரம்**
**அறிய வருதல் செய்யுளள் உரித்தே. (234)**

குறியதன் இறுதி ‘ஆ’ ஒரு மாத்திரை கெட்டு, உகரம் பெற்று விளங்குதல், செய்யுளுக்குரியதாகும். சினை-ஒரு மாத்திரை அளபு. குறியதன் இறுதி ஆவுள்ள சொற்கள். இரா, பலா, இறா, தடா, புறா முதலியன. ஒரு மாத்திரை குறைந்தால் இவை இர, பல, இற, தட, புற என நிற்கும். உகரம் பெற்றால் இரவு, பலவு, இறவு (மீன்), தடவு (மரம்), புறவு என ஆகும்.

**இகர ஈறு**

**இகர ஈற்றுப் பெயர்களின் வேற்றுமைப் புணர்ச்சி**

**இகர இறுதிப் பெயர்நிலை முன்னர்**
**வேற்றுமை மாயின் வல்லெழுத்து மிகுமே (235)**

இகர ஈற்றுப் பெயர்ச்சொற்கள் முன்பாக, க ச த ப வரின்,வேற்றுமையாயின் வல்லெழுத்து மிகும். கிளிச்சிறகு, இதற்கு அல்வழி முடிபு தொகை மரபிற் கூறப்பட்டது.

**இகர ஈற்று வினைச்சொல்லும் இடைச்சொல்லும்**

**இனிஅணி என்னுங் காலையும் இடனும்**
**வினையெஞ்சு கிளவியும் சுட்டும் அன்ன (236)**

இனி, அணி என்னும் காலமும் இடமும் உணர்த்தும் சொற்களும் இகர ஈற்று வினையெச்சச் சொல்லும் இகரச் சுட்டிடைச் சொல்லும் மேற்கூறியவாறு வல்லெழுத்து மிக்கு முடியும். இனிப்பேசுக, அணிச்சென்றான், பாடிப்பறந்தது. இக்கொற்றான்.

**இன்றி என்னும் வினையெச்சம்-செய்யுள் முடிபு**

**இன்றி என்னும் வினையெச்ச இறுதி**
**நின்ற இகரம் உகரம் ஆதல்**
**தொன்றியல் மருங்கின் செய்யுளுள் உரித்தே (237)**

இன்றி வரை வினை எச்சச் சொல்லின் இறுதியில் நிற்கும் இகரம், பழைமை தொட்டு வரும் மரபுவழியிலே செய்யுளுள் உகரமாக மாறுவதுண்டு. இன்றி-இன்று. ‘உப்பின்றி உண்க’ என்பது ‘உப்பின்று உண்க’ என வருதலுண்டு. அன்றி என்பதும் செய்யுளுள் அன்று ஆதலுண்டு.

**இகரச்சுட்டுப் புணர்ச்சி**

**சுட்டின் இயற்கை முற்கிளந் தற்றே (238)**

இகர ஈற்றுச் சுட்டினது இயல்பு, முன் அகரவீற்றுச் சொல்லிற்குக் கூறப்பட்ட தன்மைத்தாம். 204 முதல் 208 வரை அகரச்சுட்டிற்குக் கூறப்பட்டவை இங்கு இகர ஈற்றுக்கும் மாட்டேற்றப்பட்டுள்ளன. மெல்லெழுத்து வரின் மிகும். இஞ்ஞான்று, இந்நூல், இடையெழுத்தும் உயிரும் வரின் வகர ஒற்று மிகும். இவ்யாழ், இவ்வுயிர், செய்யுளுள் நீண்டிசைக்கும். ஆவயின் போல ஈவயின் என வரும்.

**தூணி முன் பதக்கு வருதல்**

**பதக்கு வரினே தூணிக் கிளவி**
**முதற்கிளந் தெடுத்த வேற்றுமை யியற்றே (239)**

தூணி என்ற சொல் முன் பதக்கு என்ற சொல் வரின் முன்பு விதந்து சொல்லிய வேற்றுமை முடிபின் இயல்பிற்றாய் வல்லெழுத்து மிக்கு முடியும். பதக்கு,

தூணி என்ப முகத்தளவைப் பெயர்கள், முதற்கிளந்து எடுத்த-முதலில் சிறப்பாக எடுத்துச் சொல்லிய, தூணிப்பதக்கு.

**நாழி முன் உரி வருதல்**

**உரிவரு காலை நாழிக் கிளவி**
**இறுதி இகரம் மெய்யொடுங் கெடுமே**
**டகாரம் ஒற்றும் ஆவயி னான (240)**

'உரி' முகத்தலளவைப் பெயர் வருமொழியாக வரும்போது, நாழி எனும் சொல்லின் இகர இறுதி அஃதூர்ந்து நின்ற மெய்யோடும் கெடும். அங்கு டகார ஒற்று வரும். நாழி+உரி, நாட்+உரி=நாடுரி.

**பனி என்னும் இகரவீற்றுச் சொல்**

**பனியென உரூஉங் கால வேற்றுமைக்கு**
**அவ்வியல் நிலையல் செவ்வி தென்ப (241)**

பனி என வருகின்ற பருவகால வேறுபாட்டை உணர்த்தும் சொல்லுக்கு எதிரே க ச த பக்கள் வரின் அத்தும் இன்னும் சாரியைகளாக வரும். பனியத்துக் கொண்டான், பனியிற் சென்றான், பனிக்காலம் - முன்பனி, பின்பனிக்காலங்கள். கால வேற்றுமைக்கு – பருவ வேறுபாட்டை உணர்த்தும் சொல்லுக்கு.

**வளி என்னும் இகரவீற்றுச் சொல்**

**வளியென உரூஉம் பூதக் கிளவியும்**
**அவ்வியல் நிலையல் செவ்வி தென்ப (242)**

வளி என்று வரும் ஐம்பூதங்களில் ஒன்றான காற்றை உணர்த்தும் சொல்லும் அத்தும் இன்னும் சாரியையாகப் பெறுதல் செவ்விதென்று புலவர் சொல்லுவர். வளியத்துக் கொண்டான். வளியிற்கொண்டான்.

**உதி என்னும் இகரவீற்று மரப்பெயர்**

**உதிமரக் கிளவி மெல்லெழுத்து மிகுமே (243)**

உதி எனும் மரப்பொய் முன் க ச த பக்கள் வரின், அவற்றிற்கு இனமான மெல்லெழுத்துக்கள் மிகும். உதிங்கோடு.

**புளி என்னும் இகரவீற்று மரப்பெயர்**

**புளிமரக் கிளவிக்கு அம்மே சாரியை (244)**

புளி எனும் மரப்பெயர்ச் சொல்லுக்கு அம்முச் சாரியை வரும். புளியங்கிளை, புளியம்பழம்.

**புளி என்னும் இகரவீற்றுச் சுவைப்பெயர்**

**ஏனைப் புளிப்பெயர் மெல்லெழுத்து மிகுமே (245)**

மரத்தையல்லாமல் சுவையை உணர்த்தும்‘புளி’ எனும் பெயர்ச்சொல்லுக்கு, மெல்லெழுத்து மிகும். புளிங்கூழ்.

**அதற்கு மேலும் ஒரு முடிபு**

**வல்லெழுத்து மிகினும் மானம் இல்லை**
**ஒல்வழி அறிதல் வழக்கத் தானே (246)**

முற்கூறிய சுவையுணர்த்தும் ‘புளி’க்கு மெல்லெழுத்தேயன்றி, வல்லெழுத்து மிகினும் குற்றமில்லை. வழக்கத்தில் பொருந்துமிட மறிக. அறிதல்-அறிக. புளிக்கூழ், புளிச்சோறு.

**இகரவீற்று நாட்பெயர்முன் வினைச்சொல் புணர்தல்**

**நாள்முன் தோன்றும் தொழில்நிலைக் கிளவிக்கு**
**ஆன்இடை வருதல் ஐயம் இன்றே (247)**

நாள்பெயரான பரணி போலும் இகரவீற்றுச் சொல்லுக்கு மன் வினைச்சொல் வரும்போத, ஆன் சாரியை இடையில் வருதலில் ஐயம் இல்லை. பரணியாற் கொண்டான் (பரணி நாளில் திருமணம் செய்து கொண்டான்) நாள்-நட்சத்திரம்.

**இகரவீற்றுத் திங்கட்பெயர்முன் வினைச்சொல் புணர்தல்**

**திங்கள் முன்வரின் இங்கே சாரியை (248)**

திங்களை உணர்த்தும் பெயர்ச்சொல்முன் வினைச்சொல் வரின், இங்குக் சாரியை இடையில் வரும். ஆடிக்குக் கொண்டான்.

**ஈகார ஈறு**

**அல்வழியில் ஈற்றுப்பெயர்க்ள புணர்தல்**

**ஈகார இறுதி ஆகார இயற்றே (249)**

ஈகார ஈற்றுப்பெயர், ஆகார ஈறு பெற்ற புணர்ச்சி விதிகளையே பெறும். இயற்று-இயல்பிற்று. இலக்கணமுடையது. அல்வழியில் க ச த ப க்கள் எதிரேவரின் மிக்கு முடியும் என்பதாம். ஈக்கடிது. ஈச்சிறிது, அல்வழியில் த ச த பக்கள் முன்வரின் தத்தமக்கு ஒத்த ஒற்று இடைமிகும் என்பது அகர ஈற்று இலக்கணம். அது

ஆகாரத்திற்கு மாட்டேற்றப்பட்டது. ஆகார இறுதி இங்கு ஈகார இறுதிக்கு மாட்டேற்றப்பட்டுள்ளது.

**நீ, மீ முதலிய ஈகார ஈற்றுச் சொற்கள்**

**நீஎன் பெயரும் இடக்கர்ப் பெயரும்**
**மீஎன மரீஇய இடம்வரை கிளவியும்**
**ஆவயின் வல்லெழுத்துத் தியற்கை யாகும் (250)**

நீ என்னும் முன்னிலை ஒருமைப்பெயரும் பகர ஈகாரமாகிய இடக்கர்ப்பெயரும் மீ என்னும் ஓர் இடத்தினை வரைந்துணர்த்தும் மருவி வழங்கும் சொல்லும் மேலே கூறிய வல்லெழுத்துப் பெறாது, அல்வழியில் இயல்பாய் முடியும். நீ காண், மீ கண் (கண்ணின் மேற்பகுதி).

**மீ என்னும் சொல்லுக்கு மேலும் ஒரு முடிபு**

**இடம்வரை கிளவிமுன் வல்லெழுத்து மிகூஉம்**
**உடனிலை மொழியும் உளவென மொழிப (251)**

இடம்வரை கிளவி எனப்பட்ட, இடத்தை வரைந்துணர்த்தும் மீ எனும் சொல்முன் வல்லெழுத்து மிகுகின்ற, ஒன்றி நிற்கும் மொழிகளும் உளவென்று சொல்வார்கள். மீப்பல்.

**ஈகார ஈற்றின் வேற்றுமைப் புணர்ச்சி**

**வேற்றுமைக் கண்ணும் அதனோ ரற்றே (252)**

ஈகார ஈற்றுப்பெயர் வேற்றுமைக் கண்ணும் முற்கூறிய ஆகார ஈற்று அல்வழியோடு ஒருதன்மைத்தாய், வல்லெழுத்து வரின் வல்லெழுத்து மிக்கு முடியும். உயிர்மயங்கியல் முதல் நூற்பா. இங்ஙனம் தொடர்ந்து மாட்டேற்றப்படும் முறை சிந்தித்தற்குரியது.

**நீ என்னும் ஈகார ஈற்றுப்பெயர்**

**நீ என் ஒருபெயர் உருபியல் நிலையும்**
**ஆவயின் வல்லெழுத் தியற்கை யாகும் (253)**

நீ என்னும் முன்னிலை ஒருமைப்பெயர். வேற்றுமைப் பொருட்புணர்ச்சிக்கண் உருபு புணர்ச்சிக்குக் கூறியவாறு நிலை பெற்று முடியும். அதாவது நெடுமுதல் குறுகி னகர ஒற்றுப்பெறும். அவ்விடத்தே வல்லெழுத்து மிகாது இயல்பாக நிற்கும். நின்கை.

## உகர ஈறு

### அல்வழியில் உகர ஈற்றுப் பெயர்கள் புணர்தல்

**உகர இறுதி அகர இயற்றே (254)**

உகர ஈற்றுப் பெயர்கள் அல்வழிக்கண் அகர ஈற்று அல்வழிப் புணர்ச்சிக்குக் கூறிய இயல்புப்படி புணரும். க ச த பக்கள் வரின் மிக்கு முடியும் என்பதாம். பாட்டுப் பெரிது, பட்டுச் சிறிது.

### உகரச்சுட்டின் முன் வன்கணம் புணர்தல்

**சுட்டின் முன்னரும் அத்தொழிற் றாகும். (255)**

உகர ஈற்றுச் சுட்டின் முன்னரும் வல்லெழுத்து வருமிடத்து, அகர ஈற்றுச் சுட்டிற்கு அல்வழியின்கண் நிகழும் புணர்ச்சிப்படி வல்லெழுத்து மிக்கு முடியும். அத்தொழிற்றாகும்-அப்புணர்ச்சி விதிப்படி நடக்கும். உப்படுக்கை.

### உகரச்சுட்டின்முன் மென்கணம் முதலியன

**ஏனவை வரினே மேல்நிலை யியல்பே (256)**

உகர ஈற்றுச் சுட்டின்முன் வல்லினம் அல்லாத பிற கணங்கள் வரின், முன்பு அகரவீற்றுச் சுட்டிற்குக் கூறிய இயல்பினைப் பெறும். அதாவது தன் ஒற்று மிக்கு முடியும். உஞ்ஞான்று, ஏனவை பிற கணங்கள். தமிழில் உயிர்க்கணம், வன்கணம், மென்கணம், இடைக்கணம் என நான்காகக் கூறுவர். இவற்றுள் வன்கணம் பற்றிய புணர்ச்சி விதிகளே மிகுதி.

### உகரவீற்றுச் சுட்டின்முன் வலி இயல்பாதல்

**சுட்டுமுதல் இறுதி இயல்பா கும்மே (257)**

சுட்டெழுத்தை முதலாகவுடைய உகர ஈற்றுப்பெயர், மேற்கூறிய வல்லெழுத்து மிகாது, இயல்பாய் முடியும். அதுகுறிது, இதுசிறிது.

### உகரவீற்றுச் சுட்டுக்குச் செய்யுள் முடிபு

**அன்றுவரு காலை ஆவா குதலும்**
**ஐவரு காலை மெய்வரைந்து கெடுதலும்**
**செய்யுள் மருங்கின் உரித்தென மொழிப (258)**

சுட்டெழுத்தை முதலாகவுடைய பெயரின் உகர ஈறு ‘அன்று’ வருமொழியாய் வரும்போது ‘ஆ’ ஆகும். ஐ இடையில் வரும்போது அவ்வுகரம் தன் மெய்யை

விட்டுவிட்டுக் கெடும். அவ்விரு முடிபும் செய்யுட்கண் உரியனவாகும். அது+அன்று=அதான்று. அது+ஐ=அதை.

**உகர ஈற்றின் வேற்றுமைப் புணர்ச்சி**

**வேற்றுமைக் கண்ணும் அதனோ ரற்றே (259)**

உகரவீற்றுப் பெயர் வேற்றுமைப் பொருட்புணர்ச்சிக் கண்ணும் அகரவீற்று அன்மொழியோடு ஒத்ததாகும். அதாவது வல்லெழுத்து வந்தவழி வல்லெழுத்து மிக்கு முடியும். பட்டுப்புழு.

**உகர ஈற்று எரு, செரு என்னும் சொற்கள்**

**எருவும் செருவும் அம்மொடு சிவணித்**
**திரிபிடன் உடைய தெரியுங் காலை**
**அம்மின் மகரம் செருவயின் கெடுமே**
**தம்மொற்று மிகூஉம் வல்லெழுத் தியற்கை (260)**

எரு, செரு சொற்கள் அம்முச் சாரியை பொருந்தி, முன் சொன்ன வேற்றுமைப் பொருட்புணர்ச்சியினின்று வேறுபடுமிடங்கள் உள. ‘செரு’ச் சொல்லில் ‘அம்’மின் மகரம் கெடும். கெட்டவிடத்து வல்லெழுத்தாகிய தம் ஒற்று மிக்கு முடியும். எரு+குழி=எருவக்குழி, செரு+களம்=செருவங்களம், எருக்குழி, செருக்களம் என்றும் பொது விதிப்படி அமையும்.

**‘மு’ என்னும் உகர ஈறு**

**ழகர உகரம் நீடிடன் உடைத்தே**
**உகரம் வருதல் ஆவயி னான (261)**

உகர ஈற்று மொழிகளுள்,‘ழு’ இறுதி, ஊகாரமாய் நீண்டு முடியும் இடனுண்டு. அவ்விடத்தே ‘உகரம்’ வந்து முடிய வேண்டும். பழூஉப்பல், எழூஉக்கதவு, நீடிடன் உடைத்தே என்றதால், இது செய்யுளிடத்தென்பது பெறப்படும்.

**ஒடு என்னும் மரப்பெயர்**

**ஒடுமரக் கிளவி உதிமர இயற்றே (262)**

‘ஒடு’ மரச்சொல்,‘உதி’ மரச்சொல் போல மெல்லெழுத்துப் பெற்று முடியும். ஒடுங்கிளை.

### உகர ஈற்றுச் சுட்டுப்பெயர் சாரியை பெறுதல்

**சுட்டுமுதல் இறுதி உருபியல் நிலையும்**
**ஒற்றிடை மிகாஅ வல்லெழுத் தியற்கை (263)**

சுட்டெழுத்தை முதலாகவுடைய உகர ஈற்றுச் சொற்கள், உருபு புணர்ச்சியில் சொன்ன இயல்பிலே நின்று 'அன்' சாரியை பெற்று உகரம் கெட்டு முடியும். ஒற்றுமிகும் வல்லெழுத்தின் இயற்கையான ஒற்று, இங்கு மிகாது. அது+அன்+கிளை=அதன்கிளை.

### ஊகார ஈறு

### அல்வழியில் ஊகார ஈற்றுப்பெயர்கள் புணர்தல்

**ஊகார இறுதி ஆகார இயற்றே (264)**

ஊகார ஈற்றுப்பெயர், ஆகார வீற்று அல்வழியின் இயல்பிற்றாய் வல்லெழுத்து வந்தவழி வல்லெழுத்து மிக்கு முடியும். கொண்மூப் பெரிது. கொண்மூ-மேகம். ஊகார இறுதி அகரவீற்றைப் போன்றது எனக் கூறாமல் ஆகார ஈற்றை மாட்டேற்றிய திறன் அறிதற்பாலது. செய்யுள் நயம், நினைவு போற்றல் கருதி, மாட்டேற்றியதன்மேல் மாட்டேற்றுதல் ஒரு தொல்காப்பியப் பண்பாகும்.

### ஊகார ஈற்று வினைச்சொற்கள்

**வினையெஞ்சு கிளவிக்கும் முன்னிலை மொழிக்கும்**
**நினையுங் காலை அவ்வகை வரையார் (265)**

ஊகார ஈற்று வினையெச்சச் சொல்லிற்கும் முன்னிலை வினைச்சொல்லுக்கும் ஆராயுங்காலத்து, அவ்வாறு வல்லெழுத்து மிக்கு முடியும் இயல்பை நீக்கமாட்டார்கள். உண்ணூச் சென்றான், தூக்கொற்றா. தூ-தூவுவாயாக.

### ஊகார ஈற்றின் வேற்றுமைப்புணர்ச்சி

**வேற்றுமைக் கண்ணும் அதனோ ரற்றே (266)**

ஊகார ஈற்று வேற்றுமைப் பொருட்புணர்ச்சிக் கண்ணும் அவ் ஆகார ஈற்று அல்வழியோடு ஒத்த இயல்பிற்றாய் வல்லெழுத்து வந்தவிடத்து வல்லெழுத்து மிக்கு முடியும். கொண்மூக் கூட்டம் 'வேற்றுமைக் காணும் அதனோரற்றே' என்ற நூற்பா 216, 225, 252, 259 ஆகிய இடங்களில் அகர, ஆகார,ஈகார, உகர ஈறுகட்கும் வந்துள்ளது. ஒரே நடைத்தாயினும் இடம்நோக்கி அவ்வவற்றிக்குப் பொருத்திக் கொள்ள வேண்டும்.

**குறிற்கீழும் தனிமொழியிலும் வரும் ஊகார ஈறுகள்**

**குற்றெழுத் திம்பரும் ஓரெழுத்து மொழிக்கும்**
**நிற்றல் வேண்டும் உகரக் கிளவி (267)**

குற்றெழுத்தைச் சார்ந்த ஊகார ஈற்றுச் சொல்லுக்கும் ஊ ஈற்று ஓரெழுத்துச் சொல்லுக்கும் இறுதியில் ஓர் உகர எழுத்துத் தோன்றி நிற்கும். உடூஉக்குறை, தூஉக்குறை,உடு-விண்மீன், தூ-வலிமை, கிளவி-ஈண்டு எழுத்து.

**பூ என்னும் ஊகார ஈற்றுப்பெயர்**

**பூஎன் ஒருபெயர் ஆஇயல் பின்றே**
**ஆவயின் வல்லெழுத்து மிகுதலும் உரித்தே (268)**

பூ எனும் மலரைக் குறிக்கும் பெயர்ச்சொல்லுக்கு உகரப்பேறு இல்லை. அவ்விடத்து வல்லெழுத்து மிகுதலும் சிறுபான்மையுண்டு. பெரும்பான்மை மெல்லெழுத்து முக்கு முடியும். ஆ இயல்பு – அவ்வியல்பு. மிகுதலும் என்ற உம்மை மிகாமையைப் பெரிதும் சுட்டும். பூங்கொடி-பூக்கொடி என்பது சிறுபான்மை.

**ஊ என்னும் ஓரெழுத்தொருமொழி**

**ஊஎன் ஒருபெயர் ஆவொடு சிவணும் (269)**

ஊ என்னும் தசையை உணர்த்தும் பெயர்ச்சொல். ஆ என்னும் பெயரோடு ஒத்த விதி பெறும். அதாவது னகர ஒற்றாகிய சாரியை பெறும். ஊன்குறை.

**அது அக்குச் சாரியை பெறுதல்**

**அக்கென் சாரியை பெறுதலும் உரித்தே**
**தக்கவழி அறிதல் வழக்கத் தான (270)**

ஊ என்னும் பெயர் மேற்கூறிய னகர ஒற்றொடு, அக்குச் சாரியை பெற்று முடிதலும் உரித்து. வழக்கிடத்து அவ்வாறு வருமிடம் யாதென அறிந்துகொள்க. ஊனக் குறை (தசைக்குறை).

**ஆடூஉ மகடூஉ என்னும் ஊகார ஈற்றுப்பெயர்கள்**

**ஆடூஉ அகடூஉ ஆயிரு பெயர்க்கும்**
**இன்னிடை வரினும் மான மில்லை (271)**

ஆடூஉ, மகடூஉ என்ற உயர்திணைப் பெயர் இரண்டனுக்கும், வல்லெழுத்து மிகுதலேயன்றி, இன் சாரியை இடைவரினும் குற்றமில்லை. மானம்-குற்றம். ஆடூஉக்கை என்பதன்றி ஆடூஉவின் கை எனவும் வருமென்பதாம்.

### எகர, ஒகர ஈறு

### அல்வழியில் எகர ஒகர ஈற்றுப்பெயர்கள் புணர்தல்

**எகர ஒகரம் பெயர்க்கீறு ஆகா**
**முன்னிலை மொழிய என்மனார் புலவர்**
**தேற்றமுஞ் சிறப்பும் அல்வழி யான. (272)**

எகரமும் ஒகரமும் பெயர்ச்சொற்கு ஈறு ஆகா. வினைச்சொல்லுள் முன்னிலை மொழியிடத்தனவாய், க ச த ப க்கள் வரின் மிக்குப் புணரும் என்பர் புலவோர். தேற்றம் குறிக்கும் இடைச்சொல்லாய் வரும் எகரமும் சிறப்புக் குறிக்கும் இடைச்சொல்லாய் வரும் ஒகர ஈறும் தவிர்த்து, மேலே சுட்டிய இடத்தில் மட்டுமே வருமென்பதாம். அல்வழியான-அல்லாத இடத்தில், ஏஎக்கொற்றா, ஓஒக்குமரா என வரும். இவை ஏவுதற் பொருண்மைய, அகர வரிசைப்படி விதி கூறிவருபவர். இங்கு எகர ஒகரங்களைச் சேர்த்துக் கூறியது, இலக்கண விதி மிகவும் ஒத்துவருவது கருதியேயாகும்.

### எகரஒகர இடைச்சொற்களின் புணர்ச்சி

**தேற்ற எகரமும் சிறப்பின் ஒவ்வும்**
**மேற் கூறியற்கை வல்லெழுத்து மிகா. (273)**

தேற்றப் பொருள்தரும் எகர இடைச்சொல்லும், சிறப்புப் பொருள்தரும் ஒகர இடைச்சொல்லும் மேலே கூறிய முன்னிலை வினைச்சொல்லுக்குரிய இயல்பான வல்லெழுத்து மிகாது இயல்பாய் முடியும். அவனேஎ செய்தான், அவனோஒ கொடுத்தான், அளபெடையாய் நின்று எகரஒகரங்கள் ஈறாயின. இவை இங்ஙனம் மட்டுமே ஈறாகும் என்பது முன்பே கூறப்பட்டது.

### ஏகாரஈறு

### அல்வழியில் ஏகார ஈற்றுப் பெயர்கள் புணர்தல்

**ஏகார இறுதி ஊகார இயற்றே (274)**

ஏகார ஈற்றுப் பெயர் ஊகார இறுதிப் பெயரின் இயல்புடையது. அல்வழியில் வல்லெழுத்து வந்தவழி, வல்லெழுத்து மிக்கு முடியும். மாட்டேற்று சங்கிலித் தொடர்போல் அகர ஈறு தொடங்கி நடப்பது காண்க. சேக்கடிது.

### ஏகார இடைச்சொற்கள்

**மாறுகொள் எச்சமும் வினாவும் எண்ணும்**
**கூறிய வல்லெழுத்து இயற்கை யாகும் (275)**

ஏகார இடைச்சொல் எதிர்மறை எச்சப் பொருளாயினும் வினாப் பொருளினும் எண்ணப் பொருளிலும் வரும்போது, மேற்கூறிய வல்லெழுத்துப் பெறாது, இயல்பாய் முடியும். யானே செய்தேன், நீயே செய்தாய்?.

**ஏகார ஈற்றின் வேற்றுமைப் புணர்ச்சி**

**வேற்றுமைக் கண்ணும் அதனோ ரற்றே (276)**

ஏகார ஈறு, வேற்றுமைப் பொருட்புணர்ச்சிக் கண்ணும் மேற்கூறிய அல்வழியோடு ஒத்த இயல்பிற்றாகும். அதாவது வல்லினம் வந்தவழி அவ்வல்லினமே மிக்கு முடியும். வேக்கடம் (வேதலையுடைய குடம்)

**அதற்கு மேலும் ஒரு முடிபு**

**ஏயென் இறுதிக்கு எகரம் வருமே (277)**

வேற்றுமைக்கண் ஏ என் இறுதிக்கு எகரம் வரும். ஏ என்னும் இறுதி, எகரம் பெற்று ஏஎ என நிற்கும். ஏஎப் புழை (ஏ-அம்பு).

**சே என்னும் ஏகார ஈற்று மரப்பெயர்**

**சேஎன் மரப்பெயர் ஒடுமர இயற்றே (278)**

சே என்னும் மரத்தைக் குறிக்கும் பெயர் ஒடுமர விதியைப் பெற்று, மெல்லெழுத்து மிக்கு முடியும். சேங்கோடு.

**சே என்னும் ஏகார ஈற்று விலங்கின் பெயர்**

**பெற்றம் ஆயின் முற்றஇன் வேண்டும் (279)**

முற்கூறிய சே என்பது பெற்றம் (பசு) எனும் பொருளதாயின், இன்சாரியை பெற்று நிறைவுபெற வேண்டும். சேவின் கொம்பு.

**ஐகார ஈறு**

**ஐகார ஈற்றுப் பெயரின் வேற்றுமைப் புணர்ச்சி**

**ஐகார இறுதிப் பெயர்நிலை முன்னர்**
**வேற்றுமை ஆயின் வல்லெழுத்து மிகுமே (280)**

ஐகார ஈற்றுப் பெயர்ச்சொல் முன்னர், வல்லினம் வந்தவழி, வேற்றுமைப் புணர்ச்சியாயின், வல்லெழுத்து மிக்கு முடியும். யானைக்கோடு.

### ஐகார ஈற்றுச் சுட்டுப் பெயர்ப்புணர்ச்சி

**சுட்டுமுதல் இறுதி உருபியல் நிலையும் (281)**

சுட்டெழுத்தை முதலாகவுடைய ஐகார ஈற்றுப்பெயர் இறுதி உருபு புணர்ச்சியில் கூறிய விதிப்படி நடக்கும். ஐகாரம் கெட்டும் கெடாதும் வற்றுச் சாரியை பெற்று நடக்கும். அவற்றுச்செவி, அவையற்றுச்செவி, உருபியல் நிலையும் என உருபு புணர்ச்சி விதிகள் பல இடத்தும் மாட்டேற்றப்பட்டுள்ளமை காண்க.

### விசை, ஞெமை, நமை ஐகார ஈற்று மரப்பெயர்கள்

**விசைமரக் கிளவியும் ஞெமையும் நமையும்**
**அவைமுப் பெயரும்சேமர இயல (282)**

விசை, ஞெமை, நமை என்ற மூன்று மரப்பெயர்களும் சேமரத்திற்கு ஓதிய இலக்கணத்தையுடையன. வல்லெழுத்து மிகாது மெல்லெழுத்து மிக்கு முடியும். உதிமர இலக்கணம் 243, ஒடு மரத்திற்கு ஏற்றப் பெற்று 262. அது சேமரத்திற்கு ஏற்றப்பெற்று 278, அஃது இங்கு ஐகார ஈற்று மரப்பெயருக்கு மாட்டேற்றப்பட்டுள்ள சங்கிலித்தொடர் போன்ற மாட்டேற்றழகு சிந்திக்கத்தக்கது. விசைங்கிளை, நமைஞ்செதிள்.

### பனை, அரை, ஆவிரை ஐகார ஈற்று மரப்பெயர்கள்

**பனையும் அரையும் ஆவிரைக் கிளவியும்**
**நினையுங் காலை அம்மொடு சிவணும்**
**ஐயென் இறுதி அரைவரைந்து கெடுமே**
**மெய்அவண் ஒழிய என்மனார் புலவர் (283)**

ஆராயுமிடத்து பனை, அரை, ஆவிரை என்ற ஐகார இறுதி மரப்பெயர்கள் அம்முச் சாரியை பெற்றுப் புணரும். ஐ என்பது ஈறு அரை மரம் தவிர்த்து,ஏனைய இரண்டிலும், தான் ஏறிய மெய் நிற்கத் தான்மட்டும் கெடும். பனை+காய்=பனங்காய், அரை+காய்=அரையங்காய், ஆவிரை+பூ=ஆவிரம்பு, அரை வரைந்து – அரை என்னும் பெயர் தவிர்த்து. ஒழிய –நிற்க.

### பனை முன்ன அட்டு வருதல்

**பனையின் முன்னர் அட்டுவரு காலை**
**நிலையின் றாகும் ஐஎன் உயிரே**
**ஆகாரம் வருதல் ஆவயி னான (284)**

பனை என்னும் சொல்முன் அட்டு வருமொழியாகும்போது, ஐ எனும் உயிர் மறையும். ஆகாரம் வந்து அம்மெய்ம் மேல் ஏறி நிற்கும். பனை+அட்டு=பனாஅட்டு.

**பனை முன் கொடி வருதல்**

**கொடிமுன் வரினே ஐஅவன் நிற்பக்**
**கடிநிலை இன்றே வல்லெழுத்து மிகுதி (285)**

அப்பனைச் சொல்முன் கொடி வந்து புணரின் ஐ அங்கு நிற்க வல்லெழுத்து மிகுதல் கடியப்படாது. கடிநிலை இன்று – நீக்கும் நிலைமை இல்லை. பனைக்கொடி.

**ஐகார ஈற்றுத் திங்கட்பெயரும் நாட்பெயரும்**

**திங்களும் நாளும் முந்துகிளந் தன்ன (286)**

ஐகார ஈற்றுத் திங்களைக் குறிக்கும் பெயரும் நாளை உணர்த்து பெயரும் முன்பு இகரவீற்றுத் திங்களும் நாளும் பெற்ற விதியைப் பெறும். அதாவது முறையே இக்கும் ஆனும் ஆகிய சாரியைகளைப் பெறும். சித்திரைக்குக் கொண்டான், ஆதிரையாற் கொண்டான்.

**மழை என்னும் ஐகார ஈற்றுச்சொல்**

**மழையென் கிளவி வளியியல் நிலையும் (287)**

மழை என்னும் ஐகார இறுதிச்சொல்லும் இகர இறுதிச் சொல்லாகிய ‘வளி’ என்பதற்குச் சொல்லப்பட்ட இலக்கணப்படி நடக்கும். இயல்-இயல்பு, இலக்கணம். அதாவது அத்தும் இன்னும் பெற்றும் முடியும். மழையத்துக் கண்டான்.

**வேட்கை முன் அவா வருதல்: செய்யுள் முடிபு**

**செய்யுள் மருங்கின் வேட்கை என்னும்**
**ஐயென் இறுதி அவாமுன் வரினே**
**மெய்யொடுங் கெடுதல் என்மனார் புலவர்**
**டகாரம் ணகாரம் ஆதல் வேண்டும் (288)**

செய்யுளில் அல்வழியில் வேட்கை என்னும் ஐ ஈற்றுச்சொல்லுக்கு அவா எனும் சொல் வருமொழியாய் முன்னே வரின், அவ் ஐகாரம் தானூர்ந்த மெய்யொடும் கெடும் எனப் புலவர் கூறுவர். அவ்விடத்து டகாரவொற்று, ணகார ஒற்றாதல் வேண்டும். வேட்கை+அவா, வேட்+அவா, வேண்+அவா, வேணவா. வேணவா பேச்சிலேற்பட்ட மரூஉ வாதல் கூடும். அதற்குச் சுற்றி வளைத்து இலக்கணம் விதிக்கப்படுகிறது.

## ஓகார ஈறு

## அல்வழியில் ஓகார ஈற்றுப் பெயர்கள் புணர்தல்

**ஓகார இறுதி ஏகார இயற்றே (289)**

ஓகார ஈற்றுப்பெயர்கள் அல்வழிக்கண் ஏகார ஈற்றுப் பெயர்களின் இயல்பிற்றாய் முடியும். வல்லெழுத்து வருவழி வல்லெழுத்து மிக்கு முடியும். ஓச்சிறிது (ஓ-மதகுநீர் தாங்கும் பலகை)

## ஓகார இடைச்சொல் புணர்ச்சி

**மாறுகொள் எச்சமும் வினாவும் ஐயமும்**
**கூறிய வல்லெழுத்து இயற்கை யாகும் (290)**

எதிர்மறையாம் எச்சப் பொருள்தரும் ஓகாரமும் வினாவும் ஐயமுமாகிய பொருண்மையுடைய ஓகாரங்களும், முன்பு பெயர்க்குக் கூறிய வல்லெழுத்து மிகாமல், இயல்பாக முடியும். வல்லெழுத்து இயற்கையாகும் - வல்லெழுத்து இன்றி (மிகாமல்) இயல்பாகும். மாறுகொள் எச்சம் - எதிர்மறை எச்சப்பொருள். யானோ கொண்டேன். நீயோ பெரியவன்.

## ஒழியிசை ஓகாரம்

**ஒழிந்ததன் நிலையும் மொழிந்தவற்று இயற்றே (291)**

ஓகார ஈற்றுப்பெயர் வேற்றுமைக்கண்ணும், அல்வழியோடு ஒத்து வல்லெழுத்து மிக்கு முடியும். அவ்விடத்து ஒகரம் வரும். ஓஒக்கொடுமை.

## ஓகார ஈற்றுப் பெயர்களின் வேற்றுமைப் புணர்ச்சி

**வேற்றுமைக் கண்ணும் அதனோ ரற்றே**
**ஒகரம் வருதல் ஆவயி னான (292)**

ஓகார ஈற்றுப்பெயர் வேற்றுமைக் கண்ணும், அல்வழியோடு ஒத்து வல்லெழுத்து மிக்கு முடியும். அவ்விடத்து ஒகரம் வரும். ஓஒக்கொடுமை.

## கோ முன் இல் வருதல்

**இல்லொடு கிளப்பின் இயற்கை யாகும் (293)**

ஓகார ஈற்றதாகிய கோ எனும் சொல்லை ‘இல்’லெனும் சொல்லோடு கூட்டிச் சொன்னால் ஒகரந் தோன்றாது, இயல்பாக உள்ளபடி புணரும். கோயில், கோ எனும் எழுவாய் வருவிக்கப்பெற்றது.

**சில ஓகார ஈறுகள் சாரியை பெறுதல்**

**உருபியல் நிலையும் மொழியுமா ருளவே**
**ஆவயின் வல்லெழுத்து இயற்கை யாகும். (294)**

ஓகார ஈற்றுச் சொற்களுடன் உருபு புணர்ச்சிக்கு ஓதிய இலக்கணப்படி முடிவனவுமுள. அவ்விடத்து வல்லெழுத்து மிகாது இயல்பாகப் புணரும்.

**ஔகார ஈறு**

**அல்வழி வேற்றுமை இரண்டிலும் ஔகார ஈற்றுப்பெயர்கள் புணர்தல்**

**ஔகார இறுதிப் பெயர்நிலை முன்னர்**
**அல்வழி யானும் வேற்றுமைக் கண்ணும்**
**வல்லெழுத்து மிகுதல் வரைநிலை இன்றே**
**அவ்விரு ஈற்றும் உகரம் வருதல்**
**செவ்வி தென்ப சிறந்திசி னோரே (295)**

ஔகார ஈற்றுத் தொழிற்பெயர் முன்னர், வல்லெழுத்து முதன்மொழி வரின் அல்வழியினும் வேற்றுமையிலும் வல்லெழுத்து மிக்கு முடிதல் நீக்கும் நிலைமையின்று. அவ்விருவழிப்பட்ட சொற்களினிடத்தும் ஓர் உகரம் வருதல் செவ்விதாகும் என்று சிறந்தோர் பகர்வர். சிறந்திசினோர் - சிறப்புடைய இலக்கணப் புலவர்கள். அவ்விரு ஈற்றும் - அல்வழி வேற்றுமை என்ற ஈரிடத்து வரும் ஈறுகளிலும். கௌவுக்கடிது, கௌவுக்கொடுமை.

# உயிர் மயங்கியல் கருத்துக்களின் தொகுப்பு

| வ.எ. | நிலைமொழி ஈறு | வருமொழி முதல் | வேற்றுமை/ அல்வழி | புணர்ச்சி விதி | எடுத்துக்காட்டு |
|---|---|---|---|---|---|
| 1. | அ (ஈற்றெழுத்து) | க ச த ப (வருமொழி முதலெழுத்து) | அல்வழி | கசதப ஒற்று மிகும் | விளக்குறிது, தவச்சிறிது தடஞ்செவி என்று மென்மையும் மிகும். |
| 2. | வினையெச்சச் சொல் உவமச்சொல் போல என அ (சுட்டு) ஆங்க | மேற்படி | அல்வழி | மேற்படி | படிக்கச் சென்றான் கடுகு போலச் சிறிது நன்றெனச் சொன்னான். அத்தசையில் எழுந்தாங்க |
| 3. | அ (சுட்டு) | ஞ ந ம | | அவ்வவற்றுக்கு பொருந்திய ஒற்று மிகும். | அஞ்ஞான்று அந்நிலத்தின்கண் அம்மாட்டைப் பிடி |
| 4. | அ (சுட்டு) | ய வ | | வகர ஒற்று மிகும் | அவ் யாழ், அவ் வீடு |
| 5. | அ (சுட்டு) | | | வகர ஒற்று மிகும் | அ+அணி=அவ்வணி அ+உடை=அவ்வுடை |
| 6. | அ (சுட்டு) | வன்கணம் | செய்யுளுள் மட்டும் | ஆ-என நீளும் | ஆயிடை, ஆவயின் |
| 7. | சாவ | | | வ- கெடுதலுமுண்டு | சாக்குத்தினான், சாவக்குத்தினான் |
| 8. | அன்ன (உவமம்) அண்மை விளி 'செய்ம்மன' விளங்கோள் 'செய்த' 'செய்யிய' 'அம்ம' பல | க ச த ப | | இயல்பாகப் புணரும் | குயிலன்ன குரல், அன்ப கேள், உண்மன கூழ் விரைக தேர் கொள்தின்ற குதிரை எண்ணிய செய்தான் அம்ம கேளிதை பல குரலிசை பல சொல் பேசுக. |
| 9. | வாழிய | | | கெடுதலும் இயல்பும் | வாழி, வாழிய |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 10. | அம்ம | | | 'ஆ'காரமாக நீளும் | அம்மா கேள்<br>அம்ம கேள் |
| 11. | பல | | செய்யுளுள் ஓசை கருதி | நீளலுமுண்டு | பலாஅம், சிலாஅம் |
| 12. | பல, சில | பல, சில | | ல், ற் ஆகலுமுண்டு | பலபல, பற்பல<br>சிலசில, சிற்சில |
| 13. | பல, சில | பல சில | | உறழ்ச்சி (இருவிதமும்) | பலபல, பலப்பல<br>சிலசில, சிலச்சில |
| 14. | அ (ஈறு) | க ச த ப | வேற்றுமை | கசதப-ஒற்றுமிகும் | விளக்குறை, விளமரம் |
| 15. | விள | க ச த ப | வேற்றுமை | மெல்லெழுத்து மிகும் | விளங்கோடு |
| 16. | மக | க ச த ப | வேற்றுமை | 'இன்' சாரியை வரும் | மகவின்கை |
| 17. | மக | க ச த ப | வேற்றுமை | 'அத்து'ம் வரும் | மக+அத்து+கை=<br>மகத்துக்கை |
| 18. | பல | க ச த ப | வேற்றுமை | இடையே வற்றுப்பெறும் | பலவற்றுக்கிளை |
| 1. | ஆ (ஈறு) | க ச த ப | அல்வழி | க ச த ப வல்லொற்று மிகும் (அகர ஈற்றைப் போலப் புணரும்) | ஆலாப் பறந்தான்,<br>சுறாக்கடிது. |
| 2. | 'செய்யா' | க ச த ப | அல்வழி | க ச த ப வல்லொற்று மிகும் (அகர ஈற்றைப் போலப் புணரும்) | வாழாக் கிடந்தான்,<br>தவறாச் செய்தான் |
| 3. | இரா+பகல் | உம்மைத்தொகை | அல்வழி | இராவுடன் ஓர் 'அ' மிகும் | இராஅப் பகல் |
| 4. | ஆ மா முருகா யா வாரா மியா உண்கா | க ச த ப | அல்வழி | இயல்பாகப் புணரும் | ஆ கரிது, மா கொடிது முருகா பார், யா பெரிய, உண்கா தோழனே |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 5. | ‘ஆ’ஈற்றுப்பெயர்கள் | க ச த ப | வேற்றுமை | வல்லெழுத்து மிக்கு முடியும் | புறாச்சிறகு, பலாப்பழம் |
| 6. | பலா, கா | | | இடையே அ தோன்றும் | பலாஅக் கிளை, காஅக் கூட்டம் |
| 7. | இரா | க ச த ப | வேற்றுமை | அகரம் - சேராது | இராக்கொண்டான் |
| 8. | நிலா | க ச த ப | வேற்றுமை | அத்துச்சாரியை வரும் | நிலாத்துக் கொண்டான் |
| 9. | யா, பிடா, தளா (மரங்கள்) | க ச த ப | வேற்றுமை | மெல்லெழுத்து மிக்கு முடியும் | யாஅங்கிளை, பிடாஅந்தழை, தளாஅம்பூ |
| 10. | யா, பிடா, தளா (மரங்கள்) | | | வல்லெழுத்தும் மிகலாம் | யாஅக்கிளை |
| 11. | மா(மரம்), ஆ, மா (விலங்கு) | க ச த ப | வேற்றுமை | ஆ, மா இரண்டும் அகரமின்றி, ன் பெறும் | மாஅங்கினை, மாஅம்பூ, இது மாங்கிளை, மாம்பூ என்றும் வரும். ஆன் கொம்பு, மான்கால். |
| 12. | ஆன் என்பதிலுள்ள ன் | க ச த ப | வேற்றுமை | அகரம் பெறுதலுமுண்டு | ஆன நெய் |
| 13. | ஆன் | பீ | வேற்றுமை | தன்ஒற்று மிகுந்து ஈ-ஐ ஆதலுமுண்டு | ஆப்பி |
| 14. | இரா, பலா, இறா, தடா, புறா | க ச த ப | வேற்றுமை | ஒரு மாத்திரை குறைந்தும் உகரம் பெற்றும் வரும் | இர, இரவு, பல, பலவு, இற, இறவு, தட, தடவு, புற, புறவு |
| 1. | இ இகர ஈற்றுப் பெயர்கள் கிளி, குருவி, எலி | க ச த ப | வேற்றுமை | தமக்குப் பொருந்திய வல்லெழுத்து மிகும் | கிளிக்கால், கிளிச்சிறகு, குருவித்தலை, எலிப்பொறி |
| 2. | இனி (காலம்), அணி (இடம்) | க ச த ப | வேற்றுமை | மேற்படி | இனிப்பேசுக, அணிச்சென்றான், ஓடிப்போனான், |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | | | | | பாடிப்பார்த்தான் |
| 3. | இன்றி வினையெச்சம் | | செய்யுளுள் வரும் | 'இன்றி'யிலுள் இ - உகரமாதலுண் டு. | உப்பின்றி உண்க, உப்பின்று உண்க. நாளன்றி போகி – நாளன்று போகி. |
| 4. | இ (சுட்டு) | | | 'அ'-சுட்டுக்குக் கூறிய, அனைத்தும் இதற்கு வரும் | மெல்லெழுத்து வரின் மிகும் -இஞ்ஞான்று இந்நிலம். 'இடை'யும் உயிரும் வரின் வ் மிகும். இவ்யாழ் ஈவயின் செய்யுளுள் ஈவயின். |
| 5. | தூணி | பதக்கு | வேற்றுமை | வல்லொற்று மிகும். | தூணிப்பதக்கு |
| 6. | நாழி | உரி | | நாழியில் 'ழி' கெடும் ட் ஒற்று வரும் + உரி சேரும் | நாடுரி |
| 7. | பனி | க ச த ப | | அத்து இன் - சாரியை | பனியிற் கிடந்தான் |
| 8. | வளி | க ச த ப | | மேற்படி | வளியிற் பறந்தது, வளியத்துச் சென்றான் |
| 9. | உதி | க ச த ப | | இன மெல்லெழுத்து வரும் | உதிங்கோடு, உதிந்தோல், உதிஞ்செதின், உதிம்பட்டை |
| 10. | புளி (மரம்) | க ச த ப | | அம் - சாரியை வரும் | புளியங்காய் புளியம்பழம் |
| 11. | புளி (சுவை) | க ச த ப | | மெல்லெழுத்து மிகும் | புளியங்கூழ், புளியம்பட்டை |
| 12. | புளி (சுவை) | க ச த ப | | வல்லெழுத்து மிகலாம் | புளிக்கூழ், புளிச்சோறு |
| 13. | பரணி (நாள்) | வினைச்சொல் | | ஆன் - சாரியை வரும் | பரணியாற் கொண்டான் (திருமணம்) |
| 14. | ஆடி (திங்கள்) | வினைச்சொல் | | இக்கு – சாரியை வரும் | ஆடிக்குப் போகலாம் |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 1. | ஈ (ஈற்றெழுத்து) | க த ச ப | அல்வழி | அகர இயல்பிற்கு ஆ ஆகார இயல்பிற்று ஈ | ஈப் பறந்தது,ஈச்சிறிது |
| 2. | நீ, பீ, மீ (மேலே) | க த ச ப | அல்வழி | இயல்பாய் முடியும் | நீ பார், பீ கிடந்தது, மீ கண் |
| 3. | மீ (இடம்) | க த ச ப | | வல்லெழுத்து மிகும் | மீப்பல், மீக்கூடு, மீப்படுக்கை |
| 4. | ஈகார ஈறு | க த ச ப | வேற்றுமை | ஆகார ஈற்று அல்வழி போல் வல்லொற்று மிகும் | ஈக்கால்,ஈச்சிறகு, தீக்கொடுமை |
| 5. | நீ | | வேற்றுமை | நெடுமுதல் குறுகி (நீ) ன் வரும் | நின் கை, நின் தான் |
| 1. | உ (உகர ஈறு) | க த ச ப | அல்வழி | அகர ஒற்றுக்குக் கூறியபடி ஒற்று மிக்கு முடியும் | பாட்டுச் சிறந்தது பட்டுப் பெரிது |
| 2. | உ (சுட்டு) | க த ச ப | அல்வழி | அகர ஈற்றுச் சுட்டிற்றுக் கூறியபடி வரும் | உக்கருவி, உப்படுக்கை |
| 3. | உ (சுட்டு) | பிற உயிர், மென், இடைக்கணங்கள் | | மேற்படி | உவ்வுடல், உஞ்ஞான்று |
| 4. | அது, இது | | அல்வழி | வல்லெழுதது மிகாது இயல்பாகும் | அது சிறிது இது பெரிது |
| 5. | அது | அன்று, ஐ | | அன்று, ஆன்று ஆகும் ஐ-வரின் உ கெடும் | அது+அன்று =அதான்று அது+ஐ=அதை |
| 6. | ‘உ’ஈற்றுப்பெயர் | | வேற்றுமை | அகர ஈற்று அல்வழி போல் வல்லெழுத்து மிகும். | பட்டுப்புழு, கட்டுச்சோறு |
| 7. | எரு, செரு | | அல்வழி | அம்-சேரும் ‘செரு’ | எருவங்குழி, எருக்குழி, செருக்களம் என்பதே |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | | | | வில் அம் என்பதன் ம் கெடும். வேற்றுமைப் புணர்ச்சி போலாது வேறுபடுதலுண் டு ஒற்று மிகும். | பொதுவிதி. |
| 8. | உகர ஈற்றுமொழி | க த ச ப | செய்யுள் வழக்கு | ழு-ழூ ஆக நீளும் உகரம் வந்து சேரும் | பழூஉப்பல், எழூஉக்கதவு |
| 9. | ஒடு மரம் | | | உதி-மரச்சொல் போல் மெல்லெழுத்து மிகும் | ஒடுங்கிளை, ஒடும்பூ |
| 10. | அது, இது | | | உரு புணர்ச்சியில் சொன்னபடி, அன் பெறும். உ-கெடும். ஒற்று மிகாது. | அது+அதன்+கிளை =அதன்கிளை |
| 1. | ஊ (ஊ கார ஈறு) | க ச த ப | அல்வழி | ஆகார ஈற்று – அல்வழி போல், ஒற்று மிகும். | கொண்மூப் பெரிது (மேகம்) |
| 2. | ஊ-ஈறு வினை எச்சச்சொல் முன்னிலை வினை | க ச த ப | | வல்லெழுத்து மிக்கு முடியும் | நினையூச் செய்தான் தூக்கொற்றா (தூ-தூவுக) |
| 3. | மேற்படி | க ச த ப | வேற்றுமை | ஆகார ஈற்று அல்வழி போல் ஒற்று மிகும் | கொண்மூக்கூட்டம் |
| 4. | உடு | | | இறுதியில் ‘உ’ தோன்றும் | உடூஉக்குறை, தூஉக்குறை (உடு-வான்மீன், தூ-வலிமை) |
| 5. | பூ | | | உகரம் சேராது, சிறுபான்மை | பூக்கொடி, பூங்கொடி |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | | | | வலி மிகும். பெரும்பான்மை மெல்லெழுத்து மிகும். | |
| 6. | ஊ (தசை) | | | 'ஆ'-எனும் பெயர் போல 'ன்' பெறும் | ஊன் குறை ஊன் புரை |
| 7. | ஊ | | | ன் -உடன் அக்குச் சாரியையும் பெறுதலுண்டு | ஊனக்குறை |
| 8. | ஆடூஉ, மகடூஉ | | | வல்லெழுத்து மிகுதலேயன்றி 'இன்' சாரியையும் வரும் | ஆடூஉவின்கை |
| 1. | எ, ஒ எகர ஒகரம் முன்னிலை வினை | க ச த ப | | பெயர்க்கீறு ஆகா. முன்னிலை மொழிகளில் வல்லொற்று மிகும். | ஏஎக்குயிலி! ஓஒக்குமரனே! |
| 2. | எ, ஒ (தேற்றம், சிறப்புப் பொருளில்) | க ச த ப | | வல்லொற்று மிகாது இயல்பாகும் | அவனோ செய்தவன் அவனோ ஒ கொடையாளி! |
| 1. | ஏ (ஏகார இறுதி பெயர்கள்) | க ச த ப | அல்வழி | ஊகார ஈற்றுக்குக் கூறியபடி வரும் வல்லொற்று மிகும் | சேக்கடிது (சே-வருது) பேக்கொடிது (பேய்) |
| 2. | ஏ இடைச்சொல் எதிர்மறை, எச்சம், வினா, எண்ணுப்பெயர் | க ச த ப | அல்வழி | இயல்பாகும் | யானே குடித்தேன்? (எதிர்மறை) நீயே கொடுத்தாய்? பண்ணே பண்திறனே. |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 3. | ஏ-ஈறு | க ச த ப | வேற்றுமை | அல்வழி போல் வரும் | வேக்குடம் (வேதலையுடைய குடம்) |
| 4. | ஏ-இறுதி | | | அடுத்து 'எ' வரும் | ஏஎ, ஏஎப் புழை (ஏ-அம்பு) |
| 5. | சே (மரம்) | | | ஒடு-மர விதியைப் பெறும், மெல்லெழுத்து மிகும். | செங்கோட, சேம்பூ |
| 6. | சே (பசு) | | | இன் - சாரியை பெறும் | சேவின் கொம்பு |
| 1. | ஐ<br>ஐகார ஈறு | க ச த ப | வேற்றுமை | வல்லொற்று மிகும் | பானைச்சோறு<br>யானைக்கொம்பு |
| 2. | அவை | | | உரு புணர்ச்சியில் கூறியபடி வரும் ஐ-கெட்டும் கெடாதும் வற்று சாரியைப் பெறும். | அவற்றுச்செவி, அவையற்றுச் செவி |
| 3. | விசை, ஞெமை, நமை (மரம்) | | | சே-மர – புணர்ச்சி போல மெல்லெழுத்து மிகும் | விசைங்கிளை, ஞெமைந்தோல், நமைஞ்செதின் |
| 4. | பனை, அரை, ஆவிரை | | | அம்-சாரியை பெறும் பனை, ஆவிரையில் மெய் நிற்க ஐ கெடும் | அரையங்காய், பனம்பூ, ஆவிரம்பூ |
| 5. | பனை | அட்டு | | ஐ-கெடும், ஆ-சேரும் | பனாட்டு |
| 6. | பனை | கொடி | | ஐ-நிற்க வல்லொற்று | பனைக்கொடி |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | | | | மிகும் | |
| 7. | சித்திரை,ஆதி ரை | வினைச்சொல் | | முன்பு ஆடிமாதம் பரணி நாளுக்குக் கூறியது போல முறையே இக்கும் ஆனும் பெறும் | சித்திரைக்குச் செய்து கொண்டான் ஆதிரையாற் கொண்டாடினான் |
| 8. | மழை | வினைச்சொல் | | வளி- சொல்லுக்குரிய படி வரும் | மழையத்துப் போனான் மழையிற் கிடந்தான் |
| 9. | வேட்கை | அவா | செய்யுளில் | அத்தும் இன்னும் பெறும் | வேட்கை+அவா வேட்+அவா, வேண்+அவா= வேணவா |
| 1. | ஓ ஓகார இறுதி | க ச த ப | அல்வழி | ‘ஏ’ கார ஈற்றுப் பெயர்கள் போல வல்லொற்று மிகும். | ஓச்சிறிது (மதகு நீர்ப்பலகை) |
| 2. | எதிர்மறை ‘ஓ’ வினா ‘ஓ’ ஐய ‘ஓ’ | க ச த ப | | இயல்பாகும் | யானோ திருடினேன்- எதிர்மறை நீயோ திருடியவன்- வினா நன்றோ? தீதோ? – ஐயம் |
| 3. | ஒழியிசை ஓ | க ச த ப | | இயல்பாகும் | படிக்கவோ போனான் |
| 4. | ஓ (பெயர்) | | வேற்றுமை | வல்லொற்று மிகும் ஒ சேரும் | ஓஒப் பெருமை |
| 5. | கோ | இல் | | ஒ-தோன்றாது | கோயில், கோவில் |
| 6. | சில ‘ஓ’ஈற்றுச்சொ ற்கள் | | | உருபு புணர்ச்சிபோல வரும். ஒன்- சாரியை பெற்று இயல்பாய் | கோஒன் கை |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | | | | வரும் | |
| 1. | ஔ | க ச த ப | அல்வழி வேற்றுமை | வல்லெழுத்து மிகும் இறுதியில் ‘உ’ வருதல் சிறப்பு | கௌவுக் கடிது கௌவுக் கடுமை |

## வினாக்கள்

**பத்திவினா**

1. உயிர்மயங்கியல் பெயர்க்காரணம் கூறுக.
2. ‘நீட வருதல் செய்யுளுள்ள உரித்தே’ - விளக்குக.
3. இயல்பாக முடியும் அகர ஈற்றுச் சொற்கள் - விளக்குக.
4. தொல்காப்பியர் காலத்திய அளவு, காலப்பெயர்களின் புணர்ச்சிகளைச் சுட்டுக.
5. பனங்காய், பனாஅட்டு, பனைக்கொடி என்பனவற்றைப் பிரித்து புணர்ச்சி விதி தருக.
6. ‘ஒகார இறுதி ஏகார இயற்றே’ விளக்குக.

**கட்டுரை வினா**

1. ஐகார ஈற்றுச் சொற்களின் புணர்ச்சி பற்றித் தொல்காப்பியர் கருத்துக்களை விவரிக்க.
2. அல்வழியில் அகர ஈற்றுப்பெயர்ப் புணர்ச்சி – விளக்குக.
3. பல சில ஆகியவற்றுக்கு உரிய சிறப்புப் புணர்ச்சி விதிகள் யாவை?
4. அகர ஈற்றுப் பெயர்கள் வேற்றுமையில் புணருமாற்றைத் தொகுத்து எழுதுக.
5. ஆகார ஈற்றுச் சொற்கள் அல்வழியில் புணருமாற்றைத் தொகுக்க.
6. ஆகார ஈற்றுச் சொற்கள் வேற்றுமையில் புணருமாற்றைத் தொகுக்க.
7. இகர ஈற்றுச் சொற்கள் வேற்றுமையில் புணருமாற்றைத் தொகுக்க.
8. ஈகார ஈற்றுச் சொற்களின் புணர்ச்சி விதிகளைத் தொகுக்க.
9. உகர ஈற்றுச் சொற்கள் அல்வழியில் புணருமாற்றைத் தொகுக்க.
10. உகர ஈற்றுச் சொற்கள் வேற்றுமையில் புணருமாற்றைத் தொகுக்க.
11. ஊகார ஈற்றுச் சொற்களின் புணர்ச்சி விதிகளைத் தொகுக்க.
12. ஏகாரவீற்றுச் சொற்களுக்குக் கூறப்பட்ட புணர்ச்சி விதிகளைத் தொகுக்க.
13. ஐகார வீற்றுச் சொற்களுக்குக் கூறப்பட்ட புணர்ச்சி விதிகளைத் தொகுக்க.
14. ஒகர ஈற்றுச் சொற்களின் புணர்ச்சி விதிகளைத் தொகுக்க.
15. ஔகார வீறு அல்வழியிலும் வேற்றுமையிலும் எவ்வாறு முடியும்?

# 8. புள்ளிமயங்கியல்

புள்ளியுள்ளதே மெய்யீறாகும் மரம் புள்ளி ஈறு, பல என உயிர்மெய்யீறாக நின்றால் (ல்+அ). அது உயிரீறாகிவிடும். இதனை முன்பே,''அவற்றுள், மெய்யீறெல்லாம் புள்ளியொடு நிலையல்'' என விளக்கிய தொல்காப்பியர், புள்ளி மயங்கியல் எனப் பெயரிட்டு, அப்புள்ளியீறு நான்கு கணங்களோடும் கலந்து மயங்குமாற்றை இவ்வியலில் விளக்குகிறார். மொழியீறாகும் மெய்கள் ஞ ண ந ம ன: ய ர ல வ ழ ள என்னும் பதினொன்று என கூறிய தொல்காப்பியர், அதே அடிப்படையில் மெய்யின் புணர்ச்சி நிலைகளை விளக்குகிறார்.

தமிழில் வல்லெழுத்துக்கள் மொழி ஈறாவதில்லை. பிறமொழிச் சொற்கள் வல்லெழுத்தில் முடிவன தமிழிற் கலந்தால், அவை குற்றுகரம் பெற்று நிற்கும். பாக்கெட்-பாக்கெட்டு என மாறும். தனிமெய் மொழிமுதலில் வராமையும், மொழியிறுதியில் வல்லினம் இடம்பெறாமையும் தமிழை இனிமையாகவும் எளிமையுடைய மொழி ஆக்குகின்றன என்பதை உணர வேண்டும். வல்லெழுத்து மொழி ஈறாக வரும்போது குற்றுகரமாகி விடுவதானல்தான், குற்றியலுகரப் புணரியல் தனியே அமைகிறது. இவ்வியில் வன்கணத்தோடும் பிற கணங்களோடும் பெயர் வினைச்சொற்களாய் நின்று அல்வழி வேற்றுமையில் புள்ளி ஈறுகள் புணர்வதை விளக்குகின்றது.

### மெல்லொற்று ஈறுகளின் புணர்ச்சி

### ஞகர ஈறு

### ஞகர ஈற்றும் தொழிற்பெயர் வல்லெழுத்துடன் புணர்தல்

**ஞகாரை ஒற்றிய தொழிற்பெயர் முன்னர்**
**அல்லது கிளப்பினும் வேற்றுமைக் கண்ணும்**
**வல்லெழுத் தியையின் அவ்வெழுத்து மிகுமே**
**உகரம் வருதல் ஆவயி னான (296)**

ஞகாரம் ஒற்றாக ஈற்றில் நிற்கும் முதனிலைத் தொழிற்பெயர் முன்னர், க ச த ப என்னும் வல்லெழுத்துக்கள், அல்வழிக் கண்ணும் வேற்றுமைக் கண்ணும் வருமொழி முதலெழுத்துக்களாக வந்து புணரின், அவ்வெல்லெழுத்தே மிக்கு முடியும். அங்கு நிலைமொழிக்கண் உகரம் வர வேண்டும். ஒற்றிய-ஒற்றாக நின்ற, அல்லது கிளப்பினும் - அல்வழியில் சொன்னாலும், உரிஞுஉக் கடிது.

**அது ஞநமவ வுடன் புணர்தல்**

**ஞ ந ம வ இயையினும் உகரம் நிலையும் (297)**

வருமொழி முதலில் ஞ ந ம வ எழுத்துக்கள் வரினும் நிலைமொழியின்கண் உகரம் நிலைபெறும். உரிஞுஉ ஞான்றது.

**நகர ஈறு**

**அல்வழியில் நகர ஈறு புணர்தல்**

**நகர இறுதியும் அதனோ ரற்றே (298)**

நகரவீற்றுப் பெயரும் மேற்கூறிய ஞகரவீற்றுப் புணர்ச்சியுடன் ஒத்துமுடியும். அதாவது உகரம் பெறுதல், க ச த பக்கள் வரின் மிகுதல், ஞ ந ம வக்கள் வரின் இயல்பாதல் என்பனவாம். பொருநுக் கடிது.

**வேற்றுமையில் நகர ஈறு புணர்தல்**

**வேற்றுமைக்(கு) உக்கெட அகரம் நிலையும் (299)**

நகரவீறு வேற்றுமைப் புணர்ச்சிக்கண் எய்திய உகரம் கெட அகரம் வந்து நிலைபெறும். பொருநச் சாதி.

**வெரிந் என்னும் நகர ஈறு**

**வெரிந்என் இறுதி முழுதுங் கெடுவழி**
**வருமிடன் உடைத்தே மெல்லெழுத் தியற்கை (300)**

வெரிந் என்னும் சொல்லினிறுதியானது முற்கூறிய சாரியையுடன் முழுவதும் கெட்டு நிற்குமிடத்து, மெல்லெழுத்து மிகுதலாகிய இயல்பு தோன்றுமிடமும் உண்டு. வெரிங்குறை (வெரிந்-முதுகு)

**அதற்கு மேலும் ஒரு முடிபு**

**ஆவயின் வல்லெழுத்து மிகுதலும் உரித்தே (301)**

வெரிந் என்னும் சொல், அவ்வாறு ஈறுகெட்டு நின்றவிடத்து, மெல்லெழுத்தேயன்றி வல்லெழுத்து மிக்கு முடிதலும் உண்டு. வெரிக்குறை.

**ணகர ஈறு**

**வேற்றுமையில் ணகர ஈற்றுப் புணர்ச்சி**

**ணகார இறுதி வல்லெழுத் தியையின்**
**டகார மாகும் வேற்றுமைப் பொருட்டே (302)**

ணகார ஈற்றுப்பெயர் வல்லெழுத்து முதல்மொழி வரின், வேற்றுமைப் பொருட்புணர்ச்சி டகாரமாய் முடியும். மண்+குடம்=மட்குடம்.

**ஆண், பெண் என்னும் விரவுப்பெயர்கள்**

**ஆணும் பெண்ணும் அஃறிணை இயற்கை (303)**

ஆண், பெண் என்னும் விரவுப்பெயர்கள் முன்பு அஃறிணை விரவுப்பெயர்க்குக் கூறிய இலக்கணப்படி அமையும். முன்பு தொகைமரபில் 'அஃறிணை விரவுப்பெயர் இயல்புமாருளவே' என்று கூறியது இங்கு மாட்டேற்றப்பட்டது. ஆண், பெண் என்பன இருதிணைக்கும் பொது. ஆண் கை, பெண் கழுத்து, இவற்றின் அல்வழி முடிபு முன்பு கூறப்பட்டது.

**ஆண் என்னும் மரப்பெயர்ப் புணர்ச்சி**

**ஆண்மரக் கிளவி அரைமர இயற்றே (304)**

ஆண் என்னும் மரப்பெயர்ச்சொல், அரை என்னும் மரப்பெயர் இயல்பிற்றாய் முடியும். அதாவது 'அம்' சாரியை பெறும். ஆணங்கோடு.

**விண் என்னும் சொற்புணர்ச்சி: செய்யுள் மரபு**

**விண்என வரூஉம் காயப் பெயர்வரின்**
**உண்மையும் உரித்தே அத்தென் சாரியை**
**செய்யுள் மருங்கின் தொழில்வரு காலை (305)**

செய்யுளில் வினைச்சொல் எதிரே வரும்போது, நிலைமொழியாக நிற்கும் விண் என்னும் ஆகாயத்தை உணர்த்தும் பெயர்க்கண் அத்துச் சாரியை உண்டாதலும் உரித்து. இல்லையாதம் உரித்து. விண்ணத்துக் கொட்கும். 'விண்குத்தும் நீள்வரை'. காயப்பெயர்-ஆகாயத்தை உணர்த்தும் பெயர். தொழில்-வினைச்சொல்

**ணகர ஈற்றுத் தொழிற்பெயர்ப் புணர்ச்சி**

**தொழிற்பெயர் எல்லாம் தொழிற்பெயர் இயல (306)**

ணகரவீற்றுத் தொழிற்பெயரெல்லாம் அல்வழி, வேற்றுமை இரண்டிலும் ஞகர ஈற்றுத் தொழில்பெயர் போலப் புணரும். அதாவது எதிரே வல்லெழுத்து வந்தால் வல்லெழுத்தும் உகரமும் தோன்றும். மெல்லெழுத்தும் இடையெழுத்தில் வகரமும் வரின் உகரம் பெறும். மண்ணுக்கடிது, மண்ணு வலிது.

### ணரக ஈற்றுக் கிளைப்பெயர்ப் புணர்ச்சி

**கிளைப்பெயர் எல்லாம் கொளத்திரி பிலவே (307)**

ணகரவீற்று இனப்பெயர்கள் எல்லாம் கொள்ளுதற்கான திரிபுகள் எதனையும் உடையனவல்ல. இயல்பாகப் புணரும். உமண்குடி, பாண்சேரி.

### அல்வழியில் எண் (எள்) என்னும் உணவுப்பெயர்

**வேற்றுமை யல்வழி எண்ணென் உணவுப்பெயர்**
**வேற்றுமை இயற்கை நிலையலும் உரித்தே (308)**

வேற்றுமையல்லா அல்வழிப் புணர்ச்சியில் எண் (எள்) என்னும் உணவுப்பெயர், வேற்றுமைக்குரிய இலக்கணத்தில் நிலைபெறுதலும் உண்டு. வேற்றுமைப்புணர்ச்சி முன்பு கூறப்பட்டது. எட்சிறிது, உம்மையால் எண்சிறிது எனவும் வருமென்பதாம்.

### இருவழியிலும் முரண் என்னும் தொழிற்பெயர்

**முரண்என் தொழிற்பெயர் முதலியல் நிலையும் (309)**

'முரண்' என்னும் முதனிலைத் தொழிற்பெயர், முன்னர்க் கூறிய இலக்கணத்தில் நிலைபெறும். அதாவது அல்வழியில் இயல்பாகவும் வேற்றுமையில் டகரமாகத் திரிந்தும் நிற்கும். முரண் பெரிது, முரட்கடுமை.

### மகர ஈறு

### வேற்றுமையில் மகர ஈற்றின் புணர்ச்சி

**மகர இறுதி வேற்றுமை யாயின்**
**துவரக் கெட்டு வல்லெழுத்து மிகுமே (310)**

மகரவீற்றுப் பெயர்ச்சொற்கள், வேற்றுமைப் புணர்ச்சியில், அம்மகரம் முற்றக்கெட்டு, வந்த வல்லெழுத்து மிக்கு முடியும். துவர-முழுவதும், மரப்பெட்டகம்.

### அதற்கு மேலும் இரண்டு முடிபுகள்

**அகர ஆகாரம் வரூஉம் காலை**
**ஈற்றுமிசை அகரம் நீடலும் உரித்தே (311)**

ஒருசில மகர ஈற்றுச்சொற்கள் அ, ஆ வை முதலாகவுடைய சொற்கள் எதிரே வரும்பொழுது,ஈற்று மகரம் கெட, நின்ற அகரம் நீளுதலும் உண்டு. நீடாது நிற்றலுமுண்டு. மரம்+அடி=மராஅடி, மரவடி.

**மெல்லெழுத்து உறழும் மொழியுமா ருளவே**

**செல்வழி அறிதல் வழக்கத் தான (312)**

அம்மகர ஈற்றுச்சொற்களுள் மெல்லெழுத்துப் பெற்று முடிவனவும் உள். அங்ஙனமாகாது வல்லினம் பெறுதுலுமுண்டு. வழக்கில், அவை வழங்குமிடம் அறிக. குளங்கரை, குளக்கரை.

**'இல்லம்' மரபுப்பெயர்ப்புணர்ச்சி**

**இல்ல மரப்பெயர் விசைமர இயற்றே (313)**

இல்லம் என்னும் மரப்பெயர் விசை என்னும் மரப்பெயரின் இயல்பிற்றாய் முடியும். அதாவது மெல்லெழுத்து மிக்கு முடியும். இல்லங்கட்டை, சூ.282,278. தொடர்ந்து வரும் மாட்டேற்று இது.

**அல்வழியில் மகரஈற்றுப் புணர்ச்சி**

**அல்வழி எல்லாம் மெல்லெழுத் தாகும் (314)**

மகர ஈறு அல்வழிப் புணர்ச்சி அனைத்திலும் மெல்லெழுத்தாய்த் திரிந்து முடியும். மகர ஈறு திரிந்து மெல்லெழுத்தாகும். இங்ஙனம் உயத்துணரக் கூடிய இடங்களில், கற்பார்க்கு வேலை தந்து, சுருங்கக்கூறுவது ஒரு தொல் நடை இதைப் பல இடத்தும் காணலாம். மரங்குட்டையானது.

**அகம்+கை=அங்கை**

**அகமென் கிளவிக்குக் கைமுன் வரினே**
**முதனிலை ஒழிய முன்னவை கெடுதலும்**
**வரைநிலை இன்றே ஆசிரி யர்க்க**
**மெல்லெழுத்து மிகுதல் ஆவயி னான (315)**

அகம் என்ற சொல்முன் கை என்ற சொல் வந்து புணரின்,'அ' என்ற முதனிலை மட்டும் இருக்க, அதன் முன்னின்றவை கெடும். இ∴து ஆசிரியர்க்கு நீக்கும் நிலைமை இன்று. அவ்விடத்தே வருமொழிக் கை என்பதற்கு இனமான மெல்லெழுத்து மிகும். அகம்+கை=அங்கை.

**இலம்+படு=இலம்படு**

**இலம்என் கிளவிக்குப் படுவரு காலை**
**நிலையலும் உரித்தே செய்யு ளான (316)**

இலம் என்ற சொல்முன் படு என்ற முதனிலைத் தொழிற்பெயர் வரும்போது, மகர ஈறு முற்கூறியாங்குக் கெடாது நிற்றலும் உரித்து. செய்யுட்கண், இலம்படு.

**ஆயிரம் என்னும் மகர ஈற்று எண்ணுப்பெயர்**

**அத்தொடு சிவணும் ஆயிரத்து இறுதி**
**ஒத்த எண்ணு முன்வரு காலை (317)**

ஆயிரம் என்னும் சொல்லின் இறுதி இயைவதற்குப் பொருந்தின எண்ணுப்பெயர் வருமொழியாய்த் தன்முன் வரும்போது, அத்துச்சாரியை பொருந்தும். ஒத்த எண்ணு-தனக்கு அகப்படு மொழியாய்ப் பொருந்தின எண்ணுப்பெயர் என்பர். அதாவது ஆயிரத்திற்குட்பட்ட எண்கள். ஆயிரத்துநூறு.

**அடையடுத்த ஆயிரம் புணர்தல்**

**அடையொடு தோன்றினும் அதனோ ரற்றே (318)**

ஆயிரம் என்னும் எண்ணுப்பெயர் பதினாயிரம், மூவாயிர் என அடையடுத்து வந்தாலும் மேற்சொன்னதோடு ஒரு தன்மையத்தாய் முடியும். அதாவது அத்துப்பெறும். மூவாயிரத்து இரண்டு.

**ஆயிரத்தின் முன் முகத்தலளவை நிறுத்தலளவைப் பெயர்கள்**

**அளவும்நிறையும் வேற்றுமை இயல (319)**

ஆயிரம் என்ற எண்ணுப் பெயர்முன் முகத்தல் அளவைப் பெயரும் நிறுத்தலளவைப் பெயரும் வந்து புணர்ந்தால் வேற்றுமைப் புணர்ச்சியின் இயல்பாய் மகரம் கெட்டு, வல்லெழுத்து மிக்கு முடியும். ஆயிரக்கலம், ஆயிரக்கழஞ்சு.

**வேற்றுமையில் மகர ஈற்று உயர்திணைப் பெயரும் விரவுப்பெயரும்**

**படர்க்கைப் பெயரும் முன்னிலைப் பெயரும்**
**தொடக்கம் குறுகும் பெயர்நிலைக் கிளவியும்**
**வேற்றுமை யாயின் உருபியல் நிலையும்**
**மெல்லெழுத்து மிகுதல் ஆவயி னான (320)**

எல்லாரும் என்னும் படர்க்கைப் பெயரும் எல்லீரும் என்னும் முன்னிலைப்பெயரும் நெடுமுதல் குறுகி முடியும் தாம் நாம் யாம் என்னும் பெயர்களும் வேற்றுமைப் புணர்ச்சியாயின், உருபு புணர்ச்சி இயல்புப்படி முடியும். அதாவது சாரியை பெறுவன ஈறுகெட்டு, இடையும் ஈறும் சாரியை பெற்றும், நெடுமுதல் குறுகுவன குறுகியும் முடியும். அந்நெடுமுதல் குறுகும் மொழிகளில் வல்லெழுத்து மிகும். எல்லாரும்+கை=எல்லார்தங்கையும்.

**அல்வழியில் அவை புணரும் நெறி**

**அல்லது கிளப்பின் இயற்கை யாகும் (321)**

அல்வழியில் கூறினால் அவை இயல்பாகப் புணரும். அதாவது சாரியை பெறா. எல்லாரும் பெரியர்.

**எல்லாம் என்னும் விரவுப்பெயர்ப் புணர்ச்சி**

**அல்லது கிளப்பினும் வேற்றுமைக் கண்ணும்**
**எல்லாம் எனும்பெயர் உருபியல் நிலையும்**
**வேற்றுமை யல்வழிச் சாரியை நிலையாது (322)**

அல்வழியிலும் வேற்றுமையிலும் எல்லாம் எனும் விரவுப்பொய் உருபியலிலே கூறிய விதிப்படி முடியும். அதாவது இடையில் வற்றுச் சாரியையும் இறுதியில் உம்முச் சாரியையும் பெறும். அல்வழியில் சாரியை நிலைபெறாது. எல்லாவற்றுக்கொம்பும், எல்லாக் கடையிலும்,'உருபியல் நிலையும்' என ஒரே தொடரால், உருபியல் விதிகள் மாட்டேற்றப்படும் இடங்கள் பலவுள என்பதை நினைவு கொள்க.

**அதற்கு மேலும் ஒரு முடிபு**

**மெல்லெழுத்து யிகினும் மான மில்லை (323)**

முற்கூறிய 'எல்லாம்' என்னும் விரவுப்பெயர்ச்சொல், வருமொழி வன்கணம் வரின் இனமெல்லெழுத்து மிகும். அதில் தவறில்லை. எல்லாங்குறியவும்.

**அதற்கு உயர்திணை முடிபு**

**உயர்திணை யாயின் உருபியல் நிலையும் (324)**

எல்லாம் என்பது அ.்.றிணைப் பெயராக அல்லாமல் உயர்திணையை உணர்த்தி வருமாயின் உருபு புணர்ச்சிக்கு ஓதிய இயல்பிற்றாய் முடியும். அதாவது 'நம்' சாரியை இடைவருதல். எல்லாநங் கைகளும்.

**நும் என்னும் பெயரின் வேற்றுமைப் புணர்ச்சி**

**நும்என் ஒருபெயர் மெல்லெழுத்து மிகுமே (325)**

சாரியை அல்லாத 'நும்' என்னும் பெயர் மெல்லெழுத்து மிக்குப் புணரும். நுங்கை, நுஞ்செவி.

### நும் என்னும் பெயரின் அல்வழிப் புணர்ச்சி

**அல்லதன் மருங்கிற் சொல்லுங் காலை**
**உக்கெட நின்ற மெய்வரின் ஈவர**
**இஇடை நிலைஇ ஈறுகெட ரகரம்**
**நிற்றல் வேண்டும் புள்ளியொடு புணர்ந்தே**
**அப்பான மொழிவயின் இயற்கை யாகும் (326)**

அந் 'நும்' என்னும் பெயரை, அல்வழியிற் சொல்லுமிடத்து உகரம் கெடும். உகரம் கெட்டபின் நின்ற நகரமெய்யின் மேல் ஈகாரம் ஊர்ந்து 'நீ' என ஆகும். இடையே ஓர் இகரம் நிலைபெற்று, முன்னின்ற மகரஈறு கெட, ரகரப்புள்ளி சேர்ந்து நிற்க வேண்டும். அவ்விதி ஈறாக நிற்கும் மொழியிடத்து வருமொழி இயல்பாகப் புணரும். அல்லதன் மருங்கில் - அல்வழியில் ரகரம் புள்ளியொடு புணர்ந்து நிற்றல் வேண்டும். விதியீறு என்பது, இயல்பாக நிற்றலின்றிப் புணர்ச்சியால் வேறுபட்டபின் ஏற்படும் ஈறு. மரம் என்பதில் 'ம்' இயல்பீறு, மர என மகரம் கெட்ட பின், வருமொழியுடன் புணரும்போது, அதை 'அகர'ஈறாகக் கொள்வது விதியீறாகும். நீயிர் செய்தது.

### மகர ஈற்றுத் தொழிற்பெயர்ப் புணர்ச்சி

**தொழிற்பெயர் எல்லாந் தொழிற்பெயர் இயல (327)**

மகர ஈற்றுத் தொழிற்பெயரெல்லாம் ஞகர ஈற்றுத் தொழிற்பெயர் இயல்பினவாகும். அதாவது உகரம் பெற்று, வல்லெழுத்து வரின் அவ்வெழுத்தே மிக்கும் ஞ ந ம வ வரின் இயல்பாயும் புணர்தல். வெம்முக் கடிது. தும்மு நீர்மை.

### ஈம் கம் உரும் என்னும் பெயர்களின் புணர்ச்சி

**ஈமும் கம்மும் உரும்என் கிளவியும்**
**ஆமுப் பெயரும் அவற்றோ ரன்ன (328)**

ஈம், கம், உரும் என்ற அம்மூன்று பெயரும் அல்வழிக்கண்ணும் வேற்றுமைக் கண்ணும் அத் தொழிற்பெயரோடு ஒருதன்மையவாம். அதாவது வன்கணம் வந்தவழி உகரமும் வல்லெழுத்தும் பெற்றும். இயல்பு கணத்து உகரம் பெற்றும் முடிதல், உருமுக் கடிது, உருமுக்கடுமை, கம்மு நன்று,ஈமுக்காடு,ஈமு வலிது. (ஈம்-இடுகாடு, கம்-கம்மியரது தொழில், உரும்-இடி)

### ஈம் கம் பெயர்களுக்குச் சாரியை வருதல்

**வேற்றுமை யாயின் ஏனை இரண்டும்**
**தோற்றம் வேண்டும் அக்கென் சாரியை (329)**

வேற்றுமைப் புணர்ச்சியாயின், இறுதி ‘உரும்’ ஒழிந்த முன்னைய இண்டும் அக்குச் சாரியை தோன்றப் பெறுதல் வேண்டும். ஈம்+குடம்=ஈமக்குடம், கம்மக்குடி.

### வகாரத்தின்முன் மகாரம் குறுகுதல்

**வகார மிசையும் மகாரம் குறுகும் (330)**

வகாரத்தின் மேல்நிற்கும் மகாரம் தனது மாத்திரையில் குறுகும். மிசையும்-மேல் நிற்கும். அதாவது மகரத்தின் முன் வகரம் வரும்போது என்பதாம். நிலம் வலிது.

### மகர ஈற்று நாட்பெயர்ப் புணர்ச்சி

**நாட்பெயர்க் கிளவி மேற்கிளந் தன்ன**
**அத்தும் ஆன்மிசை வரைநிலை யின்றே**
**ஒற்றுமெய் கெடுதல் என்மனார் புலவர் (331)**

மகர ஈற்று நாட்பெயர்ச் சொல் மேல் இகரவீற்று நாட்பெயர்க்குக் கூறிய அத்தன்மையத்தாம். ஆன் சாரியைக்கு மேல் அத்துச் சாரியையும் வருதல் நீக்கும் தன்மையுடைய தன்று. அத்து வரும்போது ஒற்றாகிய மெய் கெடும் என்பர். இகர ஈற்று நாட்பெயரிலக்கணம் ஆன் சாரியை வருதல் பற்றியது. மகத்தாற் கொண்டான்.

### னகர ஈறு

### னகர ஈற்றின் வேற்றுமைப் புணர்ச்சி

**னகார இறுதி வல்லெழுத்து இயையின்**
**றகார மாகும் வேற்றுமைப் பொருட்கே (332)**

பெயர் இறுதியில் வரும் னகார ஈறு, வல்லெழுத்து வந்து புணரின் றகாரமாய்த் திரியும். வேற்றுமைப் பொருட்புணர்ச்சிக்கண் என்பதாம். பொன்+குடம்=பொற்குடம்.

### மன் சின் முதலிய னகர ஈற்றுச் சொற்கள் புணருமாறு

**மன்னும் சின்னும் ஆனும் ஈனும்**
**பின்னும் முன்னும் வினையெஞ்சு கிளவியும்**
**அன்ன இயல என்மனார் புலவர் (333)**

மன் சின் ஆன் ஈன் முன் என்னும் சொல்லீறுகளும், னகர ஈற்று வினையெச்சச் சொல்லும் மேற்கூறிய இயல்பினவாய் னகரம் றகரமாய் முடியும் என்பார் நூற்புலவர்.

மன், சின்-அசைச்சொற்கள். ஆன்,ஈன்-சுட்டுச் சொற்கள். பின், முன் - ஏழாம் வேற்றுமை இடப்பொருள் உணர்த்தும் இடைச்சொற்கள், வினையெச்சம் வரின், எழுதின் போல்வன.

**வயின் என்னும் சொற்புணர்ச்சி**

**சுட்டுமுதல் வயினும் எகரமுதல் வயினும்**
**அப்பண்பு நிலையும் இயற்கைய என்ப (334)**

சுட்டை முதலாகவுடைய வயினும், எகரத்தை முதலாகக் கொண்ட வயினும் எவ்வயின் ஆகிய சொற்கள் மேல் றகரமாய் முடியுமென்ற அப்பண்பு நிலைபெற்று முடியும் இயற்கையையுடைய என்பர். அவ்வயிற் கண்டேன், எவ்வயிற் சென்றனன்.

**குயின் என்னும் சொற்புணர்ச்சி**

**குயின்என் கிளவி இயற்கை யாகும். (335)**

குயின் எனும் சொல் திரியாது இயல்பாய் முடியும். குயின் குழாம். குயின்-மேகம்.

**எகின் என்னும் மரப்பெயர்ப்புணர்ச்சி**

**ஏனை எகினே அகரம் வருமே**
**வல்லெழுத் தியற்கை மிகுதல் வேண்டும் (337)**

மரமல்லாத எகின் எனில், நிலைமொழி ஈறு அகரச் சாரியை பெறும், வல்லெழுத்து மிகுவது அதன் இலக்கணமாகும். இயற்கை-இயல்பு. இலக்கணம், எகினக்கால், எகின்-அன்னப்பறவை.

**னகர ஈற்றுக் கிளைப்பெயர்கள் புணர்தல்**

**கிளைப்பெயரெல்லாம் கிளைப்பெயர் இயல (338)**

னகர ஈற்று இனப்பெயரெல்லாம் ணகரவீற்று இனப்பெயர் போல முடியும். அதாவது இயல்பாகும். கிளைப்பெயர் - இனம், சாதிப்பெயர், எயின்குடி. (எயினர்-வேட்டுவர்)

**மீன் என்னும் சொற்புணர்ச்சி**

**மீன்என் கிளவி வல்லெழுத்து உறழ்வே (339)**

மீன் என்னும் சொல் வல்லெழுத்துவரின் இயல்பும் திரிபுமாக உறழ்ந்து வரும். உறழ்தல் -இரண்டு விதமாகவும் வருதல், மீன்கண், மீற்கண்.

**தேன் என்னும் சொல் புணரும் விதம்**

**தேன்என் கிளவி எல்லெழுத் தியைபின்**
**மேனிலை ஒத்தலும் வல்லெழுத்து மிகுதலும்**
**ஆமுறை இரண்டும் உரிமையு முடைத்தே**
**வல்லெழுத்து மிகுவழி இறுதி யில்லை (340)**

தேன் என்னும் சொல் வல்லெழுத்து முதன்மொழி வந்து புணரின், மேற்கூறிய உறழ்தலும் வல்லெழுத்து மிகுதலும் அம்முறை இரண்டும் உரிமையுடையதாகும். அவ்வாறு வல்லெழுத்து மிகும்போது இறுதி னகரம் கெடும். தேன்குடம், தேற்குடம், தேக்குடம்.

**அதற்கு மேலும் சில முடிபுகள்**

**மெல்லெழுத்து மிகினும் மான மில்லை (341)**

அவ்விடத்தே, வல்லெழுத்தன்றி மெல்லெழுத்து மிகினும் குற்றமில்லை. தேங்குடம்.

**மெல்லெழுத் தியையின் இறுதியோடு உறழும். (342)**

அத்தேன் என்னும் சொல்லுக்கு முன்னே மெல்லெழுத்து முதன்மொழி வந்து புணரின், இறுதி னகார ஒற்றுக் கெடுதலும் கெடாமையுமாய் உறழ்ந்து முடியும். தேன்மொழி, தேமொழி.

**தேன் முன் இறால் வருதல்**

**இறாஅல் தோற்றம் இயற்கை யாகும் (343)**

தேன் சொல் முன்னர் 'இறாஅல்' எனும் சொல் தோன்றுமேல், நிலைமொழீ ஈறு கெடாது இயல்பாய் முடியும். தேன்+இறால்=தேனிறால்

**அதற்கு மேலும் ஒரு முடிபு**

**ஒற்றுமிகு தகரமொடு நிற்றலும் உரித்தே (344)**

அத்தேன் என்பது இறால் என்னும் வருமொழியொடு சேரும்போது, பிறிதுமோர் தகர ஒற்று, முன்பே மிகுந்த தகர ஒற்றொடு நின்று முடிதலும் உண்டு. இரட்டித்த தகர ஒற்று வரும். தேன்+இறால்=தேத்திறால்.

**மின் பின் பன் கன் சொற்கள் புணர்தல்**

**மின்னும் பின்னும் பன்னும் கன்னும்**
**அந்நாற் சொல்லும் தொழிற்பெயர் இயல (345)**

மின் பின் பன் கன் என்னும் நான்கு சொற்களும் வேற்றுமையிலும் அல்வழியினினும் ஞகரவீற்றுத் தொழிற்பெயர்போல, வன்கணம் வந்தவழி உகரமும் வல்லெழுத்தும் பெறும்: மென்கணமும் இடைக்கணமும் வந்த வழி உகரம் பெறும். மின்-மின்னல், பின்-கூந்தல், பன்-பருத்தி, கன்-துலாத்தட்டு, கன்னான் என்னும் ஆம். மின்னுக்கொடிது.

**கன் எனும் சொல்லுக்கு மேலும் ஒரு முடிபு**

**வேற்றுமை யாயின் ஏனை எகினோடு**
**தோற்றம் ஒக்கும் கன்என் கிளவி (346)**

வேற்றுமைப் புணர்ச்சியில், கன் என்னும் சொல் மரமல்லாத ஏனை எகினோடு ஒத்து முடியும். அதாவது அகரம் பெற்று, வல்லெழுத்து வரின் மிக்கும் ஏனைய கணங்கள் வரின் இயல்பாயும் புணரும். கன்னக்குடம்.

**னகர ஒற்று இயற்பெயருடன் தந்தை எனும் சொல் சேர்ந்து வருதல்**

**இயற்பெயர் முன்னர் தந்தை முறைவரின்**
**முதற்கண் மெய்கெட அகரம் நிலையும்**
**மெய்யொழித்து அன்கெடும் அவ்வியற் பெயரே (347)**

னகர ஈற்று இயற்பெயர் முன்னர், தந்தை என்று முறைப்பெயர் வரின், வருமொழியில் முதற்கண்ணுள்ள மெய் கெட, அதன்மேல் ஏறிநின்ற அகரம் கெடாது நிலைபெறும். நிலைமொழியாகிய அவ் இயற்பெயரில் தான் ஏறிநின்ற மெய்யை விட்டுவிட்டு இறுதி அன் கெடும். இயற்பெயர்-சாத்தன், கொற்றன் போல்வன: சாத்தன் என்பதில் சாத்த என்பன நிற்கும். தந்தையில் அந்தை நிலைபெறும். சாத்த்+அந்தை=சாத்தந்தை எனப் புணரும்.

**ஆதன் பூதன் எனும் பெயர்களுடன் தந்தை சேர்ந்து வருதல்**

**ஆதனும் பூதனுங் கூறிய இயல்பொடு**
**பெயரொற்று அகரம் துவரக் கெடுமே (348)**

ஆதன், பூதன் என்னும் இயற்பெயர்கள், தந்தை என்ற முறைப்பெயர் வருமொழியாய் வரின், முற்கூறிய இயல்புகளுடன் நிலைமொழிப் பொய் இறுதியிலுள்ள ஒற்றும், வருமொழி முதலில் திரிந்து நின்ற அகரமும் கெடும். பெயர் ஒற்றும் அகரமும் கெடும். ஆதன்+தந்தை, ஆத்+அந்தை, ஆந்தை, ஆந்தையார் என்றால் ஆதன் தந்தையார் என்பது பொருள். பூதன்+தந்தை=புந்தை.

**அதற்கு வேறொரு முடிபு**

**சிறப்பொடு வருவழி இயற்கை யாகும் (349)**

அப்பெயர்கள் சிறப்பை உணர்த்தும் அடைமொழிகளுடன் வரும்போது இயல்பாகும். பெருஞ்சாத்தன் தந்தை.

**னரக ஈற்றுப் பெயர் முன் மகன்பெயர் வருதல்**

**அப்பெயர் மெய்யொழித்து அன்கெடு வழியும்**
**நிற்றலும் உரித்தே அம்மென் சாரியை**
**மக்கள் முறைதொகூஉம் மருங்கி னான (350)**

அவ்வியர் பெயர்கள் மக்கள் என்னும் முறை தோன்ற வரும் பெயர்கள் வந்து கூடும் இடத்தின்கண், நிலைமொழியில், மெய் நிற்க அன் மட்டும் கெடும். அவ்வாறு கெட்டவிடத்து, அம்மென் சாரியை வந்து நிலைபெறும். தொகூஉம்-தொகும்-வந்து சேரும். உருத்திரன்+கண்ணன்=உருத்திர்+அம்+கண்ணன். உருத்திரங்கண்ணன். உருத்திரன் மகன் கண்ணன் என்பது பொருள்.

**தான் பேன் கோன் என்னும் இயற்பெயர்கள்**

**தானும் பேனும் கோனும் என்னும்**
**ஆமுறை இயற்பெயர் திரிபிடன் இலவே (351)**

தான், பேன், கோன் என்னும் இயற்பெயர்கள், தந்தை மக்கள் என்னும் முறைப்பெயர்களோடு புணரும்போது, மேற்கூறிய திரிபுகள் இன்றி, இயல்பாய் முடியும். தான் தந்தை.

**தான் யான் என்னும் பெயர்கள்**

**தான்யான் எனும்பெயர் உருபியல் நிலையும் (352)**

தான் என்னும் விரவுப்பெயரும் யான் என்னும் உயர்திணைப் பெயரும் உருபு புணர்ச்சியில் கூறிய இயல்பின் கண்ணே நிலைபெறும். அதாவது தான் என்பது நெடுமுதல் குறுகி தன் ஆகும். யான் என்பது யகரம் கெட்டு, ஆகாரம் எகரமாய் என் என முடியும். தன்கை, என்தோள்.

**அச்சொற்களின் அல்வழிப் புணர்ச்சி**

**வேற்றுமை யல்வழிக் குறுகலும் திரிதலும்**
**தோற்றம் இல்லை என்மனார் புலவர் (353)**

முற்கூறிய தான், யான் என்னும் சொற்கள் வேற்றுமைப் புணர்ச்சி அல்லாத அல்வழியில் தான் என்பது நெடுமுதல் குறுகலும் யான் என்பது என் எனத் திரிதலும் இல்லை, இயல்பாய் முடியும். தான் சிறியன். யான் பெரியவன்.

**அழன் என்னும் சொற்புணர்ச்சி**

**அழன் என் இறுதிகெட வல்லெழுத்து மிகுமே (354)**

அழன் என்னும் சொல்லின் இறுதி னகர ஒற்றுக்கெட, வருமொழி வல்லெழுத்து மிகும். அழன்+குடம்=அழக்குடம்.

**முன் என்பதன்முன் இல்: முன்றில்**

**முன்என் கிளவி முன்னர்த் தோன்றும்**
**இல்என் கிளவிமிசை றகரம் ஒற்றல்**
**தொல்லியன் மருங்கின் மரீஇய மரபே (355)**

இல்முன் - வீட்டின் முன்புள்ள முற்றம், இதை முன்பின்னாக மாற்றி முன்றில் என்பது பழம் வழக்கு. முன் என்னும் சொல் முன்னர் வரும் இல் என்னும் சொல்லின் மேலே ஒரு றகர ஒற்றுத் தோன்றி நிற்றல் மிகத் தொன்றுதொட்டு வழங்கி வந்த இயல்பினையுடைய அடிப்பட்ட மரபாகும். மரீஇய-அடிப்பட்ட, நன்கு அழுந்திய.

**பொன் புணர்ச்சியில் பொலம் ஆதல்: செய்யுள் முடிபு**

**பொன்என் கிளவி ஈறுகெட்ட முறையின்**
**முன்னர்த் தோன்றும் லகார மகாரம்**
**செய்யுள் மருங்கின் தொடரிய லான (356)**

பொன் என்னும் சொல், செய்யுளிடத்துச் சொற்கள் தம்முன் தொடர்ச்சிப்படும் இயல்பின்கண், னகர இறுதி கெட அதன் முன்னர் முறையே லகரமும் மகரவொற்றும் தோன்றும். பொன் என்பது பொலம் ஆகிப் பொலந்தொடி ஆகும்.

**யகர ஈறு**

**இடைஒற்று ஈறுகளின் புணர்ச்சி யகர ஈற்றின் வேற்றுமைப் புணர்ச்சி**

**யகர இறுதி வேற்றுமைப் பொருள்வயின்**
**வல்லெழுத் தியையின் அவ்வெழுத்து மிகுமே (357)**

யகர ஈற்றுப்பெயர்கள் வேற்றுமைப் பொருட்புணர்ச்சியில், வல்லெழுத்து வந்து புணரின், அவ்வல்லெழுத்து மிக்கு முடியும் நாய்க்கால்.

**தாய் என்னும் சொல்**

**தாய்என் கிளவி இயற்கை யாகும். (358)**

தாய் என்னும் சொல் அவ்வாறு வல்லெழுத்து மிகாது இயல்பாகும். தாய் கை.

**அதற்கு மேலும் ஒரு முடிபு**

**மகன்வினை கிளப்பின் முதனிலை இயற்றே (359)**

தாய் என்னும் சொல்லுடன் மகன் பற்றிய வினையைச் சேர்த்துச் சொன்னால் யகரவீற்றுக்கு முதற்கண் கூறிய தன்மைத்து, அதாவது வல்லெழுத்து வரின் வல்லெழுத்து மிக்கு முடியும். இச்சூத்திரம் மேலும் ஆராய்தற்க்குரியது. முதல் நிலை – யகர வீற்றுப் புணர்ச்சிக்கு முதலிற் கூறிய நிலை, மகன் தாய்க்கலாம் என உரையாசிரியர் காட்டுவர். தாய்ப்பால், தாய்க்குணம்.

**யகர வீற்றுக்கு வேறொரு முடிபு**

**மெல்லெழுத்து உறழும் மொழியுமா ருளவே (360)**

யகர வீற்றுச் சொற்களுள் வல்லெழுத்தினோடு மெல்லெழுத்து உறழ்ந்து முடியும் மொழிகளும் உள. வேய்ங்குறை, வேய்க்குறை

**யகர ஈற்றின் அல்வழிப் புணர்ச்சி**

**அல்வழி எல்லாம் இயல்பென மொழிப (361)**

யகரவீற்றுப் பெயர்ச்சொற்கள் எல்லாம் அல்வழிக்கண் இயல்பாகும் என்பர். நாய்கடிது, பாய் பெரிது.

**ரகர ஈறு**

**ரகர ஈற்றின் வேற்றுமைப் புணர்ச்சி**

**ரகார இறுதி யகார இயற்றே (362)**

ரகர வீற்றுப் பெயர்கள் வேற்றுமைப் பொருட்புணர்ச்சிக்கண் யகர வீற்று இயல்பிற்றாய் வல்லெழுத்து வந்தவழி மிக்கு முடியும். தேர்க்கால்.

**ஆர் வெதிர் சார் பீர் என்னும் சொற்கள் புணர்தல்**

**ஆரும் வெதிரும் சாரும் பீரும்**
**மெல்லெழுத்து மிகுதல் மெய்பெறத் தோன்றும் (363)**

ஆர், வெதிர், சார், பீர் என்னும் பெயர்கள் மெல்லெழுத்து மிக்கு முடிதல் மெய்ம்மை பெறத் தோன்றும். வெதிர்ங்கோடு (வெதிர்-மூங்கில்) இவை மரப்பெயர்கள்

**சார் மரப்பெயர்முன் காழ் வருதல்**

**சார்என் கிளவி காழ்வயின் வலிக்கும் (364)**

சார் மரப்பெயர் முன் 'காழ்' வந்து புணரின் வலி மிகும். சார்க்காழ், காழ்-விதை.

**பீர் என்னும் சொல்லுக்கு மேலும் ஒரு முடிபு**

**பீர்என் கிளவி அம்மொடும் சிவணும் (365)**

பீர் என்னும் சொல் மெல்லெழுத்து மிகுதலேயன்றி, அம்முச் சாரியையும் பொருந்தும். பீரந்தோல்.

**லகர ஈறு**

**லகர ஈற்றின் வேற்றுமைப் புணர்ச்சி**

**லகார இறுதி னகார இயற்றே (366)**

லகர வீற்றுப் பெயர்கள் வேற்றுமைப் பொருட்புணர்ச்சிக்கண் வல்லெழுத்து முதன்மொழிகள் வரின், னகார ஈற்றின் இயல்பிற்றாய் லகாரம் றகாரமாய்த் திரிந்து முடியும். கல்+சிறை=கற்சிலை. (கல்லணை)

**அதற்கு மேலும் ஒரு முடிபு**

**மெல்லெழுத்து இயையின் னகார மாகும் (367)**

அவ் ஈறு மென்கணம் வந்து புணரின் லகாரம் னகாரமாய்த் திரியும். கல்+முனை=கன்முனை, முதல்+மொழி=முதன்மொழி.

**லகர ஈற்று அல்வழிப் புணர்ச்சி**

**அல்வழி எல்லாம் உறழென மொழிப (368)**

அந்த லகர ஈறு அனைத்தும் அல்வழிக்கண் வல்லெழுத்துவரின் திரிபும் இயல்புமாக உறழ்ந்து முடியும். கல்குறிது, கற்குறிது.

**லகர மெய் ஆய்தமாதல்**

**தகரம் வரும்மொழி ஆய்தம் நிலையலும்**
**புகரின்று என்மனார் புலமை யோரே (369)**

அவ்வாறு றகரமாய்த் திரிந்த லகரம், தகர முதன்மொழி வருமொழியாய் வந்தவிடத்து, அவ்வாறு றகரமாய்த் திரிதலேயன்றி ஆய்தமாகத் திரிந்து நிற்றலும் குற்றமின்று என்று பெரும் புலமையுடையோர் கூறுவர். கஃறீது, கற்றீது.

**லகர ஈற்றிற்கு வேறு ஒரு முடிபு**

**நெடியதன் இறுதி இயல்புமா றுளவே (370)**

நெடியதன் இறுதியில் நின்ற லகரவீறுகளுள் குறியதன் இறுதிக்கண் நின்ற லகரம் போலத் திரிந்து உறழ்தலேயன்றி இயல்பாய் முடிவனவும் உள. கால்குறிது, காற்குறிது எனலுமாம்.

**நெல் செல் கொல் சொல் என்னும் சொற்புணர்ச்சிகள்**

**நெல்லும் செல்லும் கொல்லும் சொல்லும்**
**அல்லது கிளப்பினும் வேற்றுமை இயல (371)**

நெல், செல், கொல், சொல் என்னும் நான்கு பெயர்களும், அல்வழியிலும் வேற்றுமை இயல்பினவாய் லகரம் றகரமாய்த் திரியும். நெற்குவிந்தது. கொற்கடிது. செல்-மேகம். கொல்-கொல்லுத்தொழில்.

### இன்மையைக் குறிக்கும் இல் என்னும் சொற்புணர்ச்சி

**இல்என் கிளவி இன்மை செப்பின்**
**வல்லெழுத்து மிகுதலும் ஐஇடை வருதலும்**
**இயற்கை யாதலும் ஆகாரம் வருதலும்**
**கொளத்தகு மரபின் ஆகிட னுடைத்தே (372)**

‘இல்’ எனும் சொல் வீட்டைக் குறிக்காமல், இல்லாமையை உணர்த்தும் போது,அல்வழியில் வல்லெழுத்து மிகுதலும் ஐகாரம் இடையில் வருதலும் இயல்பாதலும் ஆகாரம் மிக்கு முடிதலும் ஆகிய நான்கும் கொள்ளத்தகும். மரபறிந்து வருமிடங்கள் உள. இல்லைப்பொருள், இல்பொருள், இல்லாப்பொருள்.

### வல் என்னும் சொல் புணர்தல்

**வல்என் கிளவி தொழிற்பெயர் இயற்றே (373)**

வல் என்னும் சூதாடு கருவியை உணர்த்தும் சொல் தொழிற்பெயர்க்கு ஒதிய இயல்பிற்றாய் இருவழியும் புணரும். அதாவது உகரம் பெற்று, வல்லெழுத்து வரின் மிக்கு ஞ ந ம வரின் இயல்பாயும் புணரும் என்பதாம். வல்லுக்கடிது, வல்லுத்தீமை, வல்லு நாய்.

### அதற்கு வேறொரு முடிபு

**நாயும் பகையும் வரூஉங் காலை**
**ஆவயின் உகரம் கெடுதலும் உரித்தே**
**உகரம் கெடுவழி அகரம் நிலையும் (374)**

வல் என்னும் சொல்லின்முன் நாயும் பலகையும் வருமொழியாய் வரும்போது, அங்கு உகரம் கெடாது நிற்றலேயன்றி, கெட்டு முடிதலும் உண்டு. உகரம் கெடுமிடத்து, அகரம் வந்து நிலைபெறும். வல்லுப்பலகை, வல்ல நாய்.

### பூல் வேல் ஆல் சொற்புணர்ச்சிகள்

**பூல்வேல் என்றா ஆல்என் கிளவியொடு**
**ஆமுப் பெயர்க்கும் அம்இடை வருமே (375)**

பூல் வேல் ஆல் என்ற பெயர்களோடு, வேற்றுமைக்கண் அம்முச் சாரியை இடையில் வரும். பூலங்காடு, வேலங்காடு, பூல்-ஒரு பூடு. வேல், ஆல்-மரங்கள்.

### லகர ஈற்றுத் தொழிற்பெயர்ப் புணர்ச்சி

**தொழிற்பெயர் எல்லாம் தொழிற்பெயர் இயல (376)**

லகர ஈற்றுத் தொழிற்பெயரெல்லாம் ஞகர ஈற்றுத் தொழிற்பெயரின் இயல்பினவாம். அஃதாவது அல்வழியிலும் வேற்றுமையிலும் வல்லெழுத்து வரின் உகரமும் வல்லெழுத்தும் பெறும். மென்கணமும் இடைக்கணமும் வரின் உகரம் பெறும். கல்லுக்கடிது, கல்லுக்கருமை, கல்லு நீண்டது.

### வெயில் என்னும் சொல் புணர்தல்

**வெயில்என் கிளவி மழையியல் நிலையும் (377)**

வெயில் என்னும் சொல் மழைக்கு ஓதிய இயல்பிற்றாய் முடியும். இயல்-இயல்பு, இலக்கணம், அத்துச்சாரியையும் இன் சாரியையும் பெறும் என்பதாம். வெயிலத்துப் பிரிந்தான். வெயிலிற் போனான்.

### வகர ஈறு

### வகர ஈற்றின் வேற்றுமைப் புணர்ச்சி அவ் என்பதன் புணர்ச்சி

**சுட்டுமுத லாகிய வகர இறுதி**
**முற்படக் கிளந்த உருபியல் நிலையும் (378)**

சுட்டெழுத்தை முதலாகவுடைய வகர ஈற்றுச் சொல், வேற்றுமைக்கண் முற்படச் சொன்ன உருபு புணர்ச்சியது இலக்கணப்படி நிலைபெறும். வற்றுச்சாரியை பெறும் என்பதாம். அவற்றுக்கொம்பு, அவற்றின் கொம்பு எனலுமாம்.

### அதற்கு அல்வழி முடிபு

**வேற்றுமை யல்வழி ஆய்த மாகும். (379)**

அச்சுட்டுப்பெயரின் வகர ஈறு அல்வழிக்கண் வல்லெழுத்தோடு புணருமிடத்து வகரம் திரிந்து ஆய்தம் ஆகும். அவ்+கடிய=அஃகடிய.

### அதற்கு வேறு முடிபுகள்

**மெல்லெழுத்து இயையின் அவ்வெழுத் தாகும் (380)**

அச்சுட்டுப் பெயரின் வகர ஈறு, மென்கணம் வந்து இயைந்தவிடத்து அம் மெல்லெழுத்தாய்த் திரிந்து முடியும். அவ்+ஞான்று=அஞ்ஞான்று.

**ஏனவை புணரின் இயல்பென மொழிப (381)**

அச்சுட்டுப் பெயரின் வகர ஈறு, வல்லெழுத்தும் மெல்லெழுத்து மல்லாத, ஏனைய இடைக்கணத்தோடும் உயிர்க்கணத்தோடும் புணரின் அவ்வகரம் திரியாது இயல்பாய் முடியும் என்பர். அவ்யாழ், இவ்வுயிர்

**தெவ் என்னும் வகர ஈற்று உரிச்சொல் புணருமாறு**

**ஏனை வகரம் தொழிற்பெய ரியற்றே (382)**

ஏனைய வகர ஈற்றுத் தெவ் என்னும் சொல்லீறு, ஞகார ஈற்றுத் தொழிற்பெயர் இயல்பிற்றாய் நடக்கும். உகரம் மட்டும் பெற்றும் உகரத்தோடு வல்லெழுத்தும் பெற்றும் வரும் என்பதாம். மென்கணம், இடைக்கணம் வரின் இயல்பாகும். தெவ்வுக்கடிது, தெவ்வுமாட்சி.

**ழகர ஈறு**

**ழகர ஈற்றின் வேற்றுமைப்புணர்ச்சி (383)**

ழகர ஈற்றின் பெயர், வன்கணம் வந்தால் வேற்றுமைக்கண் ரகார ஈற்று இயல்பிற்றாய் வல்லெழுத்து மிக்கு முடியும். இயற்று-இயல்பிற்று, பூழ்க்கால். (பூழ்-காடை)

**தாழ் என்னும் சொல் புணர்தல்**

**தாழ்என் கிளவி கோலொடு புணரின்**
**அக்குஇடை வருதல் உரித்து மாகும் (384)**

தாழ் என்னும் சொல் கோல் என்னும் சொல்லோடு புணரின், வல்லெழுத்து மிகுதலேயன்றி அக்குச்சாரியை இடைவருதலும் உரித்தாகும். தாழ்க்கோல், தாழக்கோல்.

**தமிழ் என்னும் சொற்புணர்ச்சி**

**தமிழ்என் கிளவியும் அதனோ ரற்றே (385)**

தமிழ் என்னும் சொல்லும் அதனோடு ஒருதன்மைத்தாகும். முற்கூறியாங்கு வல்லெழுத்து மிகுதலேயன்றி, அக்குச் சாரியை பெற்றும் முடியும். தமிழ்க்கூத்து, தமிழக்கூத்து.

**குமிழ் என்னும் மரப்பெயர்ப் புணர்ச்சி**

**குமிழ்என் கிளவி மரப்பெய ராயின்**
**பீர்என் கிளவியொடு ஓரியற் றாகும் (386)**

‘குமிழ்’ என்னும் சொல் மரத்தை உணர்த்தும் பெயராயின் பீர் என்னும் சொல்லோடு, ஓர் இயல்பினையுடையதாய் அமையும். அஃதாவது மெல்லெழுத்தும் அம்முச் சாரியையும் பெறும். குமிழங்கிளை.

**பாழ் என்னும் சொல்புணர்தல்**

**பாழ்என் கிளவி மெல்லெழுத்து உறழ்வே (387)**

பாழ் என்னும் சொல் வல்லெழுத்தோடு மெல்லெழுத்தும் மிக்கு உறழ்ந்து முடியும். பாழ்க்கிணறு, பாழ்ங்கிணறு.

**ஏழ் என்னும் எண்ணப்பெயர்ப்புணர்ச்சி**

**ஏழ்என் கிளவி உருபியல் நிலையும் (388)**

ஏழ் என்னும் எண்ணுப் பெயரது இறுதி, உருபு புணர்ச்சிக்கண் சொல்லிய இயல்பிலே நிலைபெறும். அ∴தாவது அன் சாரியை பெறும். ஏழன் கணக்கு.

**ஏழ் முன் முகத்தலளவை, நிறுத்தலளவை,**
**எண்ணலளவைப் பெயர்கள் புணர்தல்**

**அளவும் நிறையும் எண்ணும் வருவழி**
**நெடுமுதல் குறுகலும் உகரம் வருதலும்**
**கடிநிலை யின்றே ஆசிரி யர்க்க (389)**

மேற்கூறிய ஏழ் என்னும் சொல் முன் முகத்தலளவைப் பெயரும் நிறுத்தலளவைப் பெயரும் எண்ணுப்பெயரும் வந்து புணரும்பொழுது, நெட்டெழுத்தாகிய முதல் குறுகலும் ழகரத்தின் மேல் ஓர் உகரம் சேர்தலும் ஆசிரியர்க்குத் தவிர்க்கும் நிலையினதன்று. எழுகலம்.

**ஏழுடன் சேரும் பத்து ப∴து ஆதல்**

**பத்தென் கிளவி ஒற்றிடை கெடுவழி**
**நிற்றல் வேண்டும் ஆய்தப்புள்ளி (390)**

ஏழ் என்பதுடன் பத்து என்னும் எண் வந்து புணருமிடத்து, அப்பத்து என்னும் எண்ணின் இடையிலுள்ள ஒற்றுக் கெடும். அவ்வாறு கெட்டவிடத்து ஆய்தப்புள்ளி வந்து நிற்றல் வேண்டும். எழுப∴து.

**ஏழுடன் ஆயிரம் சேர்ந்து நிற்றல்**

**ஆயிரம் வருவழி உகரம் கெடுமே (391)**

ஏழ் என்பதன் முன் ஆயிரம் வரும்போது, முன்பெற்ற உகரம் கெடும். ஏழாயிரம்.

**ஏழுடன் நூறாயிரம் சேர்ந்து வருதல்**

**நூறுஊர்ந்து வரூஉம் ஆயிரக் கிளவிக்குக்**
**கூறிய நெடுமுதல் குறுக்கம் இன்றே (392)**

ஏழ்முன் வரும் நூறு என்னும் சொல்லைச் சார்ந்து வருகிற ஆயிரம் என்ற சொல்லுக்கு நெடுமுதல் குறுகுதல் என்பது இல்லை. ஏழ் நூறாயிரம். எழுநூறாயிரம் என்றும் வருமென்பர் உரையாசிரியர்.

## ஏழுடன் ஐ (தாமரை), அம் (வெள்ளம்), பல் (ஆம்பல்), என்னும் பேரெண்கள் புணர்தல்

**ஐஅம் பல்என வரூஉம்**
**அல்பெயர் எண்ணினும் ஆயியல் நிலையும் (393)**

ஏழ் என்னும் சொல் ஐ, அம், பல் எனும் இறுதிகளையுடையனவான பொருட்பெயரல்லாத எண்ணுப்பெயர்கள் வருமிடத்து முற்கூறிய அவ்வியல்போடு நிற்கும். அஃதாவது நெடுமுதல் குறுகாமலும் உகரம் பெறாமலும் இயல்பாக நிற்கும். ஏழ் தாமரை, ஏழ் வெள்ளம், ஏழ் ஆம்பல், இவை பேரெண்கள், அல்பெயர்-தாமரை என்பது பெயரன்று: இது எண்ணிக்கை என்பதாம்.

## ஏழ்முன் வரும் அளவைப் பெயர்களின் உயிர் முதன்மொழிகள்

**உயிர்முன் வரினும் ஆயியல் திரியாது (394)**

ஏழ் என்பதன் முன் உயிர் முதன்மொழிகள் வரினும் அப்பண்பில் மாறாது. நெடுமுதல் குறுகி உகரம் பெறாது இயல்பாய் நிற்றல், ஏழகல், ஏழிரண்டு.

## கீழ் என்னும் சொற்புணர்ச்சி

**கீழ்என் கிளவி உறழத் தோன்றும் (395)**

கீழ் என்னும் சொல் உறழ்ச்சியாய்த் தோன்றும். கீழ்குளம், கீழ்க்குளம்

## ளகர ஈறு
## ளகர ஈற்று வேற்றுமைப் புணர்ச்சி

**ளகார இறுதி ணகார இயற்றே (396)**

ளகார இறுதிப் பெயர்கள் வேற்றுமைக்கண் ணகார ஈற்று இயல்பிற்றாய் முடியும். வன்கணம் வரின் ளகாரம் டகாரமாயத் திரியும் என்பதாம். முள்+செடி=முட்செடி.

## அதற்கு வேறு முடிபு

**மெல்லெழுத்து இயையின் னகார மாகும் (397)**

ளகர ஈற்றுப்பெயர் மெல்லெழுத்து முதன்மொழி வந்து புணரின் ணகரமாகத் திரியும். முள்+முனை=முண்முனை.

## ளகர ஈற்று அல்வழிப் புணர்ச்சி

**அல்வழி யெல்லாம் உறழ்என மொழிப (398)**

ளகர ஈற்று அல்வழிப் புணர்ச்சிகள் எல்லாம் திரிந்தும் திரியாதும் உறழ்ந்து முடியும் என்பர். முள்கடிது. முட்கடிது.

**அதற்கு வேறு முடிபு**

**ஆய்தம் நிலையலும் வரைநிலை யின்றே**
**தகரம் வருஉங் காலை யான (399)**

ளகரம் டகரமாகத் திரியாது. ஆய்தமாய்த் திரிந்து நிற்றலும், தகர முதன்மொழி வரும்போது நீக்கும் நிலைமை இன்று. முள்+தீது=மு.ஃடீது. முட்டீது.

**சில ளகர ஈற்றுச் சொற்களின் புணர்ச்சி**

**நெடியதன் இறுதி இயல்பா குநவும்**
**வேற்றுமை யல்வழி வேற்றுமை நிலையனும்**
**போற்றல் வேண்டும் மொழியுமா ருளவே (400)**

நெட்டெழுத்தின் பின் நிற்கும் சில ளகர ஈற்றுச் சொற்கள் திரியாது இயல்பாகுநவும், வேற்றுமையல்லாத அல்வழியிடத்து வேற்றுமைப் புணர்ச்சிபோல் திரிந்து முடிதலும் ஆகிய இவற்றைப் போற்ற வேண்டிய மொழிகளும் உள. வாள்கூரிது. நாட்கடிது.

**ளகர ஈற்றுத் தொழிற்பெயர்ப் புணர்ச்சி**

**தொழிற்பெயர் எல்லாம் தொழிற்பெயர் இயல (401)**

ளகார ஈற்றுத் தொழிற்பெயரெல்லாம் வேற்றுமையிலும் அல்வழியிலும் ஞகார ஈற்றுத் தொழிற்பெயர் இயல்பிற்றாய் முடியும். வன்கணம் வந்தவழி வல்லெழுத்தும் உகரமும் பெற்றும் ஞநமவ வந்தவழி உகரம் பெற்றும் முடியும் என்பதாம். துள்ளுக்கடிது, துள்ளு நன்று. 'தொழிற்பெயரெல்லாம் தொழிற் பெயரியல' என மாட்டேற்றும் அழகு எண்ணிப் பார்க்கத்தக்கது.

**இருள் என்னும் சொற்புணர்ச்சி**

**இருள்என் கிளவி வெயிலியல் நிலையும் (402)**

இருள் என்னும் சொல் 'வெயில்' என்னும் சொல்போல இலக்கணம் பெறும். அத்தும் இன்னும் சாரியைகளாக வரும். இ.ஃதொரு தொடர் மாட்டேற்று என்பது முன்பு சுட்டப்பட்டது. இருளத்துச் சென்றான்.

**புள், வள் என்பன புணர்தல்**

**புள்ளும் வள்ளும் தொழிற்பெயர் இயல (403)**

புள், வள் என்னும் சொற்கள் தொழிற்பெயர்க்கு ஓதிய இயல்பினவாய் வரும். வல்லெழுத்து வரின் உகரம் பெற்றும் வல்லெழுத்து மிக்கும் ஞ ந ம வ வரின் இயல்பாயும் புணரும் புள்ளுக்கடிது, வள்ளு நீண்டது.

### மக்கள் என்னும் சொல்

**மக்கள் என்னும் பெயர்நிலைக் கிளவியும்**
**தக்கவழி அறிந்து வலித்தலும் உரித்தே (404)**

மக்கள் என்னும் பெயர்ச்சொல்லின் இறுதி ளகரம். தக்க இடமறிந்து வல்லொற்றாகத் திரிதலும் உண்டு. மக்கட்பேறு, மக்கள் பலர் என்பது போல் திரியாது இயல்பாகுமிடங்கள் பலவாகும்.

### புறனடை

### சொன்னவை கொண்டு உலகிடை வழங்குவன பிறவற்றிற்கும் முடிவு காணுதல்

**உணரக் கூறிய புணரியல் மருங்கின்**
**கண்டுசெயற்கு உரியவை கண்ணினர் கொளலே (405)**

புள்ளி ஈறுகள் நின்று நான்கு கணத்தோடும் புணரும் விதம் இதுகாறும் நன்கு மனத்தில் பதியுமாறு கூறப்பட்டுள்ளது. இங்ஙனம் உணரக் கூறியவற்றை மனங்கொண்டு, மொழியினது இயல்பையும் வழக்காற்றையும் கண்டு ஆராய்ந்து, முடித்தற்குரிய பிற முடிபுகளைச் சிந்தனை செய்து அமைத்துக்கொள்வீர்களாக. உணரக்கூடிய – மனத்தில் பதியும்படி கூறிய, கண்ணினர்-எண்ணிப் பார்த்து, சிந்தித்து. கொளல்-கொள்க.

# புள்ளி மயங்கியல் கருத்துக்களின் தொகுப்பு

| வ.எ. | நிலைமொழி ஈறு | வருமொழி முதல் | வேற்றுமை/ அல்வழி | புணர்ச்சி விதி | எடுத்துக்காட்டு |
|---|---|---|---|---|---|
| 1. | ஞ் உரிஞ் | க ச த ப | அல்வழி வேற்றுமை | உகரம் பெற்று அவ்வல்லெழுத்தே மிகும் | உரிஞுக் கடிது உரிஞுக் கடுமை |
| 2. | உரிஞ் | ஞ ந ம வ | அல்வழி | உகரம் பெற்று இயல்பாகும் | உரிஞு ஞான்றது |
| 1. | ந் ஈற்றுப்பெயர் | மேற்படி | அல்வழி பொருந் | மேற்படி | பொருநுக் கடிது பெருநு வலிது |
| 2. | ந பொருந் | க ச த ப | வேற்றுமை | உகரம் கெட்டு அகரம் வரும் | பொருநக்கடுமை பொருநச் சாதி |
| 3. | வெரிந் | க ச த ப | வேற்றுமை | ந்-கெடும் மெலி மிகும் | வெரிங்குறை (முதுகு) |
| 4. | வெரிந் | க ச த ப | வேற்றுமை | ந்-கெட்டு வலி மிகுதலுமுண்டு | வரிக்குறை |
| 1. | ண் ண்-ஈற்றுப்பெயர் | க ச த ப | வேற்றுமை | ண்-ட் ஆகும் | மண்+குடம்= மட்குடம் |
| 2. | ஆண், பெண் விரவுப்பெயர் அ∴றிணை, உயர்திணைப் பொது | க ச த ப | வேற்றுமை | இயல்பு | ஆண்கை, பெண் கழுத்து |
| 3. | ஆண் (மரம்) | க ச த ப | வேற்றுமை | ‘அரை’ மரம் அம் பெற்றது போல் முடியும் | ஆணங்கோடு |
| 4. | விண் | வினைச்சொல் | செய்யுள் | அத்துச்சாரியை பெறுதலும் உண்டு பெறாமையும் உண்டு | விண்ணத்துப் பறக்கும் விண் தொட்டுப்பறக்கும் |
| 5. | மண் (ணுதல்) (கழுவுதல்) | வன்கணம் மென்கணம் இடைக்கணம் | அல்வழி வேற்றுமை | ஞகார ஈறு போலாகும் வன்கணம் வரின் வல்லெழுத்தும் மென்கணத்தும் இடைக்கணம் | மண்ணுச்சிறிது மண்ணுக்கொடுமை மண்ணு நிகழ்ந்தது மண்ணு வன்மை |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | | | | வகரத்தும் உகரமும் பெறும் | |
| 6. | கிளைப்பெயர் உமண், பாண் | க ச த ப | வேற்றுமை | இயல்பு | உமண்குடி, பாண்சேரி பாண் கடன் |
| 7. | எண் (எள்) | | அல்வழி | ண்-ட் ஆகும் | எட்சிறிது, எண்சிறிது எனலுமாம் |
| 8. | முரண் | க ச த ப | அல்வழி வேற்றுமை | அல்வழியில் இயல்பு வேற்றுமையில் ட் | முரண் கடிது முரட்கடுமை |
| 1. | ம் மகர ஈற்றுப் பெயர்ச் சொற்கள் | | வேற்றுமை | மகரம் கெடும், வந்த வல்லெழுத்து மிகும் | மரம்+பெட்டகம்= மரப்பெட்டகம் மரம்+வேர்=மரவேர் |
| 2. | மகர ஈற்றுச் சொற்கள் | அ, ஆ முதலாக வரும் சொற்கள் | வேற்றுமை | மகரம் கெட, நின்ற அகரம் நீளுதலு முண்டு | மரம்+அடி+மராவடி, மரவடி |
| 3. | மகர ஈற்றுச் சொற்கள் | | வேற்றுமை | மெல்லெழுத்துப் பெறுதலுமுண்டு | குளங்கரை, குளக்கரை |
| 4. | இல்லம் (மரம்) | | வேற்றுமை | இயல்பாய் முடியும். மெலி மிகும். | இல்லங்கட்டை இல்லம் பூ |
| 5. | மகர ஈறு | க ச த ப | அல்வழி அனைத்தும் | மெல்லெழுத்தாக மாறும் | மரம்+தழைத்தது= மரந்தழைத்தது |
| 6. | அகம் | கை | | ‘அ’ மட்டும் நிற்கும். இனமெல்லெழுத்து மிகும். | அகம்+கை= அங்கை |
| 7. | இலம் | படு | செய்யுள் | மகர ஈறு கெடாது நிற்றலுமுண்டு | இலம்படு (இலம்பாடு-வறுமை) |
| 8. | ஆயிரம் | ஆயிரத்திற்குக் கீழே உள்ளவை | | ‘அத்து’ச் சாரியை வரும் | ஆயிரத்து நூறு, ஆயிரத்து ஐந்நூறு |
| 9. | ஆயிரம்+ அடையுடன் | ஆயிரத்துக் கீழே உள்ளவை | | ‘அத்து’ச் சாரியை வரும் | நான்காயிரத்து முந்நூறு |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 10. | ஆயிரம் | முகத்தலளவை நிறுத்தலளவை பெயர்கள் | | மகரம் கெட்டு,வலி மிக்கு முடியும் | ஆயிரக் கலம்,ஆயிரக்கழஞ்சு |
| 11. | எல்லாரும் (படர்க்கை) எல்லீரும் (முன்னிலை) தாம் (தம்) நாம் (நம்) | | | ‘உம்’ஈறுகெட்டு, இடையும் ஈறும் சாரியை பெறும் நெடுமுதல் குறுகுவன குறுக மெல்லெழுத்து மிகும். யாம் (எம்) | எல்லாரும்+தலை எல்லார்தந்தலையும் எல்லீர் நுஞ் செவியும் தாம்+கை=தங்கை நாம்+செவி =நஞ்செவி யாம்+தலை =எந்தலை |
| 12. | மேற்படி | | அல்வழி | இயல்பாகும் | எல்லாரும் சான்றோர் எல்லீரும் தருக |
| 13. | எல்லாம் விரவுப்பெயர் | | | வற்றுச் சாரியை உம்முச் சாரியை பெறும் | எல்லாவற்றுத் தலையும் |
| 14. | மேற்படி | க ச த ப | | அல்வழியில் சாரியை வராது இனமெல்லெழுத்து மிகும் | எல்லாத்தலையிலும் எல்லாஞ் சிறப்பவும் |
| 15 | நும் | | | எல்லாம் (உயர்திணை) நம்-சாரியை வரும் | எல்லாநந் தலையும் |
| 16. | நும் | | | மெல்லெழுத்து மிகும் | நுங்கை, நுந்தலை |
| 17. | நும் | | அல்வழி | உ-கெடும் ந்+ஈ=நீ+இ ம்-கெட-ர் ஆகும் | நீர் (அதாவது நும் நீர் ஆகி – நீயிர் செய்தீர் என வரும். |
| 18. | வெம் (மு) தும் (மு) | | அல்வழி வேற்றுமை | ஞகர ஈற்றுத் தொழிற்பெயர் போல-வன்கணம் ‘உ’வும் வலியும் பெறும். இயல்புகணம் | வெம்முக்கடிது வெம்முக் கடுமை தும்முச் செறுப்ப வெம்மு நன்று வெம்மு நீர்மை |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | | | | 'உ' பெறும். | |
| 19. | ஈம், கம், உரும் | | அல்வழி வேற்றுமை | வன்கணம் வரின் 'உ'கரமும் வல்லெழுத்தும் இயல்புகணம் வரின் உகரம் மட்டும் | உருமுக்கடிது, கடுமை, கம்முக்கடிது, கம்மு நன்று,ஈமுக்கடிது,ஈ முக்காடு (சுடுகாடு) |
| 20. | ஈம், கம் | | வேற்றுமை | அக்கு-சாரியை பெறும் | ஈமக்குடம், கம்மத்தொழில் |
| 21. | நிலம், வலம் | வலி வருதல் | அல்வழி | வ-வின் மேலுள்ள ம் -குறுகும் | நிலம் வலிது வலம் வருதல் |
| 22. | மகம் | க ச த ப | அல்வழி | அத்து, ஆன் சாரியைகள் வரும் | மகத்தாற் கொண்டான் |
| 1. | ன (னகர ஈறு) பொன் | க ச த ப | வேற்றுமை | ன்-ற் ஆகத்திரியும் | பொன்+குடம் =பொற்குடம் |
| 2. | மன், சின், ஆன்,ஈன், பின், முன் னகர ஈற்று வினை யெச்சச் சொல் வரின், எழுதின் | க ச த ப | வேற்றுமை | ன்-ற் ஆகும் | மண் (அது மற் கொண்க), இசின் (காப்பும் பூண்டிசின்), அசைச்சொற்கள், பிற்கொண்டான், முற்கொண்டான் (பிற்காலம் முற்காலம்) இவண் வரிற் பார்ப்போம். |
| 3. | அவ்வயின் எவ்வயின் | க ச த ப | வேற்றுமை | ன்-ற் ஆகும் | அவ்வயிற் செல்க எவ்வயிற் பெற்றனை? |
| 4. | குயின் | க ச த ப | அல்வழி வேற்றுமை | | குயின் பெய்யும் குயின் தோற்றம் (மேகம்) |
| 5. | எகின் (மரம்) | க ச த ப | வேற்றுமை | 'ஆண்' மரத்திற்குரிய புணர்ச்சி | எகினங்கிளை |
| 6. | எகின் (பறவை) | க ச த ப | வேற்றுமை | 'அ' வரும். வலி மிகும். | எகினச்சிறகு |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 7. | னகர ஈற்று இனப்பெயர் எயின் | க ச த ப | வேற்றுமை | ணகர ஈற்று இனப்பெயர் போல் இயல்பாகும் | எயின்குடி |
| 8. | மீன் | க ச த ப | வேற்றுமை | இயல்பும், திரிபும் | மீன்கண், மீற்கண் |
| 9. | தேன் | க ச த ப | வேற்றுமை | உறழ்ச்சி வலி மிகும் போது ன் கெடும் | தேன்குடம், தேற்குடம், தேக்குடம் |
| 10. | தேன் | க ச த ப | வேற்றுமை | மெல்லெழுத்து மிகுதலும் உண்டு | தேங்குடம் |
| 11. | தேன் | மெல்லின முதன் மொழி | | 'ன்' கெடுதலும் கெடாமையும் உறழ்ந்து வரும் | தேன்மொழி தேமொழி |
| 12. | தேன் | இறாஅல் | | இயல்பு | தேன்+இறால் =தேனிறால் |
| 13. | தேன் | இறால் | | இரட்டித்த தகர ஒற்று வரும். | தேத்திறால் |
| 14. | மின், பின், பன், கன் | | வேற்றுமை அல்வழி | வன்கணம்வரின் உகரமும் வலியும் மென்கணமும் இடைக்கணமும் வரின் உ பெறும் | மின்னுக்கொடிது பன்னு நன்று |
| 15. | கன் | | | அ-பெற்று, வலியவரின் மிக்கும் ஏனைய வரின் இயல்பாயும் முடியும் | கன்னக்குடம் கன்ன நிலை |
| 16. | சாத்தன் கொற்றன் | தந்தை | | அந்தை, நிலை மொழிப்பெயர் | சாத்த+அந்தை= சாத்தந்தை |
| 17. | ஆதன், பூதன் | தந்தை | | நிலைமொழி இறுதி 'அன்'னும் வருமொழி முதல் 'அ'வும் கெடும் | ஆதன்+தந்தை ஆத்+அந்தை= ஆந்தையார். பூதன்+தந்தை= பூந்தை. |
| 18. | ஆதன், பூதன் - அடைமொழி களுடன் வருதல் | தந்தை | | இயல்பாகும் | பெருஞ்சாத்தன் தந்தை |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 19. | உருத்திரன் | மக்கள் (மகன் பெயர்) | | உருத்திர்+அம்+ கண்ணன் | உருத்திரங்கண்ணன் |
| 20. | தான், பேன், கோன் | தந்தை, மக்களின் இயற்பெயர் | | இயல்பு | தான் தந்தை, கோன் கந்தன் |
| 21. | தான் விரவுப்பெயர் யான் | உருபு புணர்ச்சி போலும் | | நெடுமுதல் குறுகும் யான் | தன்கை என்தோள் என் ஆகும் |
| 22. | தான், யான் | | அல்வழி | இயல்பு | தான் சிறியன், யான் பெரியன் |
| 23. | அழன் | | | ‘ன்’-கெட, வரும் வலிமிகும் | அழன்+குடம் =அழக்குடம் |
| 24. | (இல்) முன் | | | முன்+ற்+இல் | முன்றில் (பழம் மரபு) பொன்-பொலம் |
| 25. | பொன் | | | ன்-கெட, லம்- தோன்றும் | பொலந்தொடி |
| 1. | ய (யகர ஈறு) நாய் | க ச த ப | வேற்றுமை | வல்லெழுத்து மிகும் | நாய்க்குட்டி |
| 2. | தாய் | க ச த ப | வேற்றுமை | இயல்பாகும் | தாய் கை |
| 3. | தாய் | க ச த ப | வேற்றுமை | வலி மிகும் | தாய்ப்பால், தாய்ப்பண்பு |
| 4. | வேற் யகர வீற்றுச்சொற்கள் | க ச த ப | வேற்றுமை | வலி மெலி உறழ்ச்சியாக வரும் | வேய்ங்குறை வேய்க்குறை |
| 5. | மேற்படி | க ச த ப | வேற்றுமை | இயல்பாகும் | நாய் குரைக்கும் பாய் பெரிது |
| 1. | ர ரகர ஈற்றுப் பெயர்கள் | க ச த ப | வேற்றுமை | ஒற்று மிகும் | தேர்க்கால் |
| 2. | ஆர், வெதிர், சார், பீர் (மரப்பெயர்கள்) | க ச த ப | வேற்றுமை | மெல்லெழுத்து மிகும் | வெதிர்ங்கோடு, பீர்ங்கிளை |
| 3. | சார் | காழ் | | வலி மிகும் | சார்க்காழ் |
| 4. | பீர் | க ச த ப | | மெலி மிகும் அம் பெறும் | பீரந்தோல் |
| 1. | ல லகர ஈற்றுப்பெயர்கள் | க ச த ப | வேற்றுமை | ல்-ற் ஆகும் | கல்+சிறை=கற்சிறை |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 2. | லகர ஈறு | மென்கணம் வரின் | வேற்றுமை | ல்-ன் ஆகும் | கல்+முனை =கன்முனை பல்+மணிமாலை =பன்மணிமாலை |
| 3. | லகர ஈறு | மென்கனம் வரின் | அல்வழி | உறழ்ந்து முடியும் | கல்குறிது, கற்குறிது |
| 4. | லகர ஈறு | த-முதன் மொழி | அல்வழி | ற்-அன்றி ஆய்தமாகவும் முடியும் | கல்+தீது=கஃறீது, கற்றீது |
| 5. | லகர ஈறு நெட்டெழுத்திறுதி | க ச த ப | அல்வழி | திரிதலும் இயல்பும் | காற்குறிது, கால்குறிது |
| 6. | நெல், செல், கொல், சொல்- பெயர்கள் | க ச த ப | அல்வழி | ல்-ற் ஆகத்திரியும் | நெற்குவிந்தது, கொற்கடிது. |
| 7. | இல் (இன்மை) | வேற்றுமை | | வலி மிகுதலும், ஐ இடையில் வருதலும் இயல்பாகும் ஆ மிகுதலும் | இல்லைப்பொருள் இல்பொருள் இல்லார்க்கொடுமை |
| 8. | வல் (சூதாடு கருவி) | | அல்வழி வேற்றுமை | உ-பெற்று, வலிவரின் மிக்கு, ஞநமவ வரின் இயல்பாதல் | வல்லுக்கொடிது, வல்லுத்தீமை |
| 9. | வல் | நாய், பலகை | | உ-கெடும், அ வரும். உ கெடாதும் நிற்கும் | வல்ல நாய், வல்லுப்பலகை |
| 10. | பூல், வேல், ஆல் | | | அம்-சாரியை வரும் | பூலங்காடு, வேலங்குடி |
| 11. | கல்(லு) | | அல்வழி வேற்றுமை | வலிவரின் உகரமும் வல்லெழுத்தும்: மென்கணமும் இடைக்கணமும் வரின் உ பெறும் | கல்லுக்கடிது, கல்லுக்கடுமை கல்லு நீண்டது |
| 12. | வெயில் | வினைச்சொல் | | அத்து-சாரியை இன்-சாரியை | வெயிலத்துப் போனான் வெயிலிற் போனான் |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 1. | வ வகர ஈறு அவ் | க ச த ப | வேற்றுமை | வற்றுச் சாரியை பெறும் | அவற்றுக் கிளை |
| 2. | அவ் | க ச த ப | | வ்-ஃ ஆகும் | அவ்+கடிய =அஃகடிய |
| 3. | அவ் | மென்கணம் | | மெல்லெழுத்தாய் திரியும் | அவ்+ஞான்று= அஞ்ஞான்று |
| 4. | அவ் | இடைக்கணம் | உயிர்க் கணம் | இயல்பு | அவ்யாழ், இவ்வுயிர் |
| 5. | தெவ் | வன்கணம் மென்கணம் | | உ-மட்டும் பெறும், உ-வுடன் வல்லொற்று பெறும், இயல்பு | தெவ்வுக்கடிது, தெவ்வு மீட்சி |
| 1. | ழ ழகர ஈறு | க ச த ப | வேற்றுமை | வல்லெழுத்து மிகும் | பூழ்க்கால் |
| 2. | தாழ் | கோல் | | வலி மிகும். அக்கும் பெறும் | தாழ்க்கோல், தாழக்கோல் |
| 3. | தாழ் | | | வல்லொற்று மிகுதலேயன்றி அக்குச் சாரியை பெறும் | தமிழ்க்கூத்து தமிழக்கூத்து |
| 4. | குமிழ் (மரம்) | க ச த ப | | மெல்லெழுத்தும் அம்முச் சாரியையும் பெறும் | குமிழம் பழம் |
| 5. | பாழ் | க ச த ப | | வலி, மெலி உறழ்ந்து முடியும் | பாழ்க்கிணறு பாழ்ங்கிணறு |
| 6. | ஏழ் | க ச த ப | | அன்-சாரியை பெறும் | ஏழன்கணக்கு |
| 7. | ஏழ் (எழு) | முகத்தல் அளவை நிறுத்தல் அளவை எண்ணுப் பெயர் | | நெடில் குறுகும்- ழ்+உ சேரும் | எழு கலம் எழுகழஞ்சு எழுபடங்கள் |
| 8. | ஏழ் (எழு) | பத்து | | பத்து-இடை | எழுபஃது |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | | | | ஒற்றுக்கெடும் அங்கு ஆய்தம் வரும் | |
| 9. | ஏழ் (எழு) | ஆயிரம் | | உ-கெடும் | ஏழாயிரம் |
| 10. | ஏழ் (எழு) | நூறாயிரம் | | நெடில் குறுகாது | ஏழ்நூறாயிரம் |
| 11. | ஏழ் | தாமரை, வெள்ளம், ஆம்பல் | | இயல்பாகும் | ஏழ் தாமரை, ஏழ் வெள்ளம் ஏழ் ஆம்பல் |
| 12. | ஏழ் | உயிர்க்கணம் | | இயல்பாகும் | ஏழகல், ஏழிரண்டு |
| 13. | கீழ் | க ச த ப | | உறழ்ச்சியாகும் | கீழ்குளம், கீழ்க்குளம் |
| 1. | ள ளகர ஈறு முள் | க ச த ப | வேற்றுமை | ள்-ட் ஆகும் | முட்செடி |
| 2. | ள் முள் | மெல்லினம் | வேற்றுமை | ள்-ண் ஆகும் | முள்+முனை= முண்முனை |
| 3. | ள் | க ச த ப | அல்வழி எல்லாம் | உறழ்ச்சியாகும் | முள் கடிது, முட்கடிது, கள்கொடிது, கட்கொடிது |
| 4. | முள் | தகரமுதன் மொழி | அல்வழி | ட்ஆகாது, ஆய்தமாயும் வரும் | முஃடீது, முட்டீது |
| 5. | வாள் நாள் | | அல்வழி | இயல்பாகும் திரிபடையும் | வாள் கூரிது நாட் கடிது |
| 6. | துள் | வன்கணம் மென்கணம் | வேற்றுமை அல்வழி பெறும் | வலியும் உகரமும் பெறும் உகரம் | துள்ளுக்கடிது துள்ளு நன்மை |
| 7. | இருள் | வினைச்சொல் | அல்வழி | அத்தும் இன்னும் சாரியையாக வரும் இருளிற் போனான் | இருளத்துச் சென்றான் |
| 8. | புள், வள் | வன்கணம் மென்கணம் | அல்வழி | வலிவரின் உகரமும் வலியுவரும் இயல்புமாய் | புள்ளுக்கடிது வள்ளு நீண்டது |
| 9. | மக்கள் | க ச த ப | | வல்லொற்றாகும் ள்-ட் | மக்கட்பேறு மக்கள் மக்கள் பவர் |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | | | | | என்பதும் உண்டு |

## வினாக்கள்

**பத்திவினா**

1. புள்ளிமயங்கியல் பெயர்க்காரணம் விளக்குக.
2. 'தொழிற்பெய ரெல்லாந் தொழிற்பெய ரியல'– விளக்குக.
3. ஈம், கம், உரும் என்னும் பெயர்கள் புணருமாற்றை விளக்குக.
4. தொல்காப்பிய காலத்திய அளவு, நிறைப்பெயர்களின் புணர்ச்சிகள் சிலவற்றைக் குறிப்பிடுக.
5. ஆந்தை, பூந்தை என்னும் சொற்களைப் பிரித்துப் புணர்ச்சி விதி கூறுக.
6. 'ய'கர ஈற்றுப் புணர்ச்சி குறித்து எழுதுக.
7. 'ர'கர ஈற்றுப் புணர்ச்சி குறித்து எழுதுக.
8. எல்லாரும், எல்லீரும், தாம், நாம்ய, யாம், நும் ஆகிய மகரவீற்றுப் பெயர்களுக்கு கூறப்பட்ட புணர்ச்சி விதிகளைக் கூறுக.
9. மகரவீற்று நாட்பெயர்கள் எவ்வாறு புணரும்?
10. குயின், எகின், வயின், மின், தேன் ஆகியவற்றிற்குரிய புணர்ச்சி விதிகள் யாவை?

**கட்டுரை வினா**

1. 'ண'கர 'ன'கர அல்லது 'ல'கர 'ள'கர ஈற்றுப் புணர்ச்சி குறித்து விளக்குக.
2. தேன் என்னும் சொல் புணரும் விதத்தை விளக்குக.
3. தொல்காப்பியர் புள்ளியீற்றுச் சொற்களின் புணர்ச்சிகளை எவ்வாறு வகைப்படுத்துகிறார்?
4. மகரவீற்றுப் பெயர்கள் வேற்றுமையில் புணருமாற்றை விளக்குக.
5. மகரவீற்றுப் பெயர்கள் அல்வழியில் புணரும்போது உண்டாகும் மாற்றங்களைத் தொகுக்க.
6. மகரவீற்று உயர்திணை, விரவுப்பெயர்களுக்கும், தொழிற்பெயர்களுக்கும் கூறப்பட்ட சிறப்புப்புணர்ச்சி விதிகளைத் தொகுக்க.
7. யகரவீற்றில் முடியும் சொற்களுக்கான புணர்ச்சி விதிகளை எழுதுக.
8. லகாரவீற்றில் முடியும் சொற்களுக்கான புணர்ச்சி விதிகளை எழுதுக.
9. வகரவீற்றில் முடியும் சொற்களுக்கான புணர்ச்சி விதிகளை எழுதுக.
10. ழகாரவீற்றுப் பெயர்கள் அல்வழியில் புணரும்போது உண்டாகும் மாற்றங்களைத் தொகுக்க.

# 9. குற்றியலுகரப் புணரியல்

குற்றியலுகரத்தை உயிருள் அடக்கி, உயிர் மயங்கியலில் கூறி இருக்கலாம். தமிழகுகுக் குற்றியலுகரம் உயிர் போன்றது. தமிழ்ச்சொற்கள் உகரத்தில் முடிவன பெரும்பான்மைய. தமிழிலுள்ள எண்ணுப்பெயர்கள் யாவும் நூறு முடியக் குற்றியலுகரங்களே. திசைச்சொற்கள் யாவும் குற்றுகரத்தில் முடியும். தமிழ்ச்சொல்லை இனங்காட்டுவதும் தமிழாக்கம் செய்ய உதவுவதுமாகிய குற்றியலுகரம் இன்றும் சிறப்பிடம் பெறுகிறது. தமிழ்ச்சொற்கள் எவையும் வல்லினத்தில் முடிவதில்லை என்பது தமிழின் தனிச்சிறப்புகளில் ஒன்றாகும். பாக், வாக், தாட், பூட் என்று சொல்லியும் அவற்றையே பாக்கு, வாக்கு, தாட்டு, பூட்டு என்று சொல்லியும் பாருங்கள். தமிழ்ச்சொல்லின் இனிமையும் நீர்மையும் எளிமையும் புலனாகும். குற்றியலுகர ஈறு நின்று வருமொழியோடு புணர்வதை இவ்வியல் விளக்குகிறது.

### குற்றியலுகர ஆறு வகையும் பெயரும்

**ஈரெழுத் தொருமொழி உயிர்த்தொடர் இடைத்தொடர்**
**ஆய்தத் தொடர்மொழி வன்தொடர் மென்தொடர்**
**ஆயிரு மூன்றே உகரம் குறுகிடன் (406)**

நெடில் முதலாகிய ஈரெழுத்தொருமொழி, உயிர்த்தொடர், இடைத்தொடர், ஆய்தத்தொடர், வன்தொடர், மென்தொடர் என ஈற்றயல் எழுத்தை நோக்கி உகரம் குறுகுமிடங்கள் ஆறாகும். ஆஇருமூன்று – அவ்விருமூன்று, ஆறு.

### இடைத்தொடரில் ஈரொற்று வாராமை

**அவற்றுள்**
**ஈரொற்றுத் தொடர்மொழி இடைத்தொட ராகா (407)**

அவற்றுள்,ஈர் ஒற்றாக நின்று தொடரும் மொழிகள் இடைத்தொடராக அமையா. எனவே சால்பு, செய்து என்பது போல் அவை ஓரொற்றுடனியாகவே அமையும். ஈரொற்றாகவரின் வன்தொடராகவோ, மென் தொடராகவோதான் வரும். மொழியை நுட்பமாய் ஆராய்ந்த கூற்று, காழ்ப்பு, மொய்ம்பு என்பதுபோல் வன்தொடராகவே மென்தொடராகவே ஆகும்.

### அல்வழியிலும் வேற்றுமையிலும் குற்றுகரம் வரும்

**அல்லது கிளப்பினும் வேற்றுமைக் கண்ணும்**
**எல்லா இறுதியும் உகரம் நிலையும் (408)**

அல்வழிக்கண்ணும் வேற்றுமைக் கண்ணும் மேற்கூறிய ஆறு இடங்களிலும் உகரம் குறுகிநிற்கும். அல்லது-அல்வழி. எல்லா இறுதியும்-ஆறு இறுதியிலும், நிலையும் - குறுகி நிற்கும். மாசு பெரிது, நாட்டு வாழ்த்து.

**குற்றுகரப் பொதுப்புணர்ச்சி வன்தொடர்க் குற்றுகரப் புணர்ச்சி**

**வல்லொற்றுத் தொடர்மொழி வல்லெழுத்து வருவழித்**
**தொல்லை இயற்கை நிலையலும் உரித்தே (409)**

வல்லெழுத்துத் தொடரும் வன்தொடர்க் குற்றுகரம் எதிரே வல்லெழுத்து வருமொழி முதலில் வருமிடத்து, மேற்கூறிய இயல்புப்படி, குற்றுகரமாய் அரைமாத்திரை பெற்று நிற்றலுமுண்டு. அதைவிடக் குறுகிக் கால்மாத்திரை பெறுதலுமுண்டு. தொல்லை இயற்கை-குற்றுகரமாய் அரைமாத்திரை பெறுதல். நிலையலும்-உம்மை எதிர்மறையாய் நிலையாது மேலும் குறுகுதலும் உண்டு. கொக்குக்குறிது, பட்டுப்புழு.

**குற்றியலுகரம் புணர்ச்சியின் குற்றியலிகரமாதல்**

**யகரம் வருவழி இகரம் குறுகும்**
**உகரக் கிளவி துவரத் தோன்றாது (410)**

யகர முதன் மொழி வருமொழியாய் வரும்போது நிலைமொழி இறுதி உகரம் முழுமைபெறத் தோன்றாது. ஆண்டு அது இகரமாகத் திரிந்து குறுகி ஒலிக்கும். நாடு+யாது=நாடியாது. ‘உகரக்கிளவி’ என்பதால் இது குற்றியலுகரம் பற்றியதென்பதாகும். யகரம் வருகிளவி இகரம் என்றதால் அங்ஙனம் நின்ற உகரம் இகரமாகத் திரியு மென்பதும் பெற்றாம்.

**குற்றுகர ஈற்று வேற்றுமைப் புணர்ச்சி**
**நெடில்தொடர் உயிர்த்தொடர்களின் புணர்ச்சி**

**ஈரெழுத்து மொழியும் உயிர்த்தொடர் மொழியும்**
**வேற்றுமை யாயின் ஒற்றிடை இனமிகத்**
**தோற்றம் வேண்டும் வல்லெழுத்து மிகுதி (411)**

ஈரெழுத்தாகிய நெடில்தொடர்க் குற்றகரமும் உயிர்த்தொடர் குற்றுகரமும் வேற்றுமைப் பொருட்புணர்ச்சியில், மொழியிடையெ இறுதியிலுள்ள ஒற்றின் இனஒற்று மிகும். அதனுடன் எதிரே வரும் வல்லெழுத்துமிக்குத் தோன்றி முடியும். யாடு+கால்=யாட்டு என இடையே இன ஒற்றுமிகுந்து,யாட்டுக்கால் என வல்லொற்றும் தோன்றி முடிந்தன. வயிறு+பசி=வயிற்றுப்பசி. வல்லெழுத்தை ஏனைக்கணம் வரின் இயல்பாய் முடியும். நாட்டு நடப்பு.

**அதற்கு வேறு முடிபு**

**ஒற்றிடை இனமிகா மொழியுமா ருளவே**
**அத்திறத்து இல்லை வல்லெழுத்து மிகலே (412)**

முற்கூறியவாறு இன ஒற்று இடையில் மிகாத மொழிகளும் உள்ளன. அதில் வருமொழி முதல் வல்லெழுத்து மிகுதலும் இல்லை. அத்திறத்து-அவ்விதமான மொழிகளில். பாகு சுவை, வரகு கதிர்.

**இடைத்தொடர் ஆய்தத்தொடர்களின் புணர்ச்சி**

**இடையொற்றுத் தொடரும் ஆய்தத் தொடரும்**
**நடைஆ இயல என்மனார் புலவர் (413)**

இடைத்தொடரும் ஆய்தத் தொடரும், வேற்றுமையில் வல்லினம் வரும்வழிப் புணருமிடத்து அப்புணர்ச்சிபோல் இயல்பாக நடக்கும் என்பர் புலவர். இடைத்தொடர் என்னாது இடையொற்றுத் தொடரென்றது வரகு என்பது உயிர்த்தொடராகும். சார்பு என முன்னிற்பது ஒற்றாகுமிடத்தேதான் அஃது இடைத்தொடரெனப்படும் எனத் தெரிவித்தற்கு, ஆ, நடை இயல-அவ்வாறு நடக்கும் இயல்பின. உல்கு கணக்கு. எஃகு கணம்.

**வன்தொடர் மென்தொடர்களின் புணர்ச்சி**

**வன்தொடர் மொழியும் மென்தொடர் மொழியும்**
**வந்த வல்லெழுத்து ஒற்றிடை மிகுமே**
**மெல்லொற்றுத் தொடர்மொழி மெல்லொற் றெல்லாம்**
**வல்லொற்று இறுதி கிளையொற் றாகும் (414)**

வன்தொடர்க் குற்றுகரமும் மென்தொடர்க் குற்றுகரமும், வருமொழியாய் வந்த வல்லொற்று மிக்கு முடியும். மென்தொடர்க் குற்றுகரத்தில் இடையிலுள்ள மெல்லொற்று அனைத்தும் இறுதியிலுள்ள வல்லொற்றாகவோ அல்லது கிளை வல்லொற்றாகவோ மாறும். வந்த-வருமொழியாய் வந்த. கொக்குக்கால்-வன்தொடர் மொழியில் வந்த வல்லொற்று மிக்கது. குரங்குக்கால்-மென்தொடர் வந்த வல்லொற்று மிக்கது. குரக்குக்கால்-மெல்லொற்று வல்லொற்றாய்த் திரிந்து முடிந்தது. எண்கு+குட்டி=எட்குக்குட்டி. இதில் இன ஒற்றாக மாறியது காண்க.

**மென்தொடர் வன்தொடர் மரப்பெயர்கள் புணர்தல்**

**மரப்பெயர்க் கிளவிக்கு அம்மே சாரியை (415)**

மென்தொடராகவோ வன்தொடராகவோ வரும் மரப்பெயர்ச் சொற்களுக்கு ‘அம்’ சாரியை வரும். வேம்பு+பூ=வேப்பம்பூ. தேக்கு+கிளை=தேக்கங்கிளை.

**அதற்கு மேலும் ஒரு முடிபு**

**மெல்லொற்று வலியா மரப்பெயரும் உளவே (416)**

மெல்லொற்று வல்லொற்றாய் மாறாத மரப்பெயருமுள. குருந்து+கிளை=குருந்தங்கிளை. புன்கு+பூ=புன்கம்பூ.

**நெடில்தொடர் வன்தொடர் 'அம்மு'ச் சாரியை பெறல்**

**ஈரெழுத்து மொழியும் வல்லொற்றுத் தொடரும்**
**அம்இடை வரற்கும் உரியவை உளவே**
**அம்மர பொழுகும் மொழிவயி னான (417)**

ஈரெழுத்து நெடில் தொடரும்,வன்தொடரும் அம்முச்சாரியை வருதற்குரியனவும் உள். அவ்வியல்புவழி நடக்கும் சொற்களிடத்து, ஏறு+கோள்=ஏறங்கோள்.

**'அக்கு'ச் சாரியை பெறும் மென்தொடர் மொழிகள்**

**ஒற்றுநிலை திரியாது அக்கொடு வரூஉம்**
**அக்கிளை மொழியும் உளவென மொழிப (418)**

ஒற்று முன்னின்ற நிலையிலிருந்து திரியாமல் அக்குச் சாரியை பெறும் அவ்வகைப்பட்ட மென்தொடர் மொழிகளும் உள. குன்று+அக்கு+கூகை=குன்றக்கூகை.

**எண்ணுப்பெயர்கள் 'அன்' சாரியை பெறுதல்**

**எண்ணுப் பெயர்க்கிளவி உருபியல் நிலையும் (419)**

குற்றுகர ஈற்று எண்ணுப்பெயர்கள் உருபு புணர்ச்சியல் கூறிய இயல்புப்படி அன் சாரியை பெற்று நிற்கும். ஒன்று+கூறு=ஒன்றன்கூறு.

**தனிச்சொற்களுக்குக் கூறும் சிறப்புப்புணர்ச்சி**
**வண்டு பெண்டு இன் சாரியை பெறுதல்**

**வண்டும் பெண்ணும் இன்னொடு சிவணும் (420)**

வண்டு, பெண்டு என்னும் சொற்கள் இன் சாரியை பொருந்தும். வண்டின்கால்.

**பெண்டு 'அன்' சாரியையும் பெறுதல்**

**பெண்டென் கிளவிக்கு அன்னும் வரையார் (421)**

பெண்டு எனும் சொல்லுக்கு அன் சாரியை வரினும் நீக்கார். பெண்டின்கை, என்பதேயன்றிப் பெண்டன் கை எனலுமாம்.

**குற்றுகர ஈற்று வினா, சுட்டுப்பெயர்கள் புணர்தல்**

**யாதென் இறுதியும் சுட்டுமுத லாகிய**
**ஆய்த இறுதியும் உருபியல் நிலையும் (422)**

யாது என்னும் வினாப் பெயரிறுதியும் சுட்டு முதலாகிய ஆய்தத்தொடர் மொழிஇறுதியும் உருபு புணர்ச்சிக்கு ஓதிய இயல்பினவாய் முடியும். அஃதாவது அன் சாரியை பெறும். சுட்டுப்பெயரிறுதி சாரியை பெற்றபின் ஆய்தம் கெடும். யாது+பகுதி=யாதன்பகுதி. அஃது+கிளை=அதன்கிளை.

**குற்றுகர ஈற்று அல்வழிப் புணர்ச்சி**
**குற்றுகர ஈற்றுச் சுட்டுப்பெயர்ப் புணர்ச்சி**

**முன்உயிர் வருமிடத்து ஆய்தப்புள்ளி**
**மன்னல் வேண்டும் அல்வழி யான. (423)**

சுட்டுமுதலாகிய ஆய்தத் தொடரின் முன்னே உயிர் முதன்மொழி வருமிடத்து, அல்வழிக்கண், ஆயதப்புள்ளி கெடாது நிலைபெற வேண்டும். முற்கூறிய ஆய்தத்தொடர்களின் முன்னே என்பது அதிகாரத்தால் பெற்றாம். அஃது+அன்று=அஃதன்று.

**அதற்கு மேலும் ஒரு முடிபு**

**ஏனைமுன் வரினே தான்நிலை இன்றே (424)**

அச்சுட்டு முதலாகிய ஆய்தத்தொடரின் முன் உயிரொழிந்த ஏனைய கணங்கள் வருமிடத்து, அவ் ஆய்தம் நிலையின்றி முடியும். அஃது+கடிது=அதுகடிது.

**அல்வழியில் குற்றுகர ஈறுகளின் பொதுப்புணர்ச்சி**

**அல்லது கிளப்பின் எல்லா மொழியும்**
**சொல்லிய பண்பின் இயற்கை யாகும் (425)**

அல்வழியாகச் சொல்லுமிடத்து, எல்லா ஈற்றுக் குற்றுகரமும், புலவோர் சொல்லிய பண்பின்படி இயல்பாய் முடியும் அல்லது –அல்வழி. வரகு பெரிது.

**வன்தொடர்க் குற்றுகரப் புணர்ச்சி**

**வல்லொற்றுத் தொடர்மொழி வல்லெழுத்து மிகுமே (426)**

வல்லொற்றுத் தொடர்மொழிக் குற்றுகரம் அல்வழியிலும் வல்லெழுத்து மிக்கு முடியும். கொக்குப்பறந்தது.

### ஆங்கு, யாங்கு முதலிய மென்தொடர் மொழிகள்

**சுட்டுச்சினை நீடிய மென்தொடர் மொழியும்**
**யாவினா முதலிய மென்தொடர் மொழியும்**
**ஆயியல் திரியா வல்லெழுத் தியற்கை (427)**

சுட்டெழுத்தின் மாத்திர நீண்ட மென்தொடர்ச் சுட்டுப்பெயரும், யா எனும் வினாவை முதலாகவுடைய மென்தொடர்ச் சொல்லும் வல்லெழுத்துப் பெறும் இயற்கையாகிய அவ்வியல்பில் திரியா. சுட்டுச்சினை-சுட்டெழுத்து. வல்லெழுத்தியற்கையாகிய அவ்வியல்பில் திரியா. ஆங்குக்கொண்டான், யாங்குக்கொண்டான்.

### யாங்கு என்பதற்கு மேலும் ஒரு முடிபு

**யாவினா மொழியே இயல்பு யாகும் (428)**

மேற்கூறியவற்றுள் யா வினாமொழி, வல்லொழுத்து மிகுதலேயன்றி இயல்பாகும் முடியும். யாங்கு கொண்டான்.

### சுட்டு, யா முதலாகிய நான்கு குற்றுகர ஈறுகளின் நிலைமொழிச் செய்கை

**அந்நான் மொழியும் தந்நிலை திரியா (429)**

முற்கூறிய சுட்டுமுதலாகிய அங்கு, இங்கு, உங்கு முதலியனவும் எங்கு என்ற மொழியுமாகிய அவை நான்கும் தம் மெல்லொற்ற நிலைதிரிந்து வல்லொற்றாகா. செம்பு+பட்டயம்=செப்புப்பட்டயம் என மெல்லொற்று வல்லொற்றாகும் இயல்பு இங்கில்லை என்பதாம். அங்குக்கண்டான். இது அக்குக்கண்டான் என ஆகாது.

### உண்மை உணர்த்தும் ‘உண்டு’ எனும் சொற்புணர்ச்சி

**உண்டுஎன் கிளவி உண்மை செப்பின்**
**முந்தை இறுதி மெய்யொடுங் கெடுதலும்**
**மேனிலை ஒற்றே ளகாரம் ஆதலும்**
**ஆமுறை இரண்டும் உரிமையும் உடைத்தே**
**வல்லெழுத்து வரூஉங் காலை யான (430)**

உண்டு எனும் சொல் உண்மை எனும் பண்பையுணர்த்தின், வல்லெழுத்து வருமிடத்து, ஆக இறுதியாக நிற்கும் குற்றியலுகரம் தான் ஏறி நின்ற மெய்யொடும் கெடும். பின்னர் அதன் மேல் நின்ற ணகார ஒற்று ளகர மாகத் திரியும் இவ்வாறான இரண்டு செய்கைகளும் உரித்தாதலும் உண்டு. உள்பொருள், உண்டு பொருள்.

### கிழக்கு மேற்கு வடக்கு தெற்கு பெருந்திசைகள் புணர்தல்

**இருதிசை புணரின் ஏஇடை வருமே (431)**

இரண்டு திசைகள் தம்மில் புணரின் ஏ என்னும் சாரியை இடையில் வரும். வடக்கே கிழக்கு, தெற்கே கிழக்கு.

### திசைப் பெயர்முன் திசைப்பெயர்கள் புணர்ந்து கோணத்திசைகளை உணர்த்துதல்

**திரிபுவேறு கிளப்பின் ஒற்றும் இறுதியும்**
**கெடுதல் வேண்டும் என்மனார் புலவர்**
**ஒற்றுமெய் திரிந்து னகாரம் ஆகும்**
**தெற்கொடு புணருங் காலை யான (432)**

இரண்டு திசைகள் புணர்ந்து, கோணத்திசையைச் சொல்லுமிடத்து, இடையில் நின்ற ஒற்றும் இறுதிக் குற்றுகரமும் கெடுதல் வேண்டும் என்பர். தெற்கொடு புணருமிடத்து றகார ஒற்றுத் திரியாது. னகாரமாகும். திரிபு வேறு கிளப்பின்-வேறு வகையான திரிபுகளை அதாவது கோணத்திசைகளைச் சுட்டுவதை. ஒற்றும்-இடைநின்ற ஒற்றும். இறுதியும்-இறுதியிலுள்ள குற்றுகரமும். வடகிழக்கு. தென்மேற்கு.

### குற்றுகர ஈற்று எண்ணுப்பெயர்ப்புணர்ச்சி பத்தின்முன் ஒன்று முதல் எட்டு

**ஒன்றுமுத லாக எட்டன் இறுதி**
**எல்லா எண்ணும் பத்தன் முன்வரின்**
**குற்றிய லுகரம் மெய்யொடும் கெடுமே**
**முற்றஇன் வரூஉம் இரண்டலங் கடையே (433)**

ஒன்று முதலாக எட்டு ஈறாகவுள்ள அனைத்து எண்ணுப்பெயர்களும் வருமொழியாகப் பத்து என்பதன் முன் வரின் அச்சொல்லிலுள்ள குற்றியலுகரம் மெய்யொடும் கெடும். இன் சாரியை அவ்விடத்தே வந்து நிறைவு செய்யும். இஃது இரண்டு என்ற எண் அல்லாவிடத்தாகும். பத்து+மூன்று=பதின்மூன்று, பதின்நான்கு.

### பத்தின் முன் இரண்டு

**பத்தன்ஒற் றுக்கெட னகாரம் இரட்டல்**
**ஒத்த தென்ப இரண்டுவரு காலை (434)**

இரண்டு என்ற எண் வருமொழியாகப் புணரும்போது, பத்து என்பதன் குற்றியலுகர ஈற்றுடன் மேல்நின்ற தகர ஒற்றும் கெட, னகர ஒற்றுத்தோன்றி இரட்டித்து நிற்றல் பொருத்தமென்பர். பத்து+இரண்டு=பன்னிரண்டு.

**பத்தின் முன் ஆயிரம்**

**ஆயிரம் வரின் ஆயியல் திரியாது (435)**

முற்கூறிய பத்து என்னும் எண்ணுப் பெயர்முன், ஒன்று முதலாகிய எண்ணுப் பெயர்களளேயல்லாமல், ஆயிரம் என்ற சொல்வரினும் மேற்கூறியாங்கு ஈறு கெட்டு, இன்பெற்ற இயல்பில் திரியாது. பதினாயிரம்.

**பத்தின்முன் நிறுத்தல், முகத்தல் அளவைப் பெயர்கள்**

**நிறையும் அளவும வருஉங் காலையும்**
**குறையா தாகும் இன்னென் சாரியை (436)**

மேலே கூறிய பத்து என்பதன் முன் நிறுத்தலளவைப் பெயரும் முகத்தலவைப் பெயரும் வரும்போதும் இன் சாரியை குறைவின்றி வரும். பதின்கழஞ்சு, பதின்கலம்.

**ஒன்று முதல் ஒன்பது வரை நிற்க, பத்து வந்து புணர்தல்**

**ஒன்றுமுதல் ஒன்பான் இறுதி முன்னர்**
**நின்ற பத்தன் ஒற்றுக்கெட ஆய்தம்**
**வந்துஇடை நிலையும் இயற்கைத் தென்ப**
**கூறிய இயற்கை குற்றிய லுகரம்**
**ஆறன் இறுதி அல்வழி யான (437)**

ஒன்று முதல் ஒன்பது ஈறாகச் சொல்லப்படும் எண்ணுப் பெயர்களின் இறுதி முன்னர், வருமொழியாய் வந்து நின்ற பத்து என்பதன் இடைநின்ற தகர ஒற்றுக்கெட, அவ்விடத்தே ஆய்தம் வந்து நிலைபெறும் இயற்கையையுடையதென்பர். அவற்றுள் ஆறு தவிர்த்தவற்றில் முற்கூறியவாறு நிலைமொழி ஈற்றுக் குற்றியலுகரம் மெய்யோடும் கெடும். இருப·்து, முப்ப·்து. இன்று அது இருபது, முப்பது என வழங்கும்.

**ஒன்று இரண்டும் முன் பத்து**

**முதலீர் எண்ணின்ஒற்று ரகரம் ஆகும்**
**உகரம் வருதல் ஆவயி னான (438)**

முதல் இரண்டு எண்களின் ஒற்று ரகர ஒற்றாய் மாறும். அவ்விடத்து உகரம் வருதல் வேண்டும். ஒன்று-ஒன்-ஒர்-ஒரு நிலைமொழி ஈற்றுக் குற்றுகரம் கெடுதல் பொதுவிதி.

**இரண்டு என்பதற்கு மேலும் ஒரு முடிபு**

**இடைநிலை ரகரம் இரண்டென் எண்ணிற்கு**
**நடைமருங் கின்றே பொருள்வயி னான (439)**

இரண்டு என்னும் எண்ணில் ‘டு’ கெட்டது. இரண்டு என்பதில், ண், ரு என மாறுதல் முற்சூத்திரவிதி. ர என்ற உயிர்மெய் கெடுதலை இச்சூத்திரம் கூறுகிறது. இரண்டு என்னும் எண்ணிற்கு இடையிலுள்ள ரகரம் பொருள் தருவதற்காகப் பொருந்தி நடக்குமிடமில்லை. ஏனெனில் ணகர ஒற்று ‘ரு’ என மாறி அப்பொருள் தருமாதலின் இதுதேவைப்படுவதில்லை. எனவே இரண்டு-இரு என ஆகும். பொருள் வயினான – பொருள் தருமிடமாக. நடை மருங்கு இன்று – பொருந்தி நடக்குமிடமில்லை.

**மூன்று ஆறு முன் பத்து**

**மூன்றும் ஆறும் நெடுமுதல் குறுகும் (440)**

மூன்று ஆறு என்ற எண்கள் நெடிலாகிய முதல் குறுகும்.

**மூன்று என்பதற்கு மேலும் ஒரு முடிபு**

**மூன்று ஒற்றே பகாரம் ஆகும் (441)**

மூன்றில் உள்ள னகர ஒற்று, பகரமாகும். முப்ப∴து, அறுப∴து.

**நான்கு முன் பத்து**

**நான்கன் ஒற்றே றகாரம் ஆகும் (442)**

நான்கு என்னும் எண்ணிலுள்ள னகரஒற்று றகரமாக மாறும். நாற்ப∴து.

**ஐந்து முன் பத்து**

**ஐந்தன் ஒற்றே மகாரம் ஆகும் (443)**

ஐந்து என்னும் எண்ணிலுள்ள நகர ஒற்று மகரமாகும். ஐம்ப∴து

**எட்டு முன் பத்து**

**எட்டன் ஒற்றே ணகாரம் ஆகும் (444)**

எட்டு என்னும் எண்ணிலுள்ள டகரஒற்று ணகரஒற்றாய் மாறும். எண்ப∴து.

**ஒன்ப∴து முன் ப∴து தொண்ணூறு ஆதல்**

**ஒன்பான் ஒகரமிசைத் தகரம் ஒற்றும்**
**முந்தை ஒற்றே ணகாரம் இரட்டும்**
**ப∴தென் கிளவி, ஆய்த, பக ரங்கெட**
**நிற்றல் வேண்டும் ஊகாரக் கிளவி**

**ஒற்றிய தகரம் றகாரம் ஆகும் (445)**

ஒன்ப.்.து+பத்து=தொண்ணூறு என மாறியதாக இந்நூற்பாவில் வதிவகுக்கப்படுகிறது. ஒன்ப.்.து என்னும் நிலைமொழியின் ஒகரத்துடன் 'த'கர ஒற்றுச்சேரும். முன் சொன்ன ஒகரத்தின் முன்னிருத்த னகரஒற்று ணகர ஒற்றாய் மாறி இரட்டும். ப.்.து என்னும் சொல்லும் வருமொழிப் ப.்.துவிள்ள ஆய்தமும் பகரமும் கெட, ஊ வந்து இறுதியில் சேரும். இறுதியில் நின்ற 'து'வில் ஒற்றாய் உள்ள தகரம் றகரமாக மாறும் (தொண்ணூறு), தொண்டு (9). தொண்டு+பத்து=தொண்பது (90). தொண்டு+நூறு=தொண்ணூறு (900). தொண்டு+ஆயிரம்=தொள்ளாயிரம் என்பவே பழைய வடிவங்களென்பர் பாவாணர்.

### ஒன்று முதல் ஒன்பது வரையிலான எண்ணுப் பெயர்முன் முகத்தலளவை நிறுத்தலளவைப் பெயர்கள் வந்து புணர்தல்

**அளந்தறி கிளவியும் நிறையின் கிளவியும்**
**கிளந்த இயல தோன்றும் காலை (446)**

ஒன்று முதல் ஒன்பது வரையுள்ள எண்ணுப் பெயர்களின் முன்னர் முகத்தலளவைப் பெயரும், நிறுத்தலவைப் பெயரும் வருமொழியாகத் தோன்றுமிடத்து, முன்பு எண்ணுப் பெயர்கட்கு எடுத்துச் சொல்லிய இயல்பினவாய்ப் புணரும். அ.்.தாவது ஆறு என்னும் எண்தவிர்த்த ஏனைய எண்ணுப் பெயர்களின் குற்றியலுகர ஈறு மெய்யொடும் கெடும். முதலீர் எண்களின் ஒற்றுக்கள் ரகரமாகத் திரியும். இரண்டு எனும் எண்ணின் ரகர உயிர்மெய் கெடும். மூன்றும் ஆறும் முதல் குறுகும். மூன்றன் ஒற்றுப் பகரமாகும். நான்கன் ஒற்று ரகரமாகும். ஐந்தன் ஒற்று மகரமாகும். எட்டன் ஒற்று ணகரமாகும். ஒருகலம், எண்கழஞ்சு.

### மூன்றுடன் அளவைப் பெயர்கள்

**மூன்றன் ஒற்றே வந்த தொக்கும் (447)**

மூன்று எனும் எண்ணின் கண் நின்ற னகர ஒற்று, வருமொழி முதலில் வரும் அளவுப்பெயர்களனி வல்லொற்றுக்களை ஒத்துத் திரியும். முக்கலம், முப்பானை.

### ஐந்துடன் அளவைப் பெயர்கள்

**ஐந்தன் ஒற்றே மெல்லெழுத் தாகும் (448)**

ஐந்து என்னும் எண்ணின்கண் நின்ற நகர ஒற்று, வருமொழி முதலில்வரும் வல்லெழுத்திற்கு ஏற்ற மெல்லெழுத்தாய் மாறும். ஐங்கலம்.

**மூன்றும் ஐந்தும் முற்கூறியவாறு புணர்தல் க ச த ப வந்தவிடத்து**

**க ச த ப முதன்மொழி வரூஉங் காலை (449)**

மூன்றன் ஒற்று வருமொழி முதல்போல் ஒப்பதும், ஐந்தன் ஒற்று மெல்லெழுத்து ஆவதும் அளவுப்பெயர், நிறைப்பெயர்களில் கசதப முதன்மொழிகள் வந்தவிடத்தாகும். வரூஉங்காலை-வருமிடத்து.

**'எட்டு' எண்ணின்முன் அளவைகளைக் குறிக்கும் ந ம வ, அகர முதன்மொழிகள்**

**நமவ என்னும் மூன்றொடு சிவணி**
**அகரம் வரினும் எட்டன்முன் இயல்பே (450)**

நம என்னும் மூன்றொடு பொருந்தி, அகரமாகிய உயிர்முதன் மொழி, அளவைப் பெயர்களாக வருமொழியாகவரின், எட்டு நின்ற நிலைமொழியின் முன் இயல்பாக முடியும். எண் நாழி, எண் மண்டை.

**ஐந்து மூன்று என்பவற்றின் முன் ந ம முதன்மொழி அளவைப் பெயர்கள்**

**ஐந்தும் மூன்றும் நமவரு காலை**
**வந்தது ஒக்கும் ஒற்றியல் நிலையே (451)**

ஐந்தும் மூன்றும் ஆகிய எண்கள் ந, ம முதன்மொழிகள் வருங்காலத்துத் தம்மிடமுள்ள ஒற்று நடக்கும் நிலையைக் கூறின், வந்த ஒற்றொடு ஒத்த ஒற்றாக முடியும். ஒற்று இயலும் நிலை வந்தது ஒக்கும் எனக் கூட்டுக. முந்நாழி, ஐம்மண்டை.

**மூன்றன் முன் வகர முதன்மொழி அளவைப்பெயர்**

**மூன்றன் ஒற்றே வகரம் வருவழித்**
**தோன்றிய வகரத்து உருவா கும்மே (452)**

மூன்று எனும் எண்ணனி னகர ஒற்று, வகர முதன் மொழி வருமிடத்து, வந்த வகரத்துருவாய் மாறும். முவ்வட்டி.

**நான்கன் முன் வகரமுதன்மொழி அளவைப்பெயர்**

**நான்கன் ஒற்றே லகார மாகும் (453)**

அவ்வாறு வருமிடத்து நான்காம் எண்ணின்கண் நின்ற னகர ஒற்று லகர ஒற்றாய்த் திரியும். நால்வட்டி.

### ஐந்தன் முன் வகர முதன்மொழி அளவைப்பெயர்

**ஐந்தன் ஒற்றே முந்தையது கெடுமே (454)**

ஐந்து என்னும் எண்ணின்கண் நின்ற நகர ஒற்று, (வகரம் வந்தால்) முன் நின்ற வடிவமாய் மாறிக்கெடும். ஐவ்வட்டி, ஐவட்டி.

### ஒரு, இரு என்பன அளவைப் பெயர்களுள் உயிர்முதன் மொழிவர ஓர்,ஈர் ஆதல்

**முதலீர் எண்ணின்முன் உயிர்வரு காலைத்**
**தவலென மொழிப உகரக் கிளவி**
**முதனிலை நீடல் ஆவயி னான (455)**

முதல் இரண்டு எண்களின் முன் உயிர் முதன்மொழி வருங்காலத்து, உகரமாகிய எழுத்துக் கெடுமாறு சொல்லுவர் புலவர். அவ்வெண்ணின் முதலில் நின்ற எழுத்துக்கள் அவ்விடத்து நீண்டு முடியும். தவல் என-கெடல் என. உகரக்கிளவி-உகர எழுத்து. நீடல்-நீள்க. ஓரகல்,ஈருழக்கு,ஈர்எண் எனச் சூத்திரத்திலும் வருதல் காண்க.

### மூன்று நான்கு ஐந்து முன் உயிர்முதன் மொழி அளவைப் பெயர்கள் வருதல்

**மூன்றும் நான்கும் ஐந்தென் கிளவியும்**
**தோன்றிய வகரத்து இயற்கை யாகும் (456)**

மூன்று, நான்கு, ஐந்து என்னும் எண்ணுப்பெயர்கள் மேல் தோன்றி முடிந்த வகரத்து இயல்புடன் நடக்கும். மூன்றில் வகர ஒற்றாயும் நான்கில் லகர ஒற்றாயும் ஐந்தின்கண் ஒற்றுக் கெட்டும் முடியும். முவ்வகல், நாலகல், ஐயகல்.

### மூன்று என்பதற்கு மேலும் ஒரு முடிபு

**மூன்றன் முதனிலை நீடலும் உரித்தே**
**உழக்கென் கிளவி வழக்கத் தான (457)**

மூன்று என்பதன் முதல் எழுத்து,உழக்கு எனும் கிளவி வருமொழியாய் வந்து வழங்குமிடத்து, குறுகாது நீண்டு முடிதலும் உண்டு. வழக்கத்தான –வழங்குமிடத்து. மூவுழக்கு.

### ஆறு என்பதன் முதல் நீளுதல்

**ஆறுஎன் கிளவி முதல்நீ டும்மே (458)**

ஆறு என்ற சொல்லின் முதலெழுத்து, உயிர்முதன் மொழிவந்தால், முன் குறுகி நின்ற எழுத்து நீண்டு முடியும். ஆறகல்.

**ஒன்பது என்பதன்முன் அளவைப் பெயர்கள்**

**ஒன்பான் இறுதி உருபுநிலை திரியாது**
**இன்பெறல் வேண்டும் சாரியை மொழியே (459)**

ஒன்பது. என்பதன் இறுதி தன் வடிவுநிலை திரியாது, சாரியை மொழியாக இன் பெறல் வேண்டும். ஒன்பதின் கலம்.

**ஒன்று முதல் ஒன்பான் எண்களின்முன் நூறு வருதல்**

**நூறுமுன் வரினும் கூறிய இயல்பே (460)**

ஒன்று முதல் ஒன்பது வரை முன்னிற்க, நூறு வருமொழியாய் வரினும், மேல் பத்தென்பது புணரும் வழிபற்றிக் கூறிய இயல்புப்படி ஆகும். ஒருநூறு, இருநூறு.

**மூன்று முன் நூறுவருதல்**

**மூன்றன் ஒற்றே நகாரம் ஆகும் (461)**

மூன்று எனும் எண்ணின்கண் நின்ற னகர ஒற்று நகர ஒற்றாகும். முந்நூறு.

**நான்கு ஐந்து முன் நூறு வருதல்**

**நான்கு ஐந்து ஒற்றுமெய் திரியா (462)**

நான்கு, ஐந்து எண்களின் ஒற்றுக்கள் நிலைதிரியாது முடியும். ஒற்று மெய்திரியா-ஒற்றுத் தன் வடிவு திரியாது. நானூறு, ஐந்நூறு.

**ஒன்ப.்.து முன் நூறு தொள்ளாயிரம் ஆதல்**

**ஒன்பான் முதனிலை முந்துகிளந் தற்றே**
**முந்தை ஒற்றே ளகாரம் இரட்டும்**
**நூறென் கிளவி நகார மெய்கெட**
**ஊஆ வாகும் இயற்கைத் தென்ப**
**ஆயிடை வருதல் இகார ரகாரம்**
**ஈறுமெய் கெடுத்து மகாரம் ஒற்றும் (463)**

ஒன்ப.்.து+நூறு=தொள்ளாயிரம் என்பதற்கு விதி, ஒன்ப.்.து என்பதன் முதனிலை. முன்பு கூறியதுபோல் ஒகரமிசைத் தகர ஒற்றுச் சேரும். அவ்ஒகரத்தின் முன்னின்ற னகர ஒற்று, ளகர ஒற்றாய் இரட்டும். ப.்.து முன்பு சுட்டியவாறு கெடும். வருமொழியாகிய நூறு எனும் சொல் நகர மெய் கெட, அதன் மேலேறிய ஊகாரம ஆகாரமாய் மாறும் இயல்புடையதென்பர். அம்மொழியிடையே ஓர் இகரமும் ரகாரகும் வரும். இதற்கு ஈறாகிய குற்றியலுகரத்தினையும் அ.்.து ஏறி நின்ற ஒற்றினையும் கெடுத்து, மகர ஒற்று வந்து முடியும். தொள்ளாயிரம் என ஆகும். இவை தொல்காப்பியர் காலத்திலேயே மிகவும் மருவிவிட்டன எனத் தெரிகிறது.

### ஒன்று இரண்டு முன் ஆயிரம் வருதல்

**ஆயிரக்கிளவி வரூஉங் காலை**
**முதலீ ரெண்ணின் உகரம் கெடுமே (464)**

ஆயிரம் எனும் சொல், ஒன்று முதல் ஒன்பது வரையிலான எண்களின் முன் வருமிடத்து, முதலீர் எண்கள் பெற்று நின்ற உகரம் கெடும். ஓராயிரம், இராயிரம்.

### அவற்றிற்கு மேலும் ஒரு முடிபு

**முதனிலை நீடினும் மான மில்லை (465)**

முற்கூறிய புணர்ச்சியில், முதல் இரண்டு எண்களின் முதனிலையான ஒகர இகரங்கள் நீண்டு முடியினும் குற்றமில்லை. மானம் இல்லை-தவறில்லை. குற்றமில்லை. ஓராயிரம்,ஈராயிரம்.

### மூன்று முன் ஆயிரம்

**மூன்றன் ஒற்றே வகாரம் ஆகும் (466)**

மூன்று எனும் எண்ணின் னகர ஒற்று வகர ஒற்றாய் முடியும். முவ்வாயிரம்

### நான்கு முன் ஆயிரம்

**நான்கன் ஒற்றே லகாரம் ஆகும் (467)**

நான்கு எனும் எண்ணின் னகர உற்று வகர ஒற்றாய் முடியும். நாலாயிரம்.

### ஐந்து முன் ஆயிரம்

**ஐந்தன் ஒற்றே யகாரம் ஆகும் (468)**

ஐந்து எனும் எண்ணின் நகர ஒற்று யகர ஒற்றாய் முடியும். ஐயாயிரம்.

### ஆறு முன் ஆயிரம்

**ஆறன் மருங்கிற் குற்றிய லுகரம்**
**ஈறுமெய் ஒழியக் கெடுதல் வேண்டும் (469)**

ஆறு எனும் எண்ணின் குற்றியலுகரம், தான் ஏறிய றகர ஒற்று கெடாது நிற்க, உகர ஈறு கெட்டு முடியும். ஒழிய-கெடாது நிற்க. ஆறாயிரம்.

### ஒன்பது முன் ஆயிரம்

**ஒன்பான் இறுதி உருபுநிலை திரியாது**
**இன்பெறல் வேண்டும் சாரியை மரபே (470)**

ஒன்பது எனும் எண்ணுப்பெயர் இறுதி, ஆயிரத்தொடு புணருங்கால், குற்றுகரம் தன் வடிவு நிலை திரியாமல் சாரியை பெறும் மரபுப்படி ‘இன்’ பெறுதல் வேண்டும். ஒன்பதினாயிரம்.

**ஒன்று முதல் ஒன்பது வரையிலான என்முன் நூறாயிரம்**

**நூறா யிரமுன் வரூஉங் காலை**
**நூறன் இயற்கை முதனிலைக் கிளவி (471)**

நூறாயிரம் எனும் அடையடுத்த சொல் முன்னே வருமிடத்து, நிலைமொழியாகிய ஒன்று எனும் எண் நூறு என்பதனோடு புணர்தற்கு ஓதிய இயல்புப்படி முடியும். முதனிலைக் கிளவி – முதலில் நிற்கும் ஒன்று எனும் சொல், அஃதாவது ஈறுகெட்டு, னகரம் ரகரமாய் உகரம்பெற்றுப் புணரும். ஒருநூறாயிரம், இருநூறாயிரம்.

**நூறுமுன் ஒன்று முதல் ஒன்பது வரையிலான எண்கள்**

**நூறுஎன் கிளவி ஒன்றுமுதல் ஒன்பாற்(கு)**
**ஈறுசினை ஒழிய இனவொற்று மிகுமே (472)**

நூறு எனும் எண்ணுப்பெயர் முன் ஒன்று முதல் ஒன்பது வரையுள்ள எண்ணுப்பெயர்கள் வருமொழியாய் வந்து புணருமிடத்து,ஈறாகிய குற்றுகரம் அஃதூர்ந்த றகர மெய்யும் நீங்காது நிற்க, அங்கு அச்சினை எழுத்தாகிய றகர ஒற்று மிகும். ஈறுசினை-ஈறும் சினையும்,ஈறாகிய குற்றுகரமும் அஃதேறிய மெய்யும். சினை-எழுத்து. நூற்றொன்று, நூற்றிரண்டு.

**நூறு முன் ஒருபஃது முதலியன**

**அவைஊர் பத்தினும் இத்தொழிற் றாகும் (473)**

அந்நூறு என்பது, ஒன்று முதல் ஒன்பான் வரையிலான அவை ஊர்ந்த பத்துக்களோடு புணருமிடத்தும் முற்கூறிய செயலை உடையதாய் முடியும். ஈறுசினை நிற்க, இன ஒற்று மிகும். நூற்றிருபஃது.

**நூறுமுன் முகத்தல், நிறுத்தல் அளவைப் பெயர்கள்**

**அளவும் நிறையும் ஆயியல் திரியா**
**குற்றிய லுகரமும் வல்லெழுத் தியற்கையும்**
**முற்கிளந் தன்ன என்மனார் புலவர் (474)**

முகத்தளலவைப் பெயரும் நிறுத்தலளவைப் பெயரும் வருமிடத்து நூறு என்பதன் இன ஒற்று மிக்கு மேற்கூறிய இலக்கணத்தினின்றும் வேறுபடா. அவ்விடத்துக் குற்றியலுகரம் கெடாமையும், வன்தொடர் மொழியாய் நின்றமையின் வல்லெழுத்து மிகும். இயல்பும் முன்பு வன்தொடர் மொழிக்குக் கூறியவாறு அமையும். நூற்றுக்கலம், நூற்றுக்கழஞ்சு.

**ஒருப.்.து முதலியவற்றின் முன் ஒன்று முதல் ஒன்பது எண்கள்**

**ஒன்றுமுத லாகிய பத்தூர் கிளவி**
**ஒன்றுமுதல் ஒன்பாற்கு ஒற்றிடை மிகுமே**
**நின்ற ஆய்தம் கெடுதல் வேண்டும் (475)**

ஒன்று முதல் எட்டு ஈறாகப் பத்து என்னும் எண் ஊரப்பட்ட சொற்கள், வருமொழியாக ஒன்று முதல் ஒன்பான் வரையிலான சொற்கள் வந்து புணருமிடத்து இடைநின்ற ஆய்தம் கெட்டு முடிதல் வேண்டும். அவ்விடத்தே இனஒற்றாக, ஒருதகரவொற்று மிக்கு முடியும். இருபத்தொன்று, இருபத்திரண்டு.

**ஒருப.்.து முதலியவற்றின் முன் ஆயிரம்**

**ஆயிரம் வரினே இன்என் சாரியை**
**ஆவயின் ஒற்றிடை மிகுதல் இல்லை (476)**

மேற்கூறிய, ஒன்று முதலாகிய பத்தூர் கிளவிமுன், ஆயிரம்வரின் இன் சாரியை இடையில் வரும். அவ்விடத்து முற்கூறிய ஒற்று இடைமிகுதல் இல்லை. ஒருபதினாயிரம்.

**அவற்றின்முன் முகத்தல், நிறுத்தல் அளவைப் பெயர்கள்**

**அளவும் நிறையும் ஆயியல் திரியா (477)**

அவ்ஒன்று முதலாகிய பத்தூர் கிளவிமுன், முகத்தலளவைப் பெயரும் நிறுத்தலளவைப் பெயரும் வரின் முன்பு ஆயிரத்துடன் புணரும் விழ நிகழ்ந்த இயல்பில் திரியாது முடியும். ஒருபதின்கலம், இருபதின்கலம், ஒருபதின் கழஞ்சு.

**ஒன்று என்பதன் முன்பொருட்பெயர்கள்**

**முதனிலை எண்ணின்முன் வல்லெழுத்து வரினும்**
**ஞநமத் தோன்றினும் யவந் தியையினும்**
**முதனிலை இயற்கை என்மனார் புலவர் (478)**

முதனிலை எண்ணாகிய ஒன்று என்பதன்முன் வல்லெழுத்து முதல் மொழிவரினும ஞ ந ம க்களாகிய மெல்லெழுத்து முதல்மொழிவரினும் ய வக்களாகிய இடையெழுத்து முதன் மொழிவரினும் முன்பு எய்திய முடிபு நிலை எய்தி முடியும் என்று புலவோர் கூறுவர். அ.்.தாவது ஈறுதிரிந்தும் திரியாதும் வரும் என்பதாம். முதல்நிலை எண்-ஒன்று. முதல்நிலை இயற்கை-முன்பு எய்திய புணர்ச்சி முடிபாம் தன்மை. ஒருகல், இருகனி, இரண்டுமணி. ஒரு யானை.

**ஒரு ஆர் ஆதல்**

**ஒன்றின் முன் உயிர் முதல் மொழியும் யகர முதன்மொழியும்**

**அதன்நிலை உயிர்க்கும் யாவரு காலையும்**

**முதனிலை ஒகரம் ஓவா கும்மே**
**ரகரத்து உகரம் துவரக் கெடுமே (479)**

ஒன்றின்முன் உயிர் முதன்மொழி வரினும் யா முதன் மொழி வந்த இடத்தும் முதலிலுள்ள ஒகரம் ஓகாரமாகும். அவ்விடத்து, ரகரத்து உகரம் முற்றக் கெட்டுமுடியும். ஓராடை, ஓர்யான்.

**இரண்டு முதல் ஒன்பது வரை எண்முன் மா எனும் நீட்டலளவைப் பெயர்**

**இரண்டு முதல் ஒன்பான் இறுதி முன்னர்**
**வழங்கியல் மாவென் கிளவி தோன்றின்**
**மகர அளவொடு நிகரனும் உரித்தே (480)**

இரண்டு முதல் ஒன்பது வரையுள்ள எண்முன்னர், உலகவழக்கில் வழங்குகின்ற மா என்னும் நீட்டலவைப் பெயர் வந்து புணரின், மேலே மண்டை என்னும் நீட்டலளவைப் பெயர் வந்து புணரின், மேலே மண்டை என்னும் அளவுப்பெயரோடு ஒத்து வேறுபட முடிவனவும் உண்டு: இயல்பாக முடிதலும் உண்டு, மா-நீட்டல் அளவைப்பயெர். மகர அளவொடு – மகரத்தை முதலாகவுடைய மண்டை முதலிய முகத்தலளவைப் பெயர்ப்புணர்ச்சியோடு நிகரலும்-ஒத்துத் திரிந்து முடிதலும், உம்மையால் திரியாது முடிதலுமாம். இருமா, இரண்டுமா.

**புறனடை**

**வேற்றுமையில் ல ன புள்ளிமுன் சாரியைகள் வந்து புணர்தல் - செய்யுள் புணர்ச்சி (புள்ளி மயங்கியலுக்குப் புறனடை)**

**லனஎன வரூஉம் புள்ளி இறுதிமுன்**
**உம்முங் கெழுவும் உளப்படப் பிறவும்**
**அன்ன மரபின் மொழியிடைத் தோன்றிச்**
**செய்யுள் தொடர்வயின் மெய்பெற நிலையும்**
**வேற்றுமை குறித்த பொருள்வயி னான (481)**

ல, ள என்று சொல்லும் புள்ளி ஈறுமுன் உம் என்னும் சாரியையும் கெழு என்னும் சாரியையும் அவைபோல்வன பிறவும், வேற்றுமை குறித்த பொருட்புணர்ச்சியிடத்து, செய்யுளுள் வரும் தொடரின்கண் தாம் வருதற்கொத்த சொற்களிடையே தோன்றி, வேற்றுமைப் பொருண்மை தோன்ற நிலைபெறும். அன்னமரபின் மொழி – வருதற்கேற்ற மரபினையுடைய சொல். செய்யுள் தொடர் - செய்யுளுக்கேற்ப வரும் செறிவுள்ள தொடர்கள். மாநிதிக் கிழவனும் போன்ம்-மாநிதிக் கிழவனைப் போலும். கான்கெழு நாடன்-காட்டையுடைய நாடன், கல்கெழுநாடன்-மலைநாடன்.

உம், கெழு என்பன வேற்றுமை உருபின் பொருளைத் தந்து நிற்கும் சாரியைகள், பிறவும் என்றார், இங்ஙனம் செய்யுளுள் வெவ்வேறு சாரியை பெற்று வருவனவற்றிற்கெல்லாம் இதுவே விதியாம் என்றற்கு.

**எழுத்ததிகாரத்திற்குப் புறனடை**

**மருவின் பாத்தி எனப்பட்டு வழக்கில் திரிந்து காணப்படுவன**

**உயிரும் புள்ளியும் இறுதி யாகிக்**
**குறிப்பினும் பண்பினும் இசையினுந் தோன்றி**
**நெளிப்பட வாராக் குறைச்சொற் கிளவியும்**
**உயர்திணை அஃறிணை ஆயிரு மருங்கின்**
**ஐம்பா லறியும் பண்புதொகு மொழியும்**
**செய்யும் செய்த என்னுங் கிளவியும்**
**மெய்ஒருங் கியலும் தொழில்தொகு மொழியும்**
**தம்மியல் கிளப்பின் தம்முன் தாம்வரூஉம்**
**எண்ணின் தொகுதி உளப்படப் பிறவும்**
**அன்னவை எல்லாம் மருவின் பாத்திய**
**புணரியல் நிலையிடை உணரத் தோன்றா (482)**

உயிரும் புள்ளியல் இறுதியாகி குறிப்பு, பண்பு, இசையின்கண் தோன்றி, ஒரு நெறிப்பட வாராக் குறைச்சொற்களாகிய உரிச்சொற்களும்.

உயர்திணை அஃறிணையாகிய அவ்விரண்டு திணையிடத்தும் உளவாய் ஐம்பாலினையும் அறியவரும் பண்புத்தொகைச் சொற்களும் செய்யும் செய்த என்னும் பெயரெச்சச் சொற்களிடையே ஒருங்கு நடத்தும் வினைச்சொல் தொக்க வினைத்தொகையும் (பசும்பார்ப்பு, வெற்றிலை, ஆடரங்கு, செய்குன்று).

எண்கள் தம்மியல்பு கூறுமிடத்துத் தம்முன் தாம் வரும் எண்களின் தொகுதியும் உட்படப்பிறவும் அத்தன்மைய எல்லாம் உலகின்கண் மருவி நடக்கும் வழக்கிடத்தன. புணரியலாகிய இலக்கணத்தின்கண் அவற்றின் முடிபு விளங்கத் தோன்றா.

குறைச்சொற்கிளவி-உரிச்சொல். தம்முன்தாம் வரும் எண்ணின் தொகுதி-பப்பத்து, ஓரோவொன்று போல்வன். இவை நிறுத்தசொல், குறித்துவரு கிளவி எனக் கொண்டு, புணரியல் இலக்கண முறைப்படி தெளியத் தெரிவன அல்ல. இவற்றை இலக்கண வகையிற் கொள்ளாமல் மரூஉ வகையிற் கொள்ள வேண்டும்.

**சொன்னவை கொண்டு சொல்லாதனவற்றுக்கும் முடித்துக் கொள்ள வழிவகுத்தல்**

**கிளந்த அல்ல செய்யுளுள் திரிநவும்**
**வழங்கியல் மருங்கின் மருவொடு திரிநவும்**
**விளம்பிய இயற்கையின் வேறுபடத் தோன்றின்**
**வழங்கியல் மருங்கின் உணர்ந்தனர் ஒழுக்கல்**
**நன்மதி நாட்டத்து என்மனார் புலவர் (483)**

முன்பு எடுத்துக் கூறியன அல்லாதவை செய்யுளுள் திரிந்து முடிவனவும் வழக்கு நடக்குமிடத்து மரூஉ மொழியாய்த் திரிந்து வழங்குவனவும் முன்சொன்ன இலக்கணத்தினின்றும் வேறுபடத் தோன்றுமானால் நல்ல அறிவினது ஆராய்ச்சியின்படி இருவகை வழக்கும் நடக்கும் பக்கத்தை அறிந்து, அதன்படி நடத்துக என்று புலவோர் கூறுவர். இயற்கை-இயல்பு, விதி, இலக்கணம். வழங்கியல் மருங்கு-வழக்கு மபு. உணர்ந்தனர் ஒழுக்கல்-அறிந்து அதன்படி நடத்துக. நன்மதி நாட்டத்து-நல்ல கூர்மையான அறிவின் ஆராய்ச்சியால்.

## குற்றியலுகரப் புணரியல் கருத்துக்களின் தொகுப்பு

1. 1. நெடில்முதலாகிய ஈரெழுத்து ஒரு மொழி — நாடு, காசு, ஏறு
   2. உயிர்த்தொடர்மொழி — வரகு, விழுது, உலகு
   3. இடைத்தொடர்மொழி — எய்து, நேர்பு, நல்கு
   4. ஆய்தத் தொடர்மொழி — எ.்.கு, க.்.சு, அ.்.து
   5. வன்தொடர் மொழி — சுக்கு, கச்சு, கட்டு
   6. மென்தொடர் மொழி — தெங்கு, பஞ்சு, கண்டு

குறுமை+உகரம்=குற்றுகரம், குற்றியலுகரம்-உ ஒரு மாத்திரை அளவு,
குற்றியலுகரம் அரை மாத்திரை அளவு.

குற்றியலுகரம் மொழியிறுதியிலேயே வரும்.

குற்றியலுகரம் கு, சு, டு, து, பு, று –என வல்லெழுத்தின் மேல் ஏறிவரும்.

மெய்போலப் புணர்ச்சிபெறும்: உலகு+எல்லாம்=உலகெல்லாம்.

தமிழில் உகரத்தில் முடியும் எழுத்துக்கள் மிகுதி. அதிலும் குற்றுகரச் சொற்களே கூடுதல். குற்றியலுகத்திற்கு முன்பு வரும் எழுத்தைக் கொண்டு, அது வகைப்படுத்தப்படுகிறது. குற்றுகரத்தின் முன் நெடில் மட்டும் இருந்தால் அது நெடில் தொடர்க் குற்றியலுகரம்: உயிர்மெய் எழுத்து இருந்தால் அது உயிர்த்தொடர்க் குற்றியலுகரம். இடையெழுத்திருந்தால் அது இடைத்தொடர்க் குற்றியலுகரம், ஆய்த எழுத்திருந்தால் அது ஆய்தத்தொடர்க் குற்றியலுகரம்: வல்லெழுத்திருந்தால் அது வன்தொடர்க் குற்றியலுகரம்: மெல்லெழுத்திருந்தால் அது மென் தொடர்க்கு குற்றியலுகரம்.

2. குற்றுகரத்தின் முன் இரண்டு மெய்யெழுத்துச் சேர்ந்து நிற்பது,'ஈரொற்றுடனிலை' எனப்படும். அவ்வாறு வந்தால் அவை வன்தொடர்க் குற்றுகரமாகவோ, மென்தொடர்க் குற்றுகரமாகவோதான் அமையும்.

சால்பு, பெய்து – ஓரொற்றுடனிலை, இது இடைத்தொடர்க் குற்றுகரம்.

காழ்ப்பு, மொய்ம்பு – வன்தொடரும் மென்தொடருமாகும். ஈரொற்று-இடைத்தொடராக வராது.

3. அல்வழியிலும் வேற்றுமையிலும் வேறுபாடின்றி, முன்பு கூறிய வல்லெழுத்து ஆறு (க ச ட த ப ற) இறுதியிலும் குற்றுகரம் இடம்பெறும்.

| வ. எ. | நிலைமொழி ஈறு | வருமொழி முதல் | வேற்றுமை/ அல்வழி | புணர்ச்சி விதி | எடுத்துக்காட்டு |
|---|---|---|---|---|---|
| 4. | வன்தொடர்க் குற்றுகரம் | க ச த ப | அல்வழி வேற்றுமை | ‘உ’ கரம் குறுகும் | சுக்குச் சிறிது பட்டுத்துணி |
| 5. | குற்றியலுகரம் | யகர முதன்மொழி வரின் குற்றியலுகரம் குற்றியலிகரமாகும் | | ‘உ’கரம்- இகரமாகும், இகரமும் குறுகி ஒலிக்கும் | நாடு+யாது=நாடியாது |
| 6. | நெடில் தொடர்க்குற்றுகரம் | க ச த ப | வேற்றுமை | இறுதி இன ஒற்று மிகும் எதிரே வல்லொற்று மிகும் | ஆடு+கால் =ஆட்டுக்கால் வயிறு+பசி= வயிற்றுப்பசி |
| 7. | மேற்படி குற்றுகரங்கள் | க ச த ப | வேற்றுமை | இயல்பாகவும் முடியும் | பாகு சுவை, வரகு கதிர் |
| 8. | இடை ஒற்றுத்தொடர் ஆய்தத்தொடர் | க ச த ப | வேற்றுமை | இயல்பு | சார்பு கணக்கு, எஃகு கம்பி |
| 9. | வன்தொடர் மென்தொடர் | க ச த ப | வேற்றுமை | வந்த வலி மிகும் மென் தொடரில் இடையில் இன வல்லொற்றாகும் | மிக்குத் தோன்றும் விலங்குப்படம் குரக்குக்கால் எண்கு+குட்டி= எட்குக்குட்டி |
| 10. | மென் தொடர் வன் தொடர் | க ச த ப | வேற்றுமை | அம்-சாரியை வரும் | வேம்பு+பூ= வேப்பம்பூ தேக்குகிளை தேக்கங்கிளை |
| 11. | மரப்பெயர்கள் குருந்து, புன்கு | க ச த ப | வேற்றுமை | மெல்லொற்று வல்லொற்றாகாது | குருந்து+கிளை= குறுந்தங்கிளை புன்கு+பூ=புன்கம்பூ |
| 12. | ஈரெழுத்து நெடில் தொடர் வன்தொடர் | க ச த ப | வேற்றுமை | அம்-சாரியை ஏற்புழிப் பெறும் | ஏறு+கோள் = ஏறங்கோள் புற்று+சோறு= புற்றஞ்சோறு |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 13. | மென்தொடர் | க ச த ப | வேற்றுமை | அக்கு-சாரியை பெறும் | குன்று+அக்கு+குடி = குன்றக்குடி |
| 14. | குற்றுகர எண்ணப் பெயர்கள் ஒன்று, இரண்டு | க ச த ப | வேற்றுமை | அன்-சாரியை பெறும் | ஒன்று+கூறு= ஒன்றன்கூறு. |
| 15. | வண்டு, பெண்டு | க ச த ப | வேற்றுமை | இன்-சாரியை பெறும் | வண்டின் கால் பெண்டின் தலை |
| 16. | பெண்டு | க ச த ப | வேற்றுமை | அன்-னும் வரும் | பெண்டன் தலை |
| 17. | யாது, அ.ஃது | க ச த ப | வேற்றுமை | அன்-சாரியை பெறும் | யாது+தொகுதி= யாதன்தொகுதி அ.ஃது+பொருள்= அதன்பொருள் |
| 18. | அ.ஃது | உயிர் முதன்மொழி | அல்வழி | ஆய்தம் கெடாது | அ.ஃது+என்ன= அ.ஃதென்ன |
| 19. | அ.ஃது | உயிர் தவித்த ஏனையவை | அல்வழி | ஆய்தம் கெடும் | அ.ஃது+நன்று= அதுநன்று |
| 20. | குற்றுகர ஈறு எல்லாம் | க ச த ப | அல்வழி | இயல்பு | அழகு புதிது |
| 21. | வன்தொடர் | க ச த ப | அல்வழி | வல்லெழுத்து மிகும் | பட்டுச் சிறந்தது |
| 22. | ஆங்கு யாங்கு | க ச த ப | அல்வழி | வல்லெழுத்து மிகும் | ஆங்குச் சென்றான் யாங்குப் பார்த்தான் |
| 23. | யாங்கு | க ச த ப | அல்வழி | இயல்பாயும் முடியும் | யாங்கு சென்றாய்? |
| 24. | அங்கு | க ச த ப | அல்வழி | இயல்பாகும் | அங்கு பார்த்தான் இங்கு கிடந்தான் எங்கு சென்றான் |
| 25. | உண்டு (உண்மை) | க ச த ப | அல்வழி | டு கெடும், ண்-ள் ஆகும். இயல்பாதலும் உண்டு. | உள் பொருள் உண்டுபுகழ் |
| 26. | கிழக்கு, மேற்கு வடக்கு, தெற்கு | இருதிசை புணரின் | | ஏ-சாரியை இடையில் வரும் | வடக்கே கிழக்கு தெற்கே கிழக்கு |
| 27. | மேற்படி கோணத்திசைகள் | | | ற்கு-கெடும் க்கு-கெடும் | வட கிழக்கு தென் மேற்கு |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | | | | தெற்கு தென் ஆகும் | |
| 28. | பத்து | ஒன்று<br>மூன்று<br>நான்கு<br>ஐந்து<br>ஆறு<br>ஏழு<br>எட்டு | | பத்து-வில் து கெடும்<br>பத் என நிற்கும்<br>இன் சாரியை வரும் | பதின்ஒன்று<br>பதின்மூன்று<br>பதின்நான்கு<br>பதின்ஐந்து<br>பதின்ஐந்து<br>பதின்ஆறு<br>பதின்ஏழு<br>பதின்எட்டு |
| 29. | பத்து | இரண்டு | | பத்து-த்து கெடும்<br>ன்-தோன்றும்<br>(பன்) அது இரட்டிக்கும் | பன்னிரண்டு |
| 30. | பத்து | ஆயிரம் | | ஈறு கெட்டு, இன் பெறும் | பதின்ஆயிரம்<br>பதினாயிரம் |
| 31. | பத்து | நிறுத்தலளவைப் பெயர் (கழஞ்சு)<br>முகத்தலளவைப் பெயர் (கலம்) | | இன்-சாரியை வரும் | பதின்கழஞ்சு<br>பதின்கலம் |
| 32. | ஒன்று, இரண்டு, மூன்று, நான்கு, ஐந்து, ஆறு, ஏழு, எட்டு, ஒன்பது | பத்து | அல்வழி | த்-கெட, பது ஆகும்<br>∴-இடையில் வரும்<br>ஆறு-தவிர்த்தவற்றில் ஈற்றுக் குற்றுகரம் மெய்யுடன் கெடும். | இருப∴து<br>முப்ப∴து<br>அறுப∴து<br>இருபது, முப்பது எனலுமாம் |
| 33. | ஒன்று, இரண்டு | பத்து | | ஓர், இர், உ-சேரும் | ஒன்று-ஒன்-ஓர்-ஒரு |
| 34. | இரண்டு | பத்து | | டு-கெட்டது<br>ர-ரு ஆகும் | இரண்டு-இரண்-இண்-இரு<br>சுருக்கமாக இரண்டு-இரு என ஆகும் |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 35. | மூன்று, ஆறு | பத்து | | நெடு – முதல் குறுகும் | மூ-மு ஆகும், ஆ-அ ஆகும். இறுதி கெடுதல் பொதுவிதி |
| 36. | மூன்று | பத்து | | முன்-ன், ப் ஆகும் | முப்ப.்.து |
| 37. | நான்கு | பத்து | | ன், ற் ஆகும் | நாற்ப.்.து |
| 38. | ஐந்து | பத்து | | ந்-ம் ஆகும் | ஐம்ப.்.து |
| 39. | எட்டு | பத்து | | ட்-ண் ஆகும் | எண்ப.்.து |
| 40. | ஒன்ப.்.து | பத்து | | | ஒன்ப.்.து+ப.்.து= (இரு தொண்ணூறு ஆய்வுக்குரியது) |
| 41. | ஒன்று முதல் ஒன்பது வரை பிற | முகத்தலளவைப் பெயர் நிறுத்தலளவைப் பெயர் | | முன்பு எண்ணப் பெயர்கட்குச் சொன்னபடி புணரும் | ஒருகலம் எண்கழஞ்சு |
| 42. | மூன்று | அளவைப் பெயர்கள் | | ன்-வருமொழி வல்லொற்றாகும் | முக்கலம் முப்புகழ் |
| 43. | ஐந்து | | | ந்-வருமொழிக்கு ஏற்ற மெல்லொற்றாகும் | ஐங்கலம் |
| 44. | மூன்றும் ஐந்தும் | க ச த ப – வந்தவிடத்து | | | முன்காட்டியவை |
| 45. | எட்டு எண் | ந ம வ – முதலில் பெற்ற அளவைப் பெயர்கள் | | இயல்பு | எண் நாழி, எண் மண்டை |
| 46. | ஐந்து மூன்று | ந, ம – முதன்மொழிகள் | | வந்த ஒற்றாகும் | முந்நாழி ஐம்மண்டை |
| 47. | மூன்று | வ-கர முதன்மொழி | | வந்த 'வ்' ஆகும் | முவ்வட்டி |
| 48. | நான்கு | வ-கர முதன்மொழி | | ன்-ல் ஆகும் | நால்வட்டி |
| 49. | ஐந்து | வ-வரின் | | ந்-வ் ஆகிக்கெடும் | ஐவ்வட்டி, ஐவட்டி |
| 50. | ஒன்று, இரண்டு | உயிர் முதன்மொழி | | உ-கெடும் முதல் | ஓரகல்,ஈருழக்கு |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | | | | எழுத்துக்கள் நீளும் | |
| 51. | மூன்று நான்கு ஐந்து | அகல் | | முன்பு வ-கரம் வந்தது போல் ஆகும் | முவ்வகல் நாலகல் ஐயகல் |
| 52. | மூன்று | உழக்கு | | நீளும் | மூவுழக்கு |
| 53. | ஆறு (அறு) | உயிர் முதன்மொழி | | நீளும் | ஆறகல் |
| 54. | ஒன்பது | கலம் | | இன்-சாரியை வரும் | ஒன்பதின் கலம் |
| 55. | ஒன்று முதல் ஒன்பது வரை | நூறு | | பத்து-க்குக் கூறிய அதே விதிகள் | ஒருநூறு இருநூறு |
| 56. | மூன்று | நூறு | | ன்-ந் ஆகும் | முந்நூறு |
| 57. | நான்கு, ஐந்து | நூறு | | இறுதிகெடல் பொது விதி ஒற்றுத்திரியாது | நானூறு ஐந்நூறு |
| 58. | ஒன்பது | நூறு | | | தொள்ளாயிரம் |
| 59. | ஒன்று முதல் ஒன்பது வரை | ஆயிரம் | | முதல் இரண்டு எண்கள் பெற்றிருந்த உ கெடும் | ஓராயிரம், இராயிரம் |
| 60. | மேற்படி | ஆயிரம் | | முதனிலை நீளும் | ஓராயிரம், ஈராயிரம் |
| 61. | மூன்று | ஆயிரம் | | ன்-வ் ஆகும் | முவ்வாயிரம் |
| 62. | நான்கு | ஆயிரம் | | ன்-ல் ஆகும் | நாலாயிரம் |
| 63. | ஐந்து | ஆயிரம் | | ந்-ய் ஆகும் | ஐயாயிரம் |
| 64. | ஆறு | ஆயிரம் | | 'உ' மட்டும் கெடும் | ஆறாயிரம் |
| 65. | ஒன்பது | | | இன்-சாரியை பெறும் | ஒன்பதினாயிரம் |
| 66. | ஒன்று இரண்டு | நூறாயிரம் | | நூறு-என்பதற்குக் கூறிய விதியே | ஒரு நூறாயிரம் இரு நூறாயிரம் |
| 67. | நூறு | ஒன்று முதல் ஒன்பது வரை | | ஐ-நிற்கும், ற்- மிகும் | நூற்றொன்று நூற்றிரண்டு |
| 68. | நூறு | ஒன்று முதல் ஒன்பது | | ஈறு நிற்க இன ஒற்று மிகும் | நூற்றிருப.்.து |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | | வரையிலான பத்து | | | |
| 69. | நூறு | முத்தலளவை நிறுத்தலளவை | | இன ஒற்று மிகும் | நூற்றுக்கலம் நூற்றுக்கழஞ்சு |
| 70. | ஒன்று முதல் எட்டு-பத்து | ஒன்று முதல் ஒன்பது வரை | | ஆய்தம் கெட்டு, இன ஒற்று மிகும் | இருபத்தொன்று இருபத்திரண்டு |
| 71. | மேற்படி | ஆயிரம் | | இன்-இடையில் வரும் | ஒருபதினாயிரம் |
| 72. | முதல் ஒன்பது பத்து | முகத்தலளவை நிறுத்தலளவை | | ஆயிரத்திற்குரிய விதி | ஒருபதின் கலம் ஒருபதின் கழஞ்சு |
| 73. | ஒன்று | வல்லெழுத்து முதன்மொழி ஞநம-மெல்லெழுத்து முதன்மொழி, இடையெழுத்து முதன்மொழி | | முன்பு கூறிய விதிகள் | ஒருகல், இருகனி, இரண்டு மணி, ஒருயானை |
| 74. | ஒன்று | உயிர்முதன் மொழி யா முதன் மொழி | | ஒ-ஓ ஆகம் ரு-வில் உ கெடும் | ஓராடை, ஓர் யாண்டு |
| 75. | ஒன்று முதல் ஒன்பது வரை | மா (நீட்டலளவை) | | மருண்டை – போல் புணரும் | இருமா, இரண்டுமா |
| 76. | ல, ன புள்ளி ஈறு | | வேற்றுமை செய்யுள் | உம்,கெழு-சாரியை (வேற்றுமை உருபின் பொருள்) | மாநிதிக் கிழவனும் போன்ம்-கிழவனைப் போலும். கல்கெழு நாடன்-மலைநாடன் |

## புறனடை

உலக வழக்கில் மருவி வழங்குவன பல. அவை அனைத்திற்கும் புணர்ச்சி விதி கூற இயலாது. குறைச்சொற் கிளவி ஒல்லொலித்தது. வெள்ளை வெளேரென. ஓரொன்று, பப்பத்து தம்முன் தாம் தாம் வரும் எண். கரும் பார்ப்பான், கருங்குதிரை- பண்பு தொகு கிளவிகள். (கரிதாகிய என விரித்தல் இயலாது). ஆடரங்கு, செய்குன்று வினைத்தொகையாக விரித்தல் இயலாது. இலக்கணம் என்பது ஒரு முன்மாதரியேயாம். ஒரு மொழிக்கு, காலந்தோறும் முழுமையாய் ஒரே சமயத்தில் இலக்கணம் கூறல் இயலாது.

## வினாக்கள்

**பத்திவினா**

1. உகரம் குறுமிடங்கள் யாவை?
2. குற்றியலுகரம் புணர்மொழியுள் எவ்வாறு வரும்?
3. குற்றியலிகரம் புணர்மொழியுள் எவ்வாறு வரும்?
4. மரப்பெயர், திசைப்பெயர் புணர்ச்சிகளைச் சுட்டுக.
5. மூன்று என்னும் எண்ணுப்பெயர் எவ்வெவ்வாறு புணரும்? ஐந்து என்னும் எண்ணுப்பெயர் எவ்வெவ்வாறு புணரும்?
6. தொண்ணூறு, தொள்ளாயிரம் ஆகிய சொற்களின் புணர்ச்சிகளை விளக்குக.
7. வருமொழியில் ஆயிரம் வந்தால் ஒன்று முதல் ஒன்பது வரை உள்ள நிலைமொழிகளோடு எவ்வெவ்வாறு புணரும்?
8. ‘அல்லது கிளப்பினும் வேற்றுமைக் கண்ணும் எல்லா இறுதியும் உகரம் நிலையும்’–விளக்குக.
9. நூறு என்ற எண்ணுப்பெயர், ஒன்று முதலான எண்ணுப்பெயர்களோடு எவ்வெவ்வாறு புணரும்?
10. நூறு என்ற எண்ணுப்பெயரோடு அளவு, நிறைப்பெயர்கள் எவ்வாறு புணரும்?
11. ஒன்று முதலான எண்ணுப் பெயர்களோடு பொருட்பெயர்கள் புணரும்வழி நிகழும் மாற்றங்களை வரையறுக்க.
12. ஒருப∴து முதலானவற்றோடு அளவு, நிறைப்பெயர்களின் புணர்ச்சி இயல்புகளை எழுதுக.
13. ல, ன என்னும் மெய்யீறுகளின் செய்யுள் முடிபு யாது?
14. இரண்டு முதலான எண்களோடு அளவு மா என்ற சொல் பெறும் புணர்ச்சி நிலை என்ன?

**கட்டுரை வினா**

1. எண்ணுப்பெயர்கள் புணருமாற்றைத் தொல்காப்பியர் வழிநின்று விளக்குக.
2. குற்றுகர ஈற்றுச் சொற்களுக்கான பொதுப்புணர்ச்சி விதிகளைத் தொகுக்க.
3. குற்றுகர ஈற்றுச் சொற்களுக்கான சிறப்புப்புணர்ச்சி விதிகளைத் தொகுக்க.
4. குற்றியலுகரப் புணரியல் என்னும் தனி இயல் வகுக்கப்பட வேண்டியதன் காரணங்களை ஆராய்க.
5. பத்து என்ற எண்ணோடு பிற எண்ணுப்பெயர்கள் புணரின் நிகழும் மாற்றங்களைத் தெளிவுபடுத்துக.
6. பத்து என்ற எண்ணோடு நிறை அளவுப் பெயர்கள் புணரின் உண்டாகும் நிலைகள் யாவை?
7. ஒன்று முதலான எண்ணுப்பெயர்களோடு பத்து என்ற எண்ணுப்பெயர் புணரின் நிகழும் மாற்றங்களை விளக்குக.
8. ஒன்று முதலான எண்ணுப்பெயர்களோடு அளவு நிறைப்பெயர் புணரின் நிகழும் மாற்றங்களை விளக்குக.
9. ஒன்று முதலான எண்ணுப்பெயர்களோடு நூறு என்ற எண்ணுப்பெயரின் புணர்ச்சி விகற்பங்களை விவரிக்க.
10. ஒன்று முதலான எண்ணுப்பெயர்களோடு ஆயிரம் என்ற எண்ணுப்பெயரின் புணர்ச்சி விகற்பங்களை விவரிக்க.

# 10. தொல்காப்பியம் - நன்னூல் ஒப்பீடு

## 1. நூன் மரபு,2. மொழிமரபு

| தொல்காப்பியம் | நன்னூல் |
|---|---|
| 1. ----- | ‘மொழிமுதற் காரணம் அணுத்திரள் ஒலி’ என்று விளக்கம் தருவார் நன்னூலார். |
| 2. சார்பெழுத்துக்கள் -3<br>1. குற்றியலுகரம்<br>2. குற்றியலிகரம்<br>3. ஆய்தம் | சார்பெழுத்துகள் - 10<br>1. உயிர்மெய்<br>2. ஆய்தம்<br>3. உயிரளபெடை<br>4. ஒற்றளபெடை<br>5. குற்றியலிகரம்<br>6. குற்றியலுகரம்<br>7. ஐகாரக் குறுக்கம்<br>8. ஔகாரக் குறுக்கம்<br>9. மகரக்குறுக்கம்<br>10. ஆய்தக்குறுக்கம் |
| 3. வினா எழுத்துக்கள் -3 | வினா எழுத்துக்கள் - 5 |
| ஆ, ஏ, ஓ | ஏ, யா, ஆ, ஏ, ஓ. |
| இசையின்கண் மாத்திரை அளவு கடந்து ஒலிக்கும். | இசை, விளி, பண்டமாற்று ஆகிய மூன்றிலும் மாத்திரை அளவு கடந்து ஒலிக்கும். |
| 4. மகரம் உட்பெறுபுள்ளி உருவாகி வரும். | இது நன்னூலில் கூறப்படவில்லை. |
| 5. புணர்மொழியில் குற்றியலுகரம் கால் மாத்திரையாய்க் குறுகி நிற்கும். | இச்செய்தி நன்னூலில் இல்லை. |
| 6. உருவினும் இசையினும் அருகித்தோன்றும் மொழிக்குறிப்பு ஆய்தம் குறிக்கப்படுகிறது. | நன்னூலார் இதைச் சுட்டவில்லை. |

| | |
|---|---|
| 7. ஓரெழுத்து ஒருமொழி,ஈரெழுத்து ஒருமொழி, தொடர்மொழி என மொழிநிலையை மூன்றாகப் பகுப்பர் தொல்காப்பியர். | ஓரெழுத்து ஒருமொழி, பலவெழுத்து ஒருமொழி என இருவகையாகப் பிரிப்பார் நன்னூலார். |
| 8. மொழிமுதல் எழுத்து | ‘ங’கரம் மொழி முதலாகும். |
| 9. ச – அ,ஐ,ஔ என்ற மூன்றுடனும் முதலாகாது. | ச - எல்லா உயிருடனும் முதலாகும். |
| 10.ஞ – ஆ, எ, ஒ என்ற மூன்றுயிரொடும் முதலாகும். | ஞ – அ, ஆ, எ, ஒ என்ற நான்கனுடனும் முதலாகும். |
| 11. ய – ஆகாரத்தோடு மட்டுமே மொழிமுதலாகும். | ய – அ, ஆ, உ, ஊ, ஒ, ஔ என்ற ஆறனுடனும் மொழி முதலாகும். |
| 12. மொழியின் ஐகாரம் குறுகி ஒலிக்கும் என்பர். | மொழியின் மூவிடத்திலும் ஐகாரம் குறுகி ஒலிக்கும் என்பர் நன்னூலார். |
| 13. ஔகாரக் குறுக்கம் சுட்டப்படவில்லை. | மொழியின் முதலிடத்து ஔகாரம் குறுகி ஒலிக்கும் என்பர் நன்னூலார். |
| 14. அகரமும் யகரமும் சேர்த்து ஐகாரமாய் ஒலிக்கும் என்பர் தொல்காப்பியர். | அத்துடன், அகரமும் வகரமும் சேர்ந்து ஔகாரமாய் ஒலிப்பதையும் நன்னூலார் கூறுவர். |

## 3. பிறப்பியல்

1. எழுத்து ஒலிப்பதற்கு அடிப்படையாகிய உந்திவளியைத் தொல்காப்பியர் உரைக்கின்றார். நன்னூலார்,"உள் வளி துரப்ப எழும் அணுத்திரள்" என்று அணுத்திரளையும் உரைப்பர்.
2. தொல்காப்பியம் காட்டும் மூன்று. உறுப்பு ஐந்து.

| **இடம்** | **உறுப்பு** |
|---|---|
| நெஞ்சு | பல் |
| மிடறு | இதழ் |
| தலை | மூக்கு |
| | அண்ணம் |

நன்னூலார் காட்டும் இடம் நான்கு, உறுப்பு நான்கு.

| **இடம்** | **உறுப்பு** |
|---|---|
| உரம் (நெஞ்சு) | பல் |
| கண்டம் (மிடறு) | இதழ் |
| உச்சி (தலை) | நா |
| மூக்கு | அண்ணம் |

தொல்காப்பியர் மூக்கினை உறுப்பாகக் கொண்டார், நன்னூலார் அதனை இடமாகக் கொண்டார்.

3. தொல்காப்பியர் மிடற்றுவளியால் பிறப்பனவாகப் பன்னிரண்டு உயிர்களை மட்டும் கூறினார். நன்னூலார் உயிரேயன்றி இடையினமும் மிடற்றில் பிறப்பன என்பார். இளம்பூரணர், இடையெழுத்து மிடற்றுவளியாலும், வல்லெழுத்து தலைவளியாலும் பிறக்கும் என உரைப்பர். நன்னூலார் வல்லின எழுத்து மார்பை இடமாகக் கொள்ளும் என்பார்.
4. 'உந்தியில் எழுந்த காற்று மிடற்றிடத்துச் சேர்ந்த அதனால் பிறந்த ஓசை, அண்ணத்தை அணைந்து செறிய யகரம் பிறக்கும்' என்பது தொல்காப்பியர் கொள்கை.

   'அடிநாவை அடி அண்ணம் உற்றால் யகரம் தோன்றும்' என்பார் நன்னூலார்.
5. 'சார்பெழுத்து, தத்தம் முதல் எழுத்தைப் போன்ற பிறப்புடையன' என்று தொல்காப்பியர் கூறவும், நன்னூலார்,'சார்பெழுத்து தம் முதல் அனைய' என்று உரைத்தார்.
6. அகத்தெழுவளி, வேதத்தில் கூறப்பட்டிருப்பதைத் தொல்காப்பியர் சுட்டியுள்ளார். நன்னூலார், அதைக் குறிப்பிடவில்லை.

| | **காற்றறை** | **ஒலி எழுப்பி** | **பிறப்பு ஆக்கம்** |
|---|---|---|---|
| **தொல்காப்பியம்** | தலை, மிடறு, நெஞ்சு | பல், இதழ், நா, மூக்கு, அண்ணம் | ஆக்கம் |
| **நன்னூல்** | உரம், கண்டம், உச்சி, மூக்கு | இதழ், நா, பல், அண்ணம் | தொழில் |

## 4. புணரியல்

1. புணர்ச்சி பற்றிய செய்திகளைத் தொல்காப்பியர் பல நூற்பாக்களில் அமைக்கின்றார். நன்னூலார் அவற்றைத் தொகுத்து எளிய முறையில் அமைக்கிறார்.

பொதுவாகப் புணர்ச்சி பற்றிச் சிந்திக்கும்போது,

| | | |
|---|---|---|
| **ஈற்றெழுத்து** | **+** | **முதல் எழுத்து** |
| மெய் | + | உயிர் |
| மெய் | + | மெய் |
| உயிர் | + | மெய் |
| உயிர் | + | உயிர் |

என்ற வகையில் எழுத்துப் புணர்ச்சி பற்றிச் சிந்திக்க வேண்டியதாகிறது.

2.

| | | |
|---|---|---|
| நிலைமொழி | + | வருமொழி |
| பெயர் | + | பெயர் |
| பெயர் | + | வினை |
| வினை | + | வினை |
| வினை | + | பெயர் |

என்ற வகையில் மொழியின் வகை அல்லது தன்மை பற்றிச் சிந்தித்துப் புணர்ச்சியை வகைப்படுத்த வேண்டுவதாகிறது.

3. புணர்மொழிகளின் பொருளை நோக்கி,

   1. அல்வழிப் புணர்ச்சி
   2. வேற்றுமைப் புணர்ச்சி

   என்று வகைப்படுத்தும் நிலை உள்ளது.

4.புணர்ச்சியின் தன்மையை நேர்ககி, எழுத்தின் இயல்பும், திரிபும், மறைவும் நோக்கி,

   1. இயல்பு புணர்ச்சி
   2. விகாரப் புணர்ச்சி

   என்று வகுக்க நேரிடுகிறது.

இந்நான்கு நிலைகளையும் தொல்காப்பியர் பல நூற்பாக்களில் விளக்கிச் செல்வார். நன்னூலாரோ,

**“மெய் உயிர் முதல் ஈறாம் இரு பதங்களும்**
**தன்னொடும் பிறிதொடும் அல்வழி வேற்றுமைப்**
**பொருளில் பொருந்துழி நிலைவருமொழிகள்**

**இயல்பொடு விகாரத்து இயைவது புணர்ப்பே"**

என்று அனைத்தையும் ஒரே நூற்பாவில் சுருக்கித் தருவார்.

5. தொல்காப்பியர் நிறுத்த சொல:, குறித்துவரு கிளவி என்பதை நன்னூலார் நிலைமொழி, வருமொழி என்று அழைப்பார்.

6. தொல்காப்பியர் வேற்றுமை, அல்வழி என்று பாகுபடுத்தினாலும் அல்வழிப் புணர்ச்சியாவன இன்னின்ன என்று சுட்டவில்லை. நன்னூலார்,

1. வினைத்தொகை
2. பண்புத்தொகை
3. உவமைத்தொகை
4. உம்மைத்தொகை
5. அன்மொழித்தொகை
6. எழுவாய்த்தொடர்
7. விளித்தொடர்
8. பெயரெச்சத்தொடர்
9. வினையெச்சத் தொடர்
10. வினைமுற்றுத் தொடர்
11. குறிப்பு வினைமுற்றுத்தொடர்
12. இடைச்சொல் தொடர்
13. உரிச்சொல் தொடர்
14. அடுக்குத்தொடர்

எனப் பதினான்காகப் பகுத்து விளக்குகிறார்.

7. விகாரம் பற்றிக் கூறும் போது தொல்காப்பியர், மெய்பிறிதாதல், மிகுதல், குன்றல் என்பார். நன்னூலார் தோன்றல், திரிதல், கெடுதல் என்பார்.
8. சாரியை பற்றியும் இருவருக்கும் வேறுபாடு உண்டு. தொல்காப்பியர் கூறும் சாரியைகள் 9. இன், வற்று, அத்து, அம், ஒன், ஆன், அக்கு, இக்கு, அன். நன்னூலார் கூறும் சாரியைகள் 17. அன், ஆன், இன், அல், அற்று, இற்று, அத்து, அம், தம், நம், நும், ஏ, அ, உ, ஐ, கு, ன. தொல்காப்பியர் சாரியைப் பற்றிய செய்திகளை உருபியலில் பேசுவார். நன்னூலார் உருபு புணரியலில் பேசுவார்.
9. சாரியைப் பற்றிக் குறிப்பிடும் போது, நன்னூலார் ஒரு பதத்தின் முன் விகுதியோ, பதமோ, உருபோ வந்து புணரும் போது ஒன்றோ பலவோ சாரியை இடம்பெறும் என்பார். பதத்தை அடிப்படையாகக் கொண்டு சாரியைகளை விளக்குதல் தொல்காப்பியத்தில் இல்லை.

10. எழுத்தின் சாரியை பற்றித் தொல்காப்பியர் புணரியலில் குறிப்பிடுவார். நன்னூலார் அவற்றை எழுத்தியல் இறுதியில் வைப்பார். மெய்யெழுத்துக்கள் அகரச்சாரியை பெறுதலையும் நன்னூலார் சுட்டுவர். மெய்யின் இயக்கம் அகரமொடு சிவணும், என்று தொல்காப்பியர் அதனை நூல் மரபில் குறிப்பாகச் சுட்டுவார்.
11. உடம்படுமெய் பற்றி புணரியலில் கூறுகிறார் தொல்காப்பியர். நன்னூலார் உயிரீற்றுப் புணரியலில் கூறுகிறார். மேலும், உருபு ‘கொளல் வரையார்’ என்று தொல்காப்பியர் விரிவுபடுத்தாமல் சென்றதை நன்னூலார்,

**“இ ஈ ஐ வழி யவ்வும் ஏனை**
**உயிர்வழி வவ்வும் ஏ முன் இவ்விருமையும்**
**உயிர்வரின் உடம்படுமெய் என்றாகும்”**

என்று பாகுபடுத்திச் செல்வார்.

12. இசையால் திரியும் எழுத்துக்கடன் இல்லாத புணர்ச்சியைத் தொல்காப்பியர் புணரியலில் கூற, நன்னூலார் பொதுவியலில் சுட்டுவார்.
13. நன்னூலார், விகுதிப்புணர்ச்சி, பதப்புணர்ச்சி, உருபுப்புணர்ச்சி, சாரியைப் புணர்ச்சி என்ற நான்காக வகுத்துக்கொண்டது போல் தொல்காப்பியர் வகைப்படுத்தவில்லை.
14. ‘அத்தின் அகரம் அகரமுனை இல்லை’ என்ற தொல்காப்பிய நூற்பா, அவ்வாறே நன்னூலாரால் எடுத்தாளப்படுவது குறிப்பிடத்தக்கது.

## 5. தொகைமரபு

தொகைமரபிலுள்ள சில நூற்பாக்கள் நன்னூலார் கருத்தோடு இணைந்து நிற்கின்றன. அவற்றைக் காணலாம்.

1. ஞ, ந, ம, ய, வ என்ற வருமொழிகள் இயல்பாகும்.
2. ன, ல முன்வரும் த, ந-க்கள் ற, ன என்றாகும். ண, ள முன் வரும் த, ந-க்கள் ட, ண என்றாகும்.
3. முன்னிலை, ஏவல் வினைகட்கு முன்வரும் வல்லினம் இயல்பாகும்.
4. உயர்திணைப் பெயர்கள் முன்வரும் வல்லினம் இயல்பாகும். உயிரீற்றுப் பெயர் சில விகாரமாகும்.
5. விரவுப்பெயர் முன்வரும் வல்லினம் இயல்பாகும்.
6. தம்மினமாகிய தொழிற்சொல் வருமொழியாக வந்தால், வல்லினம் இயல்பாகும். விகற்பமும் ஆகும்.
7. இரண்டாம் வேற்றுமை உருபானது, இயல்பிலே விகாரமாகவும், விகாரத்திலே இயல்பாகவும், உயர்திணையிலே விரிந்தும், தொக்கும், விரவுப்பெயரில் விரிந்தும் நிற்கும்.
8. இ, ஐ என்பவற்றின் முன்வரும் வல்லினம் இயல்பாகும். மிகும். உறழும்.
9. தனிக்குறில் முன் ஒற்று இரட்டும். நெடிலின் முன் நிற்கும் ஒற்று புணர்ச்சியில் கெடும்.
10. தான், தாம், நாம் என்பன நெடுமுதல் குறுகி அகரம் பெற்று உருபேற்கும். போன்ற செய்திகள் இருவருக்கும் பொதுவானவை.

**வேறுபாடு**

1. தொடர்மொழியில் மெல்லெழுத்து உறழந்து வரும் செய்தியைத் தொல்காப்பியர் கூறுவர். இதனை நன்னூலார் கூறுவதில்லை. மாறாகக் குறில் வழியே ய, தனி, ஐ, நொ, து இவற்றின் முன்னர் மெல்லினம் மிகும் என்பர்.
2. தாம், யாம், நாம் என்ற சொற்கள் நெடுமுதல் குறுகும். அவை நான்கன் உருபோடும், ஆறன் உருபோடும் சேரும்போது ஒன்று இரட்டுவதில்லை. மாறாக அகரம் பெற்றுப் பின் புணரும் என்பர் தொல்காப்பியர். இவ்விதியை நன்னூலாரும் ஏற்றுக்கொள்வார். ஆனால் அகரம் பெறுவது நான்கன் உருபிற்கு மாத்திரமே என்றும், ஆறாம் வேற்றுமை உருபிற்கு அகரம் தேவையில்லை என்றும் நன்னூலார் கருதுவர்.
3. அளவு, நிறை ஆகிய பெயர்கள் தம்மிற் புணருமாறு கூறும் பகுதி நன்னூலில் கூறப்படவில்லை.
4. மருவின் பாத்தி திரியும் செய்தியும் நன்னூலில் கூறப்படவில்லை.

## 6. உருபியல்

தொல்காப்பியர் உருபுகளின் புணர்ச்சியை உருபியலில் கூறியுள்ளமை போன்று, நன்னூலார் ‘உருபு புணரியல்’ என்ற தலைப்பியல் உருபு புணர்ச்சிகளை உரைப்பார். புணர்ச்சியையே,

1. பதப்புணர்ச்சி
2. விகுதிப் புணர்ச்சி
3. சாரியைப் புணர்ச்சி
4. உருபு புணர்ச்சி

என்று நான்கு வகையாக வகுத்துக் கொள்வார் நன்னூலார். உருபு புணர்ச்சியைப் பொறுத்தவரையில் இருவருக்கும் இடையே உள்ள கருத்து வேறுபாடுகள் சிலவே ஆகும்.

| **தொல்காப்பியர்** | **நன்னூலார்** |
|---|---|
| 1. இத்தகு கருத்தைத் தொல்காப்பிய உருபியலில் காண்பதற்கில்லை. | உருபு புணர்ச்சி கூறுமுன் நன்னூலார், ஒருவன், ஒருத்தி, பலர், ஒன்ற, பல என ஐந்து பெயரும் எழுவாய் முதலாக விளி ஈறாக உள்ள எட்டு உருபுகளையும் ஏற்றுவர இடவகையால் உருபுகள் நாற்பதாகும் என்பார். |
| 2. தொல்காப்பியர் ‘வற்று’ச் சாரியையைக் குறிப்பிடுவார். | நன்னூலாரோ,‘வவ்விறு சுட்டிற்கு அற்றுதல் வழியே’ என்றும்,‘அற்றோடு உருபின்மேல் உம்உறுமே’ என்றும் அற்றுச்சாரியையையே குறிப்பிடுவார். |
| 3. எல்லாரும், எல்லீரும் என்ற சொற்களின் ஈற்றில் உள்ள உம்மை கெடும். பின் எல்லார் +தம் + ஐ, எல்லீர் + நும் + ஐ என்று சாரியையும் உருபும் வந்து புணரும்போது இறுதியில் மீண்டும் உம்மை தோன்றும் என்பார் தொல்காப்பியர். | ‘உம்மை’யைத் தள்ளிப் பின் இறுதியில் அதனைச் சேர்க்க வேண்டும் என்று உம்மை இடமாற்றுக் கொள்கையை வலியுறுத்துவார் நன்னூலார். |

| | |
|---|---|
| 4. ஒருப∴து, இருப∴து போன்ற சொற்களில், ஆன் சாரியை பெற்று ஒரு பானை, இருபானை எனப் புணரும் என்பர் தொல்காப்பியர். | 'ஒன்பது' என்ற சொல்லும் அவ்வாறே புணரும் என, ஒன்பானை, ஒன்பானொடு என்பவற்றையும் சேர்த்துரைப்பார் நன்னூலார். |
| 5. ஆ+இன்+ஐ எனக் காட்டி, ஆ+இன் +ஐ என 'இன்' சாரியையின் இகரம் கெடுதலை உரைப்பார் தொல்காப்பியர். | 'ஆமாகோ னவ்வணையவும் பெறுமே' என அச்சொற்கள் னகரச் சாரியை பெறுதலை உரைப்பார் நன்னூலார். |

## 7. உயிர் மயங்கியல்

1. ஒகார இறுதிச் சொல்லை ‘இல்’ என்ற சொல்லொடு கூறின் வேற்றுமைக்கண் புணர்ச்சி இயல்பாகும். பவணந்தியார் இக்கருத்தைக் கூறவில்லை.

(எ.கா.) கோ + இல் = கோயில்.

நூற்பா: **‘இல்லொடு கிளப்பின் இயற்கை ஆகும்’**

2. ஒகார இறுதிப்பொருள் உருபியல் நிலையிலுள்ள சொற்களும் உள. அதாது அவ்விடத்து வல்லெழுத்து மிகாது இயற்கையாய் முடியும். ஒன் சாரியை பெறும்.

(எ.கா.) கோ + கை = கோஒன்கை.

நூற்பா: **‘உருபியல் நிலையு மொழியுமா ருளவே**
**ஆவயின் வல்லெழுத்து இயற்கை ஆகும்’**

3. ஔகார இறுதிப்பெயர் நிலைமொழியாய் இருக்க அடையும் மாறுதல்களை ஒரு நூற்பாவில் கூறி முடித்துள்ளார்.

ஔகார ஈற்றுப்பெயரில் பின்னர் க, ச, த, ப வரின் அல்வழி வேற்றுமை ஆகிய இரண்டு இடத்திலும் வல்லெழுத்து மிகுதலும் உகரம் தோன்றுதலும் உண்டு.

(எ.கா.) கௌ + கடிது = கௌவுக்கடிது
கௌ + கடுமை = கௌவுக்கடுமை

4. நிலைமொழி ஈற்றின் அடிப்படையில் தொல்காப்பியர் விளக்க முற்பட்டதால் சில கருத்துக்கள் மீண்டும் வருகின்றன. நன்னூலார் ஒவ்வொரு ஈற்றிலும் இவ்வாறு விரித்துப் பேசவில்லை. இயல்பினும் விதியினும் நின்ற உயிர் முன் க, ச, த, ப மிகும் என்று பொதுவாகக் கூறிவிட்டார்.

5. சுட்டெழுத்துப் புணர்ச்சியினை ஆசிரியர் சில நூற்பாக்களில் விரித்துக் கூறியுள்ளதை நன்னூலில்,

**‘எகர வினா முச்சுட்டின் முன்னர்’**

எனத் தொடங்கும் ஒரே நூற்பாவில் அமைத்துக் காட்டுவார்.

6. மரப்பெயர்களை ஒவ்வொரு நூற்பாவின் இறுதியிலும் தனித்தனியே தொல்காப்பியர் கூறுவதனை நன்னூலார்,

**‘மரப்பெயர் முன்னர் இனமெல் எழுத்து**
**வரப்பெறு னவுமுள வேற்றுமை வழியே’**

என அமைத்துக் காட்டுவார்.

## 8. புள்ளி மயங்கியல்

1. ண, ன என்ற மெய்கள் வேற்றுமைப்புணர்ச்சியில் வல்லினம் வர ட, ற என்று திரியும்.

2. கிளைப்பெயர்கள் வேற்றுமைப் புணர்ச்சியிலும் திரிதலில்லை.

3. ‘மீன்’ என்பது வல்லெழுத்தோடு உறழும்.

4. குயின், மின், பின், பன், தான், யான் என்ற னகர வீற்றுப்புணர்ச்சி விதிகள்.

5. புள், வள், வல், நெல், செல், கொல், சொல், இல் ஆகியவற்றின் புணர்ச்சி விதிகள்.

போன்ற செய்திகளில் தொல்காப்பியர், நன்னூலார் இருவருக்குமிடையே கருத்து வேறுபாட இல்லை.

தொல்காப்பியர் ண, ன, ய, ர, ழ, ல, ள ஆகிய ஈறுகளைத் தனித்தனியே விளக்குவதால்,‘கிளைப்பெயரெல்லாம் கிளைப் பெயரியல்’,‘தொழிற்பெயரெல்லாம் தொழிற் பெயரியல்’ போன்ற நூற்பாக்கள் தொல்காப்பியத்தில் மீண்டும் மீண்டும் இடம்பெறக் காண்கிறோம். நன்னூலார் தொகுத்துத் தருவதில் வல்லவராய் இருக்கிறார். சில புதிய சான்றுகளைத் தருகிறார். அவ்வகையில் தொல்காப்பியருக்கும் நன்னூலாருக்கும் இடையே சில வேறுபாடுகளைக் காணமுடிகிறது.

1. நன்னூலார் சாதிப்பெயர், குழுப்பெயர், பரண், கவண், எண், சாண் ஆகியவற்றைச் சேர்த்துத் தொகுத்துப் பேசுகிறார். தொல்காப்பியர் இதனைச் சுட்டவில்லை.
2. ன∴கான் கிளைப்பெயர் அகரச்சாரியை பெறுதலை நன்னூலார் சுட்டியுள்ளார்.
3. ‘தேன்’ தொடர்பான புணர்ச்சி விதிகளைக் கூறும் நன்னூலார் ‘தேன்+இறாஅல் என்ற புணர்ச்சியைக் கூறாது விடுத்தார். அது உயிர்மெய்ப் புணர்ச்சி என்பதால் விட்டிருக்கக் கூடும். ‘ஒற்றுமிகு’ தகரமொடு நின்று ‘தேத்தீ’ என்றாவதையும் நன்னூலார் கூறவில்லை.
4. மரமல்லாத பறவை குறிக்கும் எகின் மொழிக்கு இயல்பும் ஆகும். மெல்லினமும் வரும் என்று நன்னூலார் சுட்டியுள்ளார். தொல்காப்பியர் இவ்வாறு சுட்டவில்லை.
5. ‘கன்’ என்ற சொல்லானது அகரச்சாரியைப் பெற்று மெல்லினத்தோடு உறழும் என்பதும் நன்னூலார் தரும் செய்தி.
6. ஈம், கம் என்ற இருசொல்லும் அக்குச்சாரியை பெறும் என்பார் தொல்காப்பியர். அவை இரண்டும் அகரச்சாரியை பெறும் என்பர் நன்னூலார்.

7. அகம்+கை என்ற சொற்களின் புணர்ச்சியில், தொல்காப்பியர் அகரம் நீங்கலாக அனைத்தும் கெடும். பின் மெல்லெழுத்து மிகும் என்பார். நன்னூாலரோ,'அகம்' என்பதன் நடுவணதாகிய க்+அ=க கெடும் என்று வகுப்பார். இங்ஙனம் ஒரே செய்தியை விளக்கும் முறையில் இருவரும் வேறுபடுவதுண்டு.
8. அழன், முன், பொன் ஆகியன பற்றி நன்னூலார் எதுவும் குறிப்பிடவில்லை.
9. உகரம் வந்து சேரப்பெறாத ல, ள ஈற்றுத் தொழிற்பெயர்கள் சிலவற்றை நன்னூலார் குறிப்பிடுகிறார்.
10. 'தெவ்வுக்கடிது' என்று உகரம் பெறுவதையே தொல்காப்பியர் தெரிவித்தார். நன்னூலாரோ, தெவ்+முனை=தெம்முனை என்றாவதற்கும் விதி உரைத்தார்.
11. தாமரை, வெள்ளம், ஆம்பல் என்பன ஏழ் என்பதோடு இணையும் செய்தியும், சார் + காழ், பொன்+ பொலம், முன்+ ஈல், சாத்தன் + கொற்றன், ஆதன் +தந்தை, போன்ற புணர்ச்சிச் செய்திகளும் நன்னூலிற் குறிப்பிடப்படவில்லை.

## 9. குற்றியலுகரப் புணரியல்

1. தொல்காப்பியர் குற்றியலுகரப் புணரியல் எனத் தனியே வகுத்துள்ளார். நன்னூலார் உயிர்மயங்கியலில் உகர ஈற்றுடன் சேர்த்து அமைத்துள்ளார்.

2. தொல்காப்பியர் குற்றியலுகரப் புணரியலில் கூறும் குற்றியலுகரத்தின் பெயர், முறை, தொகை ஆகியவற்றை நன்னூலார் எழுத்தியலில் குறிப்பிடுவார்.

தொல்காப்பியர் ஈரெழுத்து ஒரு மொழி என்பதை நன்னூலார் நெடில் தொடர் என்பார்.

3. இடைத்தொடர்க் குற்றியலுகரத்தில் இரண்டு ஒற்றுக்கள் தொடர்ந்து வரும் சூழ்நிலை ஏற்பட்டால் இடையொற்றுக்கும் பின் இடையொற்று வராது, வல்லினம் அல்லது மெல்லினம் வரும். இதனை ஈரொற்றுத் தொடர்மொழி எனத் தொல்காப்பியர் சுட்டுவார். நன்னூலார் இது பற்றிக் குறிப்பிடவில்லை.

4. அல்வழி, வேற்றுமை ஆகிய இருநிலைப் புணர்ச்சியிடத்தும் குற்றியலுகரம் அரை மாத்திரை பெறும். ஆனால் வல்லெழுத்து வருமொழியில் அமைத்து நிலைமொழி வன்தொடர்க் குற்றுகரமாக அமையும்போது ஏற்படும் புணர்ச்சியில் மட்டும் குற்றியலுகரம் கால்மாத்திரையாக அமையும் என்பார் தொல்காப்பியர். நன்னூலார் இது பற்றி விளக்கம் தரவில்லை.

5. 'யகரம் வருவழி இகரங் குறுகும்' எனத் தொல்காப்பியர் குறிப்பிடுவதை நன்னூலார் எழுத்தியலில் 'யகரம் வரக் குறள் உத்திரி இகரமும்' என்பார்.

6. வேற்றுமைப் புணர்ச்சியின் போது உயிர்த்தொடர்க் குற்றியலுகரம் எவ்வாறு அமையும் எனத் தொல்காப்பியர் தெளிவாகச் சுட்டவில்லை. நன்னூலார் 'உயிர்த்தொடர் முன் மிகா வேற்றுமை' என்பார்.

7. ஐகாரச் சாரியைனை இறுதியில் பெறும் மென் தொடர்க் குற்றியலுகர மொழிகள் உண்டு. இது நன்னூலார் கூறியது. இதனைத் தொல்காப்பியர் கூறவில்லை.

8. ஈரெழுத்தொருமொழி, வல்லொற்றுத் தொடர்மரப்பெயர்க் குற்றுகர ஈறு முதலியன அம் சாரியை பெறும். மெல்லொற்று வலியா மரப்பெயருண்டு. மென்தொடர் மொழியிற்சில அக்குச் சாரியை பெற்றுவரும். எண்ணுப்பெயர்ச்சொல் அன் சாரியை பெறும். வண்டு இன் சாரியையும், பெண்டு இன், அன் என்னும் இன் சாரியைகளையும் ஏற்கும். யாது, சுட்டு முதலாகிய ஆய்தத்தொடர் மொழிக் குற்றுகரம் அன் சாரியை பெறும்.

சுட்டுச்சினை நீடிய மென்தொடர்மொழி, யாவினா மென்தொடர் மொழி வல்லெழுத்துப் பெற்று முடியம். உண்டு, உள் ஆகும்.

ஒருப∴து, நூறு முதலியன நிலைமொழியாக இருக்கும்போது அடையும் மாற்றங்கள்.

நூறாயிரம் வருமொழியாக அமையும்போது அடையும் மாறுதல்கள் ஆகியன தொல்காப்பியர் மட்டுமே குறிப்பிடுவனவாகும்.

9. இரண்டு திசைகள் புணரும்போது இடையில் ‘ஏ’ வரும் எனத் தொல்காப்பியர் குறிப்பிட்டுள்ளதை நன்னூலார் எடுத்து இயம்பவில்லை. (வடக்கே தெற்கு)

10. தேங்காய் என்பதற்கு நன்னூலார் கூறும் புணர்ச்சி விதி (தெங்கு+காய்) தொல்காப்பியர் குறிப்பிடாத ஒன்றாகும்.

11. பத்து நிலைமொழியாய் இருக்கப் புணரும் போது ஏற்படும் சாரியைகளில் தொல்காப்பியர் இன் சாரியை பற்றிக் குறிப்பிட நன்னூலார் இன்னுடன் ‘இற்று’ என்னும் சாரியையும் குறிப்பிட்டுள்ளார்.

12. ஒன்பது ஒழிந்த எண்கள் நம்முன் தாம் வரும்போது அடையும் மாறுதல்களை (ஒவ்வொன்று, இவ்விரண்டு) நன்னூலார் குறிப்பிட்டுள்ளார். தொல்காப்பியர் இதுபற்றிக் கூறவில்லை.

## வினாக்கள்

1. நூன்மரபு, மொழிமரபு ஆகிய இயல்களில் நன்னூலார், தொல்காப்பியர் கருத்துக்களை ஒப்பிடுக.
2. தமிழ் எழுத்துக்களை நன்னூலாரும், தொல்காப்பியரும் எங்ஙனம் வகைப்படுத்திக் காட்டுகின்றனர்?
3. சொற்களில் எழுத்துக்களின் வருகை பற்றி நன்னூலாரும் தொல்காப்பியரும் கூறும் கருத்துக்களை விளக்குக.
4. எழுத்துப் பிறப்புப் பற்றித் தொல்காப்பியர், நன்னூலார் கூறும் வேறுபாடுகளை விவரிக்க.
5. புணர்ச்சியை இலக்கணிகள் எவ்வாறு பாகுபடுத்தியுள்ளனர்?
6. சாரியைப் பற்றியக் கருத்துக்களில் தொல்காப்பியரும் நன்னூலாரும் எவ்வாறு வேறுபடுகின்றனர்?
7. உருபு புணர்ச்சியை வகுப்பதில் தொல்காப்பியர் நன்னூலார் வேறுபடுமாற்றை வரைக.
8. குற்றியலுகரப் புணரியல் பற்றி தொல்காப்பியரும், உயிர் மயங்கியலில் உகர இறுதி பற்றி நன்னூலாரும் கூறியவற்றைத் தொகுக்க.

**Prepared by**
**Dr. A. SUNDARAM**
Associate Professor of Tamil
The MDT Hindu College, Tirunelveli – 627 010.